මධ්‍යම පළාත
மத்திய மாகாணம் CENTRAL PROVINCE

# தமிழ் சாகித்திய விழா

## சிறப்பு மலர் - 2005

## மத்திய மாகாணம்




## புதிய சிந்தனை - புதிய மலையகம்

மத்திய மாகாண கல்வி (தமிழ்)
இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா

# மத்திய மாகாணம்

# சிறப்பு மலர்


# 2005

## "புதிய சிந்தனை - புதிய மலையகம்"

இதழாசிரியர்
ஆர். மகேஸ்வரன்

மத்திய மாகாண தமிழ் கல்வி, இந்து கலாசார அலுவல்கள்,
தோட்ட உட்கட்டமைப்பு, கைத்தொழில், விளையாட்டு, மகளிர்
விவகாரம், கிராம அபிவிருத்தி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழ் சாகித்திய விழா**
**மத்திய மாகாணம்**
**2005**

**இதழ் தயாரிப்பு**

**இதழாசிரியர்**
ஆர். மகேஸ்வரன்

**ஆக்கத் தெரிவுக் குழு**
எஸ். எஸ். தேவசிகாமணி
அந்தனி ஜீவா
இரா. அ. இராமன்
திருமதி ச. கணபதி

**மலர்க் குழு**
கே. இராஜன்
சி. இரவீந்திரன்
வ. பாலேந்திரன்
ஆர். இராமையா
டீ. ஆர். செல்வராஜா
எஸ். மோகன்ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய மலையகத்தை நோக்கி ....
## புதிய சிந்தனைகள் ...

### வாழ்த்துச் செய்திகள்


| | பக்கம் |
|---|---|
| மாட்சிமை தங்கிய அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ | 1 |
| மாண்புமிகு பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க | 2 |
| அதிமேதகு இந்திய உயர் ஸ்தானிகர் திருமதி நிருபமாராவ் | 3 |
| மாண்புமிகு அமைச்சர் சீ. பீ. ரட்னாயக்க (அமைச்சர் - தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை அபிவிருத்தி) | 4 |
| மாண்புமிகு அமைச்சர் மகிந்த யாபா அபேவர்தன கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமை தொடர்பான அமைச்சர் | 5 |
| கௌரவ ஆளுனர் டிக்கிரி கொப்பேகடுவ | 6 |
| கௌரவ முதலமைச்சர் சரத் ஏகநாயக்க | 7 |
| கௌரவ அமைச்சர் எஸ். அருள்சாமி அவர்களின் செய்தி | 8 |
| கௌரவ அமைச்சர் எஸ். அருள்சாமி அவர்கள் | 9 |
| கௌரவ ப. திகாம்பரம் - உறுப்பினர் - மத்திய மாகாணம் | 11 |
| அதிவண. மேயர் சந்தனலால் கருணாரட்ன (மேயர் - நுவரெலியா மாநகர சபை) | 12 |
| திருமதி ஷிரானி வீரக்கோன் (செயலாளர்-கைத்தொழில், விளையாட்டு அமைச்சு) | 13 |
| திரு. எஸ். எஸ். தேவசிகாமணி (இணைப்பாளர் - இந்து கலாசார அலுவல்கள்) | 14-15 |
| கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள் | 16 |
| திரு. இரா. மகேஸ்வரன் ... இதழ் பற்றி | 17 |
| ஓவியனின் சிந்தனையில் (அட்டைப்படம்) செ. கோபால் | 18-19 |
| 2005 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சின் கீழ் வரும் பாடசாலைகளில் சிறப்பு சித்தி பெற்று பாராட்டப்படுபவர்கள் | 20 |
| 2003/2004 வெளியிடப்பட்ட நூல்களுக்கான பரிசுபெறுவோர் | 20 |
| சாகித்திய விருது பெறுவோர் | 21-23 |


### கட்டுரைகள்


| | |
|---|---|
| மலையகத்தில் புதிதாக அமையவிருக்கும் பல்கலைக்கழகமும் சமூக மேம்பாடும் - பேரா. எம் சின்னத்தம்பி | 25-27 |
| மலையகத் தமிழ் சமூகம் - பேரா. மா. சே. மூக்கையா | 28-29 |
| குறைதீர் பாரபட்சம் - பேரா. சொ. சந்திரசேகரன் | 30-32 |
| மலையக மக்களின் ஆரோக்கிய நிலை பேரா. இரா. சிவகணேசன் | 33 |
| மலையகக் கலை பாரம்பரியம்- கலாநிதி துரை மனோகரன் | 34-35 |
| மலையகக் கல்வியின் எதிர்காலம் - தை தனராஜ் | 36-38 |
| மேற்கு வங்காள தேயிலைத் தோட்டங்களில் கலாநிதி ஏ. சந்திரபோஸ் | 39-40 |
| மலையக ஆவணக் காப்பகம்- ஆர். மகேஸ்வரன் | 41-43 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களும் சுயபொருளாதாரமும்- இரா. சடகோபன் ........ 44-48
மலையக நாட்டார் வழக்காற்றியல் - லெனின் மதிவானம் ........ 49-50
விற்கப்படும் வாழ்க்கைகளும்- சிவன் ஜோதியோகராஜ் ........ 51-52
'Z' புள்ளி முறைமை- கு. ஜீவராஜன் ........ 53-55
மலையக இலக்கிய முதல்வர்- அந்தனி ஜீவா ........ 56-58
இந்திய வம்சாவளி மக்களின் சனத்தொகை- இரா. பார்த்திபன் ........ 59-61
மலையக இலக்கியத்திற்கு வழிகாட்டிய - எஸ். இராமையா ........ 62-63
விளிம்புநிலை கலையாக - எஸ். சுதர்சன் ........ 64-66
குறிஞ்சிமண்ணில் கொத்மலை - கே. சந்திரகுமார் ........ 67-69
தமிழ்சுவையறியா தமிழர்கள் - இரா. இராஜகோபால் ........ 70-71
பூண்டுலோயா தர்மு - தி. இரா. கோபாலன் ........ 72

## கவிதை

கலைகளில் கூட வர்க்கமும் பேதமும்- ரா. நித்தியானந்தன் ........ 73
வரவேண்டும் தை மகளே - கே. குறிஞ்சிநாடன் ........ 74
பூனைகள்- மல்லிகை சி. குமார் ........ 75
இன்று நாளை இனி எப்போது? புசல்லாவை கணபதி ........ 76
வெற்றியின் படிகளில்- மாரிமுத்து சிவகுமார் ........ 77
சங்கே முழங்கிடு- பி. சரண்யா ........ 78
தோட்டத்து ராஜாக்கள்- வீ. திருச்செல்வம் ........ 79
ஏற்றுப் பிடிங்கள் வெ. கணேசலிங்கம் ........ 80

## சிறுகதை

புழுதிப் படுக்கையில் - மு. சிவலிங்கம் ........ 81-82
தணியாத தாகம்- பாலாசங்குபிள்ளை ........ 83-86
நூரளை கண்முகம் ....- ........ 87-88
ஏற்பாட்டுக் குழுவினர்
நன்றியுரை - எஸ். எஸ். தேவசிகாமணி ........ 89-90
இணைப்பாளர்- இந்து கலாசார அலுவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின்
## அதிமேதகு ஜனாதிபதி அவர்களின்
## ஆசிச் செய்தி

மத்திய மாகாண தமிழ் மக்களின் இலக்கிய கலைத் திறமைகளை ஊக்குவிக்கும் முகமாக அவர்களது பங்குபற்றலுடன், 2006 ஜனவரி மாதம் 28 ஆந் திகதிகளில் நடைபெறும் தமிழ் சாகித்திய விழாவிற்கு எனது நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். முக்கியமாக மத்திய மாகாணத்தில் வாழும் இந்திய வம்சாவளியைக் கொண்ட பெருந்தோட்ட மக்களை சமூக ரீதியாக அபிவிருத்தி செய்யும்போது, மனிதர்களின் வாழ்வில் இணைந்திருக்கும் கலைத் துறை அபிவிருத்தியை ஏற்படுத்தும் சந்தர்ப்பத்தில், இவ்வாறான சாகித்திய விழாக்கள் மூலம் அம் மக்களிடையேயான நடத்தை முன்னேற்றம், ஒழுக்கம் சம்பந்தமான முன்னேற்றம் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இதுபோன்ற எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் மத்திய மாகாண கைத்தொழில் மற்றும் இந்து கலாசார அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படும் இச் சாகித்திய விழா கைங்கரியத்திற்கு மாகாண சபைக்கான அரசியல் தலைமைத்துவத்தினை வழங்கியமைக்காக கௌரவ சரத் ஏக்கநாயக்கா அவர்களுக்கு எனது பாராட்டை சமர்ப்பிக்க விருப்பமுடையேன்.

மேலும் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தின் பொருட்டு எனது அரசாங்கத்துடன் சேர்ந்து மத்திய மாகாணத்தில் அம் மக்களுக்காக நல்லதொரு சேவையை பெற்றுத்தர முனைப்புடன் செயற்படும் மத்திய மாகாண இந்து கலாசார விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கௌரவ எஸ். அருள்சாமி அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையை பெரிதும் மதிக்கின்றேன். மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா வினை வெற்றிகரமாக நடாத்த முனைப்புடன் சேவையாற்றிய அனைவரையும் பாராட்டுகின்றேன்.

**மகிந்த ராஜபக்ஸ**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதம அமைச்சரின் செய்தி

மத்திய மாகாண கைத்தொழில், விளையாட்டுத்துறை மற்றும் இந்து கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தமிழ் சாகித்திய விழாவின் சாகித்திய தின நினைவு மலருக்காக செய்தியொன்றை வழங்கக் கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மத்திய மாகாண வாழ் தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசார மரபுகளை புதிய தலைமுறைக்கு வெளியிடல் மற்றும் அந்த மக்களின் இலக்கிய ஆற்றல்களைப் போற்றுவதற்கும் இவ்வாறானதொரு விழாவினை ஒழுங்குசெய்துள்ளமையானது அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கு உறுதுணையாக அமையுமென நான் நம்புகிறேன்.

வருடாந்தம் நடாத்திவரும் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவின் அனைத்து நடவடிக்கைகளும் சகல வழியிலும் வெற்றிபெற வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

**ரத்னசிறி விக்கிரமநாயக்க,**
பிரதம அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MESSAGE**

I am happy to note that the Ministry of Hindu Cultural Affairs and Tamil Education of the Central Provincial is organizing the celebration of the grand Tamil Sahithya Vizha.

The Ministry of Hindu Cultural Affairs and Tamil Education of the Central Provincial Council has played an important role in promoting the cultural and educational needs of the people of Indian origin.

The High Commission of India in Colombo and the Assistant High Commission of India in Kandy appreciate these measures and wish the Ministry well in its continued efforts for the welfare of the people of Indian origin in the Central Province.

I wish all the participants the very best in the coming years

Nirupama Rao

**Nirupama Rao**
High Commissioner for India in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

நாடும், வீடும் சீரும் சிறப்புமாக விலைபெறவும் எமது தேசத்தின் சகல இனத்தவரும் சாதி, மத குல பேதமின்றி வாழ எமது சிந்தனைகள் கலை, கலாசாரம் சார்ந்த அம்சங்களை ஒன்றிணைத்து இவ்வாறானதொரு சாகித்திய விழாவினை நடாத்துவது அத்தியாவசிய தேவையாகும்.

ஏனைய நாட்டவர்கள் அவர்களது பண்பாட்டை வெளிக் கொணரும் நோக்கில் பலவாறான விழாக்களை நடாத்துவது போன்று இலங்கையிலும் மத்திய மலையகத்தில் வாழும் எமது சகோதர தமிழ் மக்களும் 2005ம் வருடத்திற்கான மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவினை நடாத்துவதும் மலர் வெளியிடுவதும் தொடர்பாக நான் மிகவும் அகமகிழ்கின்றேன்.

எம்மிடையே பல்வேறுபட்ட இனங்கள் வாழ்ந்தாலும், நாம் எல்லோரும் இலங்கையர்களாக, ஒரே குடும்பமாக வாழ இவ்வாறானதொரு தமிழ் சாகித்திய விழாவானது பெறும் உறுதுணையாகின்றது.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை வள அமைச்சர் என்ற ரீதியில் சாகித்திய விழா மலர் சகல அம்சங்களுடனும், சிறப்புடன் வெளிவர, மேற்படி சாகித்திய விழாவினை நிறைவுடன் நடாத்த பொறுப்புடன் கடமையாற்றிய யாவரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

புதிய சிந்தனை புதிய மலையகம்

**சி. பி. ரட்நாயக்க,**
அமைச்சர்,
தோட்ட உட்கட்டமைப்பு, கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமை தொடர்பான அமைச்சர் அவர்களின் ஆசிச் செய்தி**

சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கிடையே தொன்று தொட்டு பாரிய அளவில் தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் வரலாறு கண்ட உண்மையாகும். இதன் காரணமாகவே தமிழ் இலக்கியம் தொடர்பாக முற்காலத்தில் வாழ்ந்த சிங்கள மேதைகள் நன்கு அறிந்திருந்ததாக அனுராதபுர யுகத்தில் இருந்து கண்டி யுகம் வரை எழுதப்பட்ட சிங்கள மொழி மூல புத்தகங்கள், சீகிரி கவிதைகள், கல்வெட்டுக்கள் போன்ற சான்றுகள் மூலம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. தற்காலத்திலும் சிங்கள கிராமிய பேச்சு வழக்கில் பாவிக்கப்படும் பல தமிழ் சொற்றொடர்களை நித்தமும் செவிமடுக்கக்கூடியதாகவுள்ளது. பொதுவாக மக்களின் கலை ரசனையின் பொருட்டு இலக்கிய ரீதியாக தமிழ், சிங்கள மொழிகளிடையே சிறந்த தொடர்பாடல் இருந்ததாக இதன் மூலம் தெளிவாகின்றது.

சங்க காலத்தில் வெளிவந்த தமிழ் நூல்களின் மூலம் தமிழின் வரலாற்று முக்கியத்துவம் நிச்சயிக்கப்பட்டுள்ளதுடன், தற்காலம் வரை அதன் பறந்தலளவிலான முன்னெடுப்பு காணக்கூடியதாய் உள்ளது. ஆனந்தத்தில் ஆரம்பித்து ஆன்மீகத்தில் முடிவுறும் மனிதனின் கலைரசனைமிக்க சிந்தனை வெள்ளமானது, மனித சமூகத்தின் ஏகோபித்த ஒற்றுமைக்கு மிக மிக உறுதுணையாகின்றது. இந்நிலையானது தற்கால சமூகத்தினருக்கு மிகவும் முக்கியமான ஒரு தேவையாகவுள்ளது. பாகுபாட்டுடன் பிரிந்து வாழும் மக்களின் சிந்தனைகளை நேயமுடன் ஒரே நோக்கத்திற்குத் திசை திருப்பி மனிதத்தத்துவத்தை மேலோங்க வைக்க இலக்கிய ரசனையை ஒரு காரணியாக்கிக் கொள்ளலாம். அதனை எம் தேவைக்கேற்றவாறு பதனிட்டுக் கொள்ளலாம்.

இலங்கை மக்களின் ரசனையை மேம்படுத்தவும் மனித நேயத்துடன் ஒற்றுமையுணர்வோடு சுமூகமாக இயங்கவும் இம்மத்திய மாகாண சாகித்திய விழா வழியமைக்கப்பட்டும் என வேண்டிக்கொள்வதோடு அதற்கான சகல ஏற்பாடுகளும் குறைவின்றி நிறைவேற பிரார்த்திக்கின்றேன்.

**மகிந்த யாபா அபேவர்தன**
கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமை தொடர்பான அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ ஆளுநர் அவர்களின் ஆசிச்செய்தி

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவானது, பொதுவாக எமது நாட்டின் இலக்கிய வரலாற்று வளர்ச்சியில் நாம் பெற்ற முக்கியமானதொரு அங்கமாகும். புராண காலம் தொட்டு எழுதப்பட்ட புத்தகங்கள் மத்தியில் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட பெறுமதிமிக்க பல இலக்கியப் படைப்புகள் உள்ளன.

ஆனால் மத்திய மாகாணத்தில் தமிழ் மொழியை பயன்படுத்தும் மக்களின் இலக்கியத் துறையை மேம்படுத்துவதற்கான அடித்தளம் இடப்பட்டது. பிரித்தானிய ஆட்சி காலத்தின் கடைசி காலக் கட்டத்திலாகும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வாழும மக்களின் கலாசார விழுமியங்களை விடவும் வேறுபட்ட கலாசாரத்தினைக் கொண்ட இந்திய வம்சாவளி பெருந்தோட்ட மக்களின் கலாசார எழுச்சியை ஏற்படுத்துவதற்கான அடித்தளமிடப்பட்டது. நடேசய்யர் மற்றும் சி. வி. வேலுப்பிள்ளை ஆகிய மேதைகள் மூலமாகவேதான் என்றால் அது மிகையாகாது.

இவர்கள் பின்னர் மத்திய மலை நாட்டின் அரசியல் மற்றும் இலக்கியத் துறையின் நாயகர்களாக உருவெடுத்தனர். அன்று தொட்டு இன்று வரை பல மேதைகள் மத்திய மாகாண தமிழ் மக்களின் இலக்கியத்துறையின் எழுச்சிக்காக பாரிய பங்காற்றியுள்ளமை காணக்கூடியதாகவுள்ளது. கே. கணேஷ், கோகிலம் சுப்பையா, தெளிவத்தை ஜோசப் போன்ற எழுத்தாளர்கள் மலையக மக்களின் இலக்கியப் பெருமையை அகிலம் முழுவதும் பகிர்ந்தளிக்க முயற்சித்தவர்களில் சிலர் என இனங்காணலாம். இன்று படித்தவர்கள் மட்டுமல்ல மலையகத்தின் சாதாரண தொழிலாளராக இருப்பவர்கள் கூட கவிதை, சிறுகதை எழுதுகின்றனர். படிக்கின்றனர்.

மாகாண ஆட்சி முறை உருவாகியதன் பின்பு மத்திய மாகாணத்தின் இலக்கியத்துறையில் ஒரு விஷேடமான முன்னேற்றம் ஏற்பட்டமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது ஒரு சாதகமான தன்மை எனலாம். முக்கியமாக பெருந்தோட்ட பிரதேசங்களைச் சார்ந்த பாடசாலைகள். வாசிக சாலைகள் மற்றும் சமூக நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு இச் சாகித்திய விழா அரங்கேறுவதன் விளைவாக மலையகத்தின் இலக்கியத் துறையை மேலும் மெருகேற்றலாம் என நான் பிரத்தியட்சமாக நம்புகின்றேன்.

அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களின் 'மகிந்தவின் சிந்தனை' யிலும் பெருந்தோட்ட அபிவிருத்திக்காக விஷேட வேலைத் திட்டமொன்று உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனூடாக மத்திய மலை நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளை மட்டுமன்றி கலாசாரத் துறையிலும் பாரிய அபிவிருத்தி ஏற்படுவது நிச்சயம் என்பது உறுதி.

மத்திய மாகாண கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகார, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், இந்து கலாசார கல்வி (தமிழ்) அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் இவ்விலக்கிய எழுச்சியை மிக முனைப்புடன் நடாத்த முடியும் என நான் நம்புகின்றேன்.

புதிய அமைச்சர் உட்பட ஏற்பாட்டுக் குழுவினரால் 25 மத்திய மாகாண சாகித்திய விழாவினை மிக விமரிசையாக நடாத்த ஏற்பாடு செய்துள்ளமையையிட்டு பெருமிதம் அடையலாம்.

மத்திய மாகாண ஆளுநர் என்ற ரீதியில் தமிழ் இலக்கிய எழுச்சிக்காக என்னால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பினை நிறைவுடன் வழங்க ஆயத்தமாகவுள்ளேன் என்பதை மன நிறைவுடன தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டிக்கிரி கொப்பேகடுவ,**

மத்திய மாகாண கௌரவ ஆளுநர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி

இலக்கியம் என்பது மனிதனின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து, அவனது வாழ்க்கையில் புதிய அத்தியாயமொன்றை ஏற்படுத்தி, அன்றாட வாழ்க்கை பயணத்தின் பழக்க வழக்கங்கள் மற்றும் பாரம்பரிய அம்சங்களை அடிப்படையாக வைத்து உருவாகிய ஒரு பல்கலை அம்சமாகும். அப்பல்கலை அம்சத்தின் ஊடாக தோன்றிய ஒரு அம்சம் இலக்கியமாகும். இயல் இசை நாடகம் போன்ற துறைகள் தொன்று தொட்டு நம் இனங்களுக்கிடையே இருந்து வந்தாலும் தற்காலத்தில் அதற்கு புதுப் பிரவேசம் அளித்து அதனை வெளிக்கொனறும் நோக்கில் தமிழ் சாகித்திய விழா நடாத்தப்படுவது போற்றுதற்குரிய விடயமாகும்:

இந் கைக்காரியத்தினை மேற்கொண்டு மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சினால் 2005 ம் வருடத்திற்கான தமிழ் சாகித்திய விழாவினை நடாத்த உரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சாகித்திய விழா மலர் வெளியிடுவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது.

புதிய சிந்தனை புதிய மலையகம் எனும் தொனிப்பொருளின் கீழ் இவ்விழாவும், மலரும் புதியதோர் இலக்குடன் மலர்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாறானதொரு விழா நடைபெறும் இம் மாகாணத்தின் முதலமைச்சராக கடமையாற்றுவதைப் பெறும் பாக்கியமாக எண்ணுகின்றேன். இவ்விழாவினை சிறப்புற நடத்த முன்வந்த ஏற்பாட்டுக் குழுவினருக்கும், மலர் வெளியீட்டாளர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சரத் ஏக்கநாயக்க,**
முதலமைச்சர்,
மத்திய மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மத்திய மாகாண சபை உறுப்பினர்
## ப. திகாம்பரம் அவர்களின்
## வாழ்த்துச் செய்தி

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மலையக மக்கள் தனித்துவமான கலை பண்பாட்டு விழுமியங்களை கொண்டவர்கள். இந்தியாவில் இருந்து எமது முன்னோர் வறுமையின் கொடுமையுடன் வந்தபோதும் தமது கலாசாரத்தையும் பழக்க வழக்கங்களையும் கலை இலக்கிய பண்பாடுகளையும் சேர்ந்தே சுமந்து வந்தனர். நமது நாட்டார் பாடல்களிலும் கிராமிய கலைகளிலும் வாழ்வின் பின்னனி பின்னிபிணைந்து காணப்படுகின்றன. 1960 களில் எமது மலையக இலக்கியம் உன்னத வளர்ச்சி அடைந்த காலம். அதன் பின்னர் எமது சமூகத்தில் இலக்கியம் மீதான பற்றுதல் குறைவடைந்து வந்துள்ளது. இதற்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம். குறிப்பாக தென்னிந்திய சினிமாவின் மிதமிஞ்சிய வருகையும், தொழிநுட்ப முன்னேற்றம் காரணமாக ஊடகங்களின் செல்வாக்கும் நமது தனித்துவமான கலைகளையும் கலாசாரத்தையும் மழுங்கடிக்கச்செய்து வந்துள்ளன.

மலையகத்தில் நாடகக்கலை மிதமிஞ்சிய செல்வாக்கினைப் பெற்றிருந்தது. தோட்டங்கள் தோறும் திருவிழா மற்றும் வைபவ காலங்களில் நாடகம் அரங்கேற்றுவார்கள். அர்ச்சுணன் தபசு, காமன்கூத்து, பொன்னர் சங்கர் நாடகம் என பண்டைய கலைகளும் தோட்டங்களில் அரங்கேற்றப்படுவதுண்டு. ஆனால் தற்போதைய சினிமா கவர்ச்சி இத்தகைய கலைகளின்பால் எமது இளைஞர்களை ஈர்ப்பதில் தடைக்கல்லாக அமைந்துவிட்டது. எனினும் 1990 களின் பின் கவிதை மற்றும் சிறுகதை இலக்கியம் போன்றவற்றில் நமது மலையக எழுத்தாளர்கள் பிரகாசிப்பதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இத்தகைய சாகித்திய விழா போன்ற விழாக்கள் எம்மிடம் அருகி வரும் கலைகளை மீள நிறுத்தி மேம்படுத்துவதற்கும் புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் வாய்ப்புக்களை வழங்குகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. மத்திய மாகாண கலாசார அமைச்சுக்கு இந்த ஏற்பாட்டினை செய்தமைக்காக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு எமது சமூகத்தின் இலக்கிய ஆர்வலர்கள் நமது சுயமான வாழ்வினை பிரதிபலிக்கும் படைப்புக்களை தரவேண்டும் என இந்த சந்தர்ப்பத்தில் வேண்டிக்கொண்டு இவ்விழா சிறப்புறவும் எமது கலைஞர்கள் செழிப்புறவும் வாழ்த்துகின்றேன்.

**ப. திகாம்பரம்,**
மத்திய மாகாண சபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகர பிதாவின்
## வாழ்த்துச் செய்தி

மத்திய மாகாண கைத்தொழில் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் இந்து கலாசார அலுவல்கள் பிரிவினால் ஒழுங்கமைக்கப்பட்ட சாகித்திய விழாவினையொட்டி எனது வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

எமது கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும், மென்மேலும் விருத்தி செய்யவும் இது ஓர் அரிய சந்தர்ப்பமாக கருதுகின்றேன்.

நாம் வெவ்வேறு கலாசாரங்களை அடிப்படையாக கொண்டிருப்பினும் அவற்றை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்வதோடு, தத்தமது கலாசாரத்தை வளர்ப்பதில் பாடுபடும் அதேவேளை ஒற்றுமையுடன் செயல்பட்டு எமது தேசத்தின் வளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

இந்து கலாசாரம் பெருமளவில் பரந்து காணப்படும் பிரதேசமாகிய நுவரெலிய நகரில் இத்தகைய நிகழ்வு நடைபெறுவதில் நகரபிதா எனும் அடிப்படையில் நான் எனது உயரிய பங்களிப்பினை செலுத்த கடமைப்பட்டுள்ளேன்.

சாகித்திய தின விழா வெற்றிகரமாக நடைபெறவும் மென்மேலும் இதுபோன்ற நிகழ்வுகள் எமது நகரில் இடம்பெறவும் இறைவனை பிரார்த்திப்பதோடு, இத்தால் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பீ. டி. சந்தன லால் கருணாரத்ன,**
நகர பிதா
நுவரெலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தமிழ் சாகித்திய விழா - 2005**


2005-மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழாவினை, 2006 ம் ஆண்டு ஜனவரி 28, 29ம் திகதிகளில் நுவரெலியா நகரில் நடாத்த ஏற்பாடு செய்ய வாய்ப்பேற்பட்டமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். முக்கியமாக தமிழ் மக்கள் மத்தியில் உள்ள கலை இலக்கியத் துறையைச் சார்ந்த சிரேஷ்ட நபர்களுக்கு மேலும் புத்துணர்ச்சியளித்து சமூக அந்தஸ்துடன் முன்னேறிச் செல்வதற்காக, பல்வேறுபட்ட இலக்கியம் சார்ந்த திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவும், அத்துறையினூடாக முன்னேற ஆவலாய் உள்ளவர்களை மதிப்பீடு செய்வதும், இச்சாகித்திய விழாவின் அடிப்படை நோக்கமாகும்.

அகிலமெல்லாம் ஒரே கிராமமாக ஒன்றினைய முயற்சிக்கும் இக் காலகட்டத்தில், மலையக மக்களை இனிமேலும் தனிமைப்படுத்தாது அவர்களிடம் மறைந்து கிடக்கும் இயலுமையை வெளிக்கொணர்ந்து அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு ஒவ்வொரு வருடத்திலும் இத் தமிழ் சாகித்திய விழாவினை பெருமையுடன் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படுவதுடன், 2006ம் வருடத்தில் அதனை மேலும் நிச்சயப்படுத்தும் விதத்தில் இவ்விழாவினை நடாத்த இவ் அமைச்சுக்கு வாய்ப்பேட்பட்டுள்ளது.

பெருந்தோட்ட மக்களை நோக்கிய புதிய நோக்குடன் சேவை புரிய ஆயத்தமாக இருக்கும் இந்து கலாசார விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் கௌரவ அருள்சாமி அவர்கள் இச்சாகித்திய விழாவின் ஏற்பாடுகளுக்கு பெற்றுத்தந்த பங்களிப்பினை உளமார பெருமைப்படுத்துவதுடன், அமைச்சரின் உத்தியோகத்தர்கள் மற்றும் இவ் விழா ஏற்பாடுகளை சிறப்புற மேற்கொள்ள உதவியளித்த அனைவருக்கும் நன்றி செலுத்த விரும்புகின்றேன்.

**ஷிரானி வீரக்கோன்,**
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இப்படை தோற்கின் எப்படை .........**

இந்து கலாசார அலுவல்கள் இணைப்பாளரின் உள்ளத்திலிருந்து

இது 2005 ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய விழாவும் மலரும். இந்த மலரின் பெயர் புதிய சிந்தனை – புதிய மலையகம். இவ்விழாவின் மகுடம் வாசகம் "புதிய சிந்தனை-புதிய மலையகம்". மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் மாண்புமிகு எஸ். அருள்சாமி, தமிழ்கல்வி அமைச்சரின் பின்னணி செயலணியினர், அவரின் அமைச்சின் செயலணியினர், அவரோடு ஒன்றிணைந்து செயற்பட தொடங்கியிருக்கும் கல்விமான்கள், கற்றவர்குழாம், அமைச்சின்அரச அதிகாரிகள், இன்னும் பல ஆர்வலர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள்........என இந்த செயலணியிரை விரித்துக் கூறிக் கொண்டே போகலாம்.

இவர்கள் எல்லோருக்கும் ஒரு பொது நோக்குண்டு. வேரறுக்கப்பட்ட மலையகத் தமிழர்வாழ்வுக்கு விடிவுகான வேண்டும். பாராமுகமாக இருக்கின்ற அதிகார வர்க்கத்தின் பார்வையை இவர்கள் பக்கம் திருப்ப வேண்டும். அவர்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கையர் என்ற பதத்தோடு இந்த மக்கள் சாராரை இணைத்து, நிலைநிறுத்தி இலங்கையின் ஜனநாயகக் குடிமக்களாக வாழச் செய்ய வேண்டும். உரிமையோடு ஏனைய மக்கள் சாராருக்கு நிகராக நிமிர்ந்து வாழ வேண்டும். இதுவரைக் காலத்தில் இந்த மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக இழைக்கப்பட்டு வந்த சட்டரீதியானதும், சட்டத்துக்கு புறம்பானதுமான சமூக விரோத செயல்களில் இருந்து இவர்களை விடுவிக்க வேண்டும் என்ற இன்னோரன்ன புதிய சிந்தனையில் புதிய மலையகத்தை கட்டி எழுப்ப வேண்டும். என்ற கனவு இந்த செயலணிக்கு உண்டு.

மலையக மக்கள் என்ற பதம் மத்திய மாகாணத்தில் வாழுகின்ற இந்திய வம்சாவளி தமிழர்களை மாத்திரம் குறிக்கின்ற பதம் அல்ல. இலங்கையின் சகல மாவட்டங்களிலும் வாழுகின்ற ஒட்டு மொத்த இந்திய வம்சாவளித் தமிழர்களையும் இப்பதம் குறிக்கின்றது. கொழும்புவாழ், நீர்கொழும்புவாழ், அல்லது இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழுகின்ற இந்திய வம்சாவளித் தமிழர்கள் மலையக மக்கள் என்ற பதம் தம்மை உள்ளடக்க வில்லை என கருதுவார்களேயானால். ஒரு பொருத்தமான பெயரை இம்மக்கள் சாராருக்காக முன்மொழிந்து இலங்கையில் தமக்கு ஒரு தனியான தேசிய இனத்துக்கான அடையாளத்தை தேடிக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"**இலங்கைத் திராவிடர்**", போன்ற ஒரு பதத்தை சரிபார்த்து இம்மக்கள் அனைவருக்கும் பொருந்தத்தக்கவாறும் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறும் பாராளுமன்றத்தில் முன் மொழிவு செய்வது இலங்கையில் தமது தேசிய இனத்தை உறுதிப்படுத்திக் கொள்வதும் நிலைநிறுத்திக் கொள்வதும் மிகமிகமுக்கியமாகும்.

இதனை யார் செய்தார்கள் என பார்த்து எதிராக செயல்படுவதும், கடித்துக் குதறி சின்னாபின்னமாக்குவதும் நமக்கு நாமே செய்து கொள்ளும் மாபெரும் துரோகமாகும். தற்கால தற்போதைய, தற்காலிக எதிரியை வீழ்த்த எண்ணி அடுத்தடுத்த பரம்பரையினருக்கு, தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் செய்கின்ற மாகொடும், மாபாதகச் செயலாகும்.

மலையக மக்களின் விடுதலையை எண்ணி ஒரு மூன்றாவது சக்தியை தோற்றுவிக்க வேண்டும் என்ற கருத்து பரவலாக பேசப்பட்டு வந்தபோது ஆங்காங்கு குறிப்பாக அட்டனிலும் கொழும்பிலும் சில மூன்றாவது செயல்பாட்டு அணி தோற்றுவிக்கப்பட்ட போது, வேகமாக –மிக வேகமாக ஓர் அணி தோன்றி இன்று அரசியலிலும் வேரூன்றி கால்பதிக்க முற்படும்போது அதனை நிலைநிறுத்தி சரியாக முன்னெடுத்துச் சென்று மலையக சமுதாயத்துக்கு பயன்படுத்தி விடிவு தேடிக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் ஊக்கமும் அனைவரின் உள்ளத்திலும் ஏற்படுவது சரியானதே.

அந்த அணிதான் இந்த அணி. மாண்பு மிகு எஸ். அருள்சாமியின் தலைமையை ஏற்றுக்கொண்டு – செயல்பட்டு சமூகவிடிவை தேடமுற்படும் அணி. இதுவரை காலத்தில் இருந்துவந்த அரசியல் விரக்தியை தீர்த்துக் கொள்ள – அரசியல் வெறுமையை போக்கிக் கொள்ள தேசிய இன அடையாளத்தை பூரணப்படுத்திக் கொள்ள நமது ஒற்றுமையும், தீர்க்கதரிசனமான செயல்பாடுகளும் அவசியம் தேவை.

தற்போது இருக்கின்ற அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தத் தவறினால் எமது மலையக சமூகத்தின் ஒரு மாற்றத்துக்கான அடித்தளத்தை இடஇன்னும் எத்தனை காலம் போகுமோ ......

இந்த செயலணியை தோற்கடிக்கலாம். ஆனால் புதிய செயலணியை தோற்றுவிக்க முடியுமா என்பதுதான் ..... சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டியது அனைவரின் கடமையுமாகும். கருத்து முரண்பாடுகள், கொள்கை முரண்பாடுகள், செயல்பாட்டு முரண்பாடுகள் என பலதும் தோன்றலாம். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து எம்மை நாமே வீழ்த்திக் கொள்ளுவதை விட. விட்டுக் கொடுத்து.... பேசி தீர்த்து .... பொதுக் கொள்கைகளை உருவாக்கி ..... சமூக முன்னேற்றம் கருதி செயல்படுவோம்.

இலங்கையில் நாமும் ஒரு தேசிய இனமாக பரிணமிப்போம்.
ஒன்றுபட்டு சிந்திப்போம் செயல்படுவோம். வெற்றி பெறுவோம்.
பிறக்கட்டும் புதிய சிந்தனைகள் - தோன்றட்டும் புதிய மலையம்.

அன்புடன்
**எஸ். எஸ். தேவசிகமாணி,**
இணைப்பாளர்,
இந்து கலாசார அலுவல்கள்
மத்திய மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மத்திய மாகாண சபை தமிழ் உறுப்பினர்கள்



வே. இராதாகிருஷ்ணன்



வி. எம். நடராஜபிள்ளை



எஸ். வெள்ளையன்



எ. எம். எஸ். எம். ஹாபி

துரை மதியுகராஜா

எஸ். இராஜரட்னம்

எம். ஆர். எம். அம்ஜாட்

பி. கோவிந்தராஜ்

எஸ். பாலசந்திரன்

அனுஹா சிவராஜா

ஏ. எம். நைமுள்ளா

எஸ். எம். எம். மர்ஜான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழ்பற்றி .......

**இரா. மகேஸ்வரன்**
இதழாசிரியர்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான ஒரு வரலாற்றினைக் கொண்ட நாடு இலங்கை அதிலும் தனத்துவமான ஒரு இலக்கியப் பரப்பினை கொண்ட தமிழ் இலக்கியமே மலையக தமிழ் இலக்கியமாகும்.

இந்த தனித்துவமான இலக்கியத்திற்கு மத்திய மாகாண சபை எடுக்கும் விழாவே மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா. இவ்விதழ் இவ்விழாவின் ஆவணமாக மட்டுமல்லாது இம் மக்களின் கலாசார விழுமியங்களை வெளிகாட்டும் ஆவணமாகவும் காணப்படுகின்றது.

கடந்தகால துன்ப வரலாற்றை பற்றி தெரிந்திராமல் தமது எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள முடியாது. அமைகின்ற எதிர்காலமும் புதிய சிந்தனையில், புதிய மலையகமாக உறவாக வேண்டும். இவ்வகையிலேயே இவ் இதழ் இவ்விழாவில் மலர்ந்துள்ளது.

இந்த இதழ் புதிய மலையகத்திற்கான, புதிய சிந்தனையில் மலர, மத்திய மாகாண அமைச்சர் எஸ். அருள்சாமி காரணகர்த்தாவாக அமைகிறார். அவர் காட்டிய ஆசைகளும், அபிலாஷைகளும் இந்த இதழில் பிரதிபளித்து நிற்கின்றது.

மிக குறுகிய காலத்தில் மிகவும் காத்திரமாக இவ் இதழ் உருவாக மலர் குழு பூரண ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது. இவ் இதழின் அட்டைபடம் வரலாற்றினை நினைவுகூறத்தக்க வகையில் அமைந்துள்ளது. இதனை சிறந்த ஓவியரான கோபால் வரைந்து தந்துள்ளார்.


இவ் இதழினை ஆக்கும் பணியினை எமக்களித்த சாகித்திய விழா ஏற்பாட்டுக் குழுவுக்கும், இணைந்து செயல்பட்ட மலர்குழுவுக்கும், மலையகத்தில் படித்த, சமூக உணர்வுள்ள புத்திஜீவிகள் சிலரது ஆக்கங்களை குறுகிய காலத்தில் தந்து உதவியோருக்கும், வாழ்த்துச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் நன்றிகள் பல உரித்தாகட்டும்.

குறிப்பாக அமைச்சரின் பிரத்தியேக செயலாளர், இணைப்பாளர்களான எஸ். பத்மநாதன், எஸ். நீதிராஜா, பி. சுரேஸ், பி. சுப்ரமணியம், எஸ். எஸ். தேவசிகாமணி ஆகியோருக்கும் ஆலோசனைகள் வழங்கிய உதவி கல்வி பணிப்பாளர் மெய்யநாதனுக்கும் சிறப்பு இதழின் இதழாசிரியர் பதவியை அளித்து ஆலோசனைகள் வழங்கிய மலர்குழுவுக்கும் கலாசார இணைப்பாளரும், இச்சாகித்திய விழா துரிதமாக நடைபெற உற்சாகமூட்டியவருமான எஸ். எஸ். தேவசிகாமணிக்கும், பரந்த மனப்பாங்குடன் அவதானித்துக் கொண்டிருந்த அமைச்சர் எஸ். அருள்சாமிக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்வரும் காலத்தில் இந்த பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

ஆர். மகேஸ்வரன்,
(மலராசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓவியனின் சிந்தனையில் !

புதிய சிந்தனை – புதிய மலையகம் என்ற நோக்குடன் புதுமையான எழுச்சி கொள்ள வைக்கும் கருத்துடன் கூடிய 2005ம் ஆண்டு சாகித்திய விழா

கப்பலிலே கூட்டி வந்த பெரிய கங்காணி
ஆமா பெரிய கங்காணி
அவன் சீதை வாழ்ந்த காட்டினையே
அழிக்க வைச்சாண்டி
ஆமா அழிக்க வச்சாண்டி என்ற பாடலின் முணுமுணுப்பு எண்ணமாக பரிமாணம் பெற இன்று விருதாகவும் விழாவின் அட்டைப்படமாகவும் உங்கள் கைகளில் தவழ்கிறது.

கப்பல்: சர்ச்சைதான்; எமக்கு சின்ன வயதில் அம்மா செய்து கொடுத்த கத்திக்கப்பல், காகிதக்கப்பல்களின் ஞாபகம்... பாடப்புத்தகத்தில் படித்த ஞாபகம் திரைப்படங்களில் பார்த்து வியந்த ஞாபகம்..... என் பதினொரு வயதில் நேரில் பார்த்து மிரண்ட ஞாபகம் ஆனாலும் அம்மா மடியில் அமர்ந்து நாம் விட்ட காகிதக் கப்பல்களின் ஞாபகம் மட்டும் வழியோர நீராக .........!

கப்பல்...... உலகம் உருண்டை என நிரூபித்த மகலன், அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பஸ், இந்தியாவை, இலங்கையை கைப்பற்றிய ஐரோப்பியர் வரலாறு............

கப்பல் ........ நதிக்கரையோர நாகரீக வளர்ச்சிகள் கிரேக்க, எகிப்திய ஓவியர்களில் காணப்படும் கப்பல் உருவங்கள் .. போர்

கப்பல் ....... விஜயனின் இலங்கை வருகை; வெள்ளரசு மரத்தை சங்கமித்தை கொணர்ந்த வரலாறு; சோழப்பாண்டிய படையெடுப்பு
புராதன இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகள்

கப்பல் :.... வெள்ளையரை கலங்க வைத்த கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம், வல்வெட்டி துறையிலிருந்து அமெரிக்கா சென்ற இலங்கை கடலோடிகள்

கப்பல் : அமெரிக்க கப்பலான லுஸிட்டானியா தாக்குதலால் முதல் உலகப்போர் - பேர்ள் துறைமுகத் தாக்குதலில் இரண்டாம் உலகப் போர்.

கப்பல் : டைட்டானிக் வரலாறு

எல்லாவற்றிலும் மேலாக எங்கள் உழைப்பின் நேர்மை, உடல், வலிமை, எஜமான விசுவாசம், என்பவற்றினை அறிந்த ஐரோப்பியர் எம் முதாதையர்களை, தம் வளத்தினையும் தம்மையும் காத்துக் கொள்ள பல நாடுகளில் குடியேற்றிய உண்மை வரலாறு!

பலநூறு உறவுகளை இலங்கைக்கு ஏற்றி விற்ற ஆதிலக்ஷ்மி வரலாற்றில் இடம் பிடிக்காமல் அமிழ்ந்து போன சோகம்! பிறந்தமண், உறவுகளை பிரிந்த சோகம், இப்படி அடுக்கி கொண்டே போன என்மன கப்பல் வரலாறு - கப்பலின் மேல் என் பாசத்தை உண்மையிலேயே பொழிய வைத்தது – வரலாற்றில் கப்பலின் மகிமை ...ஆ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருது: சிறுபறையின் வடிவம் தப்பு, தப்படித்தால் எம் இதயம் அதிரும், கால்கள் தானாகவே ஆடும் சமுதாய இலக்கியம் சிலப்பதிகாரத்திலும் தப்பு வருகின்றது. தப்பில் தான் எத்தனை அடிகள். தப்பை இரசித்தான் வெள்ளையன். காலையிலேயே மனித மனங்களை சுறுசுறுப்பாக்க அடிக்க வைத்தானே! பெரட்டுதப்பு...... சேவலின் கூவல், காகத்தின் கரையல், கடிகாரங்களின் அலாரம் அல்லது எழுப்பியது தப்பின் ஒலி, அதுதானே அன்றைய வாழ்வின் சூரிய ஒளி.

வெள்ளையனுக்கு இருக்குமா? எம்மைபோன்ற சுவாரஸ்ய வரலாறு. இன்பம், துன்பம் எல்லாவற்றிற்கும் தப்பு........ தப்பு செய்தவனை தோட்டம் விட்டு விரட்டவும் தப்பு..... அதனோடு புதிய சிந்தனை – புதிய மலையகமாக மலர புதிய ஒளி, எங்கள் பாரம்பரிய விழுமியமுடன் சமாதானமான எமது பயணம் என்று விருது கூற, அட்டைப்படம் அதை மிகத் தெளிவாக விளக்கும். உண்மை பல! தெரிவு செய்த வர்ணம் வெப்பு வர்ணங்கள். நாமெல்லாம் உணர்வு மிக்கவர்கள், தன்மானம், சுயகௌரவம் கொண்டவர்கள் அமைதி வர்ணம் குளுமையான முதல் வர்ணம், நீலத்திற்குள் அடங்கியுள்ளோம். ஆனாலும் எமது சுய ஆற்றல், அறிவுவளர்ச்சி, வலிமை என்றும் உணர்ச்சிபூர்வமாகவே இருக்கும் இருண்ட வானம் செம்மஞ்சளாகி, மஞ்சளாகி, நீலமாக விடியும். எம்வாழ்வும் விடியும் என்ற நம்பிக்கையுண்டு.

கப்பல் கட்டி வந்த நாங்கள் நடந்த தூரங்கள் கரடுமுரடானவை, அமைதி, விரும்பியாகிய நாங்கள் சமாதான எண்ணத்துடன் புதிய ஒளியைத் தேடி அன்னையர்களின் அன்பு வழியில் செல்வோம். காடுகளை கழனிகளாக்கிய மூதாதையர்களை மதித்து தொழில், கல்வியில் உயர்ச்சி பெறுவதோடு எங்கள் வாழ்வின் சுயதேவைகளான நவீன வீடுகள், மின்சாரம், பொதுசனத் தொடர்பு சாதனங்களின் பங்களிப்புடன் சமூக மேம்பாட்டிற்கும் நாட்டிற்கும் உழைப்போம். எமது இயற்கை வளம் பேணுவதோடு எங்கள் வாழ்வோடு இணைந்த பாரம்பரிய கலாசார விழுமியங்களையும் பாதுகாப்போம். அழிந்துபோன எங்கள் கலாசார கூத்து, நடனங்களை மீண்டும் உலகுக்கு கொணர்வோம் என்ற உறுதிப்பாடு வரவேண்டும் என்பதையே எம் அன்னையின் வேகம் காட்டுகின்றது. கையிலுள்ள தடி சுய கட்டுப்பாட்டினை திட்டமிட்டு கடைப்பிடி என்று கூறுகின்றது. ஆம் எங்கள் மட்டக்கம்பு தானே ஒவ்வொருவரின் கங்காணி, எப்போதும் நாங்கள் மேன்மையானவர்கள் - அந்த உண்மையை உலகுக்கு எடுத்தியம்ப துணிவு கொள்ள வேண்டும். சாதாரண மூச்சு குத்துக்கு பக்கத்து வீட்டு பாட்டி பார்க்கும் வைத்தியத்தை விட பெரிதாகுமா? ஆங்கில வைத்தியம்! எங்கள் மூதாதையரின் வாழ்வில் எவ்வளவு கற்பனை கதைகள் எவ்வளவு ஒழுக்கம்! நாமும் பின்பற்றிதானே வாழ்கின்றோம். எங்களை வழிப்படுத்திய பாட்டிகளின் கற்பனை கதைகள், ஏழ்கடல் தாண்டி ஒரு குருவிக்கூட்டில் முட்டையாக ஒளித்து வைத்த அரக்கனின் உயிர் .. இப்படியான கதைதானே ஹாரிபார்ட்டர் நாம் எங்களை உணராமலே எங்களின் கலை, பாரம்பரியம், பண்பாட்டினை விட்டுக் கொடுக்க ஏனையவர்கள் அதனை கற்று மனிதனாகிறார்கள் என்ற உண்மையை புரிந்து கொள்ளவும் - நாங்கள் மேன்மையானவர்களே என்பதை உணர்த்தவே உங்கள் கைகளில் இந்த புதிய கப்பல்.

மேலும் உங்கள் கற்பனைக்கு ....

**செல்லையா சாரதால கோபாலன்**
கவின் கலா நிலையம் -

(கல்வி, உயர் கல்வியமைச்சு)
ஹைலன்ஸ் மத்திய மகா வித்தியாலயம்
அட்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த நூலுக்கான விருது
## 2003-2004

| | | | |
|---|---|---|---|
| 1. | சிறுகதை | - | தரம் இல்லை |
| 2. | நாவல் | - | தரம் இல்லை |
| 3. | கவிதை | - | சி. வே. ராமையா "மலைமேகம்" |
| 4. | கலை இலக்கிய ஆய்வு | - | சோதிமலர் ரவீந்திரன் - காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும் இலக்கியமும் |
| 5. | சிறுவர் இலக்கியம் | - | 2003 - அந்தனி ஜீவா - திருந்திய அசோகன் |
| | | - | 2004 - ரூபராணி ஜோசப் - "அம்மாவின் ஆலோசனைகள்" |

### தமிழ்கல்வி அமைச்சின் கீழ்வரும் பாடசாலைகளில் 2005 – தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பாராட்டு பெறும் மாணவர்கள்

**கண்டி மாவட்டம் :-**

| சுட்டிலக்கம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 7146205 | சுவேத்தா மகிபாலன் | க/விகாரமாதேவி மகளிர் வித்தியாலயம், கண்டி. |

**மாத்தளை மாவட்டம் :-**

| | | |
|---|---|---|
| 7102895 | சுப்பையாதனுஷன் | மா/ரத்தோட்டை இந்து மகா வித்தியாலயம், ரத்தோட்டை. |

**நுவரெலியா மாவட்டம் :-**

| | | |
|---|---|---|
| 7436475 | வரதராஜ சர்மா நிசேவிதா | நு/புனிதகபிரியேல் மகளிர் மகா வித்தியாலயம், அட்டன். |
| 7455763 | ராஜதுரை கஜேந்திரன் | நு/கேர்கஸ்வோல்ட் இல. 1, த.வி. பொகவந்தலாவை. |
| 7430566 | நவரட்ணம் கிரிசாந்தன் | நு. கைலன்ஸ் ம. ம. வி. அட்டன். |
| 7431538 | சீர்பாதம் திவ்வியசொருபினி | நு. கைலன்ஸ் ம.ம.வி., அட்டன். |
| 7431759 | தமிழ்வாணன் டொன்யா | நு. கைலன்ஸ் ம.ம.வி. அட்டன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா - 2005
## மத்திய மாகாணம்
## விருது பெறுவோர் விபரம்



எம். நாகலிங்கம்
கல்வி



தை. தனராஜ்
கல்வி



ஏ.எஸ். சந்திரபோஸ்
கல்வி



இரா.மகேஸ்வரன்
ஊடகம்



ஜெ.லெனின் மதிவானம்
கல்வி



தை. பெரியசாமி
கல்வி



திருமதி பொ.முருகேசு
கல்வி



கு. ஜீவராஜன்
கல்வி



ப. சக்திவேல்
முகாமைத்துவக் கல்வி



ஆர். சிவலிங்கம்
கல்வி



பி. சிங்கரட்ணம்
கல்வி



எஸ். இராமநாதன்
தொழிற்சங்கம்



டி. ஜயாதுரை
தொழிற்சங்கம்



து. கௌஷினி
பொறியியல்



எஸ். ஜெகநாதன்
கடமைவீரன்



எஸ். யோகராஜா
சட்டம்



ஜே.பி. ஜெயபாலன்
காட்டூனிஸ்ட்



சோ. ஸ்ரீதரன்
ஊடகம்



நாகபூஷனி கருப்பையா
ஊடகம்



ப. ஆப்டீன்
இலக்கியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுகுமாரன்
நாடகம்



எஸ். பாலகிருஸ்ணன்
எழுத்தாளர்



ஜெயகுமார்
சமூகசேவை



கி. சந்திரசேகரன்
சமூக சேவை



க. சுப்பிரமணியம்
தொழில் தருனர்



வெ. பாலகிருஸ்ணன்
தொழில் தருநர்



எம். சத்தியமூர்த்தி
தொழில் தருநர்



என். எஸ். சிவானந்தன்
சமூக சேவை



கோ. இராசையா
சமூக சேவை



எம். ஜெகதீசன்
சமூக சேவை



எஸ். தியாகு
சமூக சேவை



வா. மகாதேவன்
சமூக சேவை



எஸ். சோமபாலன்
சமூக சேவை



எம். எஸ். சுப்பிரமணியம்
சமயம்



ஆர். மதன்குமார்
இளம் கண்டுபிடிப்பாளர்



எம். மூவேந்தன்
விளையாட்டு



க. முத்துசாமி
சமூகசேவை



எஸ். சந்திரசேகரன்
கலை



ஆர். பி. கந்தையா
கலை



எம். நவநீதன்
கலை



திருமதி எம். சுசிகலா
கலை



எஸ். ஸ்டீபன்
விளையாட்டு



ஆ. தியாகராஜா
கல்வி




வி. எஸ். பெரியசாமி
சமயம்

எஸ். தியாகராஜா
சமூகசேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| எம். சிவஞானம்<br>கல்வி | கே. இராஜசேகரன்<br>சமூக சேவை | மார்கிரட் ஜோசப்<br>அறிவிப்பாளர் | கே. சமரசிங்க<br>விளையாட்டு | வே. தங்கராஜா<br>பாரம்பரிய கலை |
| எஸ். இராசையா<br>இலக்கியம் | எம். மரியசூசை<br>கல்வி | சாதனை<br>108 அடி உயர கோபுரம்<br>மாத்தளை சிறீ மு.மா.அம். கோயில் | சிறந்த கலை மன்றம்<br>சரஸ்வதி<br>கலா மன்றம், நானுஓயா | அம்புரூஸ்<br>விளையாட்டு |

## கௌரவ விருதும் கௌரவ பட்டமும்



கலை, இலக்கிய, சமூக, கல்வி, சமய துறைகளுக்கு நீண்ட காலமாக பங்களிப்புச் செய்துவரும், தொழில் அதிபர், தொழில் தருனர் எஸ். முத்தையா அவர்களுக்கு மத்திய மாகாண இந்து கலாசார, கல்வி (தமிழ்) அமைச்சு கௌரவ விருது வழங்கி ''சமூக சூரியன்'' என்ற கௌரவ பட்டத்தையும் வழங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்திலே புதிதாக அமையவிருக்கும் பல்கலைக்கழகமும் சமூக மேம்பாடும்

பேராசிரியர் எம். சின்னத்தம்பி
(பொருளியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

அண்மைக்காலமாக மலையகத்திற்கென அம்மக்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் பல்கலைக்கழக மொன்றை அமைப்பது பற்றிய தகல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் அதன் முக்கியத்துவம், அதன் சேவைகள் என்பன மூலம் எழக்கூடிய நன்மைகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

சலனங்களற்ற நீர் ஒருபோதும் கடலையடைவதில்லை எனக் கூறப்படும். அது போன்றே, காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களை அடைந்து கொள்ள முடியாத ஒரு சமூகமும் வளர்ச்சியடைய மாட்டாது. ஆகவே, ஒரு சமூகம் வளர்ச்சியடைய வேண்டுமாயின்,காலத்திற்குக் காலம் அதில் வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்கள் ஏற்படுவது இன்றியமையாததாகும். அப்படியெனின், ஒரு சமூகத்தில் இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவது யார் என்ற கேள்வி எழுகின்றது. அச்சமூகத்திலிருந்து உருவாகும் தொலை நோக்குள்ள அரசியற்றலைவர்கள், ஆற்றல் மிகு அறிவியலாளர்க்ள, சிறந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்பட தொழில்சார் நிபுணர்கள், திறமைமிக்க வியாபார முகாமையாளர்கள், ஆளுமை நிறைந்த நிர்வாகிகள் போன்ற துறைசார் நிபுணர்களே இவ்வித மாற்றங்களை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இது போன்ற சமூக முன்னோடிகளை உருவாக்க முடியாத ஒரு சமூகம் வளர்ச்சியில் பின்தங்கி நிற்கும் என்பதற்கு மலையகச் சமூகம் சிறந்ததொரு உதாரணமாக உள்ளது.

நாட்டின் ஏனைய சமூகங்களோடு ஒப்பீட்டு ரீதியில் மலையக சமூகம் கல்வித் துறையில் பின்தங்கியிருப்பது எல்லோரும் அறிந்த ஒரு உண்மையாகும். இச்சமூகத்திற்கு உண்மையான விடிவு ஏற்பட வேண்டுமாயின், இந்த நிலை மாறவேண்டியது அவசியமாகும். கல்வித்துறையில் அதிலுங் குறிப்பாக, பல்கலைக்கழகக் கல்வியில் அது துரித முன்னேற்றம் அடைவது இன்றியமையாதது. கடந்த ஒரு தசாப்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளின் பயனாக ஆரம்பக் கல்வியிலும், இடை நிலைக்கல்வியிலும் அது ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. ஆனால், மூன்றாம் நலைக் கல்வியைப் பொறுத்தவரை அது இன்னும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. குறைந்த தலா வருமானத்தையும் மிதமான பொருளாதார வளர்ச்சியையும் கொண்ட எமது நாடு, மனித அபிவிருத்தியில் இன்று உன்னதமான ஒரு நிலையை அடைந்துள்ளது. இதனை அடைந்து கொள்வதில் எமது ஆரம்பகால அரசியற்றலைவர்களும் சமூக முன்னோடிகளும் பாரிய பங்களித்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அறுபதாம் ஆண்டுகள் தொட்டு இலங்கையில் மூன்றாம் நிலைக் கல்விக்கான வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகரித்து வந்துள்ள போதும், உயர்கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான வயதுப் பிரிவினரில் ஒரு சிறிய விகிதாசாரத்தினரே இன்றுங்கூட பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்று உயர்கல்வியை பெறக் கூடியதாக உள்ளது. உதாரணமாக, பல்கலைக்கழக அனுமதிக்கான நடப்பு விதிகளுக்கமைய 2002ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர (உயர்தர) பரீட்சையில் மொத்தமாக 92,228 பேர் ஆகக்குறைந்த தகுதியையாவது பெற்றிருந்த போதும், அவர்களுள் 12,144 பேர் மட்டுமே அனுமதக்கப்பட்டதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினது அறிக்கைகள் காட்டுகின்றன. இது அவ்வாண்டில் அனுமதிக்கான தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் 13.0 வீதம் மட்டுமேயாகும். மேலும், இலங்கையில் 20-24 வயதுக்குட்பட்ட இளைஞர்களுள் 2.0 வீதமானோர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இது 18.0 வீதமாகவும் ஏனைய விருத்தியடையும் நாடுகளில் சராசரியாக 3.0 வீதமாகவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கன. பல்கலைக்கழகங்களில் காணப்படும் இடவசதி போதாமையும் சாதனங்களின் பற்றாக்குறையுமே இதற்கான முக்கிய காரணங்களாகும். அண்மைக்காலத்தில் தனியார்துறையில் தாபிக்கப்பட்டுள்ள உயர்கல்வி நிறுவனங்கள் இதை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்வதாக உள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின்பயிற்சி நெறிகளை உள்நாட்டிலேயே பயின்று, அப்பல்கலைக்கழகங்களின் பட்டங்களை பெறுவதற்குத் தேவையான வசதிகளை இவை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. எனினும், மாணவர்களிடமிருந்து மிகவும் உயர்ந்த கட்டணங்கள் அறவிடப்படுவதால் சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவற்றிற் சேர்ந்து உயர்கல்வியைப் பெறுவது சாத்தியமற்றதாக உள்ளது. நிதி வசதி படைத்த ஒரு சிலர் தமது பிள்ளைகளை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி பட்டம் பெற வைக்கின்றனர்.

எமது நாட்டில் பல்கலைக்கழகப்பட்டங்கள் பெற்றோரிடையே பரவலான வேலையின்மை காணப்பட்ட போதும், கடந்த காலங்களில் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு உயர்கல்வியே சிறந்த மார்க்கமாக இருந்துள்ளதோடு, தொடர்ந்தும் இருந்து வருகின்றது. மேலும், பல்லைகழகக்கல்வியானது ஒருவனது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. எனவே, பட்டதாரிகளிடையே வேலையின்மை காணப்பட்டாலுங்கூட பல்கலைக்கழகக் கல்விக்கான கேள்வி உயர்வாக உள்ளது. அறுபதாம் ஆண்டுகளில் எமது பல்கலைக்கழகங்களில் தாய்மொழிக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசு பல புதிய பல்கலைக்கழகங்களைத் தாபித்ததாலும் பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவற்றில் அனுமதி பெறுவதற்கு மாவட்ட அடிப்படையிலான தரப்படுத்தலையும் மொழிவாரியான தரப்படுத்தலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்ததால், ஆயிரக்கணக்கான கிராமிய இளைஞர்களும், யுவதிகளும், வறிய குடும்பங்களைச் சேர்ந்த பலரும் அவற்றில் அனுமதி பெற்று உயர்கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றனர். பல்வேறு அரச நிறுவனங்களிலும், தனியார் தாபனங்களிலும், ஏன் சில சர்வதேச நிறுவனங்களிலுங்கூட இன்று உயர் பதவிகளை வகிக்கும் பல இலங்கையர்கள், இதன் மூலம் உருவாக்கப்பட்டவர்களே. தேசிய மட்டத்தில் இவ்வித மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் மலையகச்சமூகம் பல்வேறு வரலாற்று ரீதியான காரணங்களால் இவ்வாய்ப்புக்களைப் பயன்படுத்தி மூன்றாம் நிலைக்கல்வியில் முன்னேற முடியாது போயிற்று.

இலங்கையில் கடந்த நான்கு தசாப்த காலப்பகுதியில் ஏனைய சமூகங்கள் மூன்றாம் நிலைக்கல்வியை பெற்றுக் கொள்வதில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளன. எழுபதாம் ஆண்டுகளுக்கு முன்னர் கல்வியில் மிகவும் பின்தங்கியிருந்த எமது சகோதர முஸ்லிம் சமூகம், சமூக உணர்வு மிக்கதும் தொலைநோக்கு கொண்டதுமான அதன் அரசியற்றலைவர்கள் மேற்கொண்ட காத்திரமான நடவடிக்கைகள் காரணமாக, தொடர்ந்து வந்த காலப்பகுதியில் பாடசாலைக் கல்வியில் துரிதமாக முன்னேற்றமடைந்து, இன்று தமது சமூகத்தினர் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் அரச பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதில் வெற்றி கண்டதன் மூலம் தனது இளைஞர்களின் உயர்கல்விக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் சமூகத்தின் சமூக கலாசார வளர்ச்சிக்கும் உறுதியானதொரு அடித்தளத்தை அமைத்துக் கொண்டுள்ளது. இதை ஒரு எடுத்துக் காட்டாகக் கொள்வோமாயின், மலையக சமூகம் செறிந்து வாழும் மலையகப் பிரதேசத்தில் இதே போன்ற பிராந்திய பல்கலைக்கழகமொன்றை அமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

மலையக இளைஞர்கள் உயர்கல்வியைப் பெறுவதன் அவசியத்தையும் அதற்கென ஒரு பல்கலைக்கழகம் தேவையென்பதையும் உள்வாரியான காரணிகளின் அடிப்படையில் மட்டுமன்றி, சர்வதேச ரீதியான காரணிகளின் அடிப்படையிலும் நோக்கலாம். தொழில்நுட்பத்தில் அண்மைக்காலத்திலேற்பட்டு வந்துள்ள வியத்தகு முன்னேற்றங்களினால் தகவல் பரிமாற்றம், போக்குவரத்து, தொடர்பாடல் என்பவற்றில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மேற்படி மாற்றங்கள் காலத்தையும் தூரத்தையும் அர்த்தமற்றதாக்கி விட்டன. எனவே தான், உலகம் இன்று சுருங்கி வருவதாக, அதாவது, முழு உலகமுமே ஒரு கிராமமாக மாறி வருவதாக கூறப்படுகின்றது. கிராமங்கள், நகரங்கள், நாடுகள் என்ற எல்லைகளைத்தாண்டி பொருட்கள், சேவைகள் என்பவற்றிற்கான சந்தைகள் இன்று உலகெங்கும் வியாபித்துக் காணப்படுகின்றன. பல்நாட்டுக் கம்பனிகளின் உலகளாவிய உற்பத்தி நடவடிக்கைகள் காரணமாக பொருட்கள் எங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன, நுகர்வோர் அவற்றை எங்கே கொள்வனவு செய்கிறார்கள் என்பதெல்லாம் முக்கியத்துவமிழந்து வருகின்றன. அதேபோன்றே, ஊழியத்திற்கான சந்தையும் இன்று உலகளாவிய ஒரு சந்தையாக மாறிவிட்டது. போக்குவரத்து, தகவல் பரிமாற்றம், தொடர்பாடல் என்பவற்றுக்கான செலவுகள் குறைந்து செல்லும் அதேவேளையில், அவற்றிற்கு ஏற்படும் காலதாமதமும் குறைந்து வருகின்றது. இதனாலேற்படும் துரிதமான உலகமயமாக்கம் காரணமாக அறிவாற்றலும் வினைத்திறனும் கொண்டோர் போட்டியடிப்படையில் தத்தமது நாடுகளின் அரசியல், புவியியல் எல்லைகளுக்கு வெளியே பிறநாடுகளிலும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. மூன்றாம் நிலைக்கல்வி பயின்றோருக்கே இவ்வாறான வாய்ப்புக்கள் அதிகமாகவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், இன்றைய உலகம் ஒரு அறிவுசார் உலகமென கூறப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு அறிவே இன்று முக்கிய காரணியாக மாறிவிட்டது. இந்தியாவின் பெங்களூர் நகரம் இன்று கணனி மென்பொருள் உற்பத்தித்துறையில் முன்னணியில் இருப்பதை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். மேலும் கடந்த காலங்களில் தொழில் வாய்ப்புக்களையும் செல்வத்தையும் உருவாக்கிக் கொள்வதற்கு நாடுகள் தமது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து கொள்வதில் பாரிய முதலீடுகளை மேற்கொண்டன. ஆனால் இன்று, அதே நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மக்களது அறிவாற்றல், ஆக்க சக்தி, வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் அவர்கள் மீதே இவ்வித முதலீடுகள் செய்யப்படுகின்றன. அறிவினை உற்பத்தி செய்தல், அதனைத் தெரிவு செய்தல், உற்பத்தி நோக்கங்களுக்காக அதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்தல் என்பவற்றில் ஒரு சமூகத்திற்கு உள்ள ஆற்றலை மேம்படுத்திக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

இன்றைய அறவுசார் உலகில் மலையக இளைஞர்களும் இணைந்து கொள்ள வேண்டுமாயின், அவர்கள் தமது அறிவாற்றலையும் ஆக்கத்திறனையும் பெருக்கிக் கொள்வது இன்றியமையாதது. இதனை அடைந்து கொள்வதற்கு அவர்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் பல்கலைக்கழகமொன்று அமைவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திக் கூறமுடியாது. நாட்டில் இருக்கும் நாட்டில் இருக்கும் ஏனைய பல்கலைக்கழகங்கள் சிறவற்றிலாவது தமிழ்மொழி மூலமான கல்விக்கான வாய்ப்புக்கள் இருந்த போதும், அவை மலையக மாணவர்களின் விசேட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. அறிவாற்றலால் உந்தப்படும் பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமான கல்வி, பயிற்சி என்பவற்றை உறுதி செய்து கொள்வதில் மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்கள் முக்கிய பங்களிக்கின்றன என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அறிவினால் உந்தப்படும் இன்றைய உலகில் மலையக இளைஞர்களும் இணைந்து கொள்வதற்கு மலையக சமூகம் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் அமையவிருக்கும் பல்கலைக்கழகத்தினூடாக அவர்கள் உயர்கல்வியை பெற்றுக் கொள்வதோடு, தமது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், தமது சமூகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், தமது சமூகத்தின் கலை, கலாசார, பாரம்பரியங்களை வளர்த்துக் கொள்வதற்கும் அது உதவியாகவிருக்கும்.

தேசீய பல்கலைக்கழகமொன்றினது இடவமைவானது தேசீய ரீதியான தேவைகளின் அடிப்படையிலேயன்றி, ஒரு மாகாணத்திற்கு ஒன்று என்ற எளிமையான அடிப்படையிலோ, இன அல்லது வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டோ அமைக்கப்படக்கூடாது என தேசீய கல்வி ஆணைக்குழு (National Education Commission, 1996) கூறுகின்றது. வேறுபட்ட சமூக பொருளாதாரப் பின்னணிகளைக் கொண்ட மாணவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகக் கொண்டு வருவதன் மூலம் அவர்களிடையே சமூக ஊடாடலை ஏற்படுத்தி அதனூடாக ஒத்துழைப்பு, சமாதான சகவாழ்வு போன்ற நற்பண்புகளையும், உயரிய சமூகப் பெறுமானங்களையும் ஏற்படுத்துவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டுமெனவும் அது கூறுகின்றது. இக்கருத்து பெருமளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றே. எனினும், இலங்கையைப் பொறுத்தவரையில், ஏற்கவே பல பல்கலைக்கழகங்கள் பிராந்திய ரீதியிலும், ஓரளவு இன அடிப்படையிலும் தாபிக்கப்பட்டுள்ள நிலையில், மலையக இளைஞர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அம்மக்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்திலே பல்கலைக்கழகமொன்றை நிறுவும் அரசின் முடிவு வரவேற்கத்தக்கதே. இது மலையக இளைஞர்களின் உயர்கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரிக்க உதவுமென்பதில் ஐயமில்லை.

மூன்றாம் நிலைக்கல்வியில் அதிலுங் குறிப்பாக, பல்கலைக்கழகக் கல்வியில் பங்கு பெறுவது எந்தவொரு சமூகத்தினதும் கல்வி அடைவினை அளவிடுவதற்கான நியமமானதொரு சுட்டியாக கருதப்படுகின்றது. பெருந்தோட்டத்தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை, வருடாந்தம் ஒரு வீதத்திற்குக் குறைவானோரே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். இலங்கையின் மொத்த சனத்தொகையி இந்திய வம்வாவளித்தமிழரின் இன விகிதாசாரம் 7.0 வீதமாகவிருக்கும் நிலையில் குறைந்தது இச்சமூகத்தைச் சேர்ந்த 3,000 மாணவர்களாவது பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால் உண்மையில் 300 தொடக்கம் 350 பேர் மட்டுமே எமது பல்கலைக்கழகங்களில் இணையும் எமது மாணவர்களின் மொத்த எண்ணிக்கையானது காலப்போக்கில் ஓரளவு அதிகரித்து வந்துள்ள போதும் பல்கலைக்கழக மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் அவர்களது பங்கில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இம்மாணவர்களது பாடசாலைக்கல்வியில் காணப்படும் பல்வேறு குறைபாடுகளே இதற்கான முக்கிய காரணமாகும். உதாரணமாக, தகுதிவாய்ந்த ஆசிரியர்கள், இச்சமூகத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் என்போரின் பற்றாக்குறை, இப்பாடசாலைகளில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் போதாமை, பெற்றோரின் அசமந்தப்போக்கு, அவர்களின் வறுமைநிலை போன்றவற்றை இங்கு குறிப்பிடலாம். இவ்வித குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே இம்மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான வாய்ப்பினை அதிகரித்துக்கொள்ள முடியும். அத்துடன், கடந்த காலங்களில் அறிமுகம் செய்யப்பட்ட பிரதேச ரீதியான தரப்படுத்தல், மொழி ரீதியான தரப்படுத்தல் என்பன போன்று இம்மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதியில் ஏதோ ஒரு வகையில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

பல்கலைக்கழகங்கள் குறிப்பிட்ட கல்வித்துறைகளில் பட்டப்படிப்பினை நடத்துவதோடு நின்று விடாது, பல விசேட துறைகளில் குறுகியகால டிப்ளோமா மட்ட, சான்றிதழ் மட்ட பயிற்சி நெறிகள் போன்ற விரிவாக்கல் பாடநெறிகளை நடத்துவதற்கும் வாய்ப்பு இருப்பதால், பட்டப்படிப்பை மேற் கொள்வதற்கு ஆகக் குறைந்த கல்வித்தகைமைகளையாவது கொண்டிராதோர் மேற்படி பயிற்சி நெறிகளில் பங்குபற்றி ஏதேனுமொரு துறையில் விசேட திறமைகளை அபிவிருத்தி செய்து கொள்வதன் மூலம் தொழிற்சந்தையில் போட்டியிட முடியும். இவ்வித பயிற்சி நெறிகள் ஏற்கனவே தொழிலில் இருப்போருக்கும் வழங்கப்படலாம். அத்துடன், பல்கலைக்கழகங்கள் நடத்தும் பல்வேறு கற்கை நெறிகளுக்கு அனுமதி பெறுவதற்கான ஆகக் குறைந்த தகைமைகளாவது உள்ளோரின் எண்ணிக்கை மலையக சமூகத்தினரிடையே குறைவாகவிருப்பதாலேயே பல்கலைக்கழகங்களில் பயிலும் மலையக சமூகத்தினரிடையே குறைவாகவிருப்பதனாலேயே பல்கலைக்கழகங்களில் பயிலும் மலையக மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவாக உள்ளது. இப்படியான மாணவர்கள் தேவையான போதிய தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு புதிதாகத் தாபிக்கப்படும் பல்கலைக்கழகம் 1 1/2 தொடக்கம் 2 வருட கால துணை பட்டப்பயிற்சி (Associate Degrees) அல்லது அடிமட்ட பயிற்சி நெறிகளை நடத்தலாம். இப்பயிற்சி நெறிகளில் தேர்ச்சியடைவோர் குறிப்பிட்ட காலத்திற்கு ஏதேனுமொரு தொழிலைச் செய்து விட்டு, மீண்டும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, 1 தொடக்கம் 1 1/2 வருட காலப்பயிற்சியின் பின்னர் முழுமையான பட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பினை அளிக்கலாம். இப்படியானதொரு பட்டப்பயிற்சி முறை திறந்த பல்கலைக்கழகத்தில் காணப்படுவதை இங்கு சுட்டிக்காட்டலாம். மலையக மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை அதிகரிக்கும் அதே வேளையில், மனித வளமும் மானுட அபிவிருத்தியும் குறைவாகவிருக்கும் மலையகத்தைப் பொறுத்தவரை இவ்வித பயிற்சி நெறிகள் இவற்றை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கினை அளிக்கலாம். புதிதாக அமையவிருக்கும் பல்கலைக்கழகமானது மலையக சமூகத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளில் உதவமுடியும் என்பது இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

**பேராசிரியர் எம். சின்னத்தம்பி,**
பொருளியற்றுறை,
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழ் சமூகம் அதன் வளர்ச்சியும் பொறுப்புகளும்

பேராசிரியர் மா. செ. மூக்கையா
புவியியல்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் வாழும் பல்வேறு சமூகப் பிரிவுகளினதும் பொருளாதார சமூக வாழ்க்கைத் தரங்களைப் பற்றிக் காலத்திற்கு காலம் மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தினை அடுத்து வந்த அரை நூற்றாண்டில் பல்வேறு குறைபாடுகள் பலவீனங்கள் என்பவற்றுடனும், பிரதான சமூகங்கள் இலங்கையில் பல வளர்ச்சிகளையும் முன்னேற்றங்களையும் கண்டுள்ளமையினை உதாசீனம் செய்ய முடியாது. வாழுங்காலம், எழுத்தறிவு, மரண வீதம் உணவு நுகர்ச்சி என்பவற்றினை மக்களது வாழ்க்கைத் தரம் பற்றிய இனங்காணலுக்கான குறிகாட்டிகளாக பயன்படுத்துகின்றோம். அவற்றின்படி மேற்கூறப்பட்ட யாவற்றிலும் இலங்கை 1950ஆம் ஆண்டு காலங்களுடன் ஒப்பிடுகையில் முன்னேறியதாக காணப்படுவது உண்மைதான். ஆயினும் சமகால உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அரை நூற்றாண்டு காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள இவ்வளர்ச்சி போதுமானதா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. குறிப்பாக மலேசியா, வியட்நாம், வங்காள தேசம் போன்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வளர்ச்சி போதாது என்ற குறைபாடு உண்டு.

அதே வேளையில் இலங்கையின் சமூகங்களுக்குள்ளேயே காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வுகளும் பாரதூரமானதாகவே உள்ளன. எமது கவனத்தினை பெரிதும் ஈர்க்கின்ற மலையக தமிழ் மக்களது வாழ்க்கை நிலைமைகளை பகுத்தாராய முற்படும் ஒரே முயற்சியில், இத்தகைய ஏற்றத்தாழ்வினை இனங்காணக் கூடியதாக உள்ளது. இலங்கையில் வருமானம் பற்றிய தரவுகளை நோக்கும்போது சராசரி இலங்கையருடைய வருடாந்தத வருமானத்தினை விட (ஏறத்தாள ரூபாய் 92,000 மிகக் குறைந்ததாகவே பெருந்தோட்டங்களில் பெரும்பான்மையாக வாழுகின்ற மலையக தமிழ் மக்களது தனி நபருக்குரிய வருமானம் (ஏறத்தாள ரூபாய் 40,000) காணப்படுகின்றது. அது சராசரி வருமானத்தை விட 60 வீதம் குறைவானதாகும். கல்விநிலை பற்றிய விபரங்களும், வாழுங்காலம் பற்றிய தகவல்களும் போசாக்கு உணவு கிடைக்கக்கூடிய நிலைமைகளும், வாழ்கின்ற வீடுகளின் தரம், விஸ்தீரணம் என்பன பற்றிய தரவுகளும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்து மிகவும் தாழ் நிலையில் உள்ளமையினயே எமக்கு எடுத்துக் கூறுவதாக உள்ளது.

இன்று (2005) இலங்கையின் மொத்த மக்கள் தொகை ஏறத்தாள 20 மில்லியனாகும். இதில் ஏறத்தாள 1.4 மில்லியன் பேர் மலையக தமிழ் மக்களாவர். இவர்கள் பெருந்தோட்டங்களில் மாத்திரமின்றி கிராமங்கள், நகரங்கள், வடகிழக்கு மாகாணங்களின் கிராமப்புறங்கள் என்பவற்றில் பரவி வாழ்கின்றனர். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் பதவி வகித்த அரசுகள் காலத்திற்குக் காலம் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்காக மேற்கொண்ட பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள், தேசிய அபிவிருத்தித் திட்டங்கள். அவை ஏனைய சமூகங்களுக்கு வழங்கிய நிவாரணங்களில் குறிப்பிடத்தக்க எதுவித நன்மையினையும் மலையகத் தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை என்பதனை நாம் மறக்கலாகாது. இலங்கை அரசு மனிதவள அபிவிருத்திக்காக இலவசக் கல்வி, இலவச வீட்டு வசதி, திட்டங்கள் (பத்து இலட்சம் வீடுகள் திட்டம் போன்றவை) ஜனசவி உணவு பங்கீடு, உணவு முத்திரை, என பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வந்துள்ளது. ஆனால் இவை யாவற்றிலுமே மலையகத் தமிழ் மக்களுக்கு வழங்காத குறைபாடுகள் நிலவி வந்துள்ளது.

நிலவுடமை என்பது ஆசிய நாடுகளில் ஒரு பொருளாதார பாதிப்பு என்பதும் அதே நேரத்தில் சமூக அங்கீகாரத்திற்கான ஓர் அந்தஸ்து என்பதும் கவனிக்கத்தக்கவை. இக்கருத்தினையும் கவனத்திற் கொண்டே இலங்கை அரசுகள் காலத்திற்கு காலம் நிலமற்ற குடியானவ மக்களுக்கு நிலம் வழங்குவதற்காக வரண்ட வலய குடியேற்ற திட்டங்களை உருவாக்கி குறிப்பாக சிங்கள மக்களுக்கு அரச நிலங்களை பகிர்ந்தளித்து வந்தன. அவற்றை விட கிராம விஸ்தரிப்புத் திட்டம், சுவர்ண பூமி மற்றும் அரசின் ஒதுக்கு நிலங்களை கையகப்படுத்திக் கொண்டவர்களுக்கு அதனை உறுதி செய்து கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நிலம் வழங்கப்பட்டது. 1990 ஆண்டு வரை மலையக மக்கள் இலங்கையரல்ல என்ற காரணத்திற்காக நில உரிமை மறுக்கப்பட்டது. 1988 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இலங்கையராக பதிவு செய்ய விரும்பிய அனைவருக்கும் இலங்கை குடியுரிமை வழங்கிய பின்னரும் இதே நிலை தொடர்கிறது. இதில் குறிப்பாக 1972 ஆம் ஆண்டு இலங்கையில் பாரியளவில் அமுலாக்கம் செய்யப்பட்ட நிலச்சீர்திருத்தத்தின் மூலமும் கூட நிலமற்ற மலையக விவசாய தொழிலாளர்களுக்கு நிலம் வழங்கப்படாததோடு நிலவுரிமை கொண்டிருந்த சில மலையக மத்திய தர வகுப்பினரது நிலங்களும் அரசினால் கையகப்படுத்திக் கொள்ளப்பட்டது.

அடுத்த மிக முக்கியமான துறை கல்வியாகும். ஒரு சமூகம் முன்னேற வேண்டுமானால் அச்சமூகத்தினர் மனித வள வளர்ச்சிக்கு உட்படுத்தல் அவசியமாகும். மலையக தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் முதனிலைக் கல்வியுடனேயே ஏறத்தாழ 60 வீதமானோர் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகின்றனர். நவீன காலத்தில் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள புதிய போக்கு வாழ்நாள் முழுவதும் தொடர்கின்ற கல்வியாகும். அதாவது வாழும் மனிதனுக்கு கல்வி கற்றலுக்கு முடிவில்லை என்பதாகும். ஆனால் மலையகத் தமிழ் மக்களில் 60 வீதமானோர் 12 வயதுடன் கல்வியை முடித்துக் கொள்வதால் ஏற்படக்கூடிய முன்னேற்றம் பொறுத்த அபாயம் தெளிவாகின்றது. இன்னும் பாடசாலை இறுதித் தேர்வு வரைச் செல்வோர் அவ்வயதுக்குரியவர்களில் 12 வீதத்திற்கும் குறைவானோர் என்னும் செய்தி எம்மை திகைப்படையச் செய்கிறது. பாடசாலைக் கல்வி இவ்வாறு பின்தங்கியிருப்பதால் உயர்கல்வி அதுவும் பல்கலைக்கழகக் கல்வி சகிக்கமுடியாத அளவில் குறைநிலையில் பூஜ்ய வீதம் உள்ளதால் அதனை பூஜ்யநிலைக்கு மேலானதாக காணமுடியாத நிலையே காணப்படுகிறது.

இத்தகைய நிலமை காரணமாக உயர் வாழ்க்கைத் தரத்திற்கும் வறுமை நீக்கத்திற்குமான தொழில் வாய்ப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமூகத்தினைப் பொறுத்து பெரிதும் விமர்சனத்துக்குரியதாக உள்ளது. ஒரு புறத்தில் கல்வி தேர்ச்சி, தொழில் பயிற்சி என்பவற்றில் தாழ்நிலையில் இருப்பதால் இவர்களால் போட்டியுடன் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. மறுபுறத்தில் நீண்டகாலமாக குடியுரிமை இல்லாதிருந்ததால் அரச தொழில்களையும் சில தனியார் துறை தொழில்களையும் கூட பெற்றுக் கொள்ள முடியாதவர்களாயினர். அது மாத்திரமன்றி அரசியல் ஆதரவற்றவர்களாதலின் மிக அரிதாக கல்வி தகுதி பெற்ற ஒரு சிலருக்கும் அரசின் உயர் தொழில்களில் வாய்ப்புக்கள் வழங்கப்படாது போனமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

மனித வள அபிவிருத்திக்கு கல்வியும் தொழில் பயிற்சியும் மிக முக்கியமானவை. ஒரு புறத்தில் இச்சமூகத்தினர் ஊக்கத்துடன் கல்வி கற்காதது குறைபாடாகவும் மறுபுறத்தில் அதற்கான வாய்ப்புக்களும் சூழலும் இல்லாது காணப்படுவதனையும் சுட்டிக்காட்ட வேண்டும். முதனிலைக் கல்விக்கான பாடசாலைகளில் (800) ஏறத்தாள 50 வீதமானவை இன்னும் மிகத்தரக் குறைவாக பௌதீக வசதிகள், தகுதி மிக்க ஆசிரியர்களும் போதிய ஆசிரியர்களும் இல்லாத குறைபாட்டுடனேயே காணப்படுகின்றன. உயர் கல்வி செல்வதற்கான வசதிகள் பெரும்பாலான மாணவர்களுக்கு அரிதாகவே உள்ளன. இலவசக் கல்வியானாலும் பெற்றோர்களுடைய பங்களிப்பும் அத்தியாவசியமாயுள்ளது. ஆனால் பெற்றோர் தாம் அளிக்கும் முன்னுரிமை ஒழுங்கில் கல்வியினை முக்கியப்படுத்தாத காரணத்தினால் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவதில்லை. எனவே இத்தகைய பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் விடாமுயற்சியும், ஆர்வமும் காரணமாக உயர்கல்விக்காக செயற்படும் மாணவர்கள் இலங்கையில் உயர்கல்விக்கான போதிய வசதியல்லாத காரணத்தினால் உயர்கல்வியை தொடர முடிவதில்லை. 2005 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ.த) பரீட்சைக்கு தோற்றிய இரண்டு இலட்சத்து நாலாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக தெரிவுக்கு தகுதியடைந்திருந்தனர். ஆயினும் அவர்களால் பதினொராயிரம் பேரையே பல்கலைக்கழகக் கல்விக்கு தெரிவு செய்யவிருப்பதாக அறிய முடிகிறது. இதனால் ஒரு இலட்சம் இளைஞர்களுடைய எதிர்காலம் கேள்விக்குரியதாகிறது. மலையக மாணவர்களில் ஏழு சத வீதமானவர்கள். இதில் அடங்காத போதிலும் 300 முதல் 500 வரையானோர் தகுதி பெற்றவர்களாயிருக்கலாம் என கடந்த கால அனுபவங்களின் மூலம் அனுமானிக்க முடியும். இவர்களை கவனத்திற் கொண்டு அவர்களுக்கு உயர்கல்விக்கான நிறுவன ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி செய்வதன் மூலம் இதுவரை காலம் கல்வியில் பின்தங்கிய மலையகத்தமிழ் சமூகத்திற்கு விடிவுகாணும் முயற்சி பலனளிக்கலாம் என்னும் கருத்தின் வளர்ச்சி பல சாராரினது கருத்தினைக் கவர்ந்துள்ளது. ஆனால் தூரதிஸ்ட வசமாக அரசியல் தலைமைகளின் முன்னுரிமை இத்துறை சார்ந்து ஏற்படாதவரை விடிவு ஏற்படமுடியாது.

மலையக தமிழ் சமூகத்தின் முன்னேற்றம் பல சவால்களை எதிர்நோக்குகின்றது. தொழிலாளர்களது மூலதனம் கடந்த 50 ஆண்டுகளில் நாளொன்றுக்கு ரூபாய் மூன்று இலட்சத்து இருநூறாக அதிகரித்துள்ளது. ஆனால் இது வாழ்க்கைத் தரத்தை அந்தளவுக்கு உயர்த்தியுள்ளதா என்ற வினாவுக்கு பதிலளிக்கும் போது அது மகிழ்ச்சிக்குரியதாக இல்லை. மாறாக வாழ்க்கைத் தரத்தில் குறிப்பாக மனித வள வளர்ச்சியைப் பொறுத்து எதுவித ஆக்கபூர்வமான வளர்ச்சியையும் காட்டுவதாக இல்லை.

அரசினது ஆதரவு பல்வேறு கோணங்களில் இருந்தும் தேவைப்படுகின்றது. அதற்கு அர்த்தமுள்ள அரசியல் அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. முரண்பாடற்ற அனுசரித்துப் போகும் அரசியல் அணுகுமுறைகளும், தூரநோக்கும், அர்த்தமிக்க நோக்கங்களும் இலக்குகளும் நோக்கிய திசையில் மலையக தமிழ்ச் சமூகம் தாமதமின்றி செயற்படவேண்டியது அவசியமாகிறது.

கடந்த ஒரு சில தசாப்தங்களாக பெருந்தோட்டத் தொழிலாளர்களது வாழ்விடங்களை தரமுயர்த்தும் பல்வேறு முயற்சிகள் பற்றிய கொள்கை வழிகாட்டல்களும் திட்டங்களும் இடம்பெற்று வந்துள்ளன. ஆயினும் மொத்த தேவையான இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட வீடுகளின் தரமுயர்த்தல் ஒருபுறமிருக்க இதுவரையில் 20,000 க்கும் குறைந்த அளவிலான வீடுகளைப் பொறுத்தே விடிவு ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. கடந்தகால அனுபவங்களே தொடருமானால் இவ்வீடுகள் முற்றாக தரமுயர்த்தப்பட ஒன்றரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலதாமதம் ஏற்படுமோ என அஞ்ச வேண்டியுள்ளது.

மனிதவள அபிவிருத்திக்கான கல்வி வளர்ச்சியும் தொழில்நுட்பத் தகுதிகளும் வளர்ச்சியடையாமல் மலையகத் தமிழ் சமூகம் குறிப்பாக இன்றைய அரசியல் பொருளாதாரச் சூழலில் விமோசனம் காண்பது சந்தேகத்திற்குரியதேயாகும்.

உலகளாவிய வகையில் அரசுகள் நலன்புரிக் கொள்கையைக் கைவிடும் போக்கே வளர்ந்து வருகின்றது. ஒரு சில நாடுகளே சிறியளவில் அதனைப் பின்பற்றி வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் இலங்கையின் அரசியலில் பேரம் பேசும் பலமிக்க சமூகங்களே நன்மையடைய முடியும் என்னும் நிலைமையும் காணப்படுகின்றது. எனவே ஒருபுறத்தில் அரசியல் ரீதியாக மலையகத் தமிழ் சமூகம் ஒருங்கிணைதலும், அரசியல் பேரங்களும், பக்கஞ் சார்ந்த கொள்கை உருவாக்கத்திற்கான வற்புறுத்தல்களும் தேவையாயுள்ளன. அதேவேளையில் மறுபுறத்தில் மக்களும் தமது எதிர்கால சந்ததியினரது முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு இளைய தலைமுறையினரது மனிதவள வளர்ச்சிக்கான அத்திவாரமிடுதல் தொடர்பான பங்கினை வழங்குவதில் தாமதம் செய்தலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைதீர் பாரபட்சம் - ஒரு விளக்கம்

பேராசிரியர் எஸ். சந்திரசேகரன்
கொழும்புப் பல்கலைக்கழகம்

காலங்காலமாகக் கல்வியில் பின்தங்கி வந்த மக்கள் இன்று இயல்கல்வித் துறையிலும் அரசாங்க வேலைவாய்ப்புகளிலும் பின்தங்கியிருக்கும் நிலை உண்டு. இன்று இயங்கி வரும் 12 பல்கலைக்கழகங்களில் பயிலும் 6,00,000 மாணவர்களில் மலையக மாணவர்கள் 300 பேராவது இருப்பது ஐயத்திற்குரியது. ஆண்டுதோறும் அனுமதிபெறும் 16000 (2005) மாணவர்களில் அவர்களுடைய தொகை 100-150 வரை மட்டுமே இருக்கலாம். உயர்கல்வியில் நீண்ட காலமாக ஈடுபட்டு வந்தவர்களுடன் போட்டியிட்டு அனுமதி பெறுவது சிரமம் : க. பொ. த. (உ.த.) பரீட்சையில் சித்தி பெற முடியும். அனுமதி பெறத்தகுதியும் பெற முடியும். ஆனால் 3,00,000 தேர்வு நாடிகளில் 5.5 சதவீதமானவர்களுக்கே அனுமதி. இப்படியான போட்டிக்கு வேறு ஒரு நாட்டை உதாரணங் காட்டுவதும் கடினம். இந்நிலையில் பின்தங்கிய மலையக சமூகத்துக்கு உதவிக்கூடிய முறையில் அரசு ஏதேனும் செய்ய வேண்டுமாயின் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளது போன்ற நேரொத்த நடவடிக்கை குறைதீர் பாரபட்சம் என்றும் கொள்கையைப் பயன்படுத்த வேண்டும். காலங்காலமாகக் கல்வியில் பின்தங்கியவர்களுக்கு, அவர்களுடைய கடந்த கால இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் உதவ இக்கொள்கை பின்பற்றப்படுகின்றது. இது பற்றிய விளக்கமே இக்கட்டுரை

வரலாற்றுக் காரணங்களால் சில நாடுகளில் சமூக, பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட பல பிரிவினர்கள் (சிறுபான்மையினர் பெண்கள், கடினப் பிரதேசங்களிலும் மாவட்டங்களிலும் வாழ்வோர்) பல பொருளாதார, தொழில், அரசியல் பிரதிநிதித்துவ மற்றும் கல்வித்துறை வாய்ப்புகளை இழக்க நேரிட்டது. இப்பிரிவு மக்கள் எதிர்நோக்கிய பல இயலாமைகளால் பாதிக்கப்படாத இதர பிரிவாளர்கள் கல்வியினூடாக பெற்ற வாய்ப்புக்கள், தகுதிகள், அவற்றினடிப்படையில் விரிவான தொழில்வாய்ப்புகள் என்பவற்றைப் பெற முடிந்தது. இதனால் அவர்களுடைய வாழ்க்கைத் தராதரங்கள், வசதிகள் மேம்பாட்டு வசதிகள், உயர்ந்த வருமானங்கள், சமூக அந்தஸ்து என்பவற்றைப் பெறமுடிந்தது. இதனால் பின்தங்கிய பிரிவினர்களுக்கும் இம்முன்னேறிய பிரிவினர்களுக்குமிடையே வருமானங்கள், சமூக அந்தஸ்து என்பவற்றில் பெரும் ஏற்றதாழ்வு காணப்பட்டது. இவ்வேற்றதாழ்வுகள் சமூக ஒழுங்கு முறைமையின் உறுதிப்பாட்டைப் பாதித்தன. சலுகைகள் பெறாத பிரிவினர்களின் விரக்திகளும் ஏமாற்றங்களும் அவர்களை வன்செயல் வழிமுறைகளை நாடத் தூண்டின. இவ்வாறான பின்தங்கிய பிரிவினரின் வாய்ப்புகளற்ற, விரக்தி நிறைந்த நிலைமைகள் மனித உரிமை மீறல்களாகவும் சமூக நீதிக்கு எதிரானவையாகவும் காணப்பட்டன. சனநாயக அரசியல் முறையில் இவர்களின் குறைகளைத் தீர்க்கும் புதிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் பற்றி அரசியலாளர்கள் சிந்திக்க வேண்டியதாயிற்று.

காலங்காலமாக நவீன கல்வியில் பங்கு கொண்டு சித்தி பெற்று அதன் பலன்களை அனுபவித்தவர்கள் கல்வியினூடாகவே சமூக பொருளாதார மேம்பாடு என்ற ஒரு கல்விப் பாரம்பரியத்தை வரித்துக் கொண்டனர். மற்ற பிரிவினர்கள் குறைந்த வாழ்க்கைத் தரங்களையும் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழும் நிலையையும் சாதாரண, திறன்கள் தேவைப்படாத உடல் உழைப்புத் தொழிலாளர்களாக மாறினர். தொடர்ச்சியான வறுமை, அதன் காரணமாகக் கல்வியின்மை, அதன் விளைவாகக் கண்ணியமான வேலை இன்மை, எனவே வறுமை என்ற நச்சு வலையத்தில் அவர்கள் சிக்கிக் கொண்டனர்.

இப்பின்புலத்தில் பல்வேறு நாட்டுஅரசாங்கங்களும் இப்பின்தங்கிய பிரிவினரிடம் உயர் திறமை சித்திகளை எதிர்பாராது குறைந்த கல்விச் சித்திகளின் அடிப்படையிலே புதிய கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்கும் கொள்கைகளை உருவாக்க வேண்டியிருந்தது. ஆனால் பின்தங்கிய பிரிவினருக்கு சாதகமான இக்கொள்கைகள் சமத்துவக் கோட்பாட்டுக்கு எதிராக அவர்களுக்கு சலுகைகளை வழங்கியமையால் சில சட்டவாதிகளினது எதிர்ப்பையும் பெற்றன. சலுகை பெற்ற பிரிவினர்களும் பின்தங்கியளவர்களுக்கான இக்கொள்கையின் அடிப்படைத் தத்துவங்களையும் நியாயங்களையும் எதிர்த்தனர்.

கொள்கை பற்றிய விளக்கங்கள்

இக்கொள்கைகள் பலவாறு பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டன:

1. குறைதீர் பாரபட்சம் உடன்பாட்டுப் பாரபட்சம் (Positive Discrimination)
2. குறைதீர் நடவடிக்கை நேரொத்த நடவடிக்கை (Affirmative a|ction)
3. முன்னுரிமைக் கொள்கைகள் (Preferential Policies)
4. இழப்பீட்டு முன்னுரிமைகள் (Compensatory Preferences)
5. பின்நோக்கிய பாரபட்சம் (Reverse Discriminiation) (KmM.De Silva, 1997)

இங்கு முன்னுரிமைக் கொள்கை என்பது அரசாங்கம் இனங்காணும் குழுவினர்களுக்கான அரசாங்கச் சட்டப்படியான முன்னுரிமைகள் என்று வரையறுக்கப்படுகின்றது. அதாவது, முன்னுரிமைக் கொள்கைகளாவன சகல தனியாட்களையும் சட்டப்படி ஒரே அளவுகோள்களைப் பயன்படுத்தி மதிப்பிடத் தேவையில்லை என்பதை கருதுகின்றனர்.

குறைதீர் பாரட்பட்சக் கொள்கை சர்வதேச ரீதியாகப் பின்பற்றப்படுகின்றது. அங்கீகரிக்கப்படுகின்றது. பல இன, மத சிறுபான்மையினர் வாழும் நாடுகளில் அவர்களுடைய சமூக, பொருளாதார நிலைமைகளில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுமிடத்து, அவர்களுடைய குறைகளையும் பாதக நிலைமைகளையும் புதிய அணுகு முறைகளும் தேவைப்பட்டன. ஐக்கிய அமெரிக்க எழுத்தாளர்கள் 1964 இல் அந்நாட்டில் கொண்டு வரப்பட்ட சிவில் உரிமைகள் சட்டங்களே இந்நடவடிக்கைகளின் முதலாவது கட்டம் என்பர். இச்சட்டப்படி தொழில் மற்றும் கல்வி வாய்ப்புகளில் மொழி, நிறம், இனம், பாலினம், சொந்த தேசிய இனம் என்பவற்றின்த அடிப்படையில் எதுவித பாகுபாடும் காட்டப்படக்கூடாது. கடந்த காலங்களில் பாரபட்சம் காரணமாக இழந்த வாய்ப்புகளை வழங்கச் சாதகமான குறைதீர்க்கும் முறையில் உறுதியான நடவடிக்கைகள் (Affirmative Activion) மேற்கொள்ளப்படல் வேண்டும். உதாரணமாக, இனப்பாகுபாடு காரணமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தால் திரும்பவும் வேலைகள் வழங்கப்படல் வேண்டும். நீதிமன்றங்கள் பாகுபாட்டுக்கு எதிராக அதனைக் களைந்தெறியும் முறையில்பல முக்கிய பரிகார நடவடிக்கைகளை மேற்கொண்டன. மத்திய அரசுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களும் சமவாய்ப்புகளை வழங்குவதை நிர்வகிக்கும் சட்டங்களின்படி ஒழுக வேண்டியதாயிற்று.

குறைதீர்க்கும் உறுதியான நடவடிக்கையானது (AA) நேரடியாகவும் உறுதியுடனும் சிறுபான்மையினர்களும் பெண்களும் தொழில் மற்றும் கல்வி வாய்ப்புகளைப் பெறுவதைத் தடை செய்யும் காரணிகளை அகற்றுகின்றது. இக்கொள்கையை ஆதரிப்போம் தத்துவரீதியாகவும் நடைமுறையிலும் இக்கொள்கை சமூக நீதியை மேம்படுத்தி, பணிக்குழுவாட்சியில் (bureaucacy) (சிறுபான்மையினரின் பெண்களின்) வழி வகுக்கும் என்றனர். வேலைவாய்ப்பு, கல்லூரி அனுமதி என்பவற்றிலிருந்து ஏற்கனவே விலக்கி வைக்கப்பட்டவர்களுக்கு, வாய்ப்புகளை வழங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளையும் கொண்டதே இவ்வுறுதியான நடவடிக்கை (AA) என்றும் கொள்கையாகும்.

ஐக்கிய அமெரிக்காவில் சிறுபான்மையினரும் பெண்களும் பாரபட்சமாக நடாத்தப்பட்டதை ஏற்றுக் கொள்ளும் தத்துவஞானிகள், சட்ட அறிஞர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பிரஜைகள் இவ்வுறுதியான நேரொத்த நடவடிக்கையானது அரசியல் யாப்பு வழங்கும் சம உரிமைகளுக்கு முரணானவை என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர். பாரபட்சத்தின் காரணமாக இழப்பீடுகள் வழங்குவது சரியாயினும் இந்நன்மைகள் தனியாட்களுக்கு மட்டுமே வழங்கப்படலாம், குழுக்களுக்கு வழங்கப்படமுடியாது என அவர்கள் வாதிடுவர். தனியாட்கள் தாம் பாதிக்கப்பட்டனரே ஒழிய அவர்கள் குழு என்ற முறையில் பாதிக்கப்படவில்லை என்பது அவர்களுடைய வாதம். இவ்வாதத்தை மறுப்பவர்கள் இக்குழுக்களின் உறுப்பினர்கள் அனைவரும் சிறுபான்மையினர் அல்லது பெண்கள் என இனங்காணப்படுபவர்கள், அவர்கள் கல்வி ரீதியாகவும், முக்கியமாக உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டவர்கள், எனவே பழைய நிறுவனமயப்படுத்தப்பட்ட ஏற்றத்தாழ்வு நடவடிக்கைகளுக்கேற்ப இழப்பீடுகளுக்கு உரித்துடையவர்கள் என வாதிட்டனர். திறமைக்கு முதலிடம் அளிப்பது சரிதான், ஆனால் போட்டியிடும் அனைவரும் திறமையாகச் சித்தி பெற சமமான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அவர்களுடைய வாதம்.

ஐக்கிய அமெரிக்காவில் ஆக்கப்பட்ட சட்டங்களின் காரணமாக இன்று சிறுபான்மையினருக்கு உறுதிப்பாட்டு நடவடிக்கைகளின் அடிப்படையிலான சலுகைகள் பல்கலைக்கழகங்களிலும் வர்த்தக, தொழில் நிலையங்களிலும் அரச நிறுவனங்களிலும் வேரூன்றி விட்டதாகக் கூறலாம்.

குறைதீர் பாரபட்ச நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்கச் சிறுபான்மையினர் குழுவினர்களுக்கு பல நன்மைகளை வழங்கியுள்ளன என்பது உண்மையே! ஆயினும் இவ்வாறான கொள்கையானது எதிர்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்றும் சில மக்கட் பிரிவினருக்கு பாதகமானது என்பதால் இனரீதியான பதட்டங்களை ஏற்படுத்தும் என்று வாதிடுபவர்கள் உள்ளனர். ஐக்கிய அமெரிக்காவில் கலிபோர்னியா போன்ற மாநிலங்களில் இக்கொள்கையை மாற்றியமைக்கவும் முயற்சி செய்யப்படுகின்றன. இக்கொள்கை வேலைவாய்ப்புகளில் திறமைக்கு இடமளிப்பதில்லை, நீதி, சமத்துவம் என்றும் கொள்கைகளுக்கு முரணானது என்ற குற்றச்சாட்டும் உண்டு.

ஐக்கிய அமெரிக்க விமரிசகர்கள் இக்கொள்கைகள் கறுப்பு இனத்தவருக்கும் மத்திய வகுப்பினருக்கும் நன்மைகளை வழங்குகின்றன. இவர்கள் மத்தியில் வாழும் வறியவர்கள் நன்மைகளை அடைவதில்லை எனச் சுட்டிக் காட்டுகின்றனர்.

மேலும் குறைந்த கல்வித் தகுதியுடையவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளும் தொழில்களும் வழங்கப்படுவதால் கல்வித் தராதரங்கள் வீழ்ச்சியடையலாம் என்ற முறைப்பாடுகள் எழுந்துள்ளன. திறமை சித்தி பெற்றவர்கள் ஒதுக்கப்பட்டு திறமை குறைந்தவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுவதால் தராதரங்கள் குறைகின்றன என்பது அவர்களுடைய வாதமாகும்.

## இங்கிலாந்து

ஐரோப்பிய நாடுகளில் முன்னர் வாய்ப்பு மறுக்கப்பட்ட சிறுபான்மையினருக்குச் சார்பான நடவடிக்கைகள் மிக மெதுவாகவே மேற்கொள்ளப்பட்டன. 1984 இல் ஐரோப்பியப் பேரவை வேலைவாய்ப்புகள் பெண்களுக்கு மறுக்கப்படுவதையிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டது. பேரவை வழங்கிய ஆலோசனைகள் :

- பெண்கள் பற்றிய பாதகமான சமூக எண்ணங்களை மாற்றுதல்.
- தொழிற் பயிற்சியையும் ஆலோசனைகளையும் பெண்களுக்கு வழங்குதல்.
- பெண்களுக்குப் பிள்ளைப் பராமரிப்புகள் உண்டு என்பதால், பொருத்தமான வேலை நேரங்களை வழங்குதல்.

ஐக்கிய இராச்சியத்தில் (UK) தொழில் வாய்ப்புகளில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை ஒழித்துக் கட்டும் வகையில் ஒரு சட்டம் (Sex Discrimination Act) கொண்டு வரப்பட்டது.

1976 ஆம் ஆண்டின் இன உறவுகள் சட்டங்களின்படி அரச அமைப்புகளும் ஏனைய நிறுவனங்களும் சில குறிப்பிட்ட இனக்குழுவினருக்கு விசேட கல்வியையும் பயிற்சியையும் பொதுநல சேவைகளையும் வழங்குதல் வேண்டும். எனினும் இச்சட்டங்கள் முன்னர் காட்டப்பட்ட பாரபட்சங்களுக்கான இழப்பீடு நடவடிக்கை என்ற முறையில் இவ்வாறான நடவடிக்கைகளையே விதந்துரைத்தன. மேலும் இச்சட்டமானது, பாலினம், இனத்துவ அடிப்படையிலான குறைதீர்க்கும் உடன்பாட்டுப் பாரபட்சம் நடவடிக்கைகளைச் சட்ட விரோதமாக்கின. அதாவது இங்கிலாந்தின் பொதுசனக் கருத்து இவ்வாறான முன்னர் வாய்ப்புகளை கிடைக்கப்பெறாத சிறுபான்மையினருக்குச் சார்பானதாக இருக்கவில்லை.

இங்கிலாந்தில் காவல்துறை உட்பட பல நிறுவனங்கள் சில இனக்குழுவினர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கும் வகையில் விளம்பரங்கள் செய்து வந்தன. அரசியல் கட்சிகள், குறைதீர் பாரட்சக் கொள்கை அடிப்படையில் பெண்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்க முற்பட்டனர். தொழிற் கட்சியின் இம்முயற்சிகள் நீதிமன்றத்தீர்ப்பொன்றினால் பின்னர் கைவிடப்பட்டன. இவ்வாறான சலுகை, பாரபட்சத்துக்கு எதிரான சட்டங்களுடன் முரண்பட்டு நின்றமையே இதற்குக் காரணம்.

1995 க்கு முன்னர் வேலைவாய்ப்புகளில் மூன்று சதவீதம் ஊனமுற்றோருக்கு ஒதுக்கப்பட்டது. மின்தூக்கிப் பணி, வாகனங்களை நிறுத்தும் பணி என்பன மட்டுமே அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் 1995 ஆம் ஆண்டின் சட்டமொன்று இச்சலுகையையும் நீக்கி விட்டது.மொத்தத்தில் இங்கிலாந்தில் இக்குறை தீர் பாரபட்சக் கொள்கைக்கு அதிக வரவேற்பிருக்கவில்லை.

## இந்தியா

இந்திய நாடு 1947 இல் சுதந்திரமடைந்த காலந்தொடக்கம் தாழ்த்தப்பட்ட சாதியினர் என இனங்காணப்பட்டோருக்குச் சார்பாகக் குறைதீர் பாரபட்சக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. உண்மையில் இக்கொள்கை ஐக்கிய அமெரிக்காவில் உருப்பெற்று ஏனைய நாடுகளுக்கு பரவியதாகக் கூறப்பட்ட போதிலும் 'இக்கொள்கையை முதலாவதாக அறிமுகம் செய்த நாடு இந்தியாதான். இச்சாதியினர் பட்டியல்படுத்தப்பட்ட சாதியினர் (SC) எனக் குறிப்பிடப்பட்டனர்.

இந்தியா போன்ற நவீன ஜனநாயக நாடுகளில் இன, மத, மொழி, சாதி, சமய வேறுபாடின்றி சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கொள்கையையும் பின்தங்கிய பிரிவினரை மேம்படுத்த விசேட வாய்ப்புகளை வழங்கி சமூக நீதியை நிலைநாட்டும் கொள்கையையும் பின்பற்றிச் சமரசம் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் பெருந்தொகையான மக்கள் சாதி அடிப்படையில் கல்வி, மற்றும் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படாது பாகுபாடாக நடாத்தப்பட்டு வந்தனர். இதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. சுதந்திர இந்தியாவில் இச்சலுகையற்ற, பின்தங்கிய வகுப்பினரின் வரலாற்று ரீதியான இழப்புகளை ஈடுசெய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் எழுந்தது. கல்வி, தொழில் வாய்ப்புகள், சட்டமன்றங்கள், என்பவற்றில் அவர்களுக்கென விசேட இட ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. அரசாங்க உதவி, கடன், அபிவிருத்தித் திட்டங்கள் என்பவற்றிலும் இவ்வொதுக்கீடுகள் செய்யப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சலுகை ஒதுக்கீடுகளை பெறவேண்டிய பிரிவினர்கள் பின்வருமாறு:

- பட்டியல்படுத்தப்பட்ட சாதியாளர் (SC)
- பட்டியல்படுத்தப்பட்ட பழங்குடியினர் (ST)
- பிற பின்தங்கிய வகுப்பினர் (OBA)
- பெண்கள், சமய சிறுபான்மையினர்

1. 1991 இல் பட்டியல்படுத்தப்பட்ட சாதியினர் தொகையும் சதவீதமும் 135 மில்லியன் மொத்த இந்திய மக்கள் தொகையில் 15.75%

1991 இல் பட்டியல்படுத்தப்பட்ட பழங்குடியினர் தொகையும் சதவீதமும்
66 மில்லியன் இந்திய மக்கள் தொகையில் 7.75%

இவ்வகுப்பினர்களுக்குச் சார்பான பல ஏற்பாடுகளை – குறைதீர் பாரபட்ச ஏற்பாடுகளை இந்திய அரசியல் திட்டம் கொண்டிருந்தது. அவ்வேற்பாடுகள் பின்வருமாறு :
ஏற்பாடு 17: தீண்டாமை ஒழிக்கப்பட்டு தண்டனைக்குரிய ஒரு குற்றமாக்கப்பட்டது,

ஏற்பாடு 46: இப்பிரிவினரின் கல்வி, பொருளாதார நலன்களை மேம்படுத்தல்,

ஏற்பாடு 330 மற்றும் 332 லோகசபை, மாநில சட்டமன்றங்களில் இடஒதுக்கீடு.,

அரசியல் சட்டப்படி எல்லாப் பிரஜைகளுக்கும் அடிப்படைச் சம உரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது. ஆயினும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு (SC & ST) நன்மைகளை வழங்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் அரசியல் திட்டத்தின் எந்த ஏற்பாடும் தடை செய்ய முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு குறைதீர் பாரபட்சம் கொள்கையின் அடிப்படையில் வழங்கப்பட்ட நன்மைகள்.

- பாராளுமன்றம், சட்டமன்றங்களில் இடஒதுக்கீடு
- பாடசாலைகள், கல்லூரிகளில் இடஒதுக்கீடு,
- அரசாங்க சேவையில் தொழில் வாய்ப்புகள்
- ஏனைய அபிவிருத்தித் திட்டங்களில் பணச் சலுகைகள்
- பின்னர் அரசாங்க நிதி உதவியுடன் இயங்கும் ஏனைய சுய ஆட்சித் தன்மை படைத்த அமைப்புகளுக்கும் இச் சலுகைகள் நீடிக்கப்பட்டன.

பட்டியல் வகுப்பினர்களுக்கு அவர்களுடைய குடித்தொகை வீதாசார அடிப்படையில் (ST+SC=22.6%) 22.5% இடங்கள் பல்வேறு துறைகளிலும் ஒதுக்கப்பட்டன. இவ்வாறான சட்டபூர்வமான ஒதுக்கீடுகள் இவ்வகுப்பினரால் முழுமையானக நிரப்பப்படாவிட்டாலும் மத்திய அரசின் சேவையில் (1994) முதலாந்தர பதவிகளில் (A தர) அவர்கள் வீதாசாரம் 10.25% ஆகவும் இரண்டாந்தர, மூன்றாந்தர பதவிகளில் முறையே 12%, 15% மாகவும் அவர்கள் சதவீதம் அதிகரிக்க உதவியது. அரச சேவையில் உள்ள கீழ் மட்ட தொழில்களில் அவர்கள் சதவீதம் 49 ஆக, உரிய சனத்தொகை வீதத்தை விட அதிகரித்துக் காணப்பட்டது. இது தவிர்ந்த நான்கு பிரிவு அரச பதவிகளில் (A, B, C, D) அவர்கள் வீதாசாரம் 16.9 ஆகக் காணப்பட்டது. (1995)

இவர்களை விட பிற பின்தங்கிய சாதியினர் எனச் சுட்டப்பட்டவர்களுக்கு (OBC) மண்டல் ஆணைக்குழு 27 சதவீத இடங்களை ஒதுக்கியது. (இவர்களுடைய சனத்தொகை சதவீதம் நாட்டில் 52.1%). மொத்தத்தில் இந்தியாவின் சனத்தொகை வீதாசாரம் பின்வருமாறு அமைகின்றது.

சாதி அடிப்படையில் இந்தியாவில் மக்கள் தொகை 1992

1. உயர் சாதியினர் - 25.34%
2. பின்தங்கிய சாதி - 52.10%
3. பட்டியல் சாதியினர் - 22.60%

மொத்தத்தில் பின்தங்கிய பழங்குடியினர் 2, 3 பிரிவுகளைச் சேர்ந்தோரின் வீதாசாரம் 74.7 ஆக இருந்தது. (பார்க்க - மேலுள்ள அட்டவணை)

ஆயினும் இவ்விரு சாராருக்கும் 49.5 சதவீத இட ஒதுக்கீடே அனுமதிக்கப்பட்டது. இதற்குக் காரணம் உயர் நீதிமன்றத்தீர்ப்பொன்றின்படி, ஒதுக்கீடுகள் 50 சதவீதத்துக்குக் குறைவாக இருத்தல் வேண்டும் என்பதாகும்.

அண்மைக்காலங்களில் சில மாநிலங்களில் பின்தங்கிய முஸ்லீம் பிரிவினரும் இக்குறைதீர் பாகுபாட்டுப் பட்டியலில் இடம் பெற்று வருகின்றனர்.

- கேரளத்தில் 12% இடங்கள் முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன,
- 1994 இல் ஆந்திர மாநிலத்தில் குரஸி முஸ்லீம் பிரிவினர் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.
- 1994 செப்டம்பர் மாதம் மணிப்பூர் அரசு முஸ்லீம்களை பின்தங்கிய பிரிவினர் (OBC) பட்டியலில் சேர்த்துக்கொண்டது. முஸ்லீம்களில் சில பிரிவினரின் பொருளாதார நிலைமை பட்டியல் சாதியினரின் நிலைமையை ஒத்ததாக இருந்தமையால் அவர்களுக்கும் ஒதுக்கீடுகளைச் செய்ய வேண்டியதாயிற்று.

பின்தங்கிய சாதியினர், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்கள் காலங்காலமாகப் பெற்றிராத மறுக்கப்பட்டு வந்த வாய்ப்புகளுக்கு ஈடு செய்யும் வகையில் இவ்வாறான குறை தீர்க்கும் பாகுபாட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டது. இதன் சமூக நீதியை நிலை நாட்டும் நோக்கம் போற்றுதற்குரியது. ஆயினும் இக்கொள்கை பற்றிய பல கண்டனங்களும் உண்டு :

இக்கொள்கையானது நன்மைகளை வழங்குவதை விட தீமையான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது.
இந்தியாவின் மக்கள் தொகையில் கணிசமானவர்களின் சமூகரீதியான பின்தங்கிய நிலையை இல்லாதொழிக்காது மேலும் வலுப்பெறச் செய்யவே இக்கொள்கைகள் உதவியுள்ளன.
ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அதிக விலை அளிக்கப்பட்டு விட்டது, ஒதுக்கீட்டு அடிப்படையில் தகுதியற்றவர்களுக்குத் தான் இடமளிக்கப்படுகின்றது.
பல்கலைக்கழக, பாடசாலை இடங்களை சாதி அடிப்படையில் ஒதுக்கி சலுகை வழங்குவது ஒரு பெரிய குற்றமாகும்.
ஒதுக்கீட்டுக் கொள்கை காரணமாக இந்தியாக அதன் அரசியலமைப்பு எடுத்துக் கூறும் சமத்துவ சமூகம் என்ற இலக்கிலிருந்து விலகிச் செல்கின்றது.
பின்தங்கிய வகுப்புப் பிள்ளைகள் ஒதுக்கீட்டு முறை மூலம் பதவி பெற்ற தகுதியற்ற ஆசிரியர்களிடம் பயில வேண்டியிருப்பது நியாயமானதா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் ஆரோக்கிய நிலை பற்றிய ஆய்வுகளின் தேவை

பேராசிரியர் இரா. சிவகணேசன்
தலைவர், உயிரிரசாயனத் துறை
மருத்துவ பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

மலையக மக்களின், குறிப்பாகத் தோட்டத் தொழிலாள சமூகத்தினரின், தற்போதைய ஆரோக்கிய நிலை பற்றிய தகவல்கள் மிகவும் சொற்பம் என்றே கூறலாம். தேசிய மட்ட கணிப்பீடுகள் கிரமமான முறையில் மேற்கொள்ளப்படாததாலும், தகுந்த விதத்தில் நடாத்தப்படாததாலும் எம் நாட்டு மக்களின் ஆரோக்கிய நிலைச் சுட்டிகள் உண்மையான நிலையை புலப்படுத்துவதாகத் தெரியவில்லை. சுகாதார அமைச்சின் நிர்வாகத்திற்குட்பட்ட பல ஸ்தாபனங்கள் எம் மக்களின் ஆரோக்கியம் சம்பந்தமான மதிப்பீடுகளை மேற்கொள்வதில் கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கினால், தற்பொழுது உள்ள தகவல்கள் பல வருடங்களுக்கு முன்பு பெறப்பட்டவையாகும். இந்தத் தகவல்கள் காலத்திற்கு ஒவ்வாதவை.

எனினும் கைவசம் உள்ள தரவுகளின்படி, தோட்டப்புற மக்களின் ஆரோக்கிய நிலைச் சுட்டிகளை தேசிய மட்ட தரவுகளோடு ஒப்பு நோக்குகையில் மிகவும் மோசமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடியும். இதற்கு பல உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

1. *பிறப்பு விகிதம்:* நுவரெலியா மாவட்டத்தில் பிறப்பு விகிதம் 2001 ஆம் ஆண்டில், 1000 சனத்தொகைக்கு 15"3 பேர் ஆகும். முழு இலங்கைக்கும் இது 18.9பேர் ஆகும். சில குறிப்பிட்ட மாவட்டங்களில் பிறப்பு விகிதம் பின்வருமாறு உள்ளது கொழும்பு 27.1, பதுளை 23.5, கண்டி 22.9, மன்னார் ஆகக் குறைந்த விகிதமான 11.5.

2. *இறப்பு விகிதம்*: 2001 ஆம் ஆண்டில் நுவரெலியா மாவட்டத்தில் 1000 பேருக்கு 5.2 ஆகும். தேசிய அளவில் இது 5.9 ஆகும்.

3. *தாய்மார் இறப்பு விகிதம்*: 1996ம் ஆண்டில் ஒவ்வொரு 10000 நிறைப் பிரசவத்தின்போது 4.5 தாய்மார்கள் நுவரெலியா மாவட்டத்தில் இறந்திருக்கிறார்கள். இது இலங்கையின் விகிதத்தோடு (2.3) ஒப்பிடும்பொழுது இரு மடங்காகும். பதுளை மாவட்டத்தில் இது 5.2 ஆக அமைந்திருந்தது.

4. சிசு இறப்பு விகிதம்:- 200 ஆண்டில் நிகழ்ந்த ஒவ்வொரு 10000 நிறைப் பிரசவத்தின் போது நுவரெலியாவில் 15.5, பதுளையில் 21.0 சிசுக்கள் இறந்துள்ளன.இது இலங்கையின் சராசரி சிசு இறப்பு விகிதத்துடன் (13.3) ஒப்பிடும்பொழுது கூடிய அளவிலானது. இதே போல் குழந்தை இறப்பு விகிதமும் மிகவும் மோசமாக இருப்பதை அவதானிக்க முடியும்.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் மாவட்ட ரீதியில் சேகரிக்கப்பட்டவையாதலால், தோட்டபுற மக்களின் தகவல்களாக அவை அமைந்துவிடாது. ஆதலால் தோட்டங்களில் வாழ்கின்ற தொழிலாளர்களை மட்டும் உள்ளடக்கிய கணிப்பீடாக அமையுமிடத்து, அவை தோட்டப்புற மக்களின் நிலையை பிரதிபலிக்கக்கூடியதாக அமையும்.

ஒருவன் சுகதேகியாக வாழ உணவு, உறைவிடம், ஆரோக்கியமான சூழல் என்பன இன்றியமையாததாகும். பெருந்தோட்டத்துறை மக்கள் வாழும் சூழல் எப்படிப்பட்டதென்பது யாவரும் அறிந்த விடயமாகும். ஆதலால் அவர்கள் மத்தியில் பிரத்தியேகமான சில நோய்களும், குறைபாட்டு நிலைகளையும் காணலாம். இவற்றை அறிந்து கொள்வதற்கு இதுவரை முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இலங்கையில் வாழும் ஒவ்வொரு இனத்துக்கும் தனித்தும் உண்டு. இனங்களிடையே மனிதப் பண்புகள், கலாசார பண்பாடுகள், தேக ஆரோக்கிய நிலை, உணவுப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் வேறுபாடுகள் உள்ளன. இவையெல்லாம் உரிய முறையில் அறியப்பட்டு, அவை மனித சமுதாய வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கங்களை யாதென நோக்கப்படல் வேண்டும். இத்திசையில் எமது ஆய்வுகள் அமைந்திருக்க வேண்டியது அத்தியாவசியமானது.

மலையக மக்களைப் பற்றிய ஆய்வுகள், குறிப்பாக மருத்துவத்துறையைப் பொறுத்த மட்டில் ஒரு கேள்விக் குறியாகவே அமைந்துள்ளது. ஏனைய சமூகத்தவருடன் ஒப்பிடும்பொழுது, மலையக சமுதாயம் கல்வி, பொருளாதார வேலை வாய்ப்பு, பல்கலைக்கழக வாய்ப்பு, தேக ஆரோக்கியம், சுகாதாரம், மருத்துவ வசதி என்பவற்றில் பின் தங்கியே காணப்படுகின்றது. இதற்கான காரணங்கள் யாவை என அறிய உருப்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆதலால் உண்மையான தகவல்களை அறிய சுதந்திரமாகவும் சிந்திக்கக்கூடிய அமைப்புக்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் வட்டத்திற்கு அப்பாற்பட்ட மலையக புத்தி ஜீவிகள் இதனை சவாலாக ஏற்று செயற்பட வேண்டும் மலையக சமுதாயத்தின் முன்னேற்றமின்மையை தெளிவுபடுத்த அடிப்படை ஆய்வுகளை திறந்த மனதுடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும் நடாத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கலைப் பாரம்பரியம்

கலாநிதி துரை. மனோகரன்
தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

ஏறத்தாழ 170 ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்ட இலங்கையின் மலையகத் தமிழர், தமிழகத்திலிருந்து இந்நாட்டுக்கு வரும்போது வெறும் கைகளோடு வந்தாலும், வெறுமையான மனங்களோடு வரவில்லை. அவர்கள் தங்கள் வருகையோடு, தங்களுக்கெனத் தனியான கலை இலக்கியப் பாரம்பரியங்களையும் இந்நாட்டுக்குக் கொணர்ந்து சேர்த்தனர்.

அவையே அம்மக்களின் பாரம்பரியச் சொத்துகளாகவும் விளங்குகின்றன. நாட்டார் பாடல்கள், நாட்டார் கூத்துக்கள், ஆடல்கள், விளையாட்டுக்கள், கதைகள் பழமொழிகள் போன்றவற்றையும் அவர்கள் இலங்கைக்குக் கொண்டு வந்தனர். இந்நாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளிற் குடியேறி வாழத்தொடங்கிய அம்மக்கள் பெரும்பாலும் எழுத்து வாசனையற்றோராகவே விளங்கினர்.அவர்கள் மத்தியில் நாட்டார் கலை இலக்கியங்கள் வேரூன்றுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாயிற்று.

தமிழகத்திலிருந்து இலங்கைக்குப்பெருந்தோட்டத் தொழிலாளர்களாக வருகை தந்தபோது அவர்களுள் ஓரளவு படிப்பறிவு கொண்டவர்களாகப் பண்டாரம் அல்லது வாத்தியார் என்று கூறப்படுவர். கங்காணி போன்றோரே காணப்பட்டனர். அவர்கள் ஓரளவு புராண இதிகாசக்கதைகளைத் தெரிந்தவர்களாக இருந்தனர். பெரும்பாலும் பொங்கல், புதுவருடம், தீபாவளி போன்ற பெருநாட்களிலும் நிலாக்காலங்களிலும் லயன்களில் தொழிலாளர் அமர்ந்திருந்து அவர்கள் கூறும் புராண இதிகாசக்கதைகளைச் செவிமடுத்துச் சுவைப்பர். அவ்வாறு அவற்றைப் படிக்கத் தொடங்கும்போது புனிதமான வகையிலே விளக்கேற்றியும், தூப தீபங்கள் காட்டியும் தெய்வங்களை வணங்கிய பின்னரே அவர்கள் ஆரம்பிப்பர். என்று கூறப்படுகிறது. அவற்றைப்படிப்பதை நிறுத்தும் காலங்களிலும் கூட அவ்வாறு தூப தீபங்கள் காட்டி தெய்வத்தை வணங்குவது வழமையாக இருந்துள்ளது என்பது தெரியவருகின்றது.

வாய்மொழிப்பாடல்களாக பல்வகைப்பாடல்கள் மலையக மக்கள் மத்தியிற் பாடப்பட்டு வந்துள்ளன.அவை அம்மக்களது தேவைகளையும் விம்மல்களையும் இன்பத்தினையும், இலட்சியங்களையும் உணர்த்துபவை மாத்திரமன்றி, அவர்களது அழகியல் உணர்வினையும் இனம் காட்டுவனவாக உள்ளன. பொதுவாகவே நாட்டார் பாடல்களின் இசை தனித்துவமானது. பன்னெடுங்காலமாக இம் மக்களின் உணர்வுகளினின்றும் இயல்பாக எழுந்த இசையாக அது விளங்குகின்றது. காலங்காலமாகத் தமிழில் வளர்ச்சி பெற்ற இசையமைதிகளுக்கும் அது மூலவூற்றாக விளங்குகின்றது. இன்று வாய்மொழிப்பாடல்கள் பெரும்பாலும் மலையகத்தின் மூத்தவர்களின் நினைவுப் பதிவேட்டிலேயே இடம்பெற்றுள்ளன.

இம் மக்கள் தமிழகத்திலிருந்து இந்நாட்டுக்கு வரும்போது பல்வகை கூத்துக்களையும் தம் சொத்துகளாக கொண்டுவந்தனர். காமன்கூத்து, அர்ச்சுனன், தபசு, பொன்னர்சங்கர் முதலானவை அவையாகும். இவற்றுள் மலையகம் என்றதும் உடன் எவரின் நினைவுக்கும் வருவது காமன்கூத்தாகும். முன்னர் பல்வேறு தோட்டப் பகுதிகளிலும் நடைபெற்று வந்த இக்கூத்து இன்று அருகிக்கொண்டு வருவதையே காணமுடிகின்றது. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் அரசியல் தலையீடுகள் பிரசாவுரிமைப் பிரச்சினை, மற்றும் வன்செயல்கள் காரணமாகக் கணிசமான தோட்டப்பகுதி மக்கள் இந்தியா சென்று விட்டமை, வரட்சிநிலை, பொருளாதாரப் பிரச்சினைகள் இவற்றில் ஈடுபாடு கொண்டவர்களின் முதுமை, இயலாமை முதலானவை இதற்குக்காரணங்களாகும். இன்றைய நிலையில். காமன்கூத்து அழிந்துவிடாது பேணுவது கலையுள்ளம் கொண்டோரின் கட்டாயக் கடமையாகிறது. காமன்கூத்து பெருமளவுக்கு கோயிற் சூழலோடும், மக்கள் பக்தியுணர்வுடனும், சமய ஆசாரங்களுடனும் தொடர்புபட்ட கலையாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஆயினும் அதனை நவீன மேடைக்கு கொண்டுவருவது இன்றைய கட்டத்தில் இன்றியமையாத தேவையாகின்றது. இது தொடர்பாக சில பிரச்சினைகளும் உண்டு. காமன்கூத்தை நவீன மேடைக்கு கொண்டுவருவதை விரும்பாதோரும் மலையகத்தில் உளர். நவீன மேடைக்கு கொண்டுவரும் போது அதன் பக்தியுணர்வு தொடர்பான அம்சங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடுமென அஞ்சுவோராக அவர்கள் விளங்குகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் ஒரு கலையைப் பாதுகாப்பதைவிட, அதன் சமய அடிப்படையைப் பேணுவதையே பெரிதாகக் கருதுகின்றனர். காமன்கூத்து தொடர்பான சடங்காசாரங்களைக் கோயிலிற் பேணிக்கொண்டு அதன் கலையம்சங்களை நவீன மேடைக்குரியதாக்க வேண்டும். இவ்வகையில் மறைந்த பேராசிரியர் சு.வித்தியானந்தனின் பணியை நினைவுகூறுவது நல்லது. அவர் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் வழங்கிவந்த நாட்டுக்கூத்துகள் அழிந்துவிடாது அவற்றை நவீன மேடைக்குரியதாக்கினர். அதே வேளை அவற்றின் பதிப்பு முயற்சிகளிலும் ஈடுபட்டார். நாட்டுக்கூத்து தொடர்பான அண்ணாவிமாரை கௌரவித்தார் அதேபோன்ற முயற்சிகளை மலையகக் கூத்துகள் தொடர்பாகவும் மேற்கொள்ளலாம்.

இவ்வகை முயற்சிகளைப் பாடசாலை நிகழ்ச்சிகள், பொதுவிழாக்கள் முதலானவற்றிலும் பரீட்சித்துப்பார்க்கலாம். அவை நிச்சயமாகப் பார்வையாளரைக் கவர்வனவாக அமையும். ஏற்கனவே மலையகக்கூத்துகள் தொடர்பாக சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை பாராட்டத்தக்கவை. அதே வேலை இம் முயற்சிகள் மேலும் பரவலாக்கப்பட வேண்டும்.

மலையக மக்களின் பண்பாட்டுணர்வைப் புலப்படுத்தும் பிறிதோர் அம்சமாக தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அவர்களது ஆட்டங்கள் விளங்குகின்றன. கும்மி, கோலாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் புலியாட்டம், கரடியாட்டம் முதலானவை அத்தகைய ஆட்டங்களாகும். இவற்றில் சில இலங்கைத்தமிழர் மத்தியிலும் இருந்துவந்த ஆடற்கலைகளாகும். மலையகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் ஆடப்படும் கலையாகக் கும்மியைக் குறிப்பிடலாம். ஆரம்பத்தில் இவ்வாட்டம் மாரியம்மன் திருவிழாக் காலங்களிலும், மாரியம்மனின் ஊர்வலத்தின் போதும், தைப் பொங்கல், தீபாவளி போன்ற திரு நாட்களின் போதும் கோயில்களைச் சூழவும் லயன்களிலும் பெண்களால் ஆடப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் ஆகியவை தோட்டங்களில் இன்றைய நிலையில் மாரியம்மன் திருவிழாக் காலங்களின் போதும் ஆடிப்பூசையின் போதும் ஆடப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அதே வேளை இவ்வாடற் கலைகள் பாடசாலை பொது நிகழ்ச்சிகளிலும் ஓரளவு இடம்பெற்று வருவது குறிப்பிடத் தக்கது. ஆயினும் திருவிழா, பொங்கல், தீபாவளி போன்றநாட்களில் லயன்களிலும் கோயில்களிலும் ஆடப்பட்டு வந்த ஒயிலாட்டம், புலியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், கரடியாட்டம் என்பவை இப்போது தமது ஆட்டத்தை இழந்துவிட்டன. எனினும் ஒயிலாட்டம் அருமையாகச் சில பொது நிகழ்ச்சிகளில் இடம்பெறுவதுண்டு. மயிலாட்டம் நடன நிகழ்ச்சிகளின் போது இடம்பெற்றுவருகிறது. அதே வேளை சிலம்பாட்டம் மலையகத்தில் ஓரளவாயினும் புத்துயிர் பெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

மலையகத்தில் இன்று வில்லிசை நிகழ்ச்சிகளும் புது மெருகு பெற்று வருகின்றன. குறிப்பாக பாடசாலை நிகழ்ச்சிகள், பொதுவிழாக்கள் முதலானவற்றில் வில்லிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுவருவதை காண முடிகிறது. அதே வேளை அவை தரமான முறையிலும் நடத்தப்படுவது மகிழ்ச்சிக்குறியதாகும்.

மலையக மக்களின் நாடக ஈடுபாடும் குறிப்பிடத் தக்க வகையில் வளர்ந்துவந்துள்ளது. தோட்டங்களிற் குடியேறிய ஆரம்பகாலங்களில் புராண க்கதைகளைக் கொண்ட நாடகங்களை நடித்தனர். புதுவருடம், தீபாவளி போன்ற திருவிழாக்களில் இத்தகைய நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இந் நாடகங்கள் பொதுவாக இரவு ஒன்பது மணி முதல் அடுத்தநாட்காலை ஆறு மணி வரை நடைபெற்று வந்ததாக அறிய முடிகின்றது. அதே வேளை 1925-1930 காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து வருகை தந்த மீனலோசினி நாடகசபாவினர் கம்பளையில் தங்கியிருந்து பல புராண நாடகங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

1950கள் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் வெகு வேகமாக வளரத் தொடங்கிய காலகட்டமாகும். அதே காலகட்டத்தில் இலங்கையின் பெருந்தோட்டப் புறங்களிலும் தி.மு.க.வின் தாக்கம் பல இளைஞர்களைக் கவரத் தொடங்கியது.அக் கழகத்தினரின் பகுத்தறிவு நூல்களும் மலையகத்திற் புராண நாடகங்களுக்கு அது வரை இருந்து வந்த மதிப்பினை பெருமளவிற் குறைத்து விட்டன. அதன் விளைவாக அந்த இடத்தைச் சமூக நாடகங்கள் பெற்றுக்கொண்டன. திருவிழாக்காலங்களில் இத்தகைய நாடகங்கள் மக்கள் முன் நடிக்கப்பட்டன. 1956 சிங்களம் மட்டும் சட்டம் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் எதிர்விளைவான எழுச்சியை ஏற்படுத்தியமை போன்று மலையகத்திலும் புதுவித உணர்வை ஏற்படுத்தியது. இத்தகைய எழுச்சி மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கலாமன்றங்களையும், நாடகமன்றங்களையும் தோற்றுவித்தது. இதனைத் தொடர்ந்து 1960களில் மலையகம், மலையகமக்கள், மலையகக்கலை இலக்கியங்கள் பற்றிய புத்துணர்வு ஏற்படத்தொடங்கி எதிர்கால வளர்ச்சிநிலைக்குக் கட்டியம்கூறி நின்றது. இதனால் 1960 முதலாக 1976வரையில் மலையகத்தின் நாடகத்துறையிலும் புதிய வளர்ச்சியொன்று ஏற்படுவதாயிற்று. 1977ஆம் ஆண்டைத் தொடர்ந்து ஏற்பட்டுவந்த இனவன்செயல்கள் மலையகத்தின் கலை இலக்கியப் பாரம்பரியத்திற்கு ஒரு சவாலாக அமைந்துவிட்டன. சில கலை இலக்கிய ஆர்வலர்கள் நாட்டைவிட்டே வெறுப்போடு வெளியேறிச் சென்றுவிட்டனர். ஆயினும் அண்மைக் காலத்தில் மலையக நாடகத்துறையிற் புதியதொரு விழிப்புணர்வு ஏற்படத்தொடங்கியுள்ளது. மலையக மக்களின் இன்னல்கள், வேதனைகள் ,விருப்புகள் எதிர்பார்ப்புகள், எழுச்சிகள் என்பனவற்றை யதார்த்தபூர்வமாகவும், குறியீட்டு வடிவிலும் நாடகங்களாக்கித் தருவதில் புதிய இளந்தலைமுறை வெற்றிகண்டு வருகின்றது. குறிப்பாக பாடசாலை மட்டத்தில் இத்தகைய விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதை இனங்காண முடிகிறது. இலங்கையின் திரைப்படத்துறை வளர்ச்சியில் மலையகத்துக்கு கணிசமான பங்குண்டு. இந்நாட்டின் முதல் 35 மி.மீ. தமிழ்த் திரைப்படமான தோட்டக்காரி முதல் இலங்கையில் ஓரளவாயினும் தரத்துடன் தமிழ்த் திரைப்படங்களைத் தயாரிக்க இயலும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்த புதிய காற்று உட்பட புதிய முயற்சிகளுக்குக் களமிட்டதாக மலையகம் விளங்குகிறது. மலையகத்தை களமாகக் கொண்ட தொலைக்காட்சி நாடகங்கள் சிலவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

மலையகத்தின் கலைப் பாரம்பரியம் தனித்துவமானது. அது இந்தியாவிலிருந்து வந்த பாரம்பரியமாக விளங்குகின்ற அதே வேளை இலங்கையின் சூழலையும் அனுசரித்து வளர்ந்து வந்திருப்பதைக் காணலாம். இலங்கைத் தமிழர்களின் கலைப் பாரம்பரியத்துடன் மலையக தமிழர்களின் இத்தகைய பாரம்பரியமும் இணைந்து இந்நாட்டில் வாழும் அனைத்து தமிழ் மக்களின் கலைச் செழுமையை இனங்காட்டிக் கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கல்வியின் எதிர்காலம்: சில முன்மொழிவுகள்

தை. தனராஜ்
நிபுணத்துவ ஆலோசகர்,
தொலைக்காட்சி கூட்டுப்பங்காண்மை நிகழ்ச்சித்திட்டம் (DEPP)
(கல்வி அமைச்சு)

## அறிமுகம்

இலங்கையில் பெருந்தோட்டங்கள் உருவாக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் எமது மக்கள் இங்கு நிரந்தரமாக வாழத்தலைப்படவில்லை. தேயிலைத் தோட்டங்களின் தொழிலாளர் தேவைகளின் இயல்பு காரணமாகவே மலையகத்தில் நிரந்தர குடியிருப்புகள் பின்னரே தோற்றம் பெற்றன. இதே காலகட்டத்தில் தான் இந்நாட்டில் தேசிய கல்வி முறைமைக்கான அடித்தளமும் இடப்பட்டது. 1869ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பொதுப்போதனாத் திணைக்களமே பின்னர் கல்வித் திணைக்களமாகவும் சுதந்திரத்துக்குப் பின்னர் கல்வி அமைச்சாகவும் பரிணாமம் பெற்றது. அத்துடன் 1943ஆம் ஆண்டின் விசேட கல்வி ஆணைக்குழு தேசிய கல்வி விருத்திக்கான தூரநோக்குக் கொண்ட பல விதந்துரைகளை முன்வைத்தது. இலங்கை சுதந்திரம் அடையுமுன்னரே மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செயற்பாடுகள் அடுத்துவந்த தசாப்தங்களில் இந்நாட்டில் அளவுரீதியான கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன. அது மாத்திரமன்றி காலத்துக்குக் காலம் தேசிய அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் சர்வதேசிய ரீதியாக ஏற்பட்ட கல்விக் கற்கை நெறிகளுக்கு முகம் கொடுக்கத்தக்கதாக இலங்கையின் கல்வி முறைமையில் பல்வேறு சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

இவ்வாறான கல்விச் செயற்பாடுகளின் ஒட்டுமொத்த விளைவாகவே இலங்கை ஒப்பீட்டளவில் மிகவும் உயர்தரமான கல்வி அடைவுகளை எட்ட முடிந்தது. எழுத்தறிவு, பாடசாலை சேர்வு, பாடசாலைகளின் பரம்பல், மாணவர்-ஆசிரியர் விகிதம் முதலிய கல்வி குறிகாட்டிகளைப் பொறுத்தமட்டில் ஒரு மூன்றாம் உலக நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் அடைவுகள் குறிப்பிடத்தக்கவையாகும். எனினும் இந்நாட்டின் கல்வி முறைமையின் பண்புத்தரம் சார்ந்த குறிகாட்டிகள் இன்னும் உயர் மட்டங்களை அடையவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இங்கு நாம் கருத்தில் கொள்ளவேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் இலங்கையின் உயர்தரமான கல்வி அடைவுகள் எவையுமே மலையகக் கல்வியை உள்வாங்கிக்கொள்ளவில்லை என்பதாகும். தேசிய கல்வி முறைமைக்கும் அதன் ஒரு பகுதியாகிய மலையகக் கல்வி என்னும் உப முறைமைக்கும் இவ்வாறான பாரிய இடைவெளி ஏன் ஏற்பட்டது என்பதையும் எவ்வாறு இவ்விடைவெளியை குறுகச்செய்து மலையகக் கல்வியை மேம்படுத்தலாம் என்பதையுமே இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

### மலையகக் கல்வி பின்தங்கியமைக்கான சில காரணிகள்:

மலையகக் கல்வி பின்தங்கியமைக்கு பல்வேறு உள்ளகக் காரணிகளும், வெளிவாரிக் காரணிகளும் உள்ளன. அவற்றில் சிலவற்றை மாத்திரம் இங்கு தொட்டுக் காட்டலாம்.

இவற்றில் முக்கியமானது 'கல்விப் பொறுப்பு' என்பதாகும். ஆரம்பம் முதல் 1970 கள் வரை தோட்டப்பாடசாலைகள் அரசின் பொறுப்பாக இருக்கவில்லை. இந்நாட்டிலுள்ள பாடசாலைகள் இருவகையான பொறுப்பாண்மைக்கு உட்பட்டிருந்தன. ஒரு பகுதிப் பாடசாலைகள் குறிப்பாக தாய்மொழிப் பாடசாலைகள் அரசின் பொறுப்பிலிருந்தன. ஏனைய பாடசாலைகள் குறிப்பாக ஆங்கிலப் பாடசாலைகள் மதக் குழுக்களினதும் மிஷனரிமார்களினதும் பொறுப்பில் இருந்தன. ஆனால் தோட்டப் பாடசாலைகள் மாத்திரம் தோட்டத் துரைகளின் பொறுப்பில் இருந்தன. தோட்டக் கம்பெனிகளுக்கு உயர்ந்தபட்ச இலாபத்தை ஈட்டித்தரும் பொறுப்பைக் கொண்டிருந்த தோட்டத்துரையிடம் ஒரு நூற்றாண்டுக்கு மேல் மலையகச் சிறாரின் கல்விக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தமை மலையகக் கல்வியின் பின்தங்கலுக்குப் பிரதான காரணியாகும்.

தோட்டப் பாடசாலை என்பது தோட்டச் சிறார்களை பெற்றார் வேலை முடிந்து வரும் வரை 'கவனித்துக் கொள்ளும்' ஓர் இடமாக இருந்ததே தவிர கல்வியூட்டுமிடமாக இருக்கவில்லை. 1909 ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கப்பட்ட கல்விச் சட்டங்கள் எவையுமே இந்த நிலைமையை அதாவது மலையகச் சிறாரின் கல்விக்கு, கல்வியுடன் எந்தத் தொடர்புமுமில்லாத தோட்டத்துரையை பொறுப்பாளியாக்கும் நிலைமையை மாற்றியமைக்கவில்லை.

ஒரேயொரு நபரை தலைமை ஆசிரியராகவும் கொண்டு எண்ணும் எழுத்தும் மாத்திரம் கற்பித்த இப்பாடசாலைகள் 'பாடசாலை' என்பதற்கான எவ்வித பண்புக் கூறுகளையும் கொண்டிருக்கவில்லை. தேசிய ரீதியாக கலைத்திட்டம், கற்பித்தல் முறைகள், வகுப்பறை முகாமைத்துவம் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் எதுவுமே இத்தோட்டப்பாடசாலைகளை எட்டியும் பார்க்கவில்லை. வருடாந்த 'பாடசாலைப் பரிசோதனை' என்னும் சடங்கினை கொண்டு நடாத்துவதற்காக அரசாங்க வட்டாரக் கல்வி அதிகாரி வருடத்தில் ஒரேயொருமுறை இப் பாடசாலையை எட்டிப்பார்ப்பதைத் தவிர இப்பாடசாலைகளில் எவ்வித மேற்பார்வையும் நடைபெறவில்லை. இன்று இந்நிலைமை பெருமளவுக்கு மாறிவிட்டது. சகல தோட்டப்பாடசாலைகளும் இன்று அரசாங்க பாடசாலைகளே. ஆனால் நீண்ட காலம் தேசிய கல்வி முறைமையிலிருந்து தனிமைப்பட்டுக் கிடந்ததால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து முற்றாக விடுபட வேண்டுமெனில் பெரும் முயற்சிகள் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

இங்கு குறிப்பிட வேண்டிய இன்னுமொரு முக்திய காரணி மலையகக்கல்வி மேம்பாடு தொடர்பான ஓர் அரசியல் உறுதிப்பாடு (Political will) இல்லாதிருந்தமையாகும். 1943 ஆம் ஆண்டின் கல்வி மீதான விசேட ஆணைக்குழுவின் விதந்துரைகளே இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கு உறுதியான அத்திவாரம் இட்டன. இவ்வாணைக்குழுவின் விதந்துரைகள் அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்ட போது தேசிய கல்வி முறையின் பிதாமகனாகப் போற்றப்படுகின்ற சீ. டப்ளியு. டப்ளியு. கன்னங்கரா ஓர் உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தோட்டப்பாடசாலைகள் 'இந்திய ஏஜன்டின்' பொறுப்பாகும் எனக் குறிப்பிட்டதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது மலையகக் குழந்தைகளின் கல்விக்கு எதிரான வரலாற்றுத் துரோகமாகும். அன்று, இலவசக் கல்வியின் தந்தையாகக் கருதப்படும் கன்னங்கரா தோட்டப்பாடசாலைகளையும் தேசிய கல்வி நீரோட்டத்தில் இணைந்திருந்தால் மலையகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியினதும் மலையக மக்களதும் நிலைமை வேறாக இருந்திருக்கும்.

இதேபோன்றதொரு 'வரலாற்று அநியாயம்' திரும்பவும் மலையகக் கல்விக்கு நடந்தது. 1960 களின் ஆரம்பத்தில் இந்நாட்டில் ஒரு சில பாடசாலைகளைத் தவிர்ந்த சகல பாடசாலைகளும் அரச கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. உதவி நன்கொடை பெறாத ஒரு சில பாடசாலைகள் மட்டுமே தனியாக இயங்க அனுமதிக்கப்பட்டன. சகல ஆசிரியர் கலாசாலைகளும் கூட அரசின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்நாட்டுச் சிறார்களுக்கு கல்வி வழங்குவதில் அரசின் மேலாண்மை இதன்மூலம் உறுதி செய்யப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தின்போதும் கூட தோட்டப்பாடசாலைகளை அரசு பொறுப்பேற்றுக்கொள்ளவில்லை. அவை தொடர்ந்தும் தோட்டத்துரையின் பொறுப்பிலேயே இருந்தன.

இவ்வாறு தேசிய செல்வத்தை உருவாக்குவதில் கணிசமான பங்களிப்புச் செய்த ஒரு மக்கள் கூட்டம் தேசிய கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு 1970 கள் வரை காத்துக்கிடக்க வேண்டி ஏற்பட்டது. அதிலும்கூட ஒரு நியாயம் இருக்கவில்லை. 1960 களில் ஒரே நாளில் ஆயிரக்கணக்கான பாடசாலைகள் அரசின் பொறுப்பின்கீழ் கொண்டுவரப்பட்டன. ஆனால் தோட்டப்பாடசாலைகளைப் பொறுப்பேற்கும் படலம் 1970 களில் ஆரம்பமாகி 1980 களின் இறுதியில் தான் முற்றுப்பெற்றது.

மலையகக் கல்விக்கு எதிரான அரசின் பாரபட்சம் குறித்து சுவர்ணா ஜயவீர (1933) இவ்வாறு கூறுகிறார். 'இலங்கை அரசின் கொள்கைகள் பால், வகுப்பு, இனம் என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டவில்லை. ஆனால் இதற்கு ஒரேயொரு புறநடை உண்டு. அதாவது தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு பெருந்தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் கல்வி காலனித்துவவாதிகளின் பொருளாதார தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டது. சுதந்திரத்துக்குப் பின்னரான சமூக அபிவிருத்திக் கொள்கைகளும்கூட அவர்களைக் கவனத்தில் கொள்ள வில்லை.'

இவ்வாறு மலையகக் கல்வி ஒதுக்கப்பட்டமைக்கும் புறந்தள்ளப்பட்டமைக்கும் அடிப்படையாக அமைந்தது இலங்கை சுதந்திரம் அடைந்தவுடனேயே எமது மக்களின் அரசியல் சுதந்திரம் பாதிக்கப்பட்டமையாகும். ஒரு நாடு சுதந்திரம் பெறும்போது அந்நாட்டின் குடிமக்களில் ஒரு பகுதியினர் அரசியல் அனாதைகளாக்கப்பட்ட அநாகரீகம் உலகில் எங்குமே நடக்கவில்லை. ஆனால் இங்கு நடந்தது. 1947 ஆம் ஆண்டு தமது ஏழு பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு அனுப்பிய மலையகமக்கள் மீண்டும் தமது பிரதிநிதியைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு 1977ஆம் ஆண்டுவரை காத்திருக்கவேண்டியிருந்தது. மலையக மக்கள் அரசியல் அனாதைகளாக வாழ்ந்த இந்த காலகட்டத்தில் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக,பொருளாதார மாற்றங்கள் குறிப்பாக கல்வியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் இம்மக்களை உள்வாங்கிக் கொள்ளவில்லை. எனவே இந்நாட்டின் ஏனைய சமூகங்கள் படிப்படியாக சமூக, பொருளாதார ரீதியாக முன்னேறியபோது எமது மக்கள் தமது தோட்டங்களுக்குள்ளேயே முடங்கிப் போயினர்.

## இன்றைய மலையகக் கல்வி

1970 களுக்குப் பின்னர் மலையக மக்கள் பெற்றுக்கொண்ட அரசியல் உரிமைகள், 1980 களிலிருந்து சர்வதேச தொண்டர் நிறுவனங்களிலிருந்து கிடைத்த நிதியீட்டம் போன்றவை மலையகக் கல்வி நிலைமைகளில் பல்வேறு உடன்பாடான மாற்றங்களை உருவாக்கியுள்ளன. 1970 களில் விரல் விட்டு எண்ணக்கூடிய மலையக ஆசிரியர்களே இருந்தனர். இன்று சுமார் 5000 மலையக ஆசிரியர்கள் உள்ளனர். மலையகப் பாடசாலைகளில் பொதுவாக மலையகத்தார்களே அதிபர்களாக உள்ளனர். பிராந்திய கல்வி அலுவலகங்களிலும் கல்வி அமைச்சிலும் கூட மலையகத்தவர்கள் ஒரு சிலர் பதவி வகிக்கின்றனர். மத்திய மாகாண சபையின் கல்வி அமைச்சர் மலையகத்தவரே. மாட்டுத் தொழுவங்களாக இருந்த மலையகப் பாடசாலைகள் பல உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ளன.

க.பொ.த. சாதாரண தர, உயர்தர பரீட்சைகளில் மலையக மாணவர்கள் பெறும் பெறுபேற்றில் உடன்பாடான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் விகிதாசார வளர்ச்சி ஏற்படாவிட்டாலும் எண்ணிக்கையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. தகைமை பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையும் கூட கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.இவை யாவும் மலையகக் கல்வியில் ஈடுபாடு கொண்ட அனைவர்க்கும் மகிழ்ச்சி அளிக்கும் விடயங்கள் என்ற போதிலும் இதே காலகட்டத்தில் இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களின் கல்வி நிலையில் ஏற்பட்டுள்ள பாரிய வளர்ச்சியுடன் ஒப்பிட்டு நோக்கும்போது நாம் பெரிதாக சந்தோஷப்பட்டுக்கொள் வதற்கு ஒன்றுமில்லை.

உதாரணமாக பல்கலைக்கழகங்களில் மலையக மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது உண்மை எனினும் விகிதாசார ரீதியாக 1950களுக்கும் இன்றைய நிலைமைக்கும் வேறுபாடு இல்லை. 1950களில் பல்கலைக்கழக மாணவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 5000 ஆகும். இன்று அது 60,000 ஆக வளர்ச்சியடைந்துள்ளது. எனவே நாட்டின் சனத்தொகையில் 6 வீதம் ஆக உள்ள மலையக சமூகம் பல்கலைக்கழகத்தில் சுமார் 3600 மாணவர்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் சகல பல்கலைக்கழகங்களிலும் உள்ள மொத்த மலையக மாணவர்கள் சுமார் 500 மாத்திரமே என கூறப்படுகிறது. இதைப்போலத்தான் வேறு விடயங்களும் உள்ளன. தேசிய வளர்ச்சிக்கு சமதையாக மலையகக் கல்வி வளர்ச்சி ஏற்படாதவரை நாம் மலையகக் கல்வி அபிவிருத்தி குறித்து பெருமை பட்டுக்கொள்ள முடியாது. மலையகக் கல்வி வளர்ச்சியை நாம் தேசிய கல்வி குறிகாட்டிகள், நியமங்களின் அடிப்படையில் தான் கணிப்பிட வேண்டும். அப்படி ஒப்பிட்டு நோக்கும்போது மலையகக் கல்வி இன்னும் பரிதாபமாகப் பின்தங்கியே உள்ளது என்னும் உண்மையை நாம் பெற்றுக்கொள்ளவே வேண்டும்.

## மலையகக் கல்வியின் எதிர்கால வளர்ச்சி- சில முன்மொழிவுகள்

* மலையகக்கல்வி வரலாற்றுரீதியான பாரபட்சங்களுக்கு உள்ளாகியுள்ளது. எனவே மலையகக் கல்வியை தேசிய கல்வி நிலைக்கு உயர்த்த வேண்டுமெனில் மலையகக் கல்விக்கு சில விசேட உதவிகள் தேவைப்படுகின்றன. சில குறிப்பிட்ட வருடங்களுக்கேனும் மலையகக் கல்விக்கு சில விசேட உதவிகள் தேவைப்படுகின்றன. சில குறிப்பிட்ட வருடங்களுக்கேனும் மலையகக் கல்வியின் பின்தங்கல் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உடன்பாடான ஏற்பாடுகள் (affirmative action) மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்தியா உட்பட பல நாடுகளில் பின்தங்கிய/பின்தள்ளப்பட்ட சமூகங்களை மேம்படுத்துவதற்கு இந்த உத்தி கையாளப்படுகிறது. மலையகக் கல்வியை இவ்வாறு பிரகடனப்படுத்தி விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள சில பிற்போக்கு சக்திகள் இலகுவில் அனுமதிக்க மாட்டா. எனவே இதற்கான சட்ட ஏற்பாடுகளில் உரிய மாற்றங்களைக் கொண்டுவர நாம் முயற்சி செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியமானது. அண்மையில் தோட்ட உட்கட்டமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட மலையக ஆசிரியர் நியமனத்துக்கு ஏற்பட்ட கதியை நாம் மறந்துவிடக்கூடாது. எதிர்காலத்திலும் மலையகக் கல்வி தொடர்பான விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ள முயற்சி எடுக்கப்படும்போதும் அதனை சட்டமேதைகள் சிலர் மனித உரிமை மீறலாக்கி விடுவர்.

எதிர்காலத்தில் மலையகக் கல்வியை மேம்படுத்த வேண்டுமெனில் இன்று அதன் நிலைமையை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். மலையகக் கல்வியின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிய சகல தரவுகளும், தகவல்களும் சேகரிக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களில் எத்தனை மலையக மாணவர்கள் கற்கின்றனர் எனக்கூடத் துல்லியமாக எமக்குக் கூற முடியாதுள்ளது. மலையகக் கல்வி பற்றிய ஒரு கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை (Education Management Information System) நாம் உருவாக்க வேண்டும். மலையகக் கல்வி விருத்தி பற்றிய எமது கோரிக்கைகளுக்கு ஓர் அறிவு ரீதியான தளத்தை ஏற்படுத்திக்கொள்ள இந்த கல்வித் தகவல் முறைமை அடிப்படையாக அமையும். அத்துடன் எமது செயற்பாடுகளின் விளைதிறன் மற்றும் எமது கல்வி முறைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அறிவுபூர்வமாக விளங்கிக் கொள்ளவும் கணிப்பீடு செய்யவும் இவ்வாறான ஒரு தகவல் முறைமை உதவும்.

மலையகக் கல்வி பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மலையகக் கல்வி விருத்திக்கான ஒரு பெருந்திட்டத்தை (Master Plan) நாம் தயாரிக்க வேண்டும். இதனை தந்திரோபாயத் திட்டம் (Strategic Plan) எனவும் கூறலாம். உடனடியான இலக்குகள் மற்றும் மத்திய கால, நீண்டகால இலக்குகளை இத்திட்டம் கொண்டிருக்க வேண்டும். இவ்விலக்குகளை அடைவதற்கு இருக்கக்கூடிய தடைகள், வாய்ப்புகள் தேவையான வளங்கள் பற்றிய விளக்கமும் அத்தடைகளை முறியடித்து இலக்குகளை அடையக்கூடிய ஏற்பாடுகளும் இத்திட்டத்தில் உள்ளடங்கி இருக்க வேண்டும். இன்று இலங்கையில் தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாது அரச நிறுவனங்களும் கூட இவ்வாறான தந்திரோபாயத் திட்டங்களைக் கொண்டுள்ளன. இன்று பல்வேறு அரசு சார்ந்த, அரசு சாரா அமைப்புகளும் மலையகக் கல்வி மேம்பாட்டில் ஈடுபடுவதாகக் கூறி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றன. இவற்றுக்கிடையில் எவ்வித இணைப்பாக்கமும் இல்லை. சிலவேளைகளில் இவற்றின் செயற்பாடுகள் இரட்டைத்தன்மை கொண்டுள்ளன. ஒரு பெருந்திட்டத்தை உருவாக்கி சகல தரப்பினையும் உரித்தாளர்களாக (stake holders) ஆக்குவதன் மூலம் மலையகத்தில் பல்வேறு ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

மலையகக் கல்விக்கான ஒரு செயலகம் (Secretariat) நிறுவப்பட வேண்டும். மலையகக் கல்வி பற்றிய தகவல்களைத் திரட்டுதல், பல்வேறு அமைப்புகளினதும் பணிகளை இணைப்பாக்கம் செய்தல், தலையீடு (intervention) செய்ய வேண்டிய கல்விப் புலங்களை அடையாளம் காணுதல் பல்வேறு உரித்தாளர்களையும் ஒருங்கிணைத்தல், மலையகக் கல்வியில் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் மதிப்பீடு செய்தல் போன்ற பல்வேறு முக்கிய பணிகளையும் ஆற்றும் மத்திய நிலையமாக இந்த செயலகம் இயங்க வேண்டும்.

இம்மத்திய செயலகத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாக மலையகக் கல்வி மீதான வருடாந்த கல்வி மாநாடு (Annual Education Conference) அமைய வேண்டும். இத்தகைய வருடாந்த மாநாடு தற்போதைய நிலைமைகளை விளங்கிக் கொள்ள உதவுவதோடு நாம் மேற்கொண்ட பணிகளின் விளைதிறனை மதிப்பீடு செய்து நாம் செல்ல வேண்டிய பாதையை நிர்ணயித்துக்கொள்ளவும் எமது திட்டங்களை மீளாய்வு செய்து திருத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும். அத்துடன் மலையகக் கல்விபற்றிய விழிப்புணர்வை சகல மட்டங்களில் ஏற்படுத்தவும் மலையகக் கல்வியில் ஆர்வம் கொண்டோரை ஒன்றிணைக்கவும் இம் மாநாடு ஒரு தளமாக அமையும்.

**முடிவுரை**

மலையகக் கல்வியின் கடந்த காலம் பாதகமானது. எதிர்காலமும் அவ்வாறு அமைந்துவிடக் கூடாதெனில் அதற்கான திட்டமிட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கல்வி வளர்ச்சியும் சமூக மேம்பாடும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல இணைந்துள்ளன. ஒன்றில்லாமல் மற்றதை அடைந்து விட முடியாது. எனினும் மலையக மக்களின் பொருளாதார சமூக மேம்பாட்டுக்கு உறுதுணையாகவும் அடித்தளமாகவும் அமைய வேண்டியது கல்வி அபிவிருத்தி தான் என்பதில் எவ்வித மாறுபாடான கருத்தும் இருக்க முடியாது.

இன்று மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலும், மட்டங்களிலும் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விளக்கமும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளன. இந்த விழிப்புணர்வை இன்னுமதிகமாக பரவலாக்க வேண்டும். அத்துடன் வசதி குறைந்த மாணவர்கள் தொடர்ந்து கற்பதற்கு நிதிஉதவிகள் வழங்கப்பட வேண்டும். மலையகத்தில் மட்டுமல்லாது பின்தங்கிய சமூகத்தில் யாவரும் தமது பிள்ளைகளை பொருளாதார அலகாகவே பயன்படுத்துகின்றனர். அவர்கள் தமது பிள்ளைகளைக் கற்பிக்க வேண்டுமெனில் பிள்ளைகளினால் குடும்பத்துக்கு கிடைக்கும் உதவிகளுக்கான மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையெனில் அவர்களால் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முடியாது. எனவே சமூகத் தலைமைகள் இவ்வாறான மாற்று ஏற்பாடுகளை வழங்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

மலையக மக்களுக்கு அரசியல் தலைமைத்துவம் இருப்பதைப் போல் கல்வித்தலைமைத்துவமும் கட்டி எழுப்பப்பட வேண்டிய காலம் கனிந்துள்ளது. இத்தகைய கல்வித் தலைமைத்துவம் அரசியல் தலைமைத்துவத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். மலையகக் கல்வி வளர்ச்சி குறித்து மலையகக் கல்வியாளர்களினால் முன்வைக்கப்படும் கருத்துக்கள், முன்மொழிவுகள் யாவும் அரசியல் முனைப்புகளின்றி நடைமுறைப்படுத்த முடியாது என்பது நாம் அறிந்த விடயமே. எனவே மலையகத்தின் கல்வித்தலைமைத்துவம் முன்வைக்கின்ற மலையகக் கல்வி விருத்திக்கான முன்மொழிவுகளை மலையகத்தின் அரசியல் தலைமைத்துவம் உறுதியுடன் முன்னெடுக்க முடியுமாயின் மலையகக் கல்வியும் தேசிய கல்வி முறைமைக்குச் சமனாக வளர்ச்சியடைவது சாத்தியமான விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கு வங்காள தேயிலைத் தோட்டங்களில் பழங்குடிகளின் வாழ்க்கை

கலாநிதி ஏ. எஸ். சந்திரபோஸ்
BA (hon) MA(PDN), M.Phil, Ph. D (JNV) சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூக கற்கைகள் துறை, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் நாவல, நுகேகொட.

தேயிலைத் பெருந்தோட்டங்களில் பழங்குடிமக்களின் வாழ்க்கையும் முடங்கிக் கிடக்கின்றத. இதனை இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தின் வடபகுதியில் காணலாம். இப்பழங்குடிகள் தம்மை ஆதிவாசிகளின் சந்ததியினர் என்ற வரையறை செய்து கொண்டவர்களாகவுள்ளனர். இந்தியாவில் உள்ள தேயிலைத் தோட்டங்களின் தொழிலாளர்களில் (மொத்த தொழிலாளர்கள் 835,000) பழங்குடியினரின் எண்ணிக்கை (198,278) ஏறக்குறைய 23 வீதமாகும். இவர்களது மூதாதைகள் காலகாலமாக இந்தியாவின் மத்திய பகுதியில் தக்கன பீட பூமியின் சோட்டா நாகபூர் (CHOTANAPURE BBLI) வலயத்தில் வாழ்ந்து வந்தன. இவர்கள் எவ்வாறு பெருந்தோட்டங்களுக்கு உள்வாங்கப்பட்டனர், சமகாலத்தில் பெருந்தோட்ட வாழ்க்கையில் எப்படியான சூழ்நிலையில் வாழ்கின்றனர் என்பதே இக்கட்டுரையின் பிரதான கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

பழங்குடிகளின் சந்ததியினர் (இதன் பின்பு பழங்குடிகள் என்ற பதமே இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகின்றது) பழங்குடிகள் பெருமளவில் ஜல்பைகுடி (Jalpaigvri) மற்றும் டூராஸ் (னுழழசயள) மாவட்டங்களிலேயே வாழ்கின்றனர். ஜல்பை குடியில் இவர்கள் வாழ்கின்ற தேயிலைப் பயிரிடும் பிரதேசம் தேராய் (Terai) என்று தேராய் என்பது சமவெளி எனப்பொருள்படும். இச்சமவெளிப்பாங்கான நிலத்திலேயே விலைப்பயிரிடப்படுகின்றது. இங்கு தேயிலை மேற்கொள்ளப்படும் பரப்பு ஏறக்குறைய 15,000 ஹெக்டேயராகும். டார்ஜலிங் மலையடிவாரத்தில் பரங்கு காணப்படும் இப்பிரதேசத்தை ஊடருத்து தீஸ்டா (Toosta) நதி மிக அமைதியாக செல்கின்றது. டார்ஜலிங் மலைகளிலிருந்து அமைதியாக விழுகின்ற தீங்டா நதி தேராய்யில் அமைதியாக ஆரம்பித்து சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் வரை பிரயாணம் செய்து வங்காள விரிகுடாவில் சங்கமிக்கின்றது. பழங்குடிகளின் சடங்குகளை தடவிச் செல்லும் இந்நதிக்கரையோரமாகவே இப்பகுதியில் அமைந்துள்ள மிகப் பெரிய நகரமான சிலிகுடி (ளுடைபைரநந) காணப்படுகின்ற டார்ஜனிங் மற்றும் சிக்கிம் (Sikkim) போன்ற இடங்களும் பயனிப்போர் இந்நகரை கடந்தே செல்ல வேண்டியுள்ளது. நோபாளிகள், பூட்டான் மக்கள், பகுதி நேர வேலைகளுக்காக, வங்காள தேசத்தில் இருந்து வரும் தொழிலாளர்கள் பல அமைச்சரிகளன் சங்கம் இந்நதிகள் பழங்குடிகள் என்று பல இனமக்களின் சங்கமம் இந்நதிகளின் தனிச்சிறப்பாகும்.

இங்குள்ள தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களாக இருக்கின்ற ஆதிவாசிகளின் சந்ததியினரின் ஓரான்ஸ் (Orns), முண்டாஸ் (ஆருனேயள)இ சந்தாள்ஸ் (Santhals), மல்பாரிஸ் (MalFaharis), நாகாசிஸ் (Nagasis). ஆசூஸ் (Asurs) மற்றும் காரியா (Karia) போன்ற இனத்தவர்கள் முதன்மையாக குழுக்களாக காணப்படுகின்றனர். இதைவிட இன்றும் பல குழுக்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு குழுக்களும் குறிப்பிட்ட ஆதிமொழிகளை பேசுபவர்களாக இருக்கும். அதேபோல, வங்காளம், இந்தி மொழிகளையும் சரளமாக பேசுகின்றனர். சிலர் நேபாளி மொழியையும் பேசுகின்றனர் மேற்கூறப்பட்ட வேறுபட்ட குழுக்கள் தமது அடையாளங்களையும, மரபு முறையான தமது மூதாதையர்களின் சடங்குகளின் சிலவற்றை இன்றுவரை நிறைவேற்றுபவர்களாகவே இருந்து வருகின்றனர்.

சோடட நாகபுஜயை தமது மூதாதைகளின் இருப்பிடமாகக் கொண்ட இவர்கள் எத்தகைய சூழ்நிலையில் தேயிலைத் தோட்டங்களுக்கு உள்வாங்கப்பட்டனர் என்பதை கூறினால் பொருத்தமுடையதாக இருக்கும். இவர்களது பிரித்தானியர்களது வருகையே இவர்களது மூதாதையர்களின் சங்க மீளமைப்பில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு காரணமாகியது. பிரித்தானியர்களது செல்வாக்கு காரணமாக மூதாதையர்கள் குழுக்களிடையே கலகங்கள் உருவாகின. இந்து சமயத்தின் செல்வாக்கு காரணமாக மரபுமுறையாக இவர்களிடம் காணப்பட்ட தெய்வ நம்பிக்கைகள் நிறைவு பெற ஆரம்பித்தனர். மரபுமுறையை கைவிட்டு நாகதேவதையை வணங்கும் வழக்கங்கள் உருவாகியது. இதுவரை காலமும் திருமணம் போன்றவற்றில் பல இறுக்கமான கட்டுப்பாடுகளை தமது குழுக்களின் அங்கத்தவர்களிடையே பணம் பெற்றுக் செய்து கொள்ளல வேண்டும் என்ற நிலையில் இருந்து ஏனைய குழுக்களுடன் இதனை மேற்கொள்ள முடியும் என்ற மாற்று நிலை உருவாக்கத்தலைப்படுகின்றது. இதனை மூத்தபழங்குடி வரவேற்பதாக இல்லை. பாரம்பரிய இருந்துவந்த பண்டமாற்று முறையிலும் சிதைவுகள் ஏற்படுத்தப்பட்டு பண புலக்கம் அறிமுகமாகியுள்ளது. வியாபாரங்களின் வளர்ச்சி, மிகச் சிறிய குழுக்களின் தலைவர்கள் அலட்சியம் செய்யப்பட்டமை குழுக்களிடையே அமைதியற்ற சூழ்நிலையை உருவாக்கியது. போட்டி, பூசல்கள், மற்றும் வெளியார்களின் தலையீடுகள் காரணமாக பயிர் நிலங்கள் அழியத்தொடங்கின. இவையாவற்றிற்குமேலாக இந்தியாவில் தொடர்ச்சியாக ஏற்பட்ட உணவுப்பஞ்சமும் (1873, 1892, 1894, 1918) பழங்குடிகளை கடுமையாக தக்கத்திற்குள்ளாக்கியது.

இவ்வாறு மரபு முறையான வாழக்கை முறையில் ஏற்பட்ட சிதைவுகளும், பஞ்சநிலைமையும் பழங்குடிகளை வேற்று இடங்களை நோக்கி நகர்த்துவதற்கான தூண்டுதல் காரணமாகின. இந்த நெருக்கடியானத நிலையை சமாளிப்பதற்கு வேதனத்திற்கு ஊதியம் என்ற பெருந்தோட்ட தாபனங்கள் உருவாக்கப்பட்டன. வாழ்க்கை முறை மிகவும் கவர்ச்சிகரமாக அமைந்தது. காலம் காலமாக கடாக்காத்த நிலங்கள் குழுக்கள் என்பன மாற்றுவழி தேடி வெளியேறின.

இவ்வாறு தக்கன பீட பூமியின் சோட்டாநாகபூர் வலயத்தில் இருந்து வெளித்தள்ளப்படுகின்ற பழங்குடிமக்களை தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்து வருவதற்கு, கங்கானிமார்களே தலைமை தாங்கினர். இவர்களை சர்தார் SARDAR என்று அழைக்கப்பட்டனர். (சர்தார் என்பது தலைவர் என்றும் பொருள்படும். இதைவிட ஆரிகோடிஸ் (ARKATIS) என்போர்களும் பழங்குடிகளை தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்து வருவதற்கு பிரித்தானிய பெருந்தோட்ட உடமையாளர்களும் உதவினர். பெரும்பாலும் நடைபயணமாகவே அழைத்துவரப்பட்டனர். பழங்குடிகள் 200 முதல் 30 கிலோ மீட்டர்கள் தூரம் கடந்தே தேராய் தேயிலைத் தோட்டங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. பழங்குடிகள் தாம் சுமந்து வழந்த பொருட்களை கைவிட்டவர்களாக வெறுங்கையுடனேயே தோட்டங்களுக்கு நுழைந்தனர். அதிகாரமும், பரந்தளவில் தேயிலைத் தோட்டங்களையும் கொண்டிருந்த பிரித்தானிய தேயிலைத் தோட்ட மேற்பார்வையாளர்கள் தமக்கு தேவையான பழங்குடி தொழிலாளர்களை அருகில் உள்ள தோட்டங்களில் இருந்து திருடிக் கொண்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. இதுபற்றிய மேலதிக விபரங்களை Sharit Bhomik (1981) எழுதிய Class Formation in the Plantaion System என்ற நூலையும் மற்றும் D. M. Gupta (1944) எழுதிய Labour in Tea Gardens பற்றியான பார்வை என்ற நூலையும உசாத்துணையாகக் கொள்வது பொருத்தமாகும் கொள்ளப்படும் பாதியாக ஆராய்கின்றனர்.

இன்று தேராய் தேயிலைத் தோட்டங்களில் ஏறக்குறைய 75 வீதமானவை பெருந்தோட்டங்களாகவும் மிகுதி சிற்றுடைமைகளாக காணப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்களில் தோட்ட அதிகாரிகளாக மேற்கு வங்காளத்வாகளுக்கு அடுத்த நிலையில் நேபாளிகளின் வழிவந்தவர்களுமாகவே காணப்படுகின்றனர். தோட்டங்களில் தொழிலாளியாக குடியேறிய பழங்குடியினர் பெருமளவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை தொழிலாளர்களாகவே இருக்கின்றனர். இவர்களில் குறிப்பாக ஆண் தொழிலார்கள் பகுதி நேர வேலையாக சினுகுடி நிகரினுள் ஏனைய அண்மித்த நகரங்களிலும் ரிக்ஷா ஓட்டுநர்களாகவும் கட்டிடததுறை தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றன. தோட்டங்களுக்கு வெளியே வேலைகள் செய்தாலும் தோட்ட வேலையே நிரந்தரமாகக் கொண்டுள்ளனர். ரிக்ஷாவே பிரதான போக்குவரத்து சாதனமாக காணப்படுகின்றத. ஏனைய நகரங்கள் போலன்றி சிறுகுடியில் முச்சக்கரவண்டிக்கு பதிலாக மனிதாகளால் இயக்கப்படும் ரிக்ஷாவே பிரதானமாக காணப்படுகின்றது. இது பழங்குடிகளுக்கு குறிப்பிட்ட வருவாயை ஈட்டித் தருகின்றது.

பழங்குடிகளுக்கு இன்றுவரையும் போதுமான கல்வி வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்றே குறிப்பிடவேண்டும். மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73 வீதமானவர்கள் தொழிலாளர்கள் எழுத்தறிவற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி இலங்கை - இந்திய நாடுகளுகளுடன் ஒப்பிடும்போது தோட்டத் தொழிலையே பிரதான தொழிலாக தொழிலை மட்டுமே பிரதான வருமானமாக கொண்டிருப்பவர்கள் இந்திய, இலங்கை 51 வீதமாகவும், 54 வீதமாகவும் காணப்படும் போது இந்நிலைமை பழங்குடிகளின் மத்தியல் 61 வீதமாக காணப்படுகின்றது. எனவே, குறிப்பிட்டளவில் தோட்டத் தொழிலாளர்ளையே பிரதான வளமான மூலமாகக் கொண்டு வாழ்பவர்களாகவே பழங்குழினர் காணப்படுகின்றனர்.

பழங்குடியினரே தோட்ட வேலைகளில் ஒப்பீட்டளவில் அதிக ஆட்வமுடன் ஈடுபட்டுள்ளனர் என்று ஆதரித்தாலும் தோட்ட முகாமை இதில் திருப்தியடைபவர்களா இல்லை. பழங்குடிகள் பெருமளவி கூட்டுக் குடும்பமும் சாதி அடிப்படையில் வேறுபட்டவர்களாகவுள்ளனர். அடிக்கடி அவர்கள் மரபுவழியாக சமய சடங்குகளை நிறைவேற்ற ஆர்வமுள்ளவர்களாக இருப்பதனால் நீண்ட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதற்கு மேலாக இவர்களது வருடாந்த பெருவிழாவாக விஸ்வசர்ம பூஜை அநேகமாக செப்டெம்பர் மாதங்களில் இடம்பெறும். அவ்வாறான வேலைகளில் தோட்டத்தொழிலகள் வெகுவாக பாதிக்கப்படுவதாக குறிப்பிடுகின்றனர். விஸ்வகர்ம பூஜையைத் தொடர்ந்து மேற்கு வழங்களிகளில் துர்கா பூஜையும் இடம்பெறுகின்றது. வெகு விமரிசையாக கொண்டாடப்படும் இவ்விழாக்களினால் தொழிலாளர்கள் இக்காலப் பகுதியில் தோட்ட வேலைகளில் அதிகம் ஆர்வம் காட்டுவதில்லை. பூஜையுடன் தொடர்பான வேலைகளில் தோட்டங்கள் வழங்குவதை அதிகளவு ருமானம் கிடைக்க கூறப்படுகின்றது.

உடல் நீலன் சுகாதாரம் என்பனவற்றை பொருத்தவரை பழங்குடிகள் மிகவும் மோசமான நிலையிலேயேத வாழ்கின்றனர். வீடுகள் யாவும் மூங்கில் வேலிகளினால் கட்டப்பட்டவைகளாகும். அவ்வாறே அடிமக்களும வீடகளுக்கு இடையில் பொருத்தமான வடிகால்கள் இல்லாமையால் சுகாதார கேடுகளுக்கு பழங்குடி களின் உடல்நலம், சுகாதாரம் போன்ற நலன்புரிகளை தோட்ட நிர்வாகமே மேற்கொள்கின்றன. தொழிலாளர்களுக்கு தனித்தனி வீடுகள் அமைக்கப்பட்டிருதடன் அவை யாவும் மூங்கில்களினால் வேயப்பட்ட வீடுகளாகும். மண் அல்லது சீமெந்துகளைக் கொண்ட கட்டிடங்களை பழங்குடிகள் வாழும் தோட்டங்களில் காணக்கூடியதாக இல்லை. வருடாந்தம மூங்கில்பட்டைகளாக வழங்குவதுடன் தோட்ட நிர்வாகத்தினர் வருடாந்த பராமரிப்பு நடவடிக்கை பூர்த்தியடைந்துவிடும் பெருமளவிலான தொழிலார்கள் மார்புச்சளி, மூச்சு வாங்குதல், ஆஸ்தீமா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுக்கான மருத்துவ தேவைகள் பெருமளவில் வட வங்காளப் பல்கலைக்கழகத்தின் (North Bengal Uniservsity) மருத்துவப்பீடம் வழங்கி வருகின்றது. சமதரையான பிரதேசம் என்பதாலும் மலசலகூடங்களில் இருந்து வெளியேறும் கழிவுகளை முறையாக எடுத்துச் செல்வதற்கான வடிகால்கள் அகலமாக்க தவறியமையிலும் ஏற்பட்டிருக்கின்ற விளைவுகளை எங்கும் பார்க்கலாம். இதனால், பழங்குடிகள் தோல் தொடர்பான தொற்று நோய்களுக்குட்பட்டவர்களாக காணப்பட்டனர்.

தேயிலைத் தோட்த்தில் வேலை செய்யும் பழங்குடிகளின் வருமானம் பெருமளவில் தோட்டங்களில் வழங்கப்படும் நாளாந்த வேதனமாகும். இலங்கையைப் போலவே சம்பளச் சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற குறைந்த பட்ச வேதனம் இங்கு வழங்கப்படுகின்றது. சம்பளச் சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற வேதனத்தை நிர்வாகம் எப்போதுமே சீராக வழங்கியதில்லை. உதாரணமாக 1930 ஆண்டு மொச் கமிட்டியின் (MOidk Comm I.T.T. G.B)

எமது தொழிலாளர்களுக்கு வழங்கப்படாதிருந்தது. (உதாரணமாக ஆண் தொழிலாளி) ரூபா 1.19 பைசா வேதனத்தை 18 பைசாவால் அதிகரித்து வழங்க வேண்டும் என்ற கேட்டுக் கொண்டபோதும் தோட்ட நிர்வாகம் 13 பைசாவை மட்டுமே அதிகரித்தது. இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. 2000 ஆம் ஆண்டில் இவர்களுக்கு ஆகக் குறைந்தது ரூபா 39.00 வழங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, தோட்ட நிர்வாகம் ரூபா 34.00 மேல் வழங்குவதில்லை.

வேதனம் போன்ற தொழிலாளர்களின் நலன்களை கவனிப்பதற்க தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. பெரும்பாலான தொழிற்சங்கங்கள் மேற்கு வங்காளத்தின் முன்னணி இடதுசாரிகளுடன் இணைந்து செயல்படுபவர்களாக இருந்தபோதும், இவை யாவும் மிகச் சிறிய தொழிற்சட்டங்களாக, இருப்பதனால் பொதுவான உடன்பாட்டிற்கு வந்து தொழிலாளர்களின் நலனில் பாரிய விளைவை ஏற்படுத்தக்கூடியவாறு வல்லமைப் பெற்ற அமைப்புகளாக இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

பழங்குடிகளின் இளம் தலைமுறையினரும் பெருமளவில் தோட்ட வேனதங்களுக்கே உள்வாங்கப்படுகின்றனர். இவர்கள் தோட்டங்களில் போல செய்வதுடன் பகுதி நேரமாக அந்தில் உள்ள தேயிலை சிற்றுடைமையாளர்களிடையே அல்லது அருகில் உள்ள நகரங்களுக்கு ரிக்ஷோ செலுத்துபவர் காரணமாகவோ தொழில் பார்க்கின்றனர். போதுமான பாடசாலைக் கல்வி விஸ்தரிக்கப்படாமை காரணமாக தரத்தில் மேல் நோக்கிய வளர்ச்சியை எட்டிப்பார்க்க முடியாதவர்களாக முடங்கிக் கிடக்கின்றமையே அவதானிக்க முடிகின்றது.

இப்பழங்குடி தொழிலாளர்களும் ஏற்கனவே குறிப்பிட்டதுபோலத இப்பழங்குடி தொழிலாளர்கள் தங்களை ஆதிவாசி சமூகம் என்பதை வலியுறுத்தவே விரும்புகின்றனர் இதனூடாகவே அரசாங்கம் பின்தங்கிய தரத்திற்கு வழங்கப்படும் சலுகைகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது விடயத்தில் இங்கு இயங்கும் பல சமூகநிலையங்களும் உதியாக நின்று இதனை வலியுறுத்துகின்றன. இருப்பினும், பாடசாலை மட்டத்திலே போதுமானளவு விஸ்தரிக்கப்படாத நிலையில் உயர்கல்வி கற்று அரசாங்க தொழில்வாய்புகளில் அதனை அனுபவிக்க இயலாதவர்களாகவேத இன்றளவும் வாழ்நது வருகின்றனர்.

இருப்பில் ஒரு வகையில் சமூகத்தின் அடிமட்டத்தில் கிராமிய பொருளாதார சூழ்நிலைகளில் இருந்து தூர விலகி பழங்குடிகளாக வாழ்ந்துளளது. மறுவாழ்வில் நவீன தொழில்நுட்பம், சர்வதேச சந்தையை மையமாகக் கொண்ட உற்பத்தி. தொழிற்சாலைகள் என்பனவற்றை உள்ளடக்கியதான பெருந்தோட்டத்துறைக்கு உள்வாங்கப்பட்டாலும தமது வாழ்க்கை வட்டத்தினை பெருந்தோட்டத்தின் நவீனத்துவம் மாற்றியமைக்கவில்லை. மறுவார்தையில் கூறுவோமாயின் ஒரு இயல்பான பண்புகளுடன் மாறி வருகின்ற சமூகத்தைக்கூட அப்படி மாற்றம் அடையச் செய்யாது. முடக்கி வைக்கின்ற சக்தியாக பெருந்தோட்டக் கட்டமைப்பு வடிவமைக்கப்படுகின்றது. இது குடிபெயர்ந்த கிராமிய மக்களிடையே மட்டுமன்றி பழங்குடி மக்களிடமும் விழிப்புணர்வை எதிர்பார்த்தளவில் ஏற்படுத்தாமை வியக்கவைக்கும் ஒரு விடயமாகும்.

*உசாத்துணை நூல்கள்*


1. Chandrabose A.S. (2004) Labour in the Tea Industry: A. Comporative Regional Analysis of india and Sri lanka, Unpublished Ph D. Ihesis, CSRD, JNO, New Delhi.
2. Courtenay. P. P. (1969) Plantationj Agriculur ; G. Bell & Sons, Ltd, London
3. Dwibed, H. N., (1999), Production of Tea in India with Special Reference to Dooras, K. P. Bagechi & Company, Calcuta.
4. Bhowmik, Sharit, (1981), Class Formation in the Platation System, People's Published House, New Delhi.
5. Gupta, D. M.(199), Labour in Tea Gardens, Gyan Sargar Publisher, Preet Vihar, New Delhi.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத் தமிழர் ஆவணக்காப்பகம்

ஆர். மகேஸ்வரன் B.A. (Hons) புவியியல் சிறப்பு
முதுமாணி (நூலக தகவல் தொழில்நுட்ப விஞ்ஞானம்)
சிரேஷ்ட துணைநூலகர், பேராதனை பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

பாரதத்திலிருந்து பெருந்தோட்டத்தொழில் ஆரம்பிக்கப்பட முன்னரும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டத்துறை ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் தமிழர்கள் இலங்கையில் குடியேறினர். அத்தோட்டங்களில் தொழில்புரிவதற்காக தமது இரத்த உறவுகளை அறுத்துக் கொண்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தமிழர்கள் தோட்டக்குடியிருப்புகளில் குடியேற்றப்பட்டனர். பல்வேறு தொழில்களைப் புரிவதற்காக தொழில் தேடி இலங்கைக்கு புலம்பெயர்ந்த தென்இந்திய தமிழர்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் குடியேறினர். இவர்கள் பண்ணைத்தொழில், வர்த்தகம், வர்த்தகநிலைய சிப்பந்திகளாகவும் நகரசுத்தி தொழிலாளர்களாகவும் தொழில் புரிந்தனர். இவர்கள் தென் இந்தியாவின் வேலூர் செங்கட்பட்டு, சேலம், மதுராந்தகம், வடஆற்காடு, தென்னாற்காடு, திண்டிவனம், சிதம்பரம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், பாபநாசம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து இங்கு குடியேறினர். இவ்வாறு கொண்டவரப்பட்ட தென் இந்திய தமிழர்களும் தொழில் தேடி இலங்கைக்கு புலம்பெயர்ந்த தென் இந்திய தமிழர்களும் தமக்கென ஒரு பண்பாட்டு பாரம்பரியத்தினை உடையவர்களாக இருந்தனர். இவ்வாறு இலங்கைக்கு புலம்பெயர்ந்த தென் இந்திய தமிழர்கள் தாம் கடைப்பிடித்து வந்த பண்பாட்டு பாரம்பரியத்தினை கைவிடாது பேணிபாதுகாத்து வந்துள்ளனர்.

இவ்விரு நாட்டினதும் புவியியல் சாதகத்தன்மையும் குடியிருப்புகளினது அமைப்பும், தோட்டப்புற சூழ்நிலைகளும் தமது பண்பாட்டு பாரம்பரியத்தினை கைவிடாது பேணிபாதுகாத்து வருவதறகு சாதகமாக அமைந்தன. இவர்களில் பெரும்பாலானோர் இந்துக்களாகவும், சிலர் கத்தோலிக்கர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் காணப்பட்டனர். இலங்கையின் பூர்வ குடிகள் இந்துக்களாக இருந்ததாலும், இந்து சமய பாரம்பரியங்கள் இலங்கையில் பின்பற்றப்பட்டு வந்தமையும் இந்து வழிபாட்டிடங்கள் நிறுவப்பட்டு பாரம்பரிய இந்து பண்பாட்டு நடவடிக்கைகள், சடங்குகள், விழாக்கள், பண்டிகைகள், கூத்துக்கள், ஏனைய கலைகள், இலக்கியம், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், விளையாட்டுக்கள், கிரியைகள் தொடர்ந்து இவர்களுக்கு பேணுவதற்கு பெரிதும் வாய்ப்பாக அமைந்தன.

**நோக்கம்**

இப்பாராம்பரியக் கலைகள், பண்பாட்டு விழுமியங்கள், கலாசார விழுமியங்கள், சில தற்போது அழிந்து வருகின்றன. இனவாதபிரச்சினையோடு ஏற்பட்ட பயங்கரமான பயங்கரவாத சூழ்நிலையும், இனமுரண்பாட்டு முறுகல் நிலையும் புதிய கலாச்சாரச் சூழலும், உலக மயமாக்கலின் விளைவுகளினாலும் பாதுகாக்கப்படாமையினாலும் பாரம்பரியக் கலைகள், பண்பாட்டு விழுமியங்கள், கலாசார விழுமியங்கள் போன்றவை அழிந்தும் மறைந்தும் வருகின்றன. எனவே இவற்றை ஆவணப்படுத்துவதும் பாதுகாப்பதும் இன்றியமையாத கடமையாகும்.

எமது மூதாதையரின் இந்த பண்பாட்டு விழுமியங்கள் ஆவணப்படுத்தப்பட்டு அடுத்து வரும் புதிய தலைமுறையினர் அறிந்து கொள்வதறகும், கற்றோரினதும், புதிய தலைமுறையினரின் அறிவியல் தேடலுக்கும் பயன்படுத்த உதவும் சாதனமாகவும் பாதுகாக்கப்பட வேண்டும். கல், களிமண், பலகை, மரப்பட்டை, தோல், மரம், உலோகம், தந்தம், சங்கு, சிப்பி, துணி, ஓலை ஆகியவற்றிலிருந்து இலக்கியங்கள் பல எமது சங்ககால இலக்கியங்களாக இன்று ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை சிறந்த உதாரணங்களாகும்.

**ஆவணக்காப்பகம்**

சுவடிக்காப்பகம் அல்லது ஆவணக்காப்பகம் என்பது பல்வேறுபட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகள், ஒளி, ஒலி ஆவணப்பிரதிகள் மற்றும் பொருட்களை இறுவெட்டுகள் (CD.Rom – Compact Disc-Read only Memory), நுண்அட்டை (Microfiche) ஒளித்தட்டு (Optical Video Disc), மூலம் சேமித்து பதிந்து எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய வகையில் ஆய்வு செய்யக்கூடியதாக பாதுகாத்து வைக்கப்படவேண்டிய ஒரு வகையான காப்பகம் அல்லது நூல் நிலையம் அல்லது தகவல் மையமாகும். இதனை நூதனசாலை, பொருட்காட்சிச்சாலை எனவும் கூறலாம். குறித்த சுவடிக்காப்பகம் அல்லது ஆவணக்காப்பகத்தில் நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி தகவல் சேமிப்பு மற்றும் இதனை பயன்படுத்தும் முறையில் (Information Storage and Retrieval Methods), பலமுனைப் பயன்பாட்டுச் சாதனங்கள் மூலம் (Multi Media) நூலக அல்லது ஆவணக்காப்பகமானது நூலக தன்னியக்கமுறை (Library Automation) தொழில்நுட்பம் மூலமும் மற்றும் நேரடி தொடர்பு (On Line) வலையமைப்பு (Local Area Network-LAN) முறைகள் மூலமும் உலகம் முழுவதும் அறியக்கூடியதாக (Universal Retrieval) கணணி (Computer)களின் மூலம் மின்னனு இயக்கமுறை (Electronic Digital) பயன்படத்தலுடன் இணையத்தளம் (Internet) மூலம் அல்லது செயற்கைக்கோள்களையும் (Satellite) பயன்படத்தி பல்வேறு பிரச்சார ஊடகங்களின் மூலம் மூதாதையினரின் கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை, உலகறியச் செய்யவும், பல்துறை ஆய்வாளர்கள் தமது ஆய்வுக்குட்படுத்தத்தக்கதாவம் உருவாக்க முடியும். இந்த நோக்கத்துக்காக கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் பற்றி ஆவணங்கள் முறைப்படி பதிவுசெய்யப்பட்டு காப்பகத்தில் முறைப்படி வகுப்பாக்கம் (Clasigifcation) பட்டியலாக்கம் (Cataloguing) செய்யப்பட்டு போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் ஆவணப்படுத்துதல் என்பது தேசிய சுவடிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. 1885 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அச்சக வெளியீட்டுச் சட்டமூலத்தின் (அத்தியாயம் 179) பிரகாரம் இலங்கையில் அச்சிடப்பட்ட நூல்களின் பட்டியலாக்கம் பதிவு செய்யப்பட்டு வர்த்தமானி மூலம் வெளியிடப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டது. 1949 இல் இலங்கை ஐ. நா. சபையில் அங்கத்துவம் பெற்றபின் 1952 இல் உப ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு அதன் மூலம் நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூல்களின் பட்டியல் ஒன்று உருவாக்கப்பட வேண்டம் என தீர்மானிக்கப்பட்டது. இதன்போது இலங்கை நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூல்களின் பட்டியல் தொகுப்புக்கு பொருத்தமான அலுவலகம் பேராதனை பல்கலைக்கழகத்தின் நூலகத்திலேயே அமைப்பதென தீர்மானிக்கப்பட்டு பேராதனை பல்கலைக்கழகத்தின் நூலகத்திலேயே அமைக்கப்பட்டது. இலங்கை நவீனமயப்படுத்தப்பட்ட தேசிய நூல்களின் பட்டியல் தொகுப்பு முதலாவது இதழி 1962 நவெம்பரில் வெளிவந்தது. தற்பொழுதும் பட்டியல் தொகுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஈழத்து ஆவணங்கள் தமிழீழத்தின் ஆவணப்பிரிவினால் ஒன்று சேர்க்கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதுடன், போராட்ட வரலாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. யுத்த சூழ்நிலையிலும் இந்த பெறுமதிமிக்க ஆவணப்படுத்துதல் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றதோடு, புகலிடத்தில் வெளியிடப்படும் நூல்களும் புகலிடத்தில் வெளிநாடுகளில் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறே மலையகத்திலும் மலையக கலைக்கலாசார பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய ஆவணங்கள் ஆவணப்படுத்தப்பட ஆவணக்காப்பகமொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவப்படுதலும் பொருட்களும் பொருத்தமான வெளியீடுகளும், பிரதிகளும் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

**ஆவணக்காப்பகம் உருவாக்குதல்**

இலங்கை அரசாங்கம் தேசிய பொருட்காட்சிச்சாலைகள், நூதனசாலைகள் ஆகியவற்றினை பராமரிப்பது போலவே மலையக தமிழர் ஆவணக்காப்பகத்தினையும் பராமரித்தல் வேண்டும். இதற்காக கலாச்சார அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, சமூகசேவைகள் அமைச்சு ஆகியன வழிவகுக்க வேண்டும். கலாச்சார முக்கோண நிலையத் திட்டம் மூலம் பொலநறுவை இராஜதானி கலாச்சார நிலையம், அநுராதபுர இராஜதானி கலாச்சார நிலையம், கண்டி இராஜதானி கலாச்சார நிலையம், பேணுவது போலவே மலையக தமிழர் ஆவணக்காப்பகமும் பேணப்பட வேண்டும்.

இதற்கான உந்துசக்தியினை அளிக்கவேண்டியது மத்திய மாகாண இந்து கலாசார, தோட்ட உட்கட்டமைப்பு அமைசினது கடமையாகும். தொழிற்சங்கங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் தமிழர்களினது நிர்வாகத்திலுள்ள பிரதேச சபைகள் அதற்கு உந்துதல் சக்தியினை வழங்க வேண்டும். இதற்கு புத்திஜீவிகளது ஆலோசனைகள், இத்துறை சார்ந்தவர்களின் தொழில்நுட்ப உதவிகள் பெறப்பட வேண்டும். அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியினைப் பெற வேண்டும். அவையனைத்தையும் விட இந்திய அரசு பல்துறையில் உதவியளிக்க வேண்டும்.

ஆங்காங்கே சிதறியுள்ள ஆவணங்கள் சேர்க்கப்பட வேண்டும். வெளிநாட்டு நிதியுதவியுடன் இயங்கும் பல அரசசார்பற்ற நிறுவனங்களின் ஆவணக்காப்பகம் சிறுசிறு அளவுகளில் நிறுவப்பட்டுள்ளன. கண்டி சத்தியோதய நிறுவனத்தில் நூல் நிலையமும் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் - புசல்லாவ இராமதுரை தோட்டத்திலும் ஆவணக்காப்பகம் சிறு அளவில் நிறுவப்பட்டுள்ளன. அந்நிறுவனங்களிலுள்ள விலைமதிப்பற்ற ஆவணங்ள் தேசிய ரீதியில் ஒளி, ஒலிப்பதிவு செய்யப்படுவதுடன், ஆவணங்களின் மூலப்பிரதிகள், பொருட்கள், சேர்த்துத் தொகுக்கப்பட உதவியாக ஒன்றுதிட்டப்பட வேண்டும்.

கண்டி ஹந்தானையில் தேயிலை நூதனசாலை அமைக்கப்பட்டு பெருந்தோட்டத்துறை அமைச்சினால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இவற்றினை ஒரு முன்னுதாரணமாக நோக்க வேண்டும். குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்களது ஆவணக்காப்பு பற்றி பல்வேறு விமர்சனங்கள் இருந்த போதும் இதனையும் முன்னுதாரணமாக கொள்ள வேண்டும்.

**இடத்தினைத் தேர்ந்தெடுத்தல்**

கொட்டகலையில் 1998 ஆம் ஆண்டு வைகாசி மாதம்29 ஆந் திகதி காலை 7.52 மணிக்கு அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்ட கொட்டகல தமிழாராய்ச்சி செயலகம் அமையவிருந்த இடம்? சிறந்ததா? அதனைவிட பெரியதாக தமிழாராய்ச்சி செயலகத்தினை அமைக்கப்போவதாக அமைச்சராகவிருந்த வே. இராதாகிருஷ்ணன் கூறிய இடம்???? சிறந்ததா ? அல்லது முன்னர் இலங்கை தேசிய ஆவணக்காப்பகம் அமைந்திருந்த நுவரெலியா மாநகரசபைக்குச் சொந்தமான தற்பொழுது வாடகைக்கு விடப்பட்டுள்ள நுவரெலியா வாடிவீடு (1947-1962 வரை இங்கேயே தேசிய ஆவணக்காப்பகம் அமைந்திருந்தது. பின்னர் இது வேறிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.) கட்டிடத்தினை மீளப் பெற்றுக் கொண்டு உபயோகிக்கப்படலாமா? அல்லது இறம்பொடையில் அமைந்துள்ள தொண்டமான் கலாசார நிலையம், புதிதாக அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகம், பத்தன கல்வியயல் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை ஆகியவற்றில் ஏதாவது ஓரிடத்தில் அல்லது புதிதாக தெரிவு செய்யப்பட்ட வேறோர் இடத்தினைத் தேர்ந்தெடுக்கலாம்.

**சேகரித்து பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. கோப்பிக்காலத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார குடியேற்றங்கள் பற்றிய ஆதாரங்கள், ஆய்வுக்குறிப்புகள், புள்ளிவிபரங்கள்
2. கூலி என வர்ணிக்கப்பட்டு ஆங்கிலேயரினால் எழுதப்பட்ட குறிப்புகளும், வெளியிடப்பட்ட நூல்களும், ஆய்வுகளும்
3. குடியேற்ற காலத்தில் மடிந்து போனவர்களின் வரலாறும், அவை பற்றிய ஆய்வுகளும்.
4. தொழிற்சங்க போராட்ட வரலாறு
5. தொழிற்சங்க தலைவர்களது வரலாறு
6. தொழிற்சங்க போராட்டங்களின் உயிர்நீத்த தொழிலாளர்களின் வரலாறும் படங்களும்
7. நாடாளுமன்ற, மாகாண சபை உரைகள்
8. மலையகத்தில் வெளியான சகல துறை சார்ந்த நூல்கள், பதிப்பக வரலாறு பத்திரிகைகள், சஞ்சிகைகள், பிரசுரங்கள், ஆய்வுக்கட்டுரைகள்.
9. கலைகள், ஓவியங்கள், சிற்பங்கள், பாடல்கள், சிலைகள், மரத்திலான பொருட்கள், சங்கீத உபகரணங்கள்
10. இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், ஆகியோரது வரலாறு, புகைப்படம், விருதுகளின் விபரம், இவை ஒலி, ஒளி பதிவு செய்யப்பட வேண்டும்.
11. கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், பாடல்கள், பஜகோவிந்தம், காமன்கூத்து, அருச்சுணன்தபசு, பொன்னன்-சங்கர் கூத்து, முனியாண்டிக்கூத்து, நாடகங்கள், சங்கீத உபகரணங்கள், தாளங்கள், விளையாட்டுகள், சடங்குகள், வாய்மொழிப்பாடல்கள், பழமொழிகள், ஒப்பாரிகள், சிறு தெய்வவழிபாட்டு முறைகள், திருவிழாக்கள், தீமிதித்தல், வேல்குத்துதல், தப்படித்தல், வாள்நடனம், லாவணிப் பாடல்கள் போன்றன ஒலி, ஒளி பதிவு செய்யப்பட வேண்டும்.
12. விளையாட்டுக்களில் பிடிவருசை ஆட்டம், வாள்வீச்சு, பட்டாக்கத்தி வீச்சு, சிலம்பம் அல்லது வாஸ்தா
13. தப்புக்களில் - காலைத்தப்பு, பிரட்டுத்தப்பு, ருதுசாந்தித்தப்பு, சாவீட்டுத்தப்பு, திருமணத்தப்பு, காவடித்தப்பு, திருவிழாத்தப்பு, கூத்துத்தப்பு, ஆகிய பல்வேறு ஓசைகள் வெவ்வேறாக பதிந்து வைக்கப்பட வேண்டும்.
14. வாய்மொழிப்பாடல்கள் மறைந்து வருவதனால், உலகில் பல்வேறு பாகங்களில் பதிந்து வைக்கும் முயற்சிகள் மெற்கொள்ளப்பட்டு வருகின்றன. மலையகத்தில் எழுதப்படாத வரலாற்றினை இப்பாடல்களே நிறுவி நிற்கின்றன. இவையுடன் ஒப்பாரிப்பாடல்கள், பழமொழிகள், கும்மிப்பாடல்கள், கோலாட்டப்பாடல்கள், தோட்டத்தில் வேலை செய்யும் போது பாடும் பாடல்கள், குழநதைப்பாடல்கள், தாலாட்டுப்பாடல்கள், திருவிழாக்காலங்களில் தெய்வங்கள் மீது பாடப்படும், மாரிம்மன் தாலாட்டுப்பாடல்கள், வில்லுப்பாட்டுகள், சடங்குகளில் பாடப்படும் பாடல்கள், கூத்துப்பாடல்கள், தெம்மாங்குபாடல்கள், நலங்குப் பாடல்கள், மாரடிப்பாடல்கள், உடுக்குப்பாடல்கள், கேலிப்பாடல்கள், திருமணப் பாடல்கள், குலவைப்பாடல்கள், கதைப்பாடல்கள், இசைகருவிகளின் ஓசைகள் ஆகியன பதிவு செய்யப்பட வேண்டும்.
15. பொருள் சேகரிப்பு
இசைக்கருவிகள், மரப்பெட்டிகள், இரங்குப் பெட்டிகள், நகைகள், ஆபரணங்கள், மூக்குத்திவகைகள், தோடுகள் தொங்கட்டான்கள், கடுக்கன்கள், உடைவகைகள் போன்றன சேர்க்கப்பட வேண்டும்.
16. இசைக்கருவிகளான - வீணை, தம்புரா, சுரக்கொத்து, சுரபந்து, குரித்தாளம், ஜலதரங்கம், கடம், கொக்கரை, மொத்தை, சின்னரம், கத்திரிகை, குடமுழவம், கொடுகொட்டு, துடி, படகம், பேரிகை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சன்கட்டை, உறுமி, தமுர், தண்டை, நையாண்டி மேளம், சல்வழகை, கரடிகை, திமிலை, சுக்கை, களப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரலவயம், கணவீடு, நூம்பு, நிகாணம், துடுன்ம, அடக்கம்" தகுனிச்சம், வீரவேறு, பாகம், உபாங்கம், நாழி, கைப்பறை, சல்லி, ஆவங்கி, குடுக்கை, துங்கினா, வயலின், பல்லாங்குழல், நாதஸ்வரம், மத்தளம், டமாரா, கஞ்சிரா, கிடிதிட்டி, உடல்கரா, டவண்டை, சூரியப்பிறை, சந்திரப்பிறை, பம்பை, தமுக்கு, தம்பட்டம், முரசு, சேமக்கலம், ஜால்ரா, ஒத்துமகுடி, சங்கு, தீருச்சின்னம், பூரி, கிளரின்ட், எக்காளம், கொம்பு, கைவீணை, குழல், பங்சமக வாத்தியம், உடுக்கு, ஆகியன சேரிக்கப்பட்டும், புகைப்படங்கள் பிடிக்கப்பட்டும் ஆவணக்காப்பகத்தில் வைக்கப்பட வேண்டும்.

17. சிலைகள், படங்கள், ஓவியங்கள், சிற்பங்கள்

தெய்வங்களான ரெட்டியாட்டி, வரதம்மா, அங்காயம்மா, பேச்சியம்மா, பெரியண்ணன், அம்மன், மாரியம்மன், கன்னியம்மா, இராமர், பழனியாண்டி, உமாதேவி, மகாலட்சுமி, வீரபத்திரர், மதுரைவீரன், மாடசாமி, முனியாண்டி, சங்கிலிகறுப்பன், காளி, மாயாண்டி, கருப்பண்ணன்சாமி, கறுப்புதெய்வம், வல்லடியான், காட்டுமுனி, வால்ராசா, வீரமாகாளி, பத்திரகாளி, சுடலைமாடன், உத்தரகாளி, ரோதமுனி, தவறனைமுனி, கவ்வாத்துமுனி, கவ்வாத்துச்சாமி, கம்பிமுனி, தன்னைமுனி, கொழுந்துமுனி, சந்திமுனி, முச்சந்திமுனி, மகாமுனி, முனீஸ்வரன், வண்ணடியார், வண்ணாத்திகொட்டை, போர்மலை, வனத்துச்சின்னப்பர், ஆண்டிச்சாமி, பூச்சியம்மா, நொண்டியப்புச்சி, ராயக்கன், இடும்பன், வாள்முனி, ஆண்டியப்பன், மயானமுனி, மஞ்சள் முனி, இருளாயி, துர்க்காதேவி, மஞ்சள்சாமி, செண்டாக்கட்டி, வைரவர், மலைத்தெய்வம், பெரியப்பர், காட்டுச்சின்னப்பர், எல்லைமுனை, இரட்டைக்கல்முனி, வனதேவதை, ஈடுளாயி, ஆகிய தெய்வங்களின் உருவச்சிலைகள், படங்கள் வழிபாட்டுமுறைகள், சேகரிக்கப்பட்டு பதியப்பட்டு சேமிக்கப்படுவதுடன், தெய்வங்களின் சிலைகளும் வடிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

**முடிவுரை**

காலத்துக்குக்காலம் விளம்பரத்துக்காக ஆவணக்காப்பகம் என்ற நிலைமாறி நீண்டகால ஆர்வலர்களதும், இம்மக்களினதும் அவாவான மலையகத்தமிழ் மக்களின் கலைக்கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் போற்றிப்பாதுகாக்கும் மலையகத் தமிழ் ஆவணகாப்பகம் ஒன்றினை அமைப்பதற்கு இந்த சாகித்திய விழா திடசங்கற்பம் பூணவேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


1. இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும். பதி: கார்த்திகேசு சிவத்தமபி: கொழும்பு, உதயம் நிறுவனம் வெளியீடு, 1993

2. சுவடிச்சுடர் பதி: தி. மகாலட்சுமி சூ. நிர்மலா, த. பூமிநாதன்: சென்னை, உலக தமிழாராய்ச்சி நிறுவனம், 2001

3. சுவடிப்பதிப்புத் திறன் பதி: எஸ். கிருஸ்ணமூர்த்தி : சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002

4. நல்லையா சி, மலையகவாய் மொழி இலக்கியம்: சென்னை, சவுத் ஏசியன் புக்ஸ், 1993.

5. இரவீந்திரன் சோதிமலர், காமன் கூத்தும் மலையக பாரம்பரியமும்: ஆசிரியர், 2004


6. வடிவேலன். பெ. மலையக மாரியம்மன் வழிபாடும் வரலாறும்: கொழும்பு, கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுக்குழு, 1997

7. வேல்முருக. அ. அர்ச்சுணன் தபசு : சென்னை குமரன் வெளியீடு, 1998.

8. வேல்முருகு, ந, இலங்கையின் பெருந்தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளியினரின் சமூகபுவியல்: கலாநிதி ஆய்வேடு, பேராதனை பல்கலைக்கழகம், (பிரசுரிக்கப்படாதது) 1990.

9. Maheswaran. R. Development of Sport information Centre in Sri Lanka Thesis, Master Degree in Library and Information Science University of Colombo, 2001.

10. Maheswaran. R. Bibliometric Study of Tamil Publication in Sri Lanka. Research work of Philosophy of Doctorate program in Library and Information Science Supervise by Prof. M. P. Sadija, Guru Nanak Dev. University Amritsar, Panjab, (Unpublished) [ ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களும் அவர்களுக்கான சுய பொருளாதாரமொன்றின் அவசியமும்

சட்டத்தரணி இரா. சடகோபன். பி. ஏ.

## 01. மலையக மக்கள் என்போர் யார்?

### 1.1 வரலாற்றுப் பின்னணி

இலங்கையில் இந்திய வம்சாவழி மலையக மக்கள் என்போரின் தோற்றம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஆரம்பிக்கின்றது. சிலர் இவர்களின் தோற்றத்தினை கோப்பிப் பயிர்ச்செய்கையின் ஆரம்பத்துடன் ஆரம்பிக்கின்றனர். எனினும் இலங்கையில் இந்திய வம்சாவழித் தமிழரின் பிரசன்னம் முதலாம் ராஜசிங்கன் காலத்திலும் (சீதாவாக்கை மன்னன்) அதன் பின்னர் ஒல்லாந்தர் காலத்திலும் (1638-1796) இருந்துள்ளது. பின்னர் 2 ம் ராஜசிங்க மன்னன் காலத்தில் மதுரை நாயக்க அரசவம்சத்தில் இருந்து மணப்பெண்களை அழைத்து கண்டி மன்னர்கள் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் ஆரம்பமாயிற்று, பல காலங்களில் பரிவாரமாக இலங்கை வந்த இந்திய வம்சாவழியினர் மீண்டும் இந்தியாவுக்குச் சென்றுவிட்டதற்கு ஆதாரமில்லை. இக்காலத்தில் இலங்கையின் கரையோரப்பகுதியில், கொழும்பு முதல் களுத்துறை வரையில் காணப்பட்ட கறுவாப்பயிர்ச் செய்கையில் இந்தியத் தமிழர் பெருந்தொகையில் அழைத்துவரப்பட்டு ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் பின்னர் முற்றிலும் சிங்களவர்களாக மாறிப் போய் விட்டனர்.

அடுத்த கட்டத்தில், பிரித்தானிய காலனித்துவ அரசு காலத்தில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டபோது கொழும்பை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவழி மக்களின் சனத்தொகை அதிகரித்தது. இதன் முதற்கட்டமாக, இலங்கையின் பிரித்தானிய ஆளுநராக பிரடரிக் நோர்த் என்பவர் கடமையாற்றிய போது 1804 ஆம் ஆண்டு முதன்முறையாக தென்னிந்திய தொழிலாளர்களை உள்ளடக்கியதான முன்னோடிப் படைப்பிரிவு (Pioneer Corps) ஒன்றை அமைத்தார். இலங்கையின் கடைசி சிங்கள அரசான கண்டி ராச்சியத்தை 1815 ஆம் ஆண்டு கைப்பற்றும் போதும், அதன் பின்னர் 1818 ஆம் ஆண்டு கண்டிக்கிளர்ச்சியை அடக்கும் போதும் இராணுவத்துணைப் படையில் 5000 இந்தியத் தொழிலாளர் தொழில் புரிந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. இந்த அரை இராணுவ துணைப்படைப்பிரிவு பின்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டு பொது வேலைப் படைப்பிரிவாக மாற்றப்பட்டது. பின்னர் இவர்களே கொழும்பு கண்டிப்பாதை, கொழும்பு - காலி பாதை, கொழும்பு திருகோணமலைப் பாதைகளையும் அவற்றில் காணப்படுகின்ற பாலங்களையும் (களனி ஆற்றின் மேல் அமைக்கப்பட்ட விக்டோரியா பாலம்) முதலாவது பாலம் சுரங்கங்களையும் அமைத்தனர்.

மேலும் ஒரு தொகையினர் பட்டிண, நகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டனர்.

இலங்கையில் பெருந்தோட்டத்துக்கென அழைத்துவரப்பட்ட முதலாவது தொழிலாளர் பிரிவில் 1800 பேர் இருந்தனர். 1818 ஆம் ஆண்டு பிரித்தானிய தேசாதிபதியாக இருந்த எட்வர்ட் பார்ண்ஸ் (Edward Barns) என்பவரும் கோப்பிப் பெருந்தோட்டம் அமைக்கும் முதல் முயற்சியில் கம்பளை சின்னப்பட்டி என்ற இடத்தில் (தற்போது சிங்ஹபிட்டி) இவர்களைக் கொண்டு கோப்பித் தோட்டம் அமைத்தனர். அதன் பின்னரான கோப்பிப் பெருந்தோட்டத்தையும் அது வீழ்ச்சியடைந்தமையும் பின்னர் தேயிலை பெருந்தோட்டமும், றப்பர் நடுகையும், கொக்கோ பற்றியும் நமக்குத் தெரியும், இப்பெருந்தோட்டங்கள் நன்கு வளர்ச்சிபெற்று இலங்கையின் பொருளாதாரத்தில் பிரிக்க முடியாத அளவு இணைந்து போய் விட்டன.

இலங்கையின் கோப்பி மற்றும் தேயிலைப் பெருந்தோட்ட பொருளாதார வளர்ச்சியுடன் கொழும்புத் துறைமுக வளர்ச்சிக்கும், இலங்கையின் ரெயில்வே மற்றும் பெருந்தெருக்கள் போக்குவரத்து வலைப்பின்னல் அமைப்பு வளர்ச்சிக்கும் தென்னிந்திய தமிழ்த் தொழிலாளர்களே அடிமரமும் ஆணி வேருமாக இருந்தனர்.

### 1.2 சனத்தொகையும் பரம்பலும்

மலையக இந்திய வம்சாவழித் தமிழ்மக்களின் சனத்தொகைக் கணிப்பீடுகள் இவர்களின் உண்மையான சனத்தொகையை பிரதிபலிக்கவில்லை என்பது மிக வெளிப்படையான உண்மையாகும். பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளின் நிமித்தம் இவர்கள் தம்மை இந்திய வம்சாவழித் தமிழர்கள் என்று சனததொகை கணிப்பீடுகளின் போது பதியத் தவறியதால் இம்மக்களின் மொத்த சனத்தொகையை சரியாக அறிய முடியாதுள்ளது. உத்தியோக பூர்வமற்ற தகவல்களின்படி இவர்களின் மொத்த சனத்தொகை சுமார் 15,000,00 (பதினைந்து இலட்சம்) மாக இருக்கும் என்று கருதப்பட்ட போதும் 2001 ஆண்டின் உத்தியோகபூர்வமான சனத்தொகை புள்ளிவிபரக் கணக்கெடுப்பின் படி இவர்களின் மொத்த சனத்தொகை 8,55,891 மட்டுமே. (கணக்கெடுப்பு இடம்பெற்ற 18 மாவட்டங்களின் மட்டும்) 1981 ஆண்டின் சனத்தொகை புள்ளிவிபரக் கணக்கெடுப்பகளின் பிரகாரம் இவர்களின் சனத்தொகை 8,18,665 ஆக இருந்தது. இதன்படி பார்த்தால் உத்தியோக பூர்வ புள்ளி விபரங்கள் வெறும் 37,235 பேர்களிலான (20 வருடங்களில்) அதிகரிப்பையே காட்டுகிறது.

இது இப்படி இருக்க தனிப்பட்ட ஆய்வாளர்களின் கணிப்பிட்டின்படி இலங்கை முழுவதுக்குமான மொத்த இந்திய வம்சாவழி மலையகத் தமிழரின் சனத்தொகை 12.02.349 ஆகும். இலங்கையின் எல்லா மாவட்டங்களிலும் இவர்களது சனத்தொகை பரவலாக சிதறிக்காணப்பட்டாலும் மதிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களின்படி கொழும்பு மாவட்டத்திலும் (1,55,411), நுவரெலியா (370,747), கண்டி (132,214), பதுளை (164,016), இரத்தினபுரி (101,624), கம்பஹா (63,878), மாத்தளை (40,214), கேகாலை (53,329) முதலான மாவட்டங்களிலும் கணிசமான அளவு செறிந்து காணப்படுகின்றனர்.

### 1.3. தனியான தேசிய இனம்

கிடைக்கப் பெற்றுள்ள புள்ளிவிபரங்களின்படி, இலங்கையின் இரண்டாவது பெரிய மக்கள் கூட்டத்தினராக மலையகத் தமிழ் மக்கள் இருக்கின்றனர். பெருந்தோட்டத் துறையில் தொழிலாளர்களாக வேலை செய்வதற்கென அழைத்து வரப்பட்ட இம்மக்கள் இன்று அத்துறையின் நெகிழ்ச்சியற்ற சமூக உயர்ச்சி காரணமாக மிக மிக மெதுவாக அத்துறையில் இருந்து படிப்படியாக வெளியேறி இலங்கையின் ஏனைய சமூக பொருளாதார அரசியல் துறைகளில் இணைந்து கொண்டுள்ளனர். இன்று இம்மக்களின் 50% மாணவர்கள் மட்டுமே பெருந்தோட்டத்துறையில் தங்கி இருக்கின்றனர். 1995 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட் ஒரு ஆய்வின்படி பெருந்தோட்டத்துறையில் மொத்தம் 7,50,000 பேர் வதிவிடத் தொழிலாளர்களாக உள்ளனர். இவர்களையே மலையக பெருந்தோட்ட கைத்தொழிலுடன் நேரடி உறவுள்ளவர்கள் எனலாம். ஏனையோர் மலையக பெருந்தோட்ட வதிவிடத் தொழிலாளர்கள் என்ற நிலையில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு இப்பிரதேசங்களுக்கு அண்டிய பகுதிகளில் குடிபெயர்ந்து சொந்தமான நிலத்திலோ அல்லது வாடகைக்கு வசிப்பவர்களையோ இருந்து கொண்டு வேறு தொழில் பார்ப்பவர்களாக உள்ளனர். எனினும் இவர்கள் அனைவருமே 1000 சமவுயரக் கோட்பாட்டுக்கு மேலான மலையகப் பிரதேசத்தில் வாழ்கின்றவர்கள் என்ற அடிப்படையில் மலையக மக்கள் என்ற வரையறைக்குள் வருபவர்கள். ஏனையோர் கொழும்பு போன்ற ஓர் இடத்தில் வசித்தாலும் மலையகத்தை தமது மூலவேராகக் கொண்டவர்கள் (Root) என்ற அடிப்படையில் மலையக தமிழ் மக்கள் என்றே பார்க்கப்பட வேண்டும். எனவே இம்மக்கள் கூட்டத்தினரின் பெரும்பான்மையினமானவர்கள் மலையக மக்கள் என்ற வரையறைக்குள் வருவதால் இம்மக்களை மலையகத் தேசிய இனம் என்ற வரையறைக்குள் கொண்டு வரலாம். ஏனையோர் தம்மையும் இம்மக்களுடன் இணைத்துக் கொண்டு இவ்வரையறைக்குள் வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மக்கள் தம்மை இத்தகைய தேசிய இனம் என்ற ஒருவரையறைக்குள் கொண்டு வர விரும்புகிறார்களா? என்ற கருத்தே இங்கு முக்கியம் பெறுகிறது. தேசிய இனக் கோட்பாட்டின் அண்மைக்கால அபிவிருத்தியின் படி ஒரு தேசிய இனம் தம்மை அவ்வாறு அழைத்துக் கொள்ள விரும்புகின்றது என்ற ஒரு அம்சமே அவ்வினத்தை தேசிய இனமாக அங்கீகரிக்கப் போதுமானதாகும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆதலினால் மலையக தமிழ் மக்களின் எதிர்கால நலன் கருதி அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்ற கருத்தை தொடர்ச்சியாக வலியுறுத்த வேண்டியதன் தேவை அவசியமாக எழுந்துள்ளது. எனவே இவர்கள் தொடர்பான பொருளாதார கட்டமைப்புக்களும் இக்கருத்தை அபிவிருத்தி செய்யும் விதத்திலேயே அமைய வேண்டும்.

2. மலையகத்தின் இட அமைவும் புவியியல் அம்சங்களும்
2.1 இட அமைவு

மலைநாட்டின் புவியியல் இட அமைவை பின்வருமாறு வரையறுக்கலாம்.

இலங்கையின் பல்வேறு புவியியல் பிரதேசங்களும் அவற்றுக்கேயுரிய சிறப்பம்சங்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் மலைநாட்டுக்கேயுரிய தனியான சிறப்பம்சங்கள் உண்டு. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. கடல் மட்டத்தில் இருந்து 1000 அழ அல்லது 300 மீற்றர் சம உயரக் கோட்டுக்கு மேல் உயரத்தில் அமைந்துள்ள பிரதேசம்.
2. புல்கொடை - இறக்கானை குன்று தனியாகக் காணப்படுகின்றது.
3. சிவனொளிபாதமலை. அப்புத்தளை, நமுனுகல, நக்கிள்ஸ் மலைத்தொடர் ஆகிய நானகு மலைத்தொடர்கள்.
4. மகாவலி, களுகங்கை, களனி, வளவை முதலான பெரிய ஆறுகள் இங்கு உற்பத்தியாவதுடன், பெரும் பள்ளத்தாக்குகளும், நீர்வீழ்ச்சிகளும் இங்குள்ளன.
5. சீரான வெப்பநிலையையும் (25 பாகை செல்சியஸ், 17 பாகை செல்சியஸ்) அதிக ஈரலிப்பான மழைக்கால நிலையையும் கொண்டு செழிப்பான பிரதேசமாக இது உள்ளது.

3. இலங்கையின் பொருளாதாரமும் தேயிலைப் பெருந்தோட்டக் கைத்தொழிலும்

*3.1.தேயிலைப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்.* இலங்கையின் பொருளாதாரத்தில் தேயிலை, பெருந்தோட்டக் கைத்தொழில் எந்தளவுக்கு முக்கியத்துவம் வகிக்கின்றது என்பதனை விளங்கப்படுத்தத் தேவையில்லை. மத்திய மலைநாட்டின் பயன்படுத்தத்தக்க அனைத்து நிலமும் தேயிலைப் பெருந்தோட்டங்களே காணப்படுகின்றன. இத்தோட்டங்களில் 99% தினர் இந்திய வம்சாவழி தமிழ் மக்களே தொழிலாளர்களாக தொழில் செய்த போதும் இவர்கள் இன்றும் இத்தோட்டங்களில் வெறுமனே வதிவிடத் தொழிலாளர் என்ற நிலையிலேயே உள்ளனர். முழு நாட்டினதும் தேசிய வருமானத்துக்கும், அந்நிய செலாவணி உழைப்புக்கும் பெரும்பங்காற்றும் இவர்களுக்கு இன்று சுதந்திரமாக குடியிருக்கும் ஒரு சிறுதுண்டு நிலம் தானும் இல்லை என்பது தொடர்பில் நாம் எந்தளவுக்கு குரல் கொடுத்து உள்ளோம்.

இன்று தேயிலை பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்பு 1,88,000 ஹெக்டேயர்கள் ஆகும். இது 1981 ஆம் ஆண்டு 2,45,000 ஹெக்டேயராக இருந்தது. இவ்விதம் தேயிலை நிலப்பரப்பு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம் பல்வேறு காரணிகளுக்காக (வீடமைப்புக் கொலணியாக்கம், பலபயிராக்கல்) இவை கையளிக்கப்பட்டமைவாகும். எனினும் தேயிலையால் பெறப்படும் மொத்த உற்பத்தி வருமானம், தேசிய வருமானத்துக்கான பங்களிப்பு, அந்நிய செலாவணி உழைப்பு என்பன அதிகரித்துள்ளனவே தவிர குறையவில்லை. எனினும் நாடு சுதந்திரமடைந்த போது இலங்கையின் தேசிய வருமானத்திலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும், அந்நிய செலாவணி உழைப்பு ஆகியவற்றில் தேயிலை, றப்பர், தெங்கு, கொக்கோ மற்றும் வாசனைத் திரவியங்களே முதன்மை ஸ்தானத்தில் இருந்தன. எனினும் 1948 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மலையக இந்திய வம்சாவழி மக்கள் தேர்தல் வெற்றியாலும், அவர்கள் ஒரு ஸ்தாபனப்படுத்தப்பட்ட தொழிற்சங்க சக்தியாக உருவாகி இருந்தமையாலும், அவர்கள் எதிர்காலத்தில் இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய சக்தியாக உருவாக்கக்கூடும் என்ற பயத்தால் தேசிய முதலாளித்துவ கட்சிகளான, ஐக்கிய தேசியக் கட்சி, S.W.R. D. பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பன இலங்கையின் தேயிலைப் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும்

- 1948ம் ஆண்டு 136 மில். கி. கிராமாக இருந்த இலங்கையின் தேயிலை உற்பத்தி 1996 ஆம் ஆண்டு 358 மில். கி. கி. அதிகரித்துள்ளது.
- 1950ம் ஆண்டு தேயிலை மொத்த விளைநிலப்பரப்பு 225,000, ஹெக்டேயரில் இருந்து 1996 ஆண்டில் 1,88,000 ஹெக்டேயராக வீழ்ச்சியடைந்தது.
- 1996ம் ஆண்டு பெருந்தோட்ட மீள் கட்டமைப்பு அபிவிருத்திக் கென 100 மில். யு. எஸ். டொலர் நிதியுதவி தனியார் மயமாக்கப்பட்ட தோட்டக் கம்பனிகள் நிறுவாகத்துக்கு வழங்கப்பட்டன. இதன் பலன் தொழிலாளரை சென்றடையவில்லை.
- தேயிலையின் உற்பத்தித்திறன் 1950 ஆம் ஆண்டு ஹெக்டேயருக்கு 650 கி. கி. மாத்திரமே இருந்தது. இது 1996ம் ஆண்டு 1500 கி.கி. ஆக அதிகரித்திருந்தது.
- 1948ம் ஆண்டின் மொத்த தேயிலை உற்பத்தியான 136 மில். கி. கிராமில் 134 கி. கி. ஏற்றுமதி செய்யப்பட்டது. இது மொத்த உற்பத்தியின் 99% மாகும். 1996ம் ஆண்டு மொத்த உற்பத்தியான 258 மில். கி. கிராம்களில் 244 மில். கி. கி. ஏற்றுமதி செய்யப்பட்டது. இது மொத்த உற்பத்தியின் 96% ஆகும். (எனவே வேறு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி முக்கியத்துவம் அதிகரித்திருந்தனவே தவிர தேயிலை உற்பத்தியின் முக்கியத்துவம் அதன் முதன்மை ஸ்தானத்தில் இருந்து குறையவில்லை. மாறாக அதன் உற்பத்தி அளவும், ஏற்றுமதி அளவும் படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது.)
- தேயிலைத் தொழிலின் ஏற்றுமதி முக்கியத்துவம் கருதி அதன் மீதான வரிவிதிப்பு பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 1970 களில் இருந்து அது வரிவிதிப்புக்குட்பட்டது. 1978 ஆம் ஆண்டு இத்தொழிலின் மீதான மறைமுக வரிவிதிப்புக்களில் இருந்து ரூபா 3,462 மில். அரசிறையாக (மொத்த வரிவருமானத்தின் 29%) பெறப்பட்டது. அதன்பின் இது மட்டுப்படுத்தப்பட்டதுடன் அறவிடப்பட்ட வரி அத்துறையின் அபிவிருத்திக்கே செலவிடப்பட்டது. 1996 ஆம் ஆண்டு இவ்விதம் வரிவிதிப்பின் மூலம் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 492 மில். ஆகும். ஆனால் தொழிலாளரை இந்நலன் சென்றடைந்ததா? என்பது கேள்விக்குறி.
- தேயிலையின் விலை 1948-1950 காலத்தில் 1.13 யு.எஸ். டொலராக இருந்தது. 1992-1996 காலத்தில் இது 2.04 ஆக இருந்தது. இது வருடாந்தம் சராசரி 1.6% தால் அதிகரித்து வந்துள்ளது.
- தொழிலாளரின் சம்பளம் (கூலி) 1948 ஆம் ஆண்டு ரூபா 1.44 ஆகவும் 1970 ம் ஆண்டு ரூபா 3.10 ஆகவும் 1996ம் ஆண்டு ரூபா 83 ஆகவும் 2003ம் ஆண்டு ரூபா 121 மட்டுமே அதிகரித்துள்ளது.

*3.2 சுதந்திரத்துக்குப் பின் அரசுக்களின் மலையக தமிழ் மக்கள் விரோத பொருளாதாரக் கொள்கைகள்*

1948 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சுதந்திர இலங்கையின் அரசுகள் மலையகத் தமிழ் மக்களுக்கெதிரான பொருளாதாரக் கொள்கைகளையே கடைப்பிடித்து வந்துள்ளன. பிரஜா உரிமை பறிப்புச் சட்டத்தையும், வாக்குரிமை பறிப்புச் சட்டத்தையும் கொண்ட வந்து அரசியல் சக்தியாக இவர்கள் உருவாவதை வெற்றிகரமாகத் தடுத்துவிட்டு இவ்வரசுகள் இவர்கள் தொடர்ந்தும் தொழிற்சங்க ரீதியில் இணைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற் சங்க போராட்டங்கள் வாயிலாக நாட்டின் பொருளாதாரத்துக்கு அச்சுறுத்தலாக உருவாவதாகக் கருதினர்.

முயற்சிகளில் ஈடுபட்டன. இதன் காரணமாக மலையகத்தமிழரின் பிரஜா உரிமையும், வாக்குரிமையும் கூட பறிக்கப்பட்டது. இதனைப் புரிந்து கொண்டு 1948 ஆம் ஆண்டு சாத்வீகப் போராட்டத்தைக் கைவிட்டு தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்திலும், வீதிமறியல் மற்றும் ஏனைய பகிஷ்கரிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தால் இலங்கையின் பொருளாதாரத்தையே ஸ்தம்பிதமடையச் செய்து பிரஜாத உரிமை கோரிக்கையில் வெற்றி பெற்றிருக்கலாம். இப்படிச் செய்யாமல் விட்டமை அன்றைய இலங்கைய இந்திய காங்கிரஸின் மாபெரும் அரசியல் தவறாகும். இதன் காரணமாக நாம் 50 ஆண்டுகால சமூகப் பின்னடைவை அடைந்துவிட்டோம்.

மறுபுறத்தில் ஏனைய பிரஜைகள் அனுபவித்த உரிமைகள் இவர்களுக்கு மறுக்கப்பட்டு இந்நாட்டுக்குரிய மக்கள் அல்லாத விதத்திலேயே நடத்தப்பட்டனர். குறிப்பாக. நிலங்கள், வீடமைப்புக்கள் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட போது இம்மக்களுக்கு அவை மறுக்கப்பட்டன. கொலனிகள். உருவாக்கப்பட்டபோது அவற்றில் இம்மக்களுக்கு இடம் வழங்கப்படவில்லை. இம்மக்கள் 200 ஆண்டுகளுக்குப் பின்னவரும் தோட்டங்களில் தற்காகலிக குடியிருப்பாளர்களாகவும், நிலமற்றவர்களாகவும், வீடற்றவர்களாகவும், உள்ளனர்.

(மூலம் : Sri Lanka in Brief, Ceylon Chaler of Commerce, Cenral Bank Report 1995)

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இந்நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் முதன்மை ஸ்தானத்தில் தேயிலையும் மற்றும் பெருந்தோட்ட உற்பத்திகளும் இருப்பதை மாற்றிவிடத் தீர்மானித்தன. இதனால் வேறு உற்பத்தி மார்க்கங்களைத் தேடினர். இதன் விளைவாக இன்று தேயிலை ஏற்றுமதி 4 ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதன் இடத்தை 'ஆடை உற்பத்தித் தொழில், ஏனைய கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள், வெளிநாடுகளில் தொழில்புரிவோர் அனுப்பும் பணம் என்பன பிடித்துக் கொண்டுள்ளன.

*3.3 ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை வகிக்கும் பங்கு*

எனினும் ஏற்றுமதி வருமானத்தைப் பொறுத்த வரையில் தேயிலைத 4 ஆவது இடத்தில் உள்ளது. என்பதனை பொருளாதார ரீதியில் ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்கள் வெறுமனே மேலோட்டமான புள்ளிவிபரங்களைக் காட்டி சகரையும் ஏமாற்றப் பார்க்கிறார்கள். இதனை பின்வரும் புள்ளி விபரங்களை உண்ணிப்பாக அவதானித்தால் தெரியவரும்.

இப்புள்ளிகளின் பின்னிணைப்பு இக்கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டின் இப்புள்ளி விபரங்களை இலங்கை வர்த்தக சங்கம் வெளியிட்டுள்ளது.

| | |
|---|---|
| 1995ம் ஆண்டின் மொத்த ஏற்றுமதி | 195,258 (மி.ரூபா) |
| ஆடை உற்பத்தி ஏற்றுமதி | 84,806 (மி. ரூபா) |
| வெளிநாட்டில் பணிபுரிவோர் அனுப்பும் நிதி | 40,806 (மி. ரூபா) |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் (றப்பர், இயந்திராதிகள், பெற்றோலியம், தோற்பொருள், மற்பாண்டங்கள், ஆபரணம், மரப்பொருட்கள், பிளாஸ்டிக் முதலான கைத்தொழில் பொருட்கள்) | 36,181 (மி. ரூபா) |
| தேயிலை | 24,638 (மி. ரூபா) |

இப்புள்ளிவிபரங்களின் படி தேயிலை நான்காவது ஏற்றுமதிப் பொருளாகவே உள்ளது. இவ்வுற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் பெருமானங்களைப் பார்ப்போம்.

*ரூபா. மில்.*

| | |
|---|---|
| பருத்தி, வெற்றுத்துணி, அச்சிடப்பட்ட் துணி இயந்திரங்கள், மின்சாரம் சம்பந்தப்பட்டது | 63,777 |
| இயந்திராதிகள் | 32,186 |
| பெற்றோலியம் | 19,830 |
| பிளாஸ்டிக் மூலப்பொருள் | 7,886 |
| இரசாயனங்கள் | 7,329 |
| உரம் | 4,436 |

*(மூலம் : (1) Sri Lanka in Brief, Ceylon Chaler of Commerce, (2) Cenral Bank Report 1995)*

இதனை ஏற்றுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தோமாயின் ஆடை உற்பத்தித் தொழிலுக்கு அதன் 70% உள்ளீடுகள் இறக்குமதி செய்யப்படுகிறது என்று கூறப்படுகிறது. எனவெ அதன் ஏற்றுமதிப் பெறுமானத்தில் 30% மட்டுமே உண்மையான ஏற்றுமதி வருமானமும். அதே போல் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிலும் (உதாரணம் - பெற்றோலிய உற்பத்தி, தோற்பொருள், பிளாஸ்டிக்) அதிக அளவில் வெளிநாட்டு இறக்குமதி செய்ப்பட்ட உற்பத்தி ஏற்றுமதி மூலப் பொருட்களே பயன்படுத்தப்படுகின்றன. எனவே ஆடை உற்பத்தித் தொழில் உற்பத்தி ஏற்றுமதி வருமானமும், கைத்தொழில் உற்பத்திப் பொருள் வருமானமும் தேயிலை ஏற்றுமதி வருமானத்துக்கு பின்னரே வைத்துப் பார்க்கப்பட வேண்டும். ஆதலால் வெளிநாட்டில் பணிபுரிவோர் அனுப்பும் பணத்துக்கு அடுத்தாக இப்போதும் அதிக அந்நிய செலாவணி பெற்றுத் தரும் துறையாக தேயிலையே உள்ளது. இந்த நிலைமை அண்மைய எதிர்காலங்களில் மாற்றப்படுவதற்கான சூழ்நிலை இல்லை. இதனை வைத்துப் பார்க்கும் போது இப்போதும் மலையகத் தமிழர்கள் இலங்கையின் பொருளதாரத்தில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர் என்பது புலனாகும்.

எனினும் இந்த உபாயத்துவ முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார நிலைமையினை மலையக அரசியல் தலைவர்களும், தொழிற் சங்கத்தலைவர்களும் பயன்படுத்தத் தவறுவதால் அரசாங்கத்துடனும், தொழில் கொள்வோருடனும் சம்பளம் மற்றும் அரசியல் பிரச்சினைகளின் போது பேரம் பேசுவதில் தோல்வியடைகின்றனர். இந்த மக்கள் ஒருநாள் வேலை நிறுத்தம் செய்வதால் அதனால் எத்தனை கிலோ தேயிலை இழக்கப்படுகின்றது. எத்தனை மில்லியன் டொலர் அந்நிய செலாவணி இழக்கப்படுகின்றது? என்பதனை சுட்டிக்காட்டும் திராணி ஏன் நம் மக்கள் தலைவர்களுக்கில்லை? இதனை ஒரு கேள்வியாகவே முன்வைக்கின்றேன்.

ஏனெனில் தேயிலைத் தோட்டங்கள் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் தமக்கும் தொழிலார் பிரச்சினைகளுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை எனவும், அவற்றை தனியார் நிறுவனங்களும், தொழிலாளர்களுமே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் பெருந்தோட்ட அமைச்சர்கள் கூறிவருகின்றனர். ஆனால் தேசிய வருமானத்திலும், அந்நிய செலாவணி உழைப்பிலும் இத்தகைய பங்கு வகிக்கும் ஒரு துறை மீது அரசுக்கு எந்தவித பொறுப்பும் இல்லை என்று கூறுவது மிகவும் போலித்தனமானதும், இம்மக்களை ஏமாற்றுவதும் ஆகும். தகுந்த புள்ளி விபரங்களுடன் இப்பாரிய பொறுப்பினை அரசுக்கு சுட்டிக்காட்டி இம்மக்களின் பிரச்சினைகளின் போது அரசாங்கத்தின் பொறுப்பை உணர்த்த வேண்டிய பணியையும் மலையக மக்களின் தலைவர்கள் செய்கிறார்கள் இல்லை.

## 4. மலையக மக்களுக்கான வாழிடக் கொள்கையும் பொருளதார முக்கியத்துவமும்

*4.1 நிரந்தர வாழிடம் இல்லாமை*

மலையக மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய பாதகமாக இருப்பது இவர்கள் தொடர்ந்து நிலமற்றவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதும், தற்காலிக வதிவிடக் கூலிகளாக இருப்பதும், நிரந்தரமான வாழிடங்களைக் கொண்டிராமல் இருப்பதுமாகும். இவர்களுக்கான ஒரு சுயபொருளாதாரம் வளர்த்தெடுக்கப்பட வேண்டுமாயின் அதற்கான முதல் நிபந்தனையாக இம்மக்கள் இந்நாட்டின் நிரந்தரக் குடிமக்களாகவும், அவர்களுக்கென நிரந்தரக் குடியிருப்புக்களும், நிரந்தரமான வாழிடமும் இருக்க வேண்டியதவசியம். அப்போதுதான் இம்மக்கள் இந்நாட்டின் ஏனைய குடிமக்களுக்கு சமமானவர்களாக இருப்பார்கள். சொந்த நிலத்திலும், சொந்த வீட்டிலும், சொந்த வாழிடத்திலும், குடியிருக்கும் போதுதான் இந்த மண் நமக்குச் சொந்தமானது, என்ற சுயசிந்தனையும், நாம் சுதந்திரமானவர்கள் என்ற சிந்தனையும் தோன்றும். அப்போதுதான் நமக்கு சொந்தமான மண்ணில் அவர்கள் சுயபொருளாதார முயற்சிகளில் ஈடுபடுவார்கள். இன்று இவர்கள் இவ்வித தற்காலிக கூலிகள் என்று நிராகரிக்கப்பட்டு தோட்டங்களில் வேலை இழக்கும் போதும், தோட்டங்கள் மூடப்படும் போதும் வீதிக்கு வரவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். இன்றைய பத்திரிகை செய்திகளின்படி 35 ஆயிரம் தொழிலாளர் இத்தகைய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

1995 ஆம் ஆண்டின் ஆய்வொன்றின்படி தேயிலைப் பெருந்தோட்டங்களில் மாத்திரம் 750,000 தொழிலாளர்கள் தற்காலிக வதிவிடங்களான லைன் காம்பறாக்களில் குடியிருந்து வந்தனர். இவர்கள் அனைவரும் தோட்டத்தின் பிடியில் அகப்பட்டு கொத்தடிமைகளாக இருக்கின்றனரே தவிர தமது நாளாந்தத வாழ்க்கைத் தேவைப்பாடுகளை தாமே சுதந்திரமாக தீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும். இதற்கு முக்கிய காரணம் இவர்கள் அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ்வராமையாகும். இந்த நிலைமையில் இருந்து இவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

*4.2 மலையக தமிழ் தோட்டத் தொழிலாளருக்கான பெருந்தோட்ட குடியிருப்புக்கள் (Plantation Town Ships)*

மலையகப் பெருந்தோட்டங்களின் கைத்தொழில் தன்மைகருதியும், அதன் உற்பத்திகளை ஏற்றுமதிக்கென கொழும்புத்துறைமுகத்துக்கு இலகுவாக கொண்டு செல்ல வேண்டிய தேவை கருதியும் இப்பிரதேசம் எங்கும் பெருந்தெருக்களும், புகையிரதப் போக்குவரத்தும் அமைக்கப்பட்டன. அநேகமான தேயிலைத் தோட்டங்களும், தொழிலாளர் குடியிருப்புக்களும் பெருந்தெருக்களுக்கு அருகாமையிலோ அல்லது பிரதான பாதைகளுக்கு அண்மியதாகவோ உள்ளன. மற்றும் பல தோட்டங்களில் எல்லைகளாக இத்தகைய தெருக்களே உள்ளன. எனவே இத்தகையள பெருந்தெருக்களை இணைத்து சுதந்திரமான பெருந்தோட்ட குடியிருப்புக்கள் (Plantation Town Ships) அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய குடியிருப்புக்களுக்கும் தோட்ட நிர்வாகத்துக்கும் எதுவித தொடர்புகளோ, தலையீடுகளோ இருக்கக்கூடாது. இவை தொடர்பான அபிவிருத்தி நடவடிககைகளும் பொது வசதிகளும், கிராமசபையூடாகவோ, பிரதேச சபையூடாகவோ நடைபெறவேண்டும். இவை தமக்கென போக்குவரத்து, குடிநீர், மின்சாரம், தொலைத்தொடர்பு முதலான உள்ளகக் கட்டமைப்புக்கள், மற்றும் பொது வசதிகளான பாடசாலை, வணக்கஸ்தலங்கள், தபாற்கந்தோர், கடைத்தெருக்கள், பஸ்நிலையம், மருத்துவமனை, கூட்டுறவு விற்பனை நிலையம், பொதுச் சந்தை, நூல் நிலையம், கலாசார நிலையம், விளையாட்டு மைதானம், பொது ஒன்று கூடலுக்கான பிரதேசம் முதலானவையும் அமைந்திருத்தல் வேண்டும். சிலவேளை இத்தகைய ஒரு திட்டத்தை மலையகமெங்கும் ஒன்று சேர ஏற்படுத்துவது கடினமானதாக இருக்கலாம். எனினும் எங்காவது ஒரு பொருத்தமான இடம் இனம் காணப்பட்டு மிகச் சிறிய அளவிலாவது ஆரம்பிக்கப்பட வேண்டும். உதாரணமாக மலையகத் தமிழ் மக்கள் பெரும்பான்மைச் சமூகமாக இருக்கும் நுவரெலியா மாவட்டத்தில் இது ஆரம்பிக்கப்படலாம்.

## 5. மலையக மக்களுக்கான சுயபொருளாதாரம்

*5.1 தேயிலைப் பொருளாதாரமும் மலையக மக்களும்*

கடந்த 2 நூற்றாண்டு காலமாக மலையகத் தமிழ் மக்கள் இந்த நாட்டு பெருந்தோட்ட பொருளாதாரத்துடன் மிகக் கலந்து போய்விட்டார்கள். இந்த நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து நாட்டு மக்கள் அனைவருக்கும் சுகவாழ்வு அளித்தது அவர்கள் தான். மிக அண்மைக்காலம் வரை அவர்கள் உழைத்த அந்நியச் செலாவணியில் இருந்து தான் நாட்டின் இறக்குமதித் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் ஏற்றுமதியில்லாமல் வெளிநாடுகளில் இருந்து எந்த பொருளையும் இறக்குமதி செய்ய முடியாது. அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த அந்நிய செலாவணியை உழைத்துத் தந்த இவர்களுக்கு அதன் மூலம் நாட்டுக்கிடைத்த நலனில் சிறிதளவுகூட போய்ச் சேரவில்லை.

(அ) ஆதலால் இந்த நாடு அவர்களுக்கு பாரிய கடன்பட்டிருக்கின்றது. அதன் ஒரு அங்கமாக தற்போது இலாபமீட்டாமல் செயற்படும் அரசுக்கு சொந்தமான பெருந்தோட்டங்கள் தொழிலாளர் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதனை அவர்கள் தனித்தனியாகவோ கூட்டுறவு முறையிலோ பயிர் செய்யலாம். இத்தகைய கோரிக்கை ஒன்று ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலும் அழுத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

(ஆ) அண்மைக்காலத்தில் செய்கை உணவுப் பொருட்கள் மீதும் பானங்கள் மீதும் மக்களின் அக்கறை குறைந்து வருகின்றது என்றும், மூலிகை பானங்கள் மீதான (Herbal drinks) அக்கறை அதிகரித்து வருவதாகவும் ஒரு ஆய்வு கூறுகிறது. எனவே எதிர்காலத்தில் தேயிலை பானத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆதலால் வெறுமனே பெருந்தோட்ட கூலிகள் என்ற நிலைமை மாற்றப்பட்டு சிறுசிறு தோட்ட உடைமையாளர்களாக இவர்கள் மாற்றப்பட வேண்டும். மொத்த தேயிலை நில உடமையின் கணிசமான பங்கு இப்போதும் சிற்றுடைமையாளர்களிடமே உள்ளது. 1975 ம் ஆண்டின் நிலச் சீர்திருத்த சட்ட அமுலாக்கலை அடுத்து 3,66,184 ஏக்கர் நிலம் (61.6 வீதம்) அரசுடைமையாகவும் 2.28,277 ஏக்கர் நிலம் (38.4 வீதம்) தனியாருக்கும் சொந்தமாக இருந்தது. இந்த நிலங்கள் இன்று நூற்றுக்காணக்கான தனியார் உடமைகளாக உள்ளன. இத்தகைய தேயிலைத் தோட்டங்கள் விலைக்கு விற்கப்படும் போது அவற்றை கொள்வனவு செய்து 1/4, 1/2, 1 ஏக்கர் என இம்மக்களிடையே பகிரப்படுவது வாயிலாக அவர்களை நில உடைமையாளர்களாக்கலாம். இதற்கென மலையக மக்கள் அபிவிருத்தி நிதி ஒன்று உருவாக்கப்பட்டு உலகளாவிய பங்களிப்பினை பெற வேண்டும்.

*5.2. ஏனைய சுயபொருளாதார முயற்சிகள்*

மலையக இந்திய வம்சாவழித் தமிழர்கள் பூர்வீகிதத்தில் விவசாயிகளே. எனவே இவர்கள் தோட்டத் தொழிலாளி என்ற கொத்தடிமைச் சிறையில் இருந்து படிப்படியாக வெளியேறி தாம் வாழ்கின்ற பிரதேசத்திலேயே காணித்துண்டொன்றை பெற்று அதில் சுதந்திரமாக வாழவும் தம்மால் இயன்ற அளவு, சிங்கள நாட்டுக் கிராமத்தவர்கள் போல வாழப்பழகிக் கொள்ளவும் வேண்டும். அதற்கு இவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

1975 ஆம் ஆண்டுகளை அடுத்து வந்த காலப்பகுதியில் தேயிலை உடமை தேசிய மயமாக்கலின் போது ஜனவசம, உசவசம, அ.பெ. தோ, யா ஆகிய நிறுவனங்களுக்கு மேலதிகமாக நாட்சா (பல பயிராக்கல் அமைப்பு) என்ற அமைப்பு ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பு இலாபம் பெறாத பெருந்தோட்டங்களை கையேற்று அவற்றை பல பயிராக்கல் திட்டத்தின் கீழ் சிறு ஏற்றுமதிப் பயிர்களை ஊக்குவிப்பதற்காகவும், கிராமத்தவரிடையே குடியிருக்கவும் பகிர்ந்தளித்தது. இத்திட்டத்தின் கீழும் மலையகத் தமிழர்கள் ஒதுக்கப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ் காணிகள் பகிர்ந்தளிக்கும் போது மலையகத் தமிழர்களுக்கு அவை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைத்தவிர நுவரெலியா, வெலிமடை முதலான இடங்களில் மரக்கறி, கிழங்கு, மற்றும் சிறு வியாபார பண்ணைச் செய்கை, பாற்பண்ணை, கோழிப்பண்ணை போன்ற வியாபார முயற்சிகளும் இம்மக்களிடையே ஊக்குவிக்கப்பட வேண்டும்.


6. முடிவுரை

மலையக தமிழ் தேசிய இனத்தினை ஒரு தனியான தேசிய இனம் என்று வலுவுடன் வரையறை செய்து கொள்வதற்கு தடையாக முதலாளித்துவ பொருளாதார சிந்தனைவாதிகள் சுட்டிக்காட்டும் முதன்மைக் காரணிகள் இம்மக்களுக்கு ஒரு உறுதியான பொருளாதாரம் இல்லாதிருப்பதும், அவர்கள் புவியியல் ரீதியில் ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பில் நிரந்தரமாக வதியாதிருப்பதும் ஆகும் என்று கூறுகின்றனர். ஒரு தேசிய இனம் என்று இவர்களை அழைக்க இத்தகைய காரணிகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டிய அவசியமற்றதுஎன்று மார்க்ஸிய சிந்தனைவாதிகள் வலியுறுத்துகின்றனர். இதனைத் தீர்மானிப்பதற்கு இவர்கள் சுயமான மனப்பிரக்ஞைகளுடன் தம்மை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்குமாறு கோருவதனை அடிப்படையாகக் கொண்டு மாத்திரம் இவர்கள் ஒரு தேசிய இனமா? இல்லை? என்பது தீர்மானிக்கப்பட வேண்டும். அப்படியாயின் இப்போது அவ்வித ஒரு கோரிக்கை இம்மக்களிடம் இருந்து வலுவாக எழுநதுள்ளது என்று கூறலாம். இக்கோரிக்கைகளுக்கு மேலும் அழுத்தம் கொடுக்கப்பட வேண்டியதன் தேவை இப்போது அவசியமாக எழுந்துள்ளது.

எனினும் இம்மக்கள் தம்மை மேலும் வலுவுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமாயின் சுயமான பொருளாதாரத்தையும், மலையகத்தில் தொடர்ச்சியான பூமிப்பிரதேசத்தில் நிரந்தரமான வதிவிடங்களையம், வாழிடங்களையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவர்கள் மத்தியில் இருந்து ஒரு சக்திவாய்ந்த படித்த மத்திய தரவர்க்கம் ஒன்று உருவாக வேண்டும். அப்போது தான் மலையக தமிழ்மக்களின் எதிர்கால அரசியல் செயல்நெறிகள் சரியான திசைநோக்கி நகருதல் சாத்தியமாகும்.

*References*


1. Central Bank Reports, Central Bank of Sri Lanka,1995, 1996
2. The Economic Development of Independent Sri Lanka, Central Bank of Sri Lanka 1998
3. Manikkam P. P., Tea Plantation in crisis -An-overview Social Scientists Association
4. Sri Lanka in Brief, Ceylon Chamber of Commerce 1996
5. Economic Review, Journal of Peoples Bank, 1985 September October issue.
6. Shadagopan R. Changes in the Tea Plantation in Sri Lanka An Independent Research report submitted for Bachelor of Arts, Georaphy Special degree Final Examination, University of Colombo - 1982
7. Nithiyanandan V. Political Economy of Sri Lanka - 1948 to 1956 class and Ethnic perspectives, University of Jaffna 1989.
8. Kuruppu NSG, A History of Working class movements in Ceylon, Ceylon Historical Journal, Vol. 1, PP 130
9. Ceylon Daily News, 6.10.2002
10. சடகோபன் இரா. 'மலையக மக்களும் அவர்களுக்கான நிரந்தர வாழிடக் கொள்கையும்', வீரசேகரி வாரமலர் 11.05.2003.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக நாட்டார் வழக்காற்று - தேடல்

லெனின் மதிவானம்
உதவி ஆணையாளர்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

ஒவ்வொரு மொழியிலும் எழுத்து இலக்கியம் தோன்றுவதற்கு முன்னரே நாட்டார் பாடல்கள் கதைகளும் தோன்ற தொடங்கிவிட்டன. அவை வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக எடுத்துக் கூறுகின்றவையாகவும், வாழ்க்கை அனுபவத்தை பின்னணியாக கொண்ட புராண இதிகாச கதைகளாகவும் கூத்துக்களாகவும் பல வடிவங்களில் அமைந்து காணப்படுகின்றன. எழுத்திலக்கியம் என்பது இவ்விலக்கியத்தின் அடியாகத் தோன்றி பின்னர் இதனின்றும் பிரிந்து விட்டது. அவை தேக்கம் ஏற்பட்ட காலங்களியெல்லாம் நாட்டார் இலக்கியத்தின் துணைகொண்டு ஜீவசத்து பெற்று வந்திருப்பதனை இலக்கிய வரலாறு உணர்த்தி நிற்கின்றது.

மனித குலத்தின் தலை சிறந்த படைப்புகள் யாவும் சாதாரண மக்கள் சாதிகளால் உருவாக்கப்பட்டவையே. அவ்வகையில் எழுத்தறிவு கிடைக்கப் பெற்ற மக்களிடையே செவி வழியாக வளர்ச்சி பெற்று வந்தவையே. நாட்டார் இலக்கியம் என்றழைக்கப்படுகின்றது. இதனுடன் இணைந்த சகல கூறுகள் நாட்டார் வழக்காறுகள் என்றழைக்கப்படுகின்றன.

மலையக நாட்டார் வழக்காற்றியல் என்பது மலையக மக்களின் வாழ்க்கையும் பண்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு முகிழ்ந்த நாட்டார் வழக்காற்றியல் துறையாகும். மலையக சமூக அமைப்பானது தென்னிந்திய தமிழ் கிராம பின்னணியை அடிப்படையாகக் கொண்டெழுந்தது என்ற போதிலும் அவை புதிய வாழ்க்கை சூழல், உற்பத்தி முறை, உற்பத்தி உறவு என்பனவற்றுக்கு ஏற்ப புதிய பரிமாணத்தை அடைந்துள்ளமையை மலையக நாட்டார் வழக்காற்றியலை நுண்ணியத்துடன் நோக்குகின்ற போது அறிய முடிகின்றது. ஓர் உதாரணத்திற்காக பின்வரும் பாடலை நோக்குவோம்.

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயை நாமறந்தேன்"

"பாதையிலே வீடிருக்க,
பழனிச் சம்பா சோறிருக்க
எருமே தயிரிருக்க
ஏன்டி வந்தே கண்டிச் சீமை"

என்ற வரிகள் தாயக நினைவுகளை மீட்பதாக மட்டுமல்லாது தாம் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டுகின்றன. தமிழகத்தில் ஓர் நிலவுடமை சமூகவமைப்பில் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்த இம்மக்கள் விவசாய வர்க்கத்திற்குரிய குணாதிசயங்களைக் கொண்டிருந்தனர் என்பதை இவற்றினூடாக அறியக் கூடியதாக உள்ளது. பிறந்த மண்ணை துறந்து புகுந்த மண்ணில் தம் வாழ்க்கையை அமைத்த போது அவர்களின் உணர்வுகள் இவ்வாறு பிரவாகம் கொண்டன.

"கூனி அடிச்ச மலை
கோப்பிக் கன்று போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி"

"அந்தனா தோட்டமினு
ஆசையா தானிருந்தேன்
ஒரு மூட்டத் தூக்கச் சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா"

இவ்வாறு மலையக மக்களின் வேதனை மிக்க வாழ்க்கை முறைகளையும் ஓர் முதலாளித்துவ சமூகவமைப்பில் தமது உழைப்பை சுதந்திரமாக விற்கக் கூடிய தொழிலாளர் வர்க்கமாக இவர்கள் புதிய வர்க்கத் தன்மை பெறுவதனையும் இவ்வரிகளின் ஊடாக காணக்கூடியதாக உள்ளன. அவ்வகையில் மலையக நாட்டார் வழக்காறு தனித்துறையாகவே அமைந்து காணப்படுகின்றது.

"ஒன்றுக்கொன்று எதிரான பகைமை வர்க்கங்களைச் சமுதாயம் பிரிக்கப்பட்ட பின், மக்களின் வரலாறு என்பது அநீதி, சுரண்டல் என்பதற்கெதிரான போராட்டம், எதிர்ப்பு என்பனவற்றின் வரலாறாகிவிட்டது. வர்க்க சமுதாயத்தில் அதிகாரபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடப் புத்தகங்கள் எவ்விதச் சுவட்டையும் (Trace) கொண்டிருப்பதில்லை. அப்படி ஏதேனும் சுவட்டை (தடயம்) கொண்டிருப்பின், அது போராட்டத்தின் மிகமிகச் சிறு சுவட்டை கொண்டிருக்கும். (தே. லூர்து - 1995.46)

உழைக்கும் மக்கள் திறளினரின் நல்வாழ்வுக்கான போராட்டத்தினை முன்னெடுக்கின்றபோது அம்மக்களின் கனவுகள், இலட்சியங்கள் விருப்பு வெறுப்புகள், அவர் தம் உறுதிப்பாடு என்பன குறித்து தேடல் அவசியமாகின்றன. இவற்றினை நாட்டார் வழக்காறுகளின் மூலமாக தரிசிக்கக் கூடியதாக உள்ளமை இத்துறை ஆய்வின் முக்கிய அம்சமாக அமைகின்றது. பிறிதொரு தளத்தில் பிறிதொரு நலன்களுக்காகவும் நாட்டார் வழக்காறு தொடர்பான தேடல், ஆய்வு இடம்பெறுகின்றன என்பதனையும் இவ்விடத்தில் நினைவுக் கூறல் அவசியமானதாகும்.

மலையக மக்களின் சுபிட்சம், நல்வாழ்வு, என்பனவற்றுக்காக செயற்படுகின்ற சக்திகளுக்கு மலையக நாட்டார் வழக்காற்றில் நீரோட்டம் மலையக மக்கள் வரலாறு சார்ந்த கூட்டுப் படைப்பாக அமைகின்றது. அவ்வகையில் மலையக நாட்டார் வழக்காறு பற்றிய தேடல் ஆய்வு என்பன இன்றியமையாததொன்றாகும்.

மலையக நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான தேடலில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய துறைகள் பின்வருவனவாகும்.

### 1. மலையக வாய்மொழி வழக்காறுகள்

நாட்டார் பாடல்கள் (நேரடி அனுபவம் கொண்டவை)
தலாட்டுப்பாடல்கள்
தெம்மாங்குப் பாடல்கள்
திருமணப் பாடல்கள்
நலங்குப் பாடல்கள்
கேலிப் பாடல்கள்
ஒப்பாரிப் பாடல்கள்
மாரடிப் பாடல்கள்
விளையாட்டுப் பாடல்கள்
மாரியம்மன் தாலாட்டு
குலவைப் பாடல்கள்
உடுக்கடிப் பாடல்கள்
கதைப் பாடல்கள்
பஜனைப் பாடல்கள்
நாட்டார் கதைகள்
விடுகதைகள்
நாட்டார் நம்பிக்கைகள்
குழந்தை வழக்காறுகள்

### 2. மலையக நாடர் நிகழ்கலைகள்

வில்லுப்பாட்டு
காமன் கூத்து
அருச்சுனன் தபசு
பொன்னர் சங்கர்
கரகக் கலை
சிற்றாட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மலையக நாட்டார் பண்பாடும், வாழ்வினைப் பொருட்களும்

உடைகள்
கைவினைக் கலைகள்
மட்பாண்டக் கலை
நாட்டார் உணவு

## 4. மலையக நாட்டார் கலைகள்

1. கட்டிடக் கலை
2. ஓவியக்கலை
3. சிற்பக்கலை

## 5. மலையக நாட்டார் வழிப்பாடுகள்

நம்பிக்கைகள்
நாட்டார் வழிபாடுகள் தெய்வங்கள்
சாமி பார்த்தல், குறி சொல்லுதல்
சடங்குகள்

## 6. மலைய நாட்டார் இசைக் கருவிகள்

மலையக நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான சேகரிப்பு ஆய்வு என்பன அவ்வப்போது இடம் பெற்று வந்துள்ளன. சி. வி. வேலுப்பிள்ளை சாரல் நாடன், சி. வே. ராமையா, ஏ. பி. வி. கோமஸ், அந்தனி ஜீவா, டி. எஸ். ராஜு", மாத்தளை வடிவேலன், சு. முரளிதரன், வ. செல்வராஜா, அழகுப்பிள்ளை நவஜோதி, சுப்பிரமணியம், பேராசிரியர்கள் சி. தில்லைநாதன், சு. அருணாசலம், கலாநிதி ந. வேல்முருகு, அம்பிகை வேல்முருகு, ஆர். ஜோதிமலர், சோபனா தேவி, லெனின் மதிவானம் முதலானோர் இத்துறைசார்ந்த நூல்களையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்தாகும். கூர்ந்து நோக்கினால் மலையக நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான தேடல் ஆய்வு என்பன இன்னும் தொடக்க நிலையிலேயிருப்பதனை காணலாம்.

மலையக நாட்டார் வழக்காற்றியல் துறையில், மலையக நாட்டார் பாடல்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம் கூட நாட்டார் நிகழ்வுகள், நாட்டார் பண்பாடு, ஊழ்வினைப் பொருட்கள், நாட்டார் வழிபாடுகள் கதைப்பாடல்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட்டனவா? என்பது சுவராசியமானதொரு வினாதான். மலையகக் கலைகள் குறித்து மாத்தளை வடிவேலின் மலையக பாரம்பரிய கலைகள், என்ற நூலில் அம்பிகை வேல்முருகுவின் அருச்சுனன் தபசு என்ற நூலும் சிலதகவல்களை வெளிக் கொணர்ந்த போதும் இத்துறை சார்ந்த பூரணத்துவமான தகவல்களை பெற முடியாதுள்ளது துரதிஷ்டவசமே.

நாட்டார் பாடல்கள் தொகுப்பு முயற்சியில் சி. வி. வேலுப்பிள்ளையின் தொகுப்பே நாட்டார் பாடல்கள் தொடர்பான நம்பகரமானதாகக் காணப்படுகின்றது. சி. விற்கு பின்னர் இத்துறையில் ஒரு தேக்க நிலையும் வெற்றிடமும் காணப்படுகின்றது என்பது விமர்சன நிலைப்பட்ட உண்மையாகும்.

மலையக நாட்டார் வழக்காற்றியல் தொடர்பாக வெளிவந்த பெரும்பாலான கட்டுரைகள், பெரும்பாலும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே வெளிவந்தவையாகும். சிற்சில மலையக நாட்டார் பாடல்களை எடுத்துக் கொண்டு அவற்றுக்கு மனம் போன போக்கில் கதையளந்து கதாப்பிரசங்கம் செய்கின்ற முயற்சியாகவே அமைந்துக் காணப்படுகின்றது. வரலாறு, அரசியல், பொருளியல், அழகியல், உளவியல், சமூகவியல் முதலிய துறைகளின் உதவியுடன் மலையக நாட்டார் வழக்காற்றியல் என்றுக் கூறத்தக்க ஆய்வுப் பரப்பை உருவாக்க வேண்டியது இன்றைய வரலாற்று தேவையாகும்.

மலைய நாட்டார் வழக்காற்று நீரோட்டமானது அரசியல், சமூக, பொருளாதார நோக்கில் ஆய்வு செய்யப்படல் வேண்டும். ஆய்வு, தேடல் மூலமாக கிடைக்கின்ற முடிவுகள் பொதுமைப்படுத்தப்படல் வேண்டும்.

பொதுசன தொடர்பு சாதனங்கள் இன்று மக்களிடையே அதிகம் செல்வாக்கு செலுத்துகின்றன. அவற்றில் திரைப்பட பாடல்களில், கருத்துக்கள் மக்களின் சிந்தனைகளையும், உணர்வுகளையும் கீழ்மைபடுத்துகின்றன என்பது உண்மைதான். இதில் இன்னொரு வேடிக்கையான அம்சம் என்னவெனில் மோசமான நச்சுக் கருத்துக்களை பரப்புவதற்காக திரைப்படத்துறை நாட்டார் நகைச்சுவை விளம்பரம், பாடல் ஆகியவற்றினை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. சாஸ்திரிய சங்கீதத்தால் பரந்துபட்ட வெகுசனங்களை வென்றெடுக்க முடியாது என்பதை உணர்ந்தவுடன் நாட்டார் வழக்காற்றியல் துறையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர். எனவே திரைப்பட துறையானது நாட்டார் வழக்காற்றியல் துறையை முடித்துவிடும் என்பது முழுமையான உண்மையல்ல. இத்துறையை சிதைவுகளுக்கு மத்தியில் நாட்டாரியல் துறை ஜீவசத்து பெற்று விளங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மனிதனது சமூக வாழ்க்கை மாறுதல்களுக்கு ஏற்ப அவனது சிந்தனைகளும் உணர்ச்சிகளும் மாறுபட்டு வருகின்றன. இவற்றின் விளைபொருளாக வெளிவருகின்ற கலை இலக்கிய சிந்தனைகளும் இவற்றினை பிரதிபலிப்பதுடன் வாழ்வை மாற்றியமைக்கவும் உதவுகின்றன. இந்நியதி மலையக நாட்டார் வழக்காற்றியல் துறைக்குப் பொருந்தக் கூடியதாக அமைந்துள்ளது.

"ஒரு காலத்தில் பரவலாக வழங்கி வந்த நாட்டுப் பாடல்களும் கதைகளும் கதைப்பாடல்களும் கூத்துக்களும் அவற்றின் உள்ளடக்கம் காலாவதியாகிவிட்ட காலத்தில் படிப்படியாக மறைந்து வரும். ஆனால் சமூக மாற்றங்களினால் மனித, உள்ளம் செத்து விடுவதில்லை. புதிய சிந்தனைகளும் புதிய உணர்ச்சிகளும் பழமையானவற்றை போக்கிவருகின்றன. இவற்றினை கருவியாகக் கொண்டு புதிய பாடல்களும் கதைகளும், கூத்துக்களும் உருவாகின்றன. பழைய பாடல்கள மறைவதும் புதிய பாடல்கள் தோன்றுவதும் புதிய எண்ணங்கள் சிந்தகைள் உணர்ச்சிகளின் விளைவே." (நா. வான மாமலை - 2001.16)

அவ்வகையில் மலையக நாட்டார் வழக்காறுகள் சில மறைந்து வருகின்றன என்பதற்காக மலையக நாட்டார் அனைத்தும் மறைந்து விட்டன எனவும், மலையக நாட்டார் வழக்காறுகள் இனித் தோன்றாது என கருதுவதும் அபத்தமானதாகும். மலையக நாட்டார் வழக்காறுகள் இன்றும் புதிய புதியவையாக தோன்றி வருகின்றன.

பயன்பட்ட நூல்கள்


லூர்து தே. - 2000 "நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்" - பாளையங்கோட்டை, இந்தியா

வான மாமலை ந. 2001 நாட்டுப்புற கலையியல், சென்னை

1981 Inter protation of Tamil Folk Creations, India.

Sokolov 1950 Russioan Folk are, New York

வடிவேலன் பெ. 1992 மலையக பாரம்பரிய கலைகள், மாத்தளை, இலங்கை
அம்பிகை வேல்முருகு (1998) அர்ச்சுனன் தபசு, சென்னை
வேலுப்பிள்ளை சி. வி. (1983) மலைநாட்டு மக்கள் பாடல்கள், மதுரை
(1970) Born to Labour, Colombo
சாரல் நாடன் (1993) மலையக வாய்மொழி இலக்கியம், சென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்கப்படும் வாழ்க்கைகளும், விலைகொடுத்து வாங்கப்படும் விவாகரத்துக்களும்

சிவன்ஜோதி யோகராஜ், சட்டத்தரணி

மலையகம் இந்திய வம்சாவளி தமிழர்களை பாரிய அளவில் பிரதானமாக கொண்ட ஒரு பிரதேசமாகையால் இந்திய கலை கலாசார பின்னணியை கொண்டமைந்துள்ளது. இதனடிப்படையில் கலைகலாசார மட்டுமன்றி வாழ்க்கை முறைகளிலும் எமக்கே உரித்தான சிறப்பான பண்பாட்டு அம்சங்களை கொண்ட ஓர் அமைப்பாகும்.

தொன்றுதொட்டு கணவன் மனைவி உறவுநிலையிலும் கூட்டுகுடும்பங்கள், தனிகுடும்பங்கள் ஆகிய பண்பாட்டு அம்சங்களிலும் போற்றி புகழக்கூடிய ஓர் சமுதாய அமைப்பை கொண்டதே மலையகம்.

இவ்வாறு சிறப்பம்சங்களை கொண்டமைந்த எமது பிரதேசம் ஏனைய அபிவிருத்தி அடைந்த பிரதேசங்கள் உடன் ஒப்பிடும்போது பல துறைகளிலும் பின்னடைந்திருப்பதற்கு எமது குடும்ப அமைப்புக்களும் ஓர் முக்கியமான அம்சம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இன்று வேகமாக அபிவிருத்தியடைந்து வரும் உலகிலே எமது குடும்ப அமைப்புக்கள் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்து வருகின்றது என்பது குறித்து சிந்திப்பது காலத்தின் கட்டாய தேவையாகும். இன்று வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்ற உலக அமைப்பிலே மலையகத்தின் குடும்ப அபிவிருத்தி என்பது மிகவும் உண்ணிப்பாக அவதானிக்கப்படவேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. அதாவது ஒவ்வொரு குடும்பகூறுகளின் அபிவிருத்தியே ஒரு சமுதாயத்தின் அபிவிருத்தியாகும் என்பதன் அடிப்படையில் நோக்கும்போது மலையகத்தை பொருத்தவரையில் இன்று வேகமாக பரவிவரும் குடும்பங்களை கூறுபோடும் 'விவாகரத்து' என்பது மிகவும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஓர் அம்சமாகும்.

கடந்த காலங்களைப் போல் அல்லாது தற்காலத்தில் விவாகரத்து என்பது மிக இலகுவிலும் மிகவும் விரைவாகவும் பெற்றக்கொள்ளக்கூடிய ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஓர் அம்சமாகும்.

கடந்த காலங்களில் குடும்ப பிரச்சினைகள் தோன்றியபோதிலே அவைகள் குடும்பங்களுக்கு உள்ளும், குடும்ப அங்கத்தவர்கள் மத்தியிலும் தீர்க்கப்பட்டதுடன் விவாகரத்து பெறுபவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைந்த அளவில் இருந்து வந்துள்ளதுடன் விவாகரத்து பெறுவது என்பது மிகவும் முக்கியமான, இன்றியமையாத காரணங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இன்றைய நிலை அதற்கு முற்றிலும் மாறுபட்டதாகவே உள்ளது. அது மட்டுமன்றி விவாகரத்து பெறுபவர்களின் எண்ணிக்கை பூதாகரமாக பெறுகிவருகின்றது என்பதும் கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். அத்துடன் விவாகரத்து பெறுவதற்கு கூறப்படும் காரணங்கள் எவ்வளவு தூரம் உண்மையான காரணங்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

இவ்வாறு விவாகரத்து மலையகத்தில் வேகமாக பெருகி வருவதற்கு முக்கிய காரணங்கள் யாவை என உன்னிப்பாக அவதானிக்கும்போது பல்வேறுபட்ட காரணங்கள் இருந்தபோதிலும் பின்வரும் காரணங்கள் முக்கியமானவை என எனது சிந்தனைக்கு எட்டியுள்ளது. அதனடிப்படையில்,

1. கல்வி அறிவு போதாமை.
2. லயன் வாழ்க்கை முறை.
3. கூட்டுக் குடும்பங்கள்
4. குடும்ப பிணக்குகளை தீர்ப்பதற்காக முன்வரும் தரப்பினர்கள் (உ-ம். தொழிற்சங்கங்கள், பொலிஸ் பகுதியினர், தோட்ட நிர்வாக உறுப்பினர்கள்)

மேற்படி காரணங்களில் மலையக சமுதாயம் கல்வியறிவில் பின்னடைந்திருப்பதன் காரணமாக கணவன், மனைவி ஆகிய இருவருக்கிடையில் கருத்து வேறுபாடு ஏற்படும்போதும் இருவருமே கல்வியறிவில் பின்தங்கி இருக்கும சந்தர்ப்பங்களில் தமக்கிடையில் ஏற்படும் பிரச்சிகைளை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின்றி, மூன்றாம் தரப்பினர்களின் ஆலோசனைகளை பெறுவதன் காரணமாகவும், குடும்ப அங்கத்தவர்களின் தவறான ஆலோசனைகளை பெறுவதன் மூலமாகவும், பிரச்சினைகளை தீர்க்க முற்படுகையிலும் கல்வியறிவு குறைவு காரணமாக விவாகரத்தின் விபரீதம் அறியாது விவாகரத்தை பெறமுற்படுகின்றார்கள்.

லயன் வாழ்க்கை முறை என்பதை ஓர் காரணமாக எடுத்துநோக்குகையில் அடுத்த அடுத்த வீட்டில் ஒன்றாக வாழ்கின்றபோது ஒரு குடும்பத்தின் நடவடிக்கைகளில் மற்றைய வீடுகளில் வாழ்கின்றவர்கள் தலையிடுகின்றதனால் கணவன் மனைவியாக வாழ்கின்றவர்களின் எண்ணங்களிலே மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமாக கூட இன்று விவாகரத்து ஏற்படுவது தடுக்கமுடியாததாக உள்ளது.

அடுத்ததாக மலையகத்தை பொருத்தவரையிலே பல குடும்பங்களில், ஒரு குடும்பத்தில் பல அங்கத்தவர்கள் ஒன்றாக சேர்ந்து "கூட்டு குடும்பமாக" வாழ்ந்து வருகின்றபடியால் உறுப்பினர்களின் செயற்பாடுகளினாலும் தலையீடுகளாலும் இன்று பல விவாகரத்துக்கள் உருவாகி வருகின்றது.

அதுமட்டுமின்றி குடும்ப பிணக்குகளை தீர்ப்பதற்காக முன்வரும் தொழிற்சங்கங்கள், பொலிஸ், தோட்ட நிர்வாக உறுப்பினர்கள், பல்வேறு வகையிலான மூன்றாம் தரப்பினர்களின் தவறான வழிநடத்தல்களும் இன்று மலையக பகுதிகளிலே விவாகரத்து அதிகரித்து வருவதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக உள்ளது.

இதற்கு மேலதிகமாக குடும்ப பொருளாதார சுமைகாரணமாக மலையக பகுதிகளில் இருந்து வெளிநாடுகளுக்கும், பிறமாவட்டங்களுக்கும் வேலைவாய்ப்பு தேடி செல்பவர்களிடையே ஏற்படும் மனமாற்றம், நாகரீக மோகம் என்பன விவாகரத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமைகின்றன.

இதற்கு மேலதிகமாக நோக்குகையில் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வெளிக்காட்டப்படுகின்ற திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என்பனவும் கணவன் மனைவி எண்ணங்களில் குழப்ப நிலையை தோற்றுவித்து பிணக்குகளை உருவாக்க முன்நிற்கின்றன. இவற்றின் தாக்கம் வெளிமாவட்டங்களுடன் ஒப்பிடும்போது மலையக பிரதேசங்களிலே பாரிய அளவில் காணப்படுகின்றது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

மலையகத்தில் நகர் புறங்களையும், தோட்ட புறங்களையும் கவனத்தில் கொள்ளும்போது நகர் புறங்களில் விவாகரத்து பெறுகின்றவர்களின் எண்ணிக்கை குறைவாகவும், தோட்ட புறங்களில் விவாகரத்து பெறுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும் மலையக நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு வரும் வழக்குகளில் இருந்து காணக்கூடியதாக உள்ளது. இதன் பின்னணியில் நகர் புறங்களில் கல்வி வளர்ச்சியின் அதிகரிப்பு, உலகமயமாக்கல், குடும்ப நலன்களில் காட்டப்படும் அக்கறை என்பன விவாகரத்தை குறைந்த அளவில் வைத்துள்ளது எனலாம்.

கடந்த காலங்களில் மலையக பெண்களிடையே காணப்பட்ட சமுதாய கட்டுப்பாடு காரணமாகவும் தமிழர்களின் கலை, கலாசார பின்னணி காரணமாகவும் நீதி மன்றங்களுக்கு வருவதை கூடிய அளவில் தவிர்த்து வந்தனர் எனினும் தற்காலத்தில் அதற்கு எதிர்மாறாக பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றங்களுக்கு வருகை தந்து விவாகரத்து வழக்குகளை தாக்கல் செய்வது அவதானிக்க கூடியதாக உள்ளது. இதன் பின்னணி யாது என அவதானிக்கும்போது மேலே குறிப்பிடப்பட்ட பல்வேறு காரணங்கள் குடும்பங்களை பிரிப்பதில் தாக்கம் செலுத்துவதை காணலாம். இதன் காரணமாக மலையக கலை, கலாசார, பண்பாடு, கட்டுப்பாடு என்பவை சீர்குழைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுவருகின்றது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இதற்கும் மேலதிகமாக இன்று நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு வருகிற வழக்குகளில் பத்து வீதமான வழக்குகள் மாத்திரமே விவாகரத்து வழக்கு தாக்கல் செய்வதற்கு உண்மையான காரணங்களை கொண்டுள்ளது ஏனைய வழக்குகளை நோக்குகையில் கணவன் மனைவி விட்டுகொடுப்பு இன்மையினாலும், மூன்றாம் நபர்களின் தலையீடு காரணமாகவும், குடும்ப உறுப்பினர்களின் கட்டாயத்தின் காரணமாகவும் தாக்கல் செய்யப்படுகின்றன.

இவ்வாறான உண்மையான காரணங்களே இன்றிய காரணத்திற்காக விவாகரத்துக்கள் உருவாக்கப்படுகின்ற போது இவை எவ்வாறு எமது சமுதாயத்தை நோக்கி தாக்கம் செலுத்துகின்றன. என கவனிக்கையில் கணவன் மனைவி என்பவர்களிடையே தகராறுகள் தோன்றி விவாகரத்துக்கள் மூலம் குடும்ப கூறுகள் பிரிக்கப்படுகின்றபோது, குடும்ப கூறுகளில் ஓர் அங்கத்தவரான பிள்ளைகள் பெரிதும் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்பது உண்மை.

பல சந்தர்ப்பங்களிலே திருமணம் முடித்து 10,15 வருடங்களின் பின்னர் விவாகரத்து கேட்டு வருகின்றவர்களில் பலர் மூன்று அல்லது நான்கு பிள்ளைகளின் பெற்றோர்களாகவே இருக்கின்றார்கள். இவர்கள் விவாகரத்து பெறுவது காரணமாக மேற்படி பிள்ளைகளின் எதிர்காலம் கேள்வி குறியாக்கப்பட்டு எதிர்கால கனவுகள் சீர்குழைக்கப்படுகின்றது. அது மட்டுமின்றி பல சந்தர்ப்பங்களிலே சிறுவர்கள் தமது வாழ்க்கையை ஆரம்பிக்க முன்னரே விவாகரத்துக்கள் மூலம் பெற்றோர் பிரிக்கப்படுவதனால் இவர்களுக்கு சரியான வழிகாட்டல் இன்மையால் மனதாலும் எண்ணத்தாலும் பாதிக்கப்படுவது மட்டும்மின்றி பிழையான வழிகளை நாடி செல்கின்றார்கள். இதன் காரணமாக சமுதாயத்தின் முக்கிய கூறுகலான எதர்கால சமுதாயமே சீர் குழைக்கப்பட்டு சிதைக்கப்படுகின்றார்கள். அதன் அடிப்படையில் வலிமைமிக்க சிறப்பான சமுதாயம் ஒன்றை உறுவாக்க முடியாதநிலைமை தோன்றி வருகின்றது.

இதன் காரணமாக வலிமையான சமுதாயம் ஒன்று தோன்றுவதற்கு பதிலாக வலிமையற்ற சமுதாயம் ஒன்று தோன்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


பெற்றோர்கள் விவாகரத்து பெறுகின்ற சந்தர்ப்பங்களிலே பிள்ளைகள் மனகுழப்பமடைவதோடு, கவனிப்பாரற்ற நிலையிலே பிழையாக வழிநடத்தப்படுவதோடு, மந்த போசாக்கு போன்ற பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றார்கள் இதுவும் மலையக கல்விநிலையை பின்தள்ளுகிறது.

இவ்வகையில் குடும்ப உறுப்பினர்களிடையே பல்வேறு வகையில் விவாகரத்துக்கள் தாக்கம் செலுத்துவதன் காரணமாக சமுதாய சீர்கேடுகள் பல்கிபெருகி கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வளர்ச்சி கண்டுவருகின்றது.

மலையகத்தின் அபிவிருத்தி குறித்து பலதுறைகளிலும் சிந்தித்துவரும் அனைவரும் இவ்வகையான "குடும்பத்தகராறுகள்" குறித்த விடயங்களிலும் தனது கவனத்தை திசைதிருப்பி தங்களால் இயன்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மலையகத்தில் பங்களிக்கும் பிரதேசங்களில் தோட்ட புறங்களில் காணப்படும் குடும்ப கூறுகளின் நலன்கள் குறித்தும் சிந்தித்து குடும்ப பிணக்குகளை தீர்த்துவைப்பதற்கான உண்மை நோக்கம் கொண்ட ஆக்கப்பூர்வமான குடும்ப ஆலோசனைகள் போன்ற வேலைத்திட்டங்களை (குயஅடைல ஊழரஉெடை) அரச சார்பான, அரச சார்பற்ற, நிறுவனங்களின் உதவியுடனும், கல்விமான்கள், சட்டத்தரணிகளின் உதவியுடனும் முன்னெடுக்க வேண்டும்.

இவ்வகையான ஆக்கப்பூர்வமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் மலையகம் சார்பான குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டு குடும்ப கூறுகள் பாதுகாக்கப்பட்டு விவாகரத்து நோக்கி செல்பவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு எதிர்கால இளம் சமுதாயம் சரியான வழிகளில் வழிநடத்தப்பட்டு மலையக அபிவிருத்தி துரிதகதியில் முன்னெடுக்க வாய்ப்புக்கள் உருவாகும்.

மேற்படி கட்டுரையானது விவாகரத்து குறித்த ஆய்வு அறிக்கை அன்றி மலையக சமூக பின்னடைவுக்கான காரணங்களில் ஒன்றான குடும்பங்களில் ஏற்படுகின்ற விவாகரத்துக்கள் குறித்த ஓர் கண்ணோட்டமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Z' புள்ளி முறைமை: அதன் முக்கியத்துவமும் அதனை கணிப்பிடலும்

குணராஜசிங்கம் ஜீவராஜன்
கல்வி முதுமாணி (இலண்டன்)

பல்கலைக்கழக அனுமதிக்கென 2001 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் புள்ளி முறைமை பற்றிய பலத்த சர்ச்சை தற்போது நிலவி வருகின்றது. மாவட்டம் ஒவ்வொன்றிலிருந்தும் குறித்த பாடநெறிக்குத் தேரப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் வேறுபாடுகளுக்கும் Z புள்ளி முறையே காரணம் என குற்றம் சாட்டப்படுகின்றமையை நாம் அறிவோம்.

பல்கலைக்கழக அனுமதிக்காக Z புள்ளி முறைமை பாவிக்கப்படுவதற்கு முன் கையாளப்பட்ட முறைகள் பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது. 1978 ஆம் ஆண்டு வரை மாணவன் ஒருவன் பெறும் சித்தித் தரங்களே இதற்கென கருத்திற் கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஒரு மாணவர் பெறும் மொத்த புள்ளியானது அவர் இடம்பெறும் மாவட்டத்தின் குறித்த நெறிக்கான வெட்டுப்புள்ளியிலும் அதிகமாக இருப்பதோடு அவர் அக்கற்கை நெறிக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள பாடங்களில் ஆகக்குறைந்த சித்தியையாவது பெற்றிருத்தல் வேண்டும். என 1978 இலிருந்து 2001 வரை வழங்கப்பட்டு வந்தது. இத்தெரிவு முறை பல குறைபாடுகளுக்கு ஏதுவாக அமைந்தது. அவற்றில் சில முக்கிய குறைபாடுகள் வருமாறு.

மொத்தப் புள்ளி முறை மூலம் பல்கலைக்கழக அனுமதி மேற்கொள்ளப்பட்டவிடத்து இலகுவாக அதிகூடிய புள்ளிகளைப் பெறக்கூடிய பாடங்களை தெரியும் போக்கு மாணவரிடத்தும் அவர்களை வழிகாட்டும் ஆசிரியடரிடத்தும், பெற்றோரிடத்தும் காணப்பட்டது. பயன்மிக்க, அதேவேளை ஒப்பீட்டளவில் கடினமான பாடங்களை தெரியும் வாய்ப்புள்ள கலைப்பிரிவில் இதனை பெரிதும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பொருளியல் போன்ற பாடங்களைத் தேர்ந்த மாணவர்கள் ஒப்பீட்டளவில் அப்பாடத்தின் கடினத்தன்மை காரணமாக போதிய மொத்தப்புள்ளியை பெற இயலாது போனதால் பல்கலைக்கழக அனுமதிக்கான சந்தர்ப்பத்தை இழந்ததோடு இலகுவான பாடங்களைத் தெரிவு செய்து கூடிய மொத்தப் புள்ளிகளை பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றனர்.

இதேபோல் கல்விப்பீடங்கள், தாதிமார் பயிற்சிநெறி, தேசிய தொழிநுட்பவியலுக்கான டிப்ளோமா போன்ற திறந்த கற்கை நெறிகளுக்கு மாணவர்களை மொத்தப் புள்ளியின் அடிப்படையில் தெரிவு செய்து நியாயமாக அமைவதில்லை. ஏனெனில் எல்லா ஆண்டுகளிலும் பரீட்சை வினாத்தாள்கள் சம கடினத்தன்மை உடையனவாக இருப்பதில்லை. இலகுவான வினாக்கள் இடம்பெற்ற பரீட்சை நிகழ்ந்த ஆண்டில் தோற்றிய மாணவர் ஒருவர் கூடிய மொத்தப் புள்ளியை பெற்றிருப்பார். எனவே மொத்தப் புள்ளியை மாத்திரம் கருத்தில்கொண்ட வெவ்வேறு ஆண்டுகளில் தோற்றிய மாணவர்களை அனுமதிக்கும்போது திறமையான மாணவர்கள் வாய்ப்பை இழக்க சந்தர்ப்பம் உள்ளது.

மொத்தப் புள்ளி முறைமையிலும் Z புள்ளி முறைமை விரும்பத்தக்கதாய் அமைவதற்குரிய பிரிதொரு காரணத்தை அவதானிப்போம். மொத்தப் புள்ளியானது நியமம் சார்ந்த சோதனையின் விளைவாகும். அதாவது மாணவர் ஒருவர் பெற்ற புள்ளியை ஏனையோர் பெற்ற புள்ளியுடன் ஒப்பிடாது அவரது பெறுபேற்றை மட்டுமே கருத்தில் கொள்ளும் ஒரு முறைமையாகும். நவீன கல்வி முறைமையில் இவ்வாறான சோதனைகளை அவற்றினது பெறுபேறுகள் குறித்து பல்வேறு நியாய பூர்வமான கண்டனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றமையை அறிவோம்.

மாறாக Z புள்ளி முறைமையானது நியதி சார் சோதனையின் பெறுபேற்றை வகை குறிக்கின்றது. புள்ளியிடலில் மாணவர் ஒருவர் பெற்ற புள்ளி ஏனையோர் பெற்ற புள்ளிகளுடன் ஒப்பிடப்படுகிறது. பரீட்சைக்கு தோற்றிய சகலரதும் சார்பாக மாணவனின் நிலை எவ்வாறு அமைகின்ற தென்பதை Z புள்ளி குறித்துக் காட்டுகின்றது. தற்போது வழக்கத்திலுள்ள சராசரி Z புள்ளியை தரும் முறைமையை விட பாடம் ஒவ்வொன்றிற்குமான Z புள்ளி வெளியிடப்படுமாயின் இதன் பயனை மேலும் நன்கு உணரலாம்.

சட்ட ரீதியிலான மாணவர்களின் அனுமதி எண்ணிக்கையை கூட்டுவதையோ அல்லது குறைப்பதையோ Z புள்ளி மேற்கொள்ளதில்லை என்பதை அவதானிக்க வேண்டும். மொத்த அனுமதியில் 40 நூற்று வீதம் தீவளாவிய திறமையடிப்படையில் ஒதுக்கப்பட்ட பின்பு எஞ்சும் 55 நூற்று வீதம். 05 நூற்றுவீதம் மாவட்டம் ஒவ்வொன்றிலுமுள்ள சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒதுக்கப்படுகின்றது. தீவளாவிய திறமையானது வருடா வருடம் வெவ்வேறு மாவட்டங்களுக்கு அவர்களின் ஆற்றுகைக்கு ஏற்ப மாறுகின்றது. குறித்தவொரு வருடத்தில் குறித்த மாவட்டத்திற்கான மாணவர்களின் அனுமதி எண்ணிக்கை பெரும்பாலும் மாறாததாக இருக்கும். தீவளாவிய திறமை அடிப்படயிலும், மாவட்ட ரீதியான கோட்டா முறையிலும் அனுமதிக்கப்படுவோரின் மொத்த எண்ணிக்கை மாறுபடுவது யதாத்தமானதாகும். Z புள்ளி முறைமையையோ அல்லது இதனை மேற்கொள்ள செய்யப்படும் கணிப்புகளையோ இவ்வேறுபாட்டுக்கான காரணங்களாக கொள்வது அர்த்தற்றதொன்றாகும்.

Z புள்ளியானது மாணவர்களின் செயலாற்றுகைக்கேற்ப அவர்களை வரிசைப்படுத்தும் முறைகளிளொன்றே என்பதை கவனிக்க வேண்டும். Z புள்ளியின் அனுகூலம் பற்றி அறிந்து கொள்ள இது எவ்வாறு கணிக்கப்படுகின்றதென்பதை தெரிந்திருத்தலும் பயனுள்ளதாகும். Z புள்ளியிடல் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றதென்பதை பின்வரும் பகுதி கோடிட்டு காட்டுகின்றது.

மூலப் புள்ளி
குறித்தவொரு பாடத்தில் மாணவர் ஒருவர் பெறும் புள்ளியையே மூலப்புள்ளி என்போம் X என்பவர் புவியலில் 76% த்தை பெற்றிருப்பின் அவரது மூலப்புள்ளி 76 ஆகும். அவர் பெற்ற இப்புள்ளி பரீட்சையில் ஏனையோர் பெற்ற புள்ளிகளில் தங்கியிருப்பதில்லை. A சித்திக்கான வெட்டுப்புள்ளி 75 என ஏலவே தீர்மானிக்கப்பட்டிருப்பின் அவரது சித்தி A யாகவே அமையும்.

நியமப்புள்ளி
மேலேயுள்ளவாறு X இனது மூலப்புள்ளியை அப்பரீட்சையில் ஏனையோர் பெற்ற புள்ளிகளுடன் ஒப்பிட்டு கூறுதல் நியமப்புள்ளியிடலில் மேற்கொள்ளப்படுகின்றது. X பெறும் நியமப்புள்ளியை தீர்மானித்தல் பின்வரும் மூன்று புள்ளிகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அவையாவன,

1. புவியியல் பாடத்தில் X பெற்ற மூலப்புள்ளி (76% என்க)
2. புவியியல் பாடத்தில் அப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அனைவரதும் புள்ளிகளின் சராசரி
3. மாணவர்கள் பெற்ற புள்ளிகளினது நியம விலகல் (10% என்க)

இதிலிருந்து X இனது நியமப்புள்ளி =

$$\frac{X \text{ ன் மூலப்புள்ளி} - \text{சராசரி}}{\text{நியம விலகல்}}$$

என்னும் தொடர்பினால் தரப்படுகின்றது. இதற்கேற்ப X யினது நியமப்புள்ளி = 76.52
10
= 2.4 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமப்புள்ளிக்கு அலகு இல்லை. இந்நியமப் புள்ளியையே Z புள்ளி (Z score) என்கின்றோம். Z புள்ளியை துணிவதற்கு சராசரி, நியமவிலகல் என்பவை அவசியமாகும்.

புள்ளித் தொகுதியொன்றிற்கான சராசரியும் நியம விலகலும்

உயிரியல் பாடத்தில் 5 மாணவர்கள் (வசதிகருதி மாணவர்களின் எண்ணிக்கையை 5 எனக் கொள்ளப்பட்டுள்ளது) பெற்ற புள்ளிகள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| மாணவர் | உயிரியல் பெற்ற புள்ளி |
|---|---|
| A | 40 |
| B | 50 |
| C | 36 |
| D | 70 |
| E | 61 |

புள்ளிகளினது சராசரியை $\mu$ என்க.

எனில் $$\mu = \frac{\text{புள்ளிகள் அனைத்தினதும் கூட்டுத்தொகை}}{\text{மாணவர்களின் எண்ணிக்கை}}$$

$$\mu = \frac{40+50+36+70+64}{05} = 52 \text{ புள்ளிகள்}$$

இப்புள்ளித் தொகுதியின் மாறற்திறன் V எனக் கொள்வோம். எனில் V ஆனது பின்வருமாறு வரையறுக்கப்படும்.

புள்ளிகளினது வர்க்கங்களின் சராசரி – புள்ளிகளின் சராசரியின் வர்க்கம்

$$V= \frac{(40^2 = 50^2 = 36^2 + 70^2 + 61^2)}{5} - \left[\frac{40 + 50 + 36 + 70 + 61}{5}\right]^2$$

$$V = \frac{(1600 + 2500\ 5+ 1296 + 4900 + 3721)}{5} \left[\frac{40 = 50 = 36 = 70 =- 61}{5}\right]^2$$

$$v = \frac{14017}{5} - (52)^2 = 99.4$$

இவ் V இனது வர்க்க மூலப் பெறுமானமே நியம விலகல் (S) எனப்படும்.

S=V
S= V99.4 S= 9.97 புள்ளிகள்

$$\text{B இனது Z புள்ளி} = \frac{\text{B இனது மூலப்புள்ளி – சராசரி}}{\text{நியமன விலகல்}}$$

$$= \frac{50-52}{9.97}$$

$$= -0.2006$$

B யின் Z புள்ளி எதிர் புள்ளியை கொள்கின்றது.

இங்கு B சராசரியிலும் குறைந்த புள்ளியை பெற்றுள்ள தாலேயே இது நிகழ்ந்துள்ளது.

இவ்வாறே

$$\text{D இனது Z புள்ளி} = \frac{\text{D இனது மூலப்புள்ளி – சராசரி}}{\text{நியமன விலகல்}}$$

$$= \frac{70-52}{9.97}$$

$$= 1.8054$$

D யின் Z புள்ளி நேர்க்குறியை கொள்கின்றது. சராசரியிலும் கூடிய மூலப்புள்ளியை பெற்ற ஒருவரின் Z புள்ளி நேராகவும், குறைவான மூலப்புள்ளியை பெற்ற ஒருவரின் Z புள்ளி மறையாகவும் அமையும் யாதாயினும் ஒருவரின் Z புள்ளியானது – 4 இற்கும் + 4 இற்கும் இடையே எப்போதும் அமையும். ஒருவரியின் Z புள்ளி பூச்சியமாயின், அவர் பெற்ற மூலப்புள்ளியானது அப்புள்ளித்தொகுதியின் சராசரிக்கு சமமாய் அமையும் என்பது தெளிவாகும்.

சராசரி Z புள்ளி

மாணவர் ஒருவர் மூன்று பாடங்களுக்கு தோற்றி அவர் பெற்ற Z புள்ளிகள் பின்வருமாறு அமைகின்றது என்க.

| பாடம் | Z புள்ளி |
|---|---|
| புவியியல் | 2.0253 |
| பொருளியல் | -1.2157 |
| இந்து நாகரீகம் | 0.2168 |

$$= \frac{2.0253 + (-1.2157) + 0.2168}{3} = 0.3421$$

எனில் அவரது சராசரி Z புள்ளி

மூலப்புள்ளி, Z புள்ளி ஒப்பீடு

A, B எனும் இரு மாணவர்கள் மூன்று பாடங்களில் பெற்ற மூலப்புள்ளிகள் பற்றி விபரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| மூலப்புள்ளி | | |
|---|---|---|
| பாடம் | மாணவர் A பெற்ற புள்ளி | மாணவர் B பெற்ற புள்ளி |
| இரசாயனவியல் | 75 | 61 |
| பௌதீகவியல் | 53 | 51 |
| உயிரியல் | 48 | 64 |
| மொத்தம் | 176 | 176 |

இருவரும் பெற்ற மொத்த புள்ளிகளின் அடிப்படையில் இருவரினதும் நிலை சமமாகும். இப்பரீட்சைக்குரிய சராசரி, நியமவிலகல் என்பன பின்வருமாறு அமைந்திருந்தது எனக் கொள்க.

| பாடம் | சராசரி | நியமவிலகல் |
|---|---|---|
| இரசாயனவியல் | 60 | 12 |
| பௌதீகவியல் | 48 | 10 |
| உயிரியல் | 50 | 15 |

இதற்கேற்ப அவர்கள் ஒவ்வொருவரும் பெற்ற Z புள்ளிகள் பின்வருமாறு அமையும்.

| பாடம் | மாணவர் A | மாணவர் B |
|---|---|---|
| இரசாயனவியல் | $\frac{75-60}{12} = 1.2500$ | $\frac{63-60}{12}=0.2500$ |
| பௌதீகவியல் | $\frac{53-48}{10}=0.5000$ | $\frac{51-48}{10}=0.3000$ |
| உயிரியல் | $\frac{48-50}{15}=0.1333$ | $\frac{62-50}{15}=0.8000$ |
| சராசரி Z புள்ளி | +0.5389 | +0.4500 |

Z புள்ளிகளின் அடிப்படையில் A யின் நிலை B யின் நிலையிலும் மேலாக உள்ளதை அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Z புள்ளியினது விசேடத்துவம்

குறித்தவொரு மூலப்புள்ளியை Z புள்ளியாக மாற்றுவதற்கு பின்வரும் தொடர்பை பயன்படுத்துகின்றோம்.

$$Z \text{ புள்ளி} = \frac{\text{மூலப்புள்ளி} - \text{சராசரி}}{\text{நியம விலகல்}}$$

இதிலிருந்த சராசரி அதிகமாக உள்ள பாடமொன்றில் Z புள்ளி குறைவுறும் என்பது தெளிவு. புறவயமாக புள்ளியிடப்படும் பாடமொன்றின் சராசரி உயர்வாய் அமைவது இயல்பானதாகும். ஆக்கப்பாடமொன்றில் மாணவன் ஒருவன் 96 புள்ளிகளை பெற்றுள்ளான் என்க. அப்பாடத்துக்குரிய சராசரி 85 உம் நியமவிலகல் 10 உம் என்க. எனில் ஆக்கப்பாடத்தில் அவனது Z புள்ளி.


$$\frac{96-85}{10} = 1.1000 \text{ ஆகும்.}$$

இதே மாணவன் ஆங்கிலப் பாடத்தில் 63 புள்ளிகளையே பெற்றுள்ளான் என்க. ஆங்கிலப் பரீட்சையின் கடினத்தன்மை காரணமாக இது நிகழ்ந்திருக்கலாம். ஆங்கிலப்பாடத்திற்குரிய வகுப்புச் சராசரி 45 உம் நியமவிலகல் 12 என்க. எனில் அவனது Z புள்ளி.

$$\frac{63-45}{12} = 1,5000 \text{ ஆகும்.}$$

இவற்றிலிருந்து அவன் அவ்விரு பாடங்களிலும் எப்பாடத்தில் ஏனையோரைக் காட்டிலும் சிறப்பாக செய்துள்ளான் என்பதை ஒப்பிடக்கூடியதாக உள்ளது.

பரீட்சையானது இலகுவாக அமையும் ஒரு சந்தர்ப்பத்தில் சராசரிப் புள்ளி உயர்வானதாக அமையும். இதனால் Z புள்ளி குறைவடையும். மாறாக பரீட்சை கடினமாக அமையின் சராசரிப் புள்ளி குறைவுறும். இப்பரீட்சையில் மாணவன் ஒருவன் சிறப்பாக விடையளிப்பின் அவனது Z புள்ளி அதிகரிக்கும். எந்தவொரு பரீட்சையினது பேறுகளையும் Z புள்ளி அளவுத் திட்டத்திற்கு மாற்றலாம். இவ்வாறு பெறப்படும் Z புள்ளிகள் அனைத்தும் -04, +4 என்பவற்றுக்குள் அமையும். இதன் வாயிலாக பரீட்சைகள் அனைத்தையும் பொதுவான திட்டமொன்றிற்கு மாற்றி அவற்றை இலகுவாக ஒப்பிட ஏதுவாகின்றது. எனவே Z புள்ளிகூடாக மாணவர்களைத் தெரிவு செய்யும் போது குறித்த மாவட்டத்தில் ஒப்பீட்டு ரீதியாக ஏனைய மாணவர்களிலும் சிறந்து விளங்கும் மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான வழிசமைக்கப்பட்டுள்ளது தெளிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக இலக்கியம்

சில வரலாற்றுக் குறிப்புகள்

அந்தனி ஜீவா ஆசிரியர் "கொழுந்து"

ஈழத்து இலக்கியத்திற்கு மலையக இலக்கியம் புதிய இரத்தம் பாய்ச்சியது என விமர்சகர்களால் வியந்து பாராட்டப்பட்டுள்ளது.

மலையக இலக்கியம் தனித்துவமுள்ளதாகத் திகழ்வதற்குரிய காரணம் என்ன? அதற்குரிய வரலாற்றுப் பின்னணியையும், அன்றைய நிலையையும் சிறிது பார்ப்போம்.

பெருந்தோட்டப் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து ஒரு புதிய சமூகம் இலங்கைக்கு வந்தது. இந்தப் புதிய சமூகம் 'இந்திய தமிழ்ச் சமூகம்' என்றழைக்கப்பட்டது.

இந்திய சமூகம் இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்பே இங்கு வேறொரு தமிழ்ச்சமூகம் நிலைகொண்டிருந்தது. அச்சமூகத்திற்கு நீண்டதோர் வரலாற்றுப் பின்னணி இருந்தது. ஆனால் நாம் இங்கு பேசுகின்ற இந்திய சமூகத்தினர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்தவர்கள். இலங்கையின் மலைப்பிரதேசங்களில் இவர்கள் குடியேறினர். இவர்கள் முந்திய சமூகத்தினருடன் எவ்விதத் தொடர்பும் இன்றியே இருந்து வந்துள்ளனர். முந்திய சமூகத்தவர்கள் 'இலங்கைத் தமிழர்' எனவும், பிந்தியவர்கள் 'இந்தியத் தமிழர்' எனவும் அழைக்கப்பட்டனர்.

இவ்விரு சமூகத்தினரும் ஒரு மொழியைப் பேசிய போதிலும், அவர்களிடையே கலாசார ரீதியாகவோ அல்லது வேறு எந்த வகையிலோ எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. இந்தியத் தமிழர்களைத் தங்களுடன் அரவணைத்துக் கொள்வது பற்றி இலங்கைத் தமிழர்கள் நினைத்தும் பார்க்கவில்லை. இலங்கைத் தமிழர்களின் தலைவர்களில் ஒருவராகவும், தேசியத் தலைவராகவும் கருதப்பட்ட சேர் பொன். இராமநாதன் போன்றவர்கள் கூட இவர்களைக் குடியேற்றக் கூலிகள் எனக் கேவலமாக அழைத்து ஒதுக்கிவிட்டனர்.

இவற்றின் பயனாக இந்தியச் சமூகம் ஒரு தனித் தமிழ்ச் சமூகமாக மலைநாட்டில் நிலைகொள்ள வேண்டியதாயிற்று. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கும் வரைக்கும் இவர்கள் தென்னிந்தியாவுடன் தொடர்புகளை வைத்திருந்தனர்.

1948ஆம் ஆண்டுக்குப் பின்னும் இது நீடித்தது. காலப்போக்கில் இச்சமூகத்தினர் தேசிய சிறுபான்மை இனமாக மறுமலர்ச்சி பெற்றனர்.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளியினரிடையே தனியானதொரு கலாசார மரபு உருவாகி வளர ஆரம்பித்தது. எனவே, இச்சமூகத்தினருக்கென சிறப்பானதொரு கலாசாரம் உருப்பெற்றது. இதன் சில கூறுகள் ஏனைய தமிழர்களிடமும் காணப்பட்டன. இம்மக்கள் பொருளாதாரத்தில் முழுமையாக ஈடுபட ஆரம்பித்ததிலிருந்து இவர்களின் யதார்த்த வாழ்வியலுடன் ஒன்றியதோர் கலாசாரம் வளரலாயிற்று. இதிலிருந்து ஒரு சமூகத்தின் யதார்த்த வாழ்க்கையை ஒட்டியே அதன் கலாசாரமும் அமையும் என்பது தெளிவு.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினருக்குத் தனியானதொரு வரலாறு உண்டு. இச்சமூகத்தினர் பிரித்தானியர்களால் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காகவே கொண்டு வரப்பட்டவர்கள். அன்றிலிருந்து இவர்கள் பிரித்தானிய பெருந்தோட்டச் சொந்தக்காரர்களின் நேரடிக் கண்காணிப்பிலேயே இருந்தனர். சிங்களக் கிராமத்தவர்களிடமிருந்தும் இவர்கள் மலைப்பிரதேசங்களில் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களின் வாழ்க்கை மலைகளுக்குள்ளேயே எல்லைப்படுத்தப்பட்டது.

இம்மக்கள் பெருந்தோட்டங்களில் வேலைக்கமர்த் தப்படுவதற்காகவே விசேடமாக இங்கு கொண்டுவரப்பட்டனர். இவர்கள் ஆரம்பத்தில் கோப்பி பயிரிடக்கூடியதும், பின்னர் தேயிலை பயிரிடக்கூடியதுமான மலைப் பிரதேசங்களான மத்திய, ஊவா, சப்ரகமுவா மாகாணங்களிலே குடியேறினர். நூற்று எழுபது ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதிகளில் இவர்கள் தனியொரு சமூகமாக நிலைகொண்டுள்ளனர். காலப்போக்கில் சிலர் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு, சிறப்பாக நகர் புறங்களுக்குச் சென்றுவிட்டாலும் பெரும்பான்மையோர் முழுமையாக மலைநாட்டிலேயே வாழ்ந்தனர். இதனாலேயே இவர்கள் 'மலைநாட்டுத் தமிழர்' என அழைக்கப்பட்டனர். அதனாலேதான் இவர்களது படைப்புக்கள் 'மலையக இலக்கியமாக' மலர்ந்தது.

மலையக இலக்கியம் பற்றிப் பரந்த அடிப்படையில் நோக்கினால், எப்போது இம்மக்கள் குடியேறினார்களோ அன்றுதொட்டே இவர்களது தமிழ்க் கலை, கலாசாரம், இலக்கியம் ஆகியன இங்கு வளரத் தொடங்கியது தெரியவரும்.

1930ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் பத்திரிகைகள் சஞ்சிகைகள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஓரிரண்டே வெளிவந்தன. அவை மலைநாட்டை எட்டிப்பார்ப்பது மிகக் குறைவு. ஆனால் தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த சஞ்சிகைகளான லோகோ பகாரி, அமிர்த குணபோதனி, ஆனந்தபோதனி, மகாவிகடதூதன், நவசக்தி, மொடர்ன் ரிவ்யூ ஆகிய சஞ்சிகைகள் பணம் படைத்தவர்கள் வீடுகளுக்கு வருவதுண்டு. இந்தியாவில் சுதேச இயக்கத்தைப் பற்றியும் சுதந்திரத்தைப் பற்றியும் தாகூர், கவிக்குயில் சரோஜினி தேவி, மகாகவி பாரதி, நாமக்கல் கவிஞர் முதலியோர் மக்களின் இதயத்தைத் தொடும் வகையில் பாடல்களை இயற்றினார்கள். அவற்றோடு, மதுரை பாஸ்கரதாஸ் சுந்தரவாத்தியார், கெங்காதரன் சுவாமிகள், உடுமலை முத்துசாமி கவிராயர் ஆகியோரின் பாடல்களும் மலைநாட்டை எட்டிப் பார்த்தன.

தோட்டங்களில் நாட்டுப்பாடல்களுடன், ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி, ராஜாதேசிங்கு, நளமகாராஜன், விக்கிரமாதித்தன் கதை, மாரியம்மன் தாலாட்டு போன்றவற்றைப் பாடியும், படித்தும் வந்தார்கள். மலைநாட்டு மக்களிடையே ஓர் எழுச்சிக்கு வித்திட்ட பெருமை கோ. நடேசையரையே சாரும். தென்னிந்தியப் பிராமணரான நடேசையர் தஞ்சாவூரில் அரசாங்க உத்தியோகம் பார்த்துவிட்டு, பின்னர் பத்திரிகை ஒன்றில் பணியாற்றி - அப்பத்திரிகைக்காக 1915ஆம் ஆண்டு சந்தா திரட்ட இலங்கை வந்தார்.

1920 ஆம் ஆண்டு மீண்டும் இலங்கை வந்து "தேச நேசன்" என்ற தமிழ்த் தினசரியில் ஆசிரியரானார். 1925ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்களின் நடவடிக்கைகளில் அக்கறை காட்டினார். அவர் தோட்டம் தோட்டமாகச் சென்று, பாரதியின் தேசிய உணர்வைத் தூண்டும் பாடல்களைத் தன் மனைவி மீனாட்சி அம்மையாரைக் கொண்டு பாடினார். துண்டுப் பிரசுரங்களைத் தோட்ட மக்களிடையே பரப்பினார்.

பீஜித்தீவு கரும்புத் தோட்டத்திலே நம் தமிழ் நாட்டுப்பெண்கள் அல்லலுறும் அவல நிலையை மகாகவி பாரதி உள்ளம் நொந்து பாடினார். அதைப்போல இலங்கை மலைநாட்டில் தமிழர் அல்லல் படுவதையும் அவர்களின் அடிமைவாழ்வு பற்றியும் சுதந்திர வாத்தியார் பாடிய பாடல் தமிழ்நாட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய இயக்க மேடைகளில் ஒலித்தன. இதே பாடல் திருமதி கோ. நடேசையரால் மலையக மக்களிடையே பாடப்பட்டது.

இதுதான் அப்பாடல்:

*தேயிலைத் தோட்டத்திலே - பாரத*
*சேய்கள் சென்று மாய்கின்றார் - ஐயோ (தேயிலை)*

*ஓயாது நாள்முழுதும் - சதா*
*ஊழியம் செய்து உடம்பலுத்தே - கெட்ட*
*நோயால் வருந்தும் மக்கள்*
*நொந்து நொந்து தினம் நைந்து மாய்கின்றார்.*
*- (தேயிலை)*

*கட்டத் துணியுமின்றி - கொடுங்*
*கானலிலே புள்ளிமானைப் போல அலைந்து*
*நட்டுவாக்காலி பூரான் பாம்பு*
*அட்டை கடித்து அலறிப் புலம்புகிறார் - (தேயிலை)*

*காசாசைப் பேய் பிடித்து பட்டிக் கங்காணியார்*
*- சிறு மங்கையரைக்*
*கெட்ட தேசத்திற்கு இழுத்துச் செய்யும்*
*- நிர்ப்பந்தம் தான்*
*மனம் ஒப்ப தகுந்ததோ*
*செந்தமிழ் சுந்தரனார் இந்த*
*- சேதி உரைப்பதை*
*ஆதரிப்பீர் பெரும் இந்துச் சகோதரர்களே!*

இந்தப் பாடல் இந்தியத் தேசிய மேடைகளில் மாத்திரமன்றி, மலைநாட்டின் தேயிலைக் காடுகளிலும் ஒலித்தது. இதனால் மலையக மக்களிடையே ஓர் ஆர்வமும் அக்கறையும் ஏற்பட்டது என்று கூறலாம்.

1939ஆம் ஆண்டுக்கு முன் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே தங்கு தடையின்றி பிரயாணம் செய்வதற்கான வசதிகள் இருந்தன. அப்போது மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளிலிருந்து ஏராளமான புலவர்கள், கவிஞர்கள், அறிவாளிகள் கதிர்காமம், சிவனொளிபாத மலை யாத்திரை என மேற்கொண்டு இங்கு வந்தனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட துறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள். பாரதம், இராமாயணம் பாடும் புலவர், திருப்புகழ்க் கவிராயர், காவடிச்சிந்துப் பாடகர், தியாகராஜா கீர்த்தனங்கள் இசைக்கும் சங்கீத வித்துவான்கள் ஆகியோர் தமது யாத்திரைக் காலங்களில் பெரிய வீடுகளுக்குச் சென்று பாடி சன்மானம் பெற்றுப் போவது உண்டு. இவர்கள் வருகை இலக்கிய உணர்ச்சியை வளர்த்தது. அந்தக் காலத்தில் சினிமா இல்லை. மலைநாட்டு சில முக்கிய பட்டினங்களில் நாடகங்கள் நடைபெற்றன. லங்கா தகனம், ராமாயணம், குலேபகாவலி, அரிச்சந்திரன் மயான காண்டம், கண்டி ராசன் கதை, சத்தியவான் சாவித்திரி ஆகிய நாடகங்கள் பிரசித்தி பெற்றன.

இவைகளின் பிரதிபலிப்பாக, தோட்டங்களில் அரிச்சந்திரன் தபசு, அரிச்சந்திரன் விலாசம், நந்தன் சரித்திரம், ஓட்ட நாடகம், மதுரை வீரன், பொன்னர் - சங்கர் ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்தன. இவை தவிர ஏனைய கிராமிய ஆடல் பாடல் மலிந்திருந்த காலம். இவற்றிலிருந்து மலைநாட்டில் 1930ஆம் ஆண்டுக்கு முன்னரும் உயர்ந்த ரக கலாசாரமும், இலக்கியமும் வேரூன்றி வளர்வதற்கான வித்துக்கள் இடப்பட்டனவென்பது தெளிவாகும். இவ்வறே மலையக இலக்கிய முன்னோடியான அமரர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

1929ஆம் ஆண்டிலிருந்து பதுளையில் சீர்திருத்த இயக்கத்தை நடாத்திய வ. ஞானபண்டிதன் தனது எண்ணங்களுக்கு இலக்கிய வடிவங்கொடுத்து, அவற்றைத் துண்டுப் பிரசுரங்களாக மலையகம் எங்கும் பரப்பினார். கவி அ. சிதம்பரநாதபாவலர் பத்திரிகையில் தொடர்ந்து எழுதினார். கோப்பிக் காலத்தில் தெல்தோட்டை அப்துல் காதர் புலவர் தோன்றினார். இவர் தனிப்பெரும் கவிராயர். பேராதெனிய, ராகலை, நுவரெலிய ஆகிய இடங்களைப் பற்றியும், அரசியல் சம்பவங்கள் பற்றியும் நாவலப்பிட்டி எஸ். ஆர். எஸ். பெரியாம்பிள்ளை, தொண்டர் எஸ். எஸ். நாதன் கந்தசாமி கணக்குப்பிள்ளை, பி. ஆர். பெரியசாமி. கோவிந்தசாமி தேவர், கா. சி. ரங்கநாதன், சீனிவாசகம் ஆகியோரது பாடல்களெல்லாம் மூலைமுடுக்குகளெங்கும் எதிரொலித்தன. தாகூர், சரோஜினி போன்ற இந்தியக் கவிகளின் படைப்புகளாலும், ஆங்கிலக் கவிதைகளாலும் உந்தப்பட்டு இலக்கியம் படைத்தவர்களில் கே. கணேஸ், சி. வி. வேலுப்பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கே. கணேஸ் தமிழில் மொழிபெயர்த்த முல்க் ராஜ் ஆனந்தின் ஆங்கில நாவலும், சி. வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய 'பத்மாஜினி' என்ற நாடகமும் மலைநாட்டிலிருந்து வெளிவந்தன. 1934 ஆம் ஆண்டு கவி சிதம்பரநாத பாவலர் 'பௌத்தாயென' என்ற பெயரில் புத்தபெருமான் சரித்திரத்தை கவிதைகளாகப் படைத்தார். 1940ஆம் ஆண்டுக்குப் பின் மலைநாட்டில் கல்வி எல்லோருக்கும் உரிய சொத்தாக மாறியது.

தமிழகத்தில் 'மணிக்கொடி' சகாப்தம் உருவாயிற்று. இதன் தாக்கம் மலைநாட்டை எட்டியது மாத்திரமின்றி ஈழத்து இலக்கிய உலகில் ஒரு மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது.

இதற்குப் பின் மலைநாட்டில் சிறுகதை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சி. வி. வேலுப்பிள்ளையின் 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற நடைச்சித்திரங்கள் வெளிவர ஆரம்பித்தன. தேயிலைத்தோட்டம், தோட்டக்காடு என்று அழைக்கப்பட்டு வந்த பெருந்தோட்டத்துறை சார்ந்த பிரதேசம் 'மலைநாடு' என்று சிறப்போடு குறிப்பிடப்பட்டது சி. வி. வேலுப்பிள்ளையின் படைப்புகளினாலேதான்.

1950 களுக்குப்பின் மலைநாட்டு இலக்கியத்துறையில் ஒரு புதிய வேகம் பிறக்கத் தொடங்கியது. தேயிலைத் தோட்ட வாழ்க்கையை நிலைக்களனாக வைத்து, சி. வி. வேலுப்பிள்ளை, பொ. கிருஷ்ணசுவாமி, செந்தூரன், ரஹ்பேல், என். எஸ். எம். ராமையா, தியாகராஜா, தமிழோவியன், ஆகியோர் பல படைப்புகளைப் படைத்தார்கள்.

புழுதிப் படுக்கையில் புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற் புகழ்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள் பகருவாரில்லை

எனத் தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதை நூலில் சி. வி. குறிப்பிட்டுள்ளார். இந்தக் கவிதை வரிகளைப் படிக்கும்போது எனக்குத் தொழிலாளர் வர்க்கத்திற்காகக் குரல் கொடுத்த சிலி நாட்டுக் கவிஞன் பாப்லோ நெருடா தான் நினைவுக்கு வருகிறான். சி. வி. யும் நெருடாவும் தொழிலாளர் வர்க்கத்துக்காகக் குரல் கொடுத்த கவிஞர்கள் என்ற வகையில் இருவருக்கும் ஒற்றுமை உண்டு.

"பாலைவனத்தின் மலைப்பிராந்தியத்தில் கனிச் சுரங்கக் களியிலிருந்து எனது தேச மக்கள் படும் துன்பங்களை ஏற்று சுரங்கச் செல்வங்களைச் சேகரித்து வருகிறார்கள். எங்களுடைய தேசத்தின் மக்களைப்போல் உலகில் எந்தப் பகுதி மக்களும், கொடுமைக்குள்ளாக்கப்பட்டதாகக் கேள்வி இல்லை." இவ்வாறு சிலி நாட்டு மக்களுக்காகப் புரட்சிக்கீதம் இசைத்தான் நெருடா. அதேபோல தோட்டத் தொழிலாளர்கள் படும் கொடும் துன்பங்களைக் கண்டு மனங்குமிறிப் பாடினார் சி. வி.

திரு. சி. வி. வேலுப்பிள்ளை பேனாவை ஆயுதமாக்கி மலைநாட்டு மக்களின் துன்பங்களை, சோகப் பெருமூச்சுக்களை, கண்ணீர்க் காவியங்களாக ஆங்கிலத்தில் எழுதி சர்வதேச அரங்கிற்குக் கொண்டு சென்றார்.


1960களுக்குப் பின்னர் மலைநாட்டு இலக்கியத்தில் புதிய பார்வையும் புதிய வீச்சும் உதயமாகியது. புதியவர்கள் பலர் எழுத்துலகில் கால் பதித்தார்கள். தெளிவத்தை ஜோசப்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரல் நாடன், எம். வாமதேவன் தென்னவன், குமரன், சிக்கன்ராஜ், மல்லிகை சி. குமார், மு. சிவலிங்கம், ஏ. பி. வி. கோமஸ் காந்தி மலைத்தம்பி, சொலமன் ராஜ், ராமசுப்பிரமணியன், ஏ. எஸ். வடிவேல், சுவாமிநாதன் ஆகியோருடன் பெண்படைப்பாளிகளான கோகிலம் சுப்பையா, சரஸ்வதி, நயீமா ஏ. சித்தீக், மகேஸ்வரி பாலகிருஷ்ணன், பூரணி ஆகியோரும் எழுதத்தொடங்கினர். இவர்களுக்குத் தூண்டுதலாக மலையக இயக்கங்களும் புதிய சஞ்சிகைகளும் ஈழத்துத் தேசியத் தினசரிகளில் வந்த 'மலையகப் பகுதி' பக்கங்களும் உற்சாகமூட்டி உரமிட்டு வளர்த்தன.

"பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புகளில், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை களமாக உள்ள மலைநாட்டை மையமாகக் கொண்டு எழுதப்பட்டிருப்பனவற்றிற்குத் தனியிடமுண்டு. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் என்பவற்றில் சிறுகதையே மலைப்பிரதேசம் பற்றிய படைப்புகளில் முதலிடம் பெற்றுள்ளது." என்று பிரபல விமர்சகரும், பேராசிரியருமான கலாநிதி கைலாசபதி 'தோட்டக்காட்டினிலே' என்ற சிறுகதைத் தொகுதியின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்து இலக்கியத்தில் தனித்துவமுள்ளதாகவும் தரமுள்ளதாகவும் 'மலையக இலக்கியம்' வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த வரலாற்றுச் சிறப்புக்கு இரத்தமும் சதையுமாக உரமிட்டவர்களை, மலைநாட்டு இலக்கியம் பற்றி எதிர்காலத்தில் ஆய்வு செய்ய வருகின்ற ஆய்வாளர்கள் மறந்து விடலாகாது என்பதே என் அவாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வம்சாவளி மக்களின் சனத்தொகை வளர்ச்சியும் கல்வி நிலையும்

ஆர். பார்த்தீபன் (B. A. Dip in Edu.)
ஆசிரிய ஆலோசகர்,
வலயக் கல்வி பணிமனை, வத்துகாமம்.

மலையக தமிழ் மக்கள் என்று அழைக்கப்படும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் 855591 பேர் வரை உள்ளனர் என்று 2001 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டறிக்கையின் மூலம் காணமுடிகின்றது. இது இந்நாட்ன் மொத்த சனத்தொகையில் 5.1 சதவீதமாகும். எனினும் இம்மக்களின் சனத்தொகை விகிதம் இதனை விட உயர்வானது என்பதனை பேராதனை பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரையாளர் திரு. S. விஜயசந்திரன் அவர்கள் மேற்கொண்ட தனிப்பட்ட ஓர் ஆய்வின்மூலம் தெளிவாக உணரமுடிகின்றது. இவ் ஆய்வின்படி இலங்கையில் வாழும் இந்தியவம்சாவளித் தமிழ் மக்களின் தொகை ஏறக்குறைய 15 இலட்சமாக இருக்க வேண்டும் என சுட்டுகின்றது.

மலையகத் தமிழர் என்ற சொற்பிரயோகம் குறித்து ஆய்வாளர் மத்தியில் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவர்களை இந்திய வம்சாவளித் தமிழர் என்று அடையாளப்படுத்துவதே பொருத்தமானது என வாதிடுவோரும் உளர். எவ்வாறாயினும் 1911 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கையின் குடித்தொகை மதிப்பீட்டிலேயே முதன்முதலாக இம்மக்கள் இந்தியத் தமிழர் என்று உத்தியோகபூர்வமாக இன அடையாளப்படுத்தப்பட்டனர். இன்றுவரை இவ்வாறே இம்மக்கள் இனரீதியாக அடையாளப்படுத்தப்பட்டு வருவதைனக் காணலாம். 1911 ஆம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின் போது இம்மக்களின் விகிதம் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 12.9% ஆக காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி இம்மக்களின் விகிதம் மொத்த சனத்தொகை மதிப்பீட்டின்போது இது 5.1 சதவீதமாக குறைந்துள்ளதனைக் காணமுடிகின்றது. எனினும் இது ஓர் குறைமதிப்பீடாகும். உண்மையில் இம்மக்களின் விகிதம் நாட்டின் மொத்த குணத்தொகையில் 7.4 விகிதம் அளவுக்கு காணப்பட வேண்டும் என்று பொருளியல் துறை விரிவுரையாளர் S. விஜயசந்திரன் அவர்களின் ஆய்வு எமக்கு எடுத்துரைக்கின்றது. தனது ஆய்வில் இதற்கான காரணிகளை அவர் தெளிவாக முன் வைத்துள்ளார்.

1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி இலங்கை வாழ் இந்திய வம்சாவளித்தமிழர் 818,656 பேராகும். இது மொத்த சனத்தொகையில் 5.5 சதவீதம் ஆகும். இவ்குடிசனமதிப்பீட்டின் போது சுமார் 2,00,000 இந்திய வம்சாவளித் தமிழர் தம்மை இலங்கைத் தமிழர் என்று அடையாளப்படுத்தி உள்ளதாக குடிசன மதிப்பீட்டு ஆணையாளரின் அறிக்கை குறிப்பிடுகின்றது. இதன் காரணமாக இம்மக்களின் இனவிகிதாசாரம் குறைவானதாக மதிப்பிட வேண்டியாயிற்று எனலாம், மேலும் 1981 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டறிக்கையின்படி சுமார் 75,000 மக்கள் (இந்திய தமிழர்) இலங்கையிலர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு புலம் பெயர்ந்து உள்ளதனைத காட்டுகின்றது. இம்மக்கள் இந்தியத் தமிழர் என்ற தம் இன அடையாளத்தை வேகமாக இழந்து வருவதனை உள்ளுர் மக்கள் இரண்டறக் கலந்து விட்ட போக்கினையே இன்று அவதானிக்க கூடியதாக உள்ளது. இதுவும் இந்திய தமிழ் மக்களின் விகிதாசாரம் குறைவாக மதிப்பீடு செய்ய காரணமாக உள்ளது.

இவை தவிர 1955, 1977, 1981, 1983 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் காரணமாக பல இலட்சக்கணக்கான இந்திய வம்சாவளித் தமிழர் இந்தியாவுக்கும் இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் குடிபெயர வேண்டியதாயிற்று. இதுவும் இம்மக்களின் மெய் எண்ணிக்கையை வரையறை செயவதில் சிக்கல்களை ஏற்படுத்தியது. உளவியல், சமூகவியல், அரசியல் காரணிகளும் இம்மக்களின் இனவிகிதாசாரத்தை வரையறை செய்வதில் செல்வாக்கு செலுத்துவதனைக் காணலாம். வருங்காலத்திலாவது இம்மக்கள் தம்மை முனைப்புடன் "இந்தியத் தமிழர்" என்று பதிவு செய்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் தன்னார்வ நிறுவனங்கள் (N. G. O.) என்பன உதவி செய்ய வேண்டும்.

அட்டவணை I 2001 ஆம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டறிக்கையில் மாவட்ட ரீதியில் இந்தியத் தமிழரின் சனத்தொகை, இம்மக்களின் மெய் எண்ணிக்கை பற்றிய மீள் மதிப்பீட்டினை காட்டுகின்றது.

**அட்டவணை I**

| *மாவட்டம்* | *ஆண்டு* 2001 | *சனத் தொகை* | *மீள் மதிப்பீடு* | (வம்சாவளித் தமிழரின் தொகை) |
|---|---|---|---|---|
| 1. நுவரெலியா | 51.3 | 3.59386 | 391374 | 55.9 |
| 2. பதுளை | 18.2 | 1.41087 | 168314 | 21.7 |
| 3. கண்டி | 8.4 | 1.06341 | 141428 | 11.1 |
| 4. இரத்தினபுரி | 7.8 | 78.581 | 108765 | 10.8 |
| 5. கேகாலை | 5.9 | 45647 | 59181 | 7.6 |
| 6. வவுனியா | 19.6 | 29360 | 29068 | 19.4 |
| 7. மாத்தளை | 5.3 | 23329 | 41604 | 9.4 |
| 8. களுத்துறை | 2.7 | 28769 | 40802 | 3.8 |
| 9. கம்பஹா | 0.4 | 7388 | 63878 | 3.1 |
| 10. புத்தளம் | 0.3 | 2261 | 43283 | 6.1 |
| 11. காலி | 0.9 | 8553 | 19024 | 1.9 |
| 12. மாத்தறை | 2.2 | 16983 | 21387 | 2.8 |
| 13. மன்னார் | 9.9 | 15025 | 20160 | 13.3 |
| 14. முல்லைத்தீவு | 14.5 | 17641 | 16912 | 13.9 |
| 15. மட்டக்களப்பு | 1.2 | 5837 | 5837 | 1.2 |
| 16. அம்பாறை | 0.1 | 410 | 2357 | 0.4 |
| 17. திருக்கோணமலை | 2.1 | 7143 | 8844 | 2.6 |
| 18. குருநாகல் | 0.2 | 2732 | 17066 | 1.2 |
| 19. அநுராதபுரம் | 0.1 | 517 | 4731 | 0.6 |
| 20. பொலநறுவை | 0.0 | 147 | 147 | 0.0 |
| 21. மொனராகலை | 1.9 | 7660 | 13239 | 3.3 |
| 22. அம்பாந்தோட்டை | 0.0 | 243 | 1610 | 0.3 |
| 23. யாழ்ப்பாணம் | 2.4 | 11774 | 11774 | 2.4 |
| 24. கிளிநொச்சி | | | | |
| 25. கொழும்பு | 1.2 | 25959 | 155411 | 7.0 |

இந்தியவசம்சாவளித் தமிழரி பற்றிய மீள் மதிப்பீடு ஆய்வு திரு. S. விஜயசந்திரன் (பொருளியற்றுறை - பேராதனை பல்கலைக்கழகம்)

மேற்காட்டிய அட்டவணைத இந்திய வம்சாவளி தமிழ்த மக்களின் மெய்யான எண்ணிக்கையை வரையறை செய்வதற்கு எமக்கு பெரிதும் உதவுவதனைக் காணலாம்.

மாவட்ட சனத்தொகையை பொருத்தவரையில் நுவரெலியா மாவட்டத்தே பெரும்பான்மையினராக இந்தியத் தமிழர் வாழ்வதனை 55.9 சதவிகிதத்தினராக உள்ளதனை காணலாம். அதேசமயம் இந்திய வம்சாவளித் தமிழரின் இனப்பரம்பலை நோக்கும் போது 71.8% சதவீதத்தினர் நுவரெலியாத மாவட்டத்துக்கு வெளியே வாழ்வதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிபாக வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய வட மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டங்களில் இம்மக்கள் முறையே 19.4 சதவீதத்தினராகவும் 13.9% ஆகவும், 13.3% ஆகவும் உள்ளமை அவதானிக்க வேண்டிய விடயமாகும். மலையகத்தை பொருத்தவரையில் நுவரெயாவுக்கு அடுத்தபடியாக பதுளை, கண்டி, இரத்தினபுரி, மாத்தளை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேகாலை ஆகிய மாவட்டங்களில் மாவட்ட பணத்தொகையில் முறையே 21.7: 11.1, 10.8, 9.4, 7.6 ஆகிய விகிதாசாரத்தை கொண்டவராய் உள்ளனர். தலைநகர் கொழும்பு மாவட்டத்தில் இவ் மக்களின் இனவிகிசாரம் 7.0 ஆக உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்திய வம்சாவளி மக்கள் 24.4 சதவீதத்தினர் கிராமியத் துறையிலும், 18.2 வீதத்தினர் நகர்புறத்தே வாழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது. பிரதேச செயலகப் பிரிவுகளின் அடிப்படையில் நோக்கும் போது வடக்கு, கிழக்கு பிரதேசம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள 209 பிரதேச செயலகப் பிரிவிகளில் இம்மக்கள் பரவி வாழ்வது அவதானிக்க முடியும். 14 மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகப் பிரிவுகளில் இம் மக்கள் குறிப்பிடத்தக்க இனவிகிதாசாரத்தைக் கொண்டுள்ளதுடன் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அம்பகமுவ, நுவரெலியா, பதுளை மாவட்டத்தில் உள்ள லுனுகல, கண்டி மாவட்டத்தில் உள்ள பன்வில ஆகிய 04 பிரதேச செயலகப் பிரிவுகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமான இனவிகிதாசாரத்தை இம்மக்கள் கொண்டுள்ளனர். இவை தவிர 45 பிரதேச செயலகப் பிரிவுகளில் 12.5 சதவீதத்திற்கு அதிகமான இனவிகிதாசாரத்தை இம்மக்கள் கொண்டுள்ளனர். இங்கெல்லாம் அரசின் கொள்கைக்கு அமைய தமிழ்மொழியில் நிருவாக கடமைகளை மேற்கொள்ள சட்டரீதியான உரித்து இம்மக்களுக்கு உள்ளது என்பது குறிப்பிடத்தக்க எனினும் நடைமுறையால் இது அமுலில் இல்லாமை வேதனைக்குரியதாகும்.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது அதே ஆண்டு இந்தியத் தமிழர் தம் குடியுரிமையை இழந்தனர். இதனால் இம்மக்களின் தம் வாக்குரிமையையும் இழந்தனர். இவ்வுரிமையை மீளபெற சுமார் 40 ஆண்டுகாலம் அதாவது 1988 ஆம் ஆண்டுவரை போராட வேண்டி ஏற்பட்டது. இதன் விளைவாக அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக இம்மக்கள் ஒப்பீட்டு ரீதியாக ஏனைய இனத்தவரிடையே இருந்து முற்றாக வேறுபடுத்தப்பட்டனர் எனலாம். இதனால் இம் மக்கள் தேசிய ரீதியாக ஓர் பிற்படுத்தப்பட்ட சமூகமாக (Backward Community) உள்ளதனைக் காணலாம். இப்பின்னணியிலேயே இம் மக்களின் கல்வி நிலைபற்றி ஆராய வேண்டும்.

மலையகக் கல்வியை பொருத்தவரையில் அதன் கடந்தகால வரலாறு துயர்மிக்கது. நிகழ்கால வரலாறும் ஒன்றும் பெருமைப்படக் கூடியதாக இல்லை. வருங்காலத்திலாவது நாம் தலை நிமிர்ந்து ஏனைய சமூகத்தினரைப்போல் கல்வியல் முன்னேற ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகும். இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்விக் கொள்கை இலங்கையில் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆனால் தோட்ட பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவில்லை. எமது சமூகத்தின் பின்னடைவுக்கு காரணமானது. மேலும், வாக்குரிமையற்ற எம் மக்களின் நலன் குறித்து அரசியல்வாதரிகள் அலட்டிக் கொள்ளவில்லை. இன்று எம்மவர் பெற்றுள்ள வாக்குரிமை காரணமாகவே ஓரளவு இம்மக்களின் நலன் குறித்து அரசியல்வாதிகள் பேசமுற்படுவது செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

மலையக கல்வியில் நாம் இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை:

1. ஆசிரியர் பற்றாக்குறை தேசிய மட்டத்தே 21 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற வீதம் காணப்படும் போதும் அது மலையகத்தே 42 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் என்ற அளவிற் காணப்படுகின்றது. தேசிய ரீதியாக 14,000 ஆசிரியர் மேலதிகமாக உள்ளபோது தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் 10,000 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளதனை உலக வங்கியின் அறிக்கை காட்டுகிறது. குறிப்பாக மலைய பாடசாலைகளைப் பொருத்தமட்டில் 4000-5000 வரையிலான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது எனலாம். குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்ப பாடங்கள் என்பவற்றை கற்பிக்க போதிய ஆசிரியர் இன்மை மலையகம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாகும்.
2. பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர்கள் போதியளவு எம்மவர் மத்தியில் இன்மை அடுத்த பிரச்சினையாகும் இதினால் மலையகப் பாடசாலைகளின் கற்றல்-கற்பித்தல் செயற்பாடு செவ்வனே நடக்க இயலாததாக உள்ளது.
3. ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை தவிர இடைநிலை உயர்நிலை வகுப்புக்களுக்கு தேவையான ஆசிரிய ஆளணியை பெற்றுக்கொள்ள இயலாத நிலை அடுத்த பிரச்சினையாகும் ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் கணித, விஞ்ஞான பிரிவுகளில் பயிலுனர் ஆசிரியராக உள்ள மலைய ஆசிரியர்களின் தொகை சுமார் 30-40 வரையில் உள்ளமை இப்பிரச்சினையின் தாக்கத்தினை நன்கு காட்டுகிறது. பல்கலைக்கழகத்தே எம்மாணவர்களின் எண்ணிக்கை 0.1 வீதம் என்பத கல்வியில் எம்சமூகத்தின் பின்தங்கிய நிலையை நன்கு உணர்த்துகின்றது.
4. மாணவர்கள் இடைவிலகல் தொகை மிக உயர்வாக உள்ள அதே சமயம் ஆரம்பக் கல்வியை பெற்றுக்கொள்ள இயலாத மாணவர்களையும் மலையகத்தேயே பெருமளவில் காணலாம்.
5. போதியளவு வகுப்பறை இடவசதி, காணி வசதி, நூலக, ஆய்வுகூட வசதி, மேலதிக கற்றல் சாதனங்கள் இன்மை என்பன மற்றுமோர் பிரச்சினையாகும்.
6. கல்வி திணைக்களங்களில், கல்வியமைச்சில் எம் சமூகத்தினரைச் சேர்ந்த ஆளணியினர் போதியளவிற் காணப்படாமை.
7. போஷாக்கற்ற மாணவர் சமூகம், நச்சுவட்டம் போன்ற வறுமையான சூழல் மலையக மாணவர்களின் கற்றலில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. பெரும்பாலான தோட்ட புற பாடசாலை மாணவர்கள் தம் காலை உணவை உண்பதில்லை என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. காரணம் வறுமை.
8. மறுபக்கமாக அர்ப்பணிப்பும் ஊக்கமும் அற்ற ஆசிரியர்கள், முகாமைத்துவ தேர்ச்சி உள்ள அதிபர்கள் போதியளவு இன்மை காரணமாக வினைத்திறன், விளைதிறன் என்பன மலையக பாடசாலைகளில் மிகவும் குறைவாகவே உள்ளது.
9. போக்குவரத்து வசதியின்மை, வினைத்திறன் அற்ற மேற்பார்வை முகாமைத்துவம், பாடசாலைக்கும், பெற்றோருக்கும் இடையிலான பலவீனமான உறவு, கல்வி குறித்த மனப்பாங்கு விருத்தியின்மை என்பன ஏனைய பிரச்சினைகளாக உள்ளன. இங்கு இவை ஒவ்வொன்றையும் விரிவாக பகுப்பாய்வு செய்ய இடம் இல்லை. உண்மையை இவை விரிவாக ஆராயப்பட்டு தீர்வு காணப்படல் மிக முக்கியமாகும்.

உலகலாவிய நிலையில் இன்று தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலமொழி மூலமான கல்வி, வீஞ்ஞானக் கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தொழில்நுட்ப கல்வி என்பன பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளதனைக் காணலாம். ஏனைய சமூகங்கள் இவ்விடயங்களில் பெரிதும் கவனம் செலுத்தி முன்னேறிவரும் நிலையில் மலையகம் இத்துறைகளில் பெரிதும் பின்தங்கியுள்ளது கவலைக்குரியதாகும்.

ஆறு மலையக மாவட்டங்களில் விஞ்ஞான உயர்நிலை வகுப்புக்கள் கொண்ட பாடசாலைகள் மிகவும் குறைவானதே. கண்டி மாவட்டத்தில் தெல்தெனியா கல்வி வலையத்தில் விஞ்ஞான பாடநெறி (உயர்தரம்) கொண்ட தமிழ்மொழி மூலமான பாடசாலை எதுவும் கிடையாது. வத்துகாமம் கல்வி வலயத்தே இரு தமிழ்மொழி மூலமான விஞ்ஞான பாடநெறி (உயர்தரம்) உள்ள பாடசாலைகள் உள. இவ் இரு பாடசாலைகளில் விஞ்ஞானம் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மலையக மாணவர்களின் தொகை 10க்கும் குறைவானது என்பது வேதனையுடன் நோக்கப்பட வேண்டியுமாகும்.

தீர்வுகள்:- மலையக மக்கள் கல்வித்துறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை (1) குறுங்கால ரீதியானது
(2) நீண்டகால ரீதியானது என வகுக்கலாம். உடனடியாக கவனித்து தீர்க்கப்பட வேண்டியவை முதற் பிரிவில் அடங்கும். அவ்வகையில் குறுங்காலத் தீர்வுகளாக பின்வருவனவற்றை கூற முடியும்.

1. உடனடியாக மலையகத்துக்காக ஒதுக்கப்பட்ட ஆசிரிய நியமனங்களை வழங்குவது.
2. பொருத்தமான இடமாற்றக் கொள்கை ஒன்றை மலையக ஆசிரியர்களுக்கு வகுத்தல்
3. அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கணித, விஞ்ஞான, ஆங்கில விசேட பாடத்துறைக்கான மலையக ஆசிரியர்களை நியமிப்பது.
4. இத்துறைசார் ஆசிரியர் போதியளவு மலையகத்தே கிடைக்காதபோது வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சார்ந்த ஆசிரியர்களை பெற்று நியமிப்பது.
5. இவ்விடயத்தில் இந்திய அரசின் உதவியை பெற்றுக்கொள்வது.
6. மலையக மாணவர்களுக்காக ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியை முழுமையாக இம்மாணவர்களுக்காக ஒதுக்கச் செய்வதுடன் புதிய பாடநெறிகளை இங்கு ஆரம்பிப்பதுடன் பல்வேறு வழிகளில் இக்கல்லூரியினை வலுவூட்டல்.
7. பயிற்றப்படாத சகல மலைய ஆசிரியர்களையும் பயிற்றுவிக்கும் திட்டம் ஒன்றினை உடன் மேற்கொள்ளல்.
8. மலையகத்தே உள்ள சகல மலையக தமிழ் பாடசாலைகளுக்கும் இலவச மதிய உணவு வழங்கல்.
9. ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரிக்கான கணித, விஞ்ஞான பரிசுகளுக்கான மாணவர்களை நுழைவு வீதத்தினை அதிகரிக்க முறையான திட்டம் ஒன்றினை வகுத்தல்.
10. பெற்றோர் - ஆசிரியர் - அதிபர் ஆகியோருக்கு தேவையான ஆலோசனை வழிகாட்டல்களை மேற்கொள்வது.

நீண்ட கால தீர்வினைப் பொருத்தமட்டில், இம்மக்கள் ஓர் தனியான தேசிய இனம் என்ற அடிப்படையில் இவர்களின் பிரச்சினைகள் அணுகப்படல் வேண்டும். நாட்டின் ஏனைய தேசிய இனங்களுடன் போட்டியிட்டு இம் மக்கள் முன்னேற வேண்டுமாயின் - இம்மக்களைப் பொருத்தவரையில் "நியாயமான முறையில் பாகுபடுத்தும் கொள்கை" (Policy of Positive Discrimination) என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் நீக்ரோ மக்களின் முன்னேற்றம் குறித்து இக்கொள்கை பின்பற்றப்பட்டு வருகின்றது. எமது அயல் நாடான இந்தியாவில் நலிவுற்றுள்ள சில சாதியினருக்காக அரசியல் அமைப்பில் சில விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இப்பிரிவினர் ஏனைய சமூகத்தவரோடு போட்டியிட்டு முன்னேற முடிந்துள்ளது. அவ்வகையில் இத்தகைய ஒரு கொள்கையை எமது நாட்டின் அரசியல் அமைப்பில் ஏற்படுத்தாத வரை மலையக மக்கள் ஏனைய வளர்ச்சி பெற்றுள்ள சமூகத்தவருடன் போட்டி போட்டு முன்னேறல் நடைமுறை சாத்தியமற்ற ஒன்று என்பது இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக இலக்கியத்துக்கு

நாட்டார் பாடல்களே

மலையக இலக்கியத்திற்கு ஆரம்ப வழிகாட்டியாக நாட்டார் பாடல்களே இருந்துள்ள எனலாம். வெறும் வாய் மொழி பாடல்களாக பாடப்பெற்றிருந்தாலும் அவை காலப்போக்கில் எழுத்துறுபெற்று இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

மலையகத்திற்கென்று தனியான இலக்கியம் படைப்பதற்கு, நாட்டார் பாடல்கள் துணையாக இருந்துள்ளது. ஆரம்ப காலத்தில் வெறும் பாடல்களென்றால், எழுத்துரு பெறாமல் இருந்தபோது, இப்பாடல் வரிகள் மலையக மக்களின் ஆரம்ப கால துயரான வாழ்வை எடுத்தியம்பி இருக்கின்றன.

நாட்டார் பாடல்களை ஆய்வுசெய்த மலையக எழுத்தாளர்கள் கவிஞர்கள் அவற்றிற்கு புதுமெருகூட்டி, காலத்திற்கேற்ற கவிதைகளை எழுதியுள்ளனர். இதற்கு முன்னோடியாக இருந்த மறைந்த கவிஞர் சி. வி. வேலுப்பிள்ளை அவர்களே.

அவர் எழுதிய தேயிலை தோட்டத்திலே (In the Tea Garden) என்ற கவிதை நூலே சான்றாகும். நாட்டார் பாடல்களிலே சிலேடைத்தமிழில் எவ்வாறான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை, நாட்டார் பாடல்கள் வரிகளை சுவைக்கும்போது வெளிப்படும். இவற்றை படிக்கும்போது ஏற்படும் சுவையும் உத்வேகமும் அலாதியானது.

நாட்டார் பாடல்கள் தோன்றியதற்கும் ஒரு கசப்பான வரலாறு உண்டு. தென் இந்தியாவிலே வரட்சியும் வறுமையும் குடிகொண்டிருந்த காலத்திலே இலங்கைக்கு கூலித்தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டனர்.

இந்த வறுமை கலையப்பட்டு, சிறிது சாதாரணமான வாழ்வை அடைந்த மக்கள் தமது சொந்த பந்தங்களையும் இங்கு அழைத்து வர முற்பட்டனர். இவர்களின் செய்தியை கிடைக்கப்பெற்ற மக்கள், தாமும் இலங்கை சென்றால் சிறப்பாக வாழலாம் என்று எண்ணியதை, (எண்ணியதாக) பின்வரும் பாடல் பாடியுள்ளனர்.

மானத்திலே மழையுமில்லை
மழை பொழிய காலமும் இல்லை
கூடி மாடி பேசுங்கடி, நம்ப
கொழும்பு சீமை போய் பிழைப்போம்.,

மேற்படி பாடப்பெற்ற பாடல்கள் அம்மக்களின் ஆரவாரத்தை எடுத்தியம்பியுள்ளது. அதே வேளையில் இங்கு வந்தவர்கள் தாம் பட்ட துன்பங்களை, தொடர்ந்தும் அநுபவிக்க முடியாது என்ற எண்ணத்தில், திரும்பவும் தமது நாட்டிற்கே போய்விட வேண்டும் என்பதை பின்வரும் பாடல் வரிகள் காட்டுகின்றன.

அட்டைக் கடிக்குதடி,
அழகு ரத்தம் சிந்துதடி,
செல்லு கடிக்குதடி,
சீரழிந்த கண்டியிலே.

இங்கு வந்த மக்களுக்கு இலங்கை என்ற நாட்டைப்பற்றி எதுவும் தெரியாது. தாம் கண்டிக்குத்தான் வந்திருக்கிறோம் என்ற நிலைப்பாட்டிலே பாடியுள்ளதை அறிய முடிகிறது.

இவர்கள் வாழ்ந்த காலத்திலே தோட்ட பங்களாவிற்கு செல்லும் வழி நெடுகிலும் பூமரங்கள் நடப்பட்டிருந்ததை இன்றும் காணலாம். அதே போல் பெருந்தெருக்கள் இரு பக்கங்களிலும் மரங்களை நட்டிருந்தனர். இவை பெரும் மரங்களாக வளந்திருந்தபோது, இம்மரங்கள் நிழல்தரும் மரங்களாக இம்மக்களுக்கு காட்சியளிக்கவில்லை. மாறாக, இவர்களுக்கு இவை தூக்கு மரங்களாகவே காட்சியளித்துள்ளது. காரணம், இவர்களின் இரத்தம் உறிஞ்சப்பட்டு, வஞ்சிக்கப்பட்ட நிலைமையே. இந்த நிலைமையை பின்வரும் பாடல் வரிகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

சாலையிலே இரண்டு மரம்
சர்க்காரு வச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம்
உனக்கும் எனக்கும் தூக்கு மரம்.

இப்படி துன்பத்திலும் துயரிலும் வாழ்ந்த மக்கள், நாம் வேலை செய்த தோட்டத்தின் துரைமார்கள், கணக்குப்பிள்ளை, கங்காணி போன்றவர்களை நையாண்டி பண்ணும் பாடல்களை பாடி பரிகாசம் செய்துள்ளார். இவர்கள் இவ்வாறாக பாடிய பாடல்கள், எதிர்காலத்தில் எதிர்த்து போராடும் சக்தியையும் பெற்றுள்ளனர். தொழிற்சங்கங்கள் தோன்றியதும் ஒரு சான்றாகும். இதோ ஒரு துரையைப் பற்றி நையாண்டியாக பாடல் வரிகள்.

கறுப்பு குதிரையாம்
கண்ணாடி மண்டபமாம்
கட்டிக்கெடக்குது பட்டணத்திலே
ஏறி வருவாரு நம்ப துரை
கறுத்த ரோடு தூள் பறக்க.

இத்தோடு நில்லாமல். தமக்கு வேலை பார்க்கும் கணக்குப்பிள்ளை பற்றியும் பின்வருமாறு பாடியுமள்ளனர்.

சப்பாத்து போட்டவரு
சரிக்கி நடந்தவரு
உருளாசி கட்டியவரு
உருகுதையா என் மனசு

கணக்கு பிள்ளையை, வசமாக்கியவர்களும் உண்டு வசை பாடியவர்களும் உண்டு. கணக்கு பிள்ளையின் கொடுமையை தாங்க முடியாமல் பாடிய வரிகள்....

அத்தனா தோட்டமுனு
ஆசையாய் தானிருந்தேன்
ஒர மூட்டை தூக்கச் சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா.

இவ்வாறு தமக்கு ஏற்பட்ட துயரங்களை சொன்ன மக்கள் தமது சொந்தங்கள் சிறப்பாக வாழ்வதை பொறுக்க முடியாதவர்களும் இருந்துள்ளனர். இவ்வாரவர்கள் இன்றும் நம்மிடையே இருக்கின்றனர். இதோ அந்த பாடல் வரிகள்

கண்டிக்கு வந்தமுனு
கணத்த நகை போட்ட முனு
மஞ்சள் குளிச்ச முனு
மனுச மக்கள் தெரியலையோ.

இவர்களைப் போல நாமும் கண்டிக்கு சென்று வாழலாம் என்று எண்ணிய மக்கள் தமது ஆதங்கத்தை பின்வருமாறு பாடியுள்ளனர்.

தெம்மாங்கு பாடி
தெரு வழியோ போனாலும்
அன்பான வார்த்தைச் சொல்லி
அழைப்பாரு யாருமில்லை

இவ்வாறு பாடிய மக்கள், தமக்கு ஏற்பட்ட துயரங்களையும் ஆதங்களையும் வெளிப்படுத் தியதோடுமல்லாமல் எங்களுக்கு காதல் பண்ணத்தெரியும். மற்றவர்களைவிட நாங்கள் எந்தவிதத்திலும் குறைந்தவர்களில்லை என்று பின்வரும் வரிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

மானத்திலே மீனிருக்க
மதுரையிலே நானிருக்க
சேலத்திலே நீயிருக்க
நாம சேருவது எப்போது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி ரோதையிலே
வேலை செய்யும் என்சாமி,
சாக்கு தூக்கி வருகையிலே
சாடையாய் பார்த்திடுங்க."

வெங்கல ரோதையிலே
வேலை செய்யும் என்சாமி
வெத்திலை வேணுமினா
வெளியே வந்து வாங்கிங்க

இப்படியான பாடல்கள் வேலை செய்யும்போது ஒருவரை ஒருவர் காதலித்து வந்ததையே காட்டுகிறது. இவ்விதமான காதல் உணர்வுகள் வேலை பழுதை குறைத்து. இவை போன்ற நிகழ்வுகள் இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இவை மட்டுமல்லாமல், திருமண வைபவங்களில்கூட மணமக்களை வாழ்த்தும் பண்பும் இருந்தன. இவை இன்றும் ஒரு சில திருமணங்களில் நடைபெற்று வந்தாலும் அருகி வருவது மட்டும் உண்மையாகும்.

திருமண நிகழ்வுகளில், வெத்திலை கிழித்து ஆண் பெண் உடம்பில் தூவி வாழ்த்தியிருக்கிறார்கள். அதில் சில வரிகள்.

**பெண்ணுக்கு வாழ்த்து**

கல்யாணமாம் கல்யாணமாம்
எண்ணைக்கோ கல்யாணம்
எங்கள் இளங்கிளிக்கு
திங்கட் கிழமையிலே
சிவன் பிறந்த நாளிலே
கல்யாணமாம்.
சித்திரையில் செல்லக் கல்யாணம்
வைகாசியிலே பெரிய கல்யாணம்.

**மணமகனைப்பற்றி**

கல்யாணம் என்று சொல்லி
இந்த மாப்பிள்ளை கடலேறிபாக்கு வைத்தார்
சுத்தி மரிக்கோழி - இந்த மாப்பிள்ளை
சூரியனுக்கும் பாக்கு வைத்தார்
பக்கம் மடிக்கோழி - இந்த மாப்பிள்ளை
பகவானுக்கும் பாக்கு வைத்தார்.

**பொது**

தொட்டார்கள் பந்தல்
தொண்ணுத்தெட்டு காதை வழி
இட்டார்கள் பந்தல்
எண்ணூத்தி காதவழி

**மணமகளை இப்படி வர்ணிக்கிறார்கள்**

அரிசி பொறுக்கி மகளே நீ ஆளமேய வந்ததென்ன
அரிசி பொறுக்கி மகளே நீ ஆன மேல வந்ததென்ன

அண்ணன் அருக்சுனராய் பெத்தமகன்
கால் நடையாய் வாரதென்ன

கொள்ளி பொறுக்கிமக குதிரை மேல வாரதென்ன,
கோவலனாய் பெத்தமகன் கால் நடையாய் வாரதென்ன,
பருப்பு பொறுக்கிமக பள்ளக்கில் வாரதென்ன
பாண்டியரா பெத்தமகன் கால்நடையாய் வாரதென்ன,
கரண்ட நாகம் போல உருண்டை முகரைக்கு
என் கண்ணாடி முகம் எங்கிருந்து வாய்ச்சிச்சோ
வெத்திலை போல விரிஞ்ச முகரைக்கு என்
அண்ணன் வெள்ளால வம்சம் எங்கிருந்து வாய்க்கிச்சோ.

இவ்வாறு மணமகளுக்கு நாத்துனாவாகிய மணமகனின் தங்கைபாட, மணமகளின் தங்கை, தன் அக்கா றகுசனைப் பற்றி (மச்சானை) இப்படி பாடுகிறார்.

தெற்கத்தி ராசாத்தி தின்னவெளி பாப்பாத்தி
எங்க அக்கா திருப்ப வருவான்னு தெருவழியே பார்த்திருப்பேன்
நான் தெற்கு வழி திறப்பேன் தென்னலைக்கும் பாக்கு வைப்பேன்.


கள்ளிமல ஓரத்திலே எங்க அக்கா கரிசனையா குடியிருந்தா
கரிச்சட்டி திருடி மகன் காத்து வந்து மாலையிட்டான்
வெள்ளி மலை ஓரத்திலே எங்கக்கா விரும்பி குடியிருந்தா
வெண்ணைச்சட்டி திருடி மகன் விடிஞ்சி வந்து மாலையிட்டான்

வடக்கத்தி ராசாத்தி வட மருதை பாப்பாத்தி
எங்க அக்கா வாரேண்ணு சேதி கேட்டா
நான் வடக்கே வழி திறப்பேன்
வாழ எலைக்கம் ஆளும் வைப்பேன்

மங்களம் மங்களம் இந்த
மாப்பிள்ளைக்கும் பொண்ணுக்கும்
மங்களம், மங்களம், மங்களம்.

இவ்வாறு வாய்மொழியாக பாடப்பட்ட நாட்டார் பாடல்கள் காலத்தால் அழிக்க முடியாதவை. மலையகத்தின் இலக்கியத்திற்கு வித்திட்டது. நாட்டார் பாடல்கள் தான் என்பது மறுப்பதற்கிடமில்லாதது. இவற்றை மலையக இலக்கியம் என்று சொல்லும்போது எமது முன்னோர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

எஸ். இராமையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளிம்பு நிலைக் கலையாகக் காமன் கூத்து

காமன் கூத்தின் கலைப் பயணம் குறித்த ஓர் உசாவல்

செல்லத்துரை சுதர்சன், தற்காலிக விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

"சடங்கிலிருந்தே கலை வளர்கிறது. உணர்வு விழிப்புடைய கலைஞன் சடங்கு வடிவத்தை எடுத்து அதை வளர்க்கும் போது அது கலை வடிவமாகிறது.கலை இயங்கியல் தன்மையை கொண்டிருக்காவிட்டால் அது கலையாகவே இருக்காது."

(ஜோர்ச் தோம்சன் 2005 மனிதசாரம்: அறிவியல் கலை ஆகியவற்றின் தோற்றுவாய்கள், கோவை : விடியல் பதிப்பகம். ப. 151)

## 1. அறிமுகம்

அனைத்துக் கலைகளினதும் தொட்டிலாகப் பெரும்பாலும் சமயச்சடங்குகளே அமைகின்றன. சடங்கு என்பது நம்பிக்கையின்அடிப்படையிலான செய்கை முறையாகும். மனிதன் தனது இயல்பு ரீதியிலான சிந்தனைத் தளத்தினின்றும் மாறுபட்டு அல்லது விலகி ஓர் அதீத கற்பித ரீதியான கருத்தை உற்பத்தி செய்துகொள்கிறான். அது பெரும்பாலும் புறநிலை யதார்த்தத்திற்கு அப்பாலானதாக அல்லது அதனையே நிராகரிப்பதாக அமைந்துவிடும். இக் கற்பிதம் பாவனைப்படுத்தலின்போது சடங்காக மாறும். இச்சடங்கு இயங்கியலின் அடிப்படையில் கலையாக உருப்பெறுகிறது. இன்று நாம் காணும் பல கலைவடிவங்கள் சடங்கிலிருந்து இவ்வாறான பயணத்தை மேற்கொண்டவையே.

ஈழத்தில் மலையகத்தில் ஆடப்படும் காமன்கூத்து சடங்கிலிருந்தான தனது கலைநோக்கிய பயணத்தில் எவ்விடத்தில் நிற்கிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இக்கட்டுரையானது முற்று முழுதாக மலையகத்துக் காமன்கூத்துத் தொடர்பாக வெளிவந்த எழுத்துநிலை ஆதாரங்களை மட்டுமே அடிப்படையாகக் கொள்கிறது. சடங்கிலிருந்து புறப்பட்ட காமன்கூத்தின் கலைப் பயணம் தொடர்பான ஓர் அறிமுகக் கட்டுரையாகக்கூட இது அமையலாம்.

## 2. காமன்கூத்து

காமன்கூத்துத் தொடர்ப்பாக ஒரு சிலரே எழுதியுள்ளனர். இது வரை வெளிவந்த இக் கலை வடிவம் தொடர்பான எழுத்துக்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமான பண்பாட்டுப் பகிர்வை ஏற்படுத்தவல்லன. காமன் கடவுளிற்கான ஒரு வழிப்பாட்டு முறையாகவே காமன்கூத்து நிகழ்த்தப்படுகிறது. காமனுக்கென்று உருவங்களும் தலங்களும் இருப்பது போல அவனுக்கென்று வழிபாட்டு முறைகளும் உள்ளன. அந்த வழிபாட்டு முறைகளில் பிரதானமானதாகக் காமன்கூத்து விளங்குகிறது. காமன் ஒரு சிறு தெய்வமாகவும் காமன்கூத்து ஒரு பெரும் பண்டிகையாகவும் அவதானிக்கப்படுகிறது. காமன்கூத்தினைச் சிறு தெய்வம் ஒனறிற்கான பெருவழிபாட்டு முறையாகவே மலையகத்தில் பார்க்க முடிகிறது. இக்கூத்தின் பயில்நிலை அடிப்படையில் இவ்வாறுகூறுவது பொருத்தமானதாகப்படுகிறது

## 3.சடங்கும் நாடகமும்

"காமன்கூத்து இன்று வரையும் பெரும்பாலும் பக்தி சார்ந்த சடங்கு முறைகளைத் தன்னகத்தே கொண்ட கூத்து முறையாகவே பயிலப்பட்டு வந்துள்ளது. அதனால் அது இன்றும் கோயில் சார்ந்த சமயச் சடங்காகவே நடைபெற்று வருகிறது." (துரை, மனோகரன்:2004) சடங்காக நிகழ்த்தப்பட்டு வரும் காமன்கூத்தானது எப்போது கலையாகிறது என்பதும் சடங்கில் உள்ள எவ்வெவ் அம்சங்களைக் கலை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதும் முக்கியமான வினாக்களாகும். அந்த வகையில் சடங்கிற்கும் நாடகத்திற்கும் இடையிலான ஊடாட்டத்தை, அவை இரண்டும் எவ்வெவ் விடயங்களில் ஒன்றுபடுகின்றன என்பதை நோக்குவது பொருத்தமானதாகும்.

(அ) தொன்மம்

நாடகம் ஒரு செய்தியினால் வடிவமைக்கப்பட்டிருப்பது போல காமன்கூத்து தொன்மக் கதைகளினால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. தொன்மமே கலைக்கான மூல வித்து. காமன்கூத்தின் தொன்மத்தினைக் கந்த புராணத்தின் காமதகனப்படலமும் காமன் பற்றிய வாய் வழிவந்த மரபுக்கதைகளுமே கட்டமைக்கின்றன. செந்நெறி இலக்கியமரபு, வாய்மொழி இலக்கியமரபு என்ற இரண்டினதும் இறுக்கமான இணைப்புத்தன்மையே காமன்கூத்தின் தொன்மம் எனக்கூற முடியும்.

(ஆ) நிகழ்த்திக்காட்டுதல்

நாடகம் செய்து காட்டலின் போதே முழுமையடைகிறது. அதுபோலச் சடங்கின் தொன்மம் நிகழ்த்திக் காட்டலின் போதே முழுமையடைகிறது. காமன்கூத்தில் ரதிக்கும் காமனுக்கும் இடையிலான திருமணத்திலிருந்து பரமன் காமனை எழுப்புதல் வரை நிகழ்த்திக் காட்டப்படுகிறது. இத்தகைய நிகழ்த்திக்காட்டுதல் பெரும்பாலும் காமன்கூத்தில் பக்திசார்ந்ததாகவே அமைகிறது. நேர்த்திக்காக இதனை நிகழ்த்தும்போது அவர்களின் கோரிக்கையும் முழுமையடைகிறது. இவ்வாறு சடங்கினை நிகழ்த்துவோர் நம்புகின்றனர்.

(இ) நம்பிக்கை

கலையோ சடங்கோ நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்படாத போது அது பூரண அனுபவத்தைத் தராது. அரங்கில் நடப்பவை உண்மை என நம்புவதாலேயே அரங்கு தரும் அனுபவம் பூரணமானதாக அமைகிறது. அதுபோலவே சடங்கும், காமன்கூத்தினைப் பொறுத்தவரையில் அதில் பங்குபற்றுவோருக்குரிய நம்பிக்கை என்பது பலன்சார்ந்ததாக அமைகிறது. "காமன்கூத்தானது பக்திக்காகவும் நேர்த்திகளை நிறைவு செய்யும் பொருட்டும் பிள்ளைப்பேறு கருதியும் மணவாழ்வின் சிறப்பிற்காகவும் ஆடப்பட்டு வருகிறது." (சோதிமலர் ரவீந்திரன்:2004) என்பது நம்பிக்கையின் அடிப்படையில் அது நிகழ்த்தப்படுவதைக் காட்டி நிற்கிறது.

ஜோர்ஜ் தாம்சன் தனது ஆத்மசாரம் என்ற நூலில் உருளைக்கிழங்கு நடனம் பற்றி குறிப்பிடுகிறார். நியூசிலாந்திலுள்ள maoris என்ற இனத்தவர்கள் உருளைக்கிழங்குச் செடிகளை கீழ்த்திசைக் காற்றிலிருந்து பாதுகாக்கவேண்டி இந்த நடனத்தை ஆடுவதாக அவர் குறிப்பிடுகிறார். இவ் உருளைக்கிழங்கு நடனத்தை இயற்கையை கட்டுப்படுத்துகிற இயற்கைக்குக் கட்டளையிடுகிற நம்பிக்கைசார் நிகழ்ச்சியாகக் பார்க்க முடியும்.

இதைப் போலக் காமன் கூத்து நிகழ்த்துகைக்கும் ஒரு காரணம் கற்பிக்கப்படுகிறது. "ஒரு முக்கியமான காரணம் இக்கூத்துக்கு அடிப்படையாக அமைகிறது. மாசி மாதம் கடுமையான வெய்யிலில் தேயிலைச் செடிகள் வாடிக்கருகுவதுண்டு. எனவே தொழிலாளர்கள் வேலையின்றித் திண்டாடுவர். இவ் வெய்யிலின் கொடுமையைத் தவிர்த்து மழை பெய்வதற்காகக் காமனை வழிபட்டுக் கூத்தாடுவது நெடுங்காலமாக நடைபெற்று வரும் ஒரு செயலாகும்." (சோதிமலர் ரவீந்திரன்:2004) இங்கும் சடங்கை நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தும் முறையே காணப்படுகிறது. உருளைக்கிழங்கு நடனம்போல இவர்களும் உழைப்பு முறைக்கு நட்டம் வராதிருக்கவே காமன் கூத்தை ஆடுகின்றனர் எனக் கூறமுடியும். இத்தகைய கற்பிதங்களின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் சடங்குசார் நிகழ்த்துதல்களை ஜோர்ஜ் தாம்சன் பின்வருமறு குறிப்பிடுகிறார். "நடனமாடியவர்கள் இன்னும் புலனறிவு மட்டத்திலேயே இருந்ததால் யதார்த்த உலகம் தமது சித்தத்திற்கு அப்பால் சுயேச்சையான புறநிலை விதிகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குகிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை." இன்னும் உழைப்பு இயக்கத்தை மையமாகக் கொண்டே சடங்கும் கலையும் நிகழ்த்தப்படுவதை இவ்விடத்தில் அறியமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) கற்பனை

நாடகத்திற்கும் சடங்கிற்கும் கற்பனை இன்றியமையாதது. நாடகத்தில் வரும் குறியீடுகளைக் கற்பனை நிறைந்த மனமே முழுமைப்படுத்துகின்றது. அது போலவே சடங்கியல் அம்சங்களையும் கற்பனை நிறைந்த மனமே முழுமைப்படுத்துகின்றது. காமன் கூத்திலும் அக்கூத்தினை நிகழ்த்துபவர்களுக்கும் அதில் பங்கேற்பவர்களுக்கும் கற்பனை நிறைந்த மனம் அவசியமாகிறது. கம்பம் ஊன்றல் நிகழ்ச்சியில் ஊன்றப்படும் கம்பம் கூட ஒன்றின் பிரதிநிதியாகிறது. இதனைக் கற்பனை நிறைந்த மனம் முழுமைப்படுத்துவதும் அவசியமாகிறது.

(உ) பாத்திர நிலைப்படுதல்

பாத்திரநிலைப்படுத்தல் பற்றிய கருத்துடலின்போது இரு அம்சங்களை நாடகவியலாளர்கள் கூறுவர்.

1. பாத்திரத்தைச் செய்து காட்டுதல்
2. பாத்திரமாகவே மாறுதல்

நாடகத்தில் நடிகன் பாத்திரத்தைச் செய்து காட்டுகிறானா? அல்லது அவன் பாத்திரமாகவே மாறுகிறானா? என்ற வினாக்கள் நீண்ட வாதப்பிரதிவாதங்களுக்கு நம்மை இட்டுச்செல்லும். இவ் இருதன்மைகளும் பொதுவாகவே நாடகங்களுக்கு மட்டுமே உரியது. நடிப்பைப் பொறுத்தவரையில் நடிகனின் ஆளுமைக்குப் பங்கம் ஏற்படாத கூற்று "பாத்திரத்தைச் செய்து காட்டுதல்" ஆகும். நாடகம் செயற்கைத் தன்மை கொண்டது. ஓருவர் இன்னொன்றாக மாறுகிறார் என்பதை விட ஒருவர் இன்னொன்றைச் செய்து காட்டினார் என்பது அவர் தன்னில் இன்னொன்றைப் படைத்தார் என்ற கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக இருக்கும் எனவே பாத்திரமாக மாறுதல் என்பதை பூரணமான பொருளுடன் சடங்கிற்குக் கையளித்துவிடலாம். நாடகத்தை நிகழ்த்துவோர் 'செய்து காட்டுகிறோம்' என்ற அடிப்படையில் 'நாம் இதனைச் செய்கிறோம்' என்ற அடிப்படையில் தமது உணர்ச்சியை அறிவால் வழி நடத்தும் தன்மை பெற்றிருப்பர். மாறாக சடங்கினை நிகழ்த்துவோர் உணர்ச்சியின் உச்சத்தில் தம்மையும் அறியாமல் சஞ்சரிப்பர். காமன் கூத்தில் இந்த நிலையை அவதானிக்க முடியும். இங்குதான் கண்ணாடி தன் உணர்வை ஏற்படுத்தப் பயன்படுகிறது.

"கூத்தில் பங்கு பெறுகின்ற பாத்திரங்கள் ஆடிக்கொண்டே போகும் போது பக்தியுணர்வும் அதிகரித்துக்கொண்டே செல்வதுண்டு. அதனால் ஆடுபவர்கள் சுயஉணர்வை இழக்கின்றனர். எனவே வெட்டப்போகும் ஆட்டைப்போல் தலையசைத்துக்கொண்டு வேகமாகக் குதிக்கத் தொடங்கி விடுகின்றனர். பல பேர் அவரை மன்றாடிப்பிடித்தாலும் ஆடுபவர்கள் தமது நிலைக்குத் திரும்புவதில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறிப்பட்ட அவர்களின் பழைய நிலைமையை நினைவு கூர்ந்து மருளை நீக்கவே கண்ணாடி பயன்படுத்தப்படுகின்றது. 'இது நான்' என்ற உணர்வைப் பெற்று பழைய நிலைக்குத் திரும்புவர் எங்கேயோ இருக்கும் நிலாவைக் கண்ணாடியில் பிடித்துக் கொள்வது போல எங்கேயோ பக்தியுணர்வால் சஞ்சரித்துக் கொண்டிருப்பவரை அந்நிலையிலிருந்து மாற்றி கண்ணாடி மூலமாகத் தம் நிலையை உணர்ந்து கொள்வதற்கு இது வழி வகுக்கும்.(சோதிமலர் ரவீந்திரன்:2004)

இக்கூற்று காமன் கூத்தில் பாத்திரநிலைப்படுதலின் உச்சதன்மையை விளக்கப்போதுமானது.

(ஊ) திரும்பத்திரும்ப நிகழ்த்துதல்

நாடகத்தில் இறந்தகால விடயம் ஒன்று நிகழ்காலத்தில் திரும்பத்திரும்ப நிகழ்த்திக் காட்டப்படும் சடங்கிலும் முன்பு நடந்தவையே இப்போதும் செய்து காட்டப்படுகிறது. காமன் கூத்தில் காமன் பற்றிய இறந்தகாலக் கதை நிகழ்காலத்தில் திரும்பத்திரும்ப நிகழ்த்தப்படுகிறது.

(எ) ஆர்வத்தைக் குறைக்காதிருக்க நடவடிக்கை

ஆற்றுவோருக்கும் நுகர்வோருக்கும் இடையில் இருக்கின்ற கவர்ச்சி விசை சடங்கிலும் அரங்கிலும் முதன்மையானது. நாடகத்தில் இசை, ஒளி, ஒலி முதலிய அரங்கியல்சார் அம்சங்கள் அனைத்தும் பார்வையாளர், ஆற்றுவோர் ஆகிய இருவருக்கும் இடையிலான உறவை வலிமையாக்குவதாக அமைந்திருக்கும்.

அது போலவே காமன் கூத்திலும் அலங்காரங்கள் காமன் ரதி முதலியோரின் ஆட்டங்கள், பாடல்கள், வாத்திய இசைகள் முதலியன இதில் பங்கு பற்றுவோரின் ஆர்வத்தைக் குறையாமல் வளர்க்கிறது. இதன்மூலம் இச்சடங்கில் அவர்கள்( பங்கு பற்றுவோர்) கரைந்து விடுகின்றனர்.

(ஏ) ஆரம்பம், உச்சம், முரண், முடிவு

நாடகம் ஆரம்பம், உச்சம், முரண், முடிவு கொண்டமைந்த ஒரு கதையைத் தன்னகத்தே கொண்டிருக்கும். அதுபோலவே சடங்கும் காணப்படுகின்றது. காமன் கூத்தைப் பொறுத்தவரையில் காப்புக்கட்டி கம்பம் ஊன்றுதலோடு ஆரம்பமாகி, ரதிக்கும் காமனுக்குமான தர்க்கத்தில் முரண்பெற்று காமதகனத்தில் உச்சம் பெற்று தோழிகள் சொல்லுதல், மகாவிஷ்ணு புலம்பல் என்பவற்றிலிருந்து இறக்கம் பெற்றுவந்து பரமன் காமனை எழுப்புதலோடு முடிவடைகிறது.

## 4. காமன் கூத்தா? காமன் சடங்கா?

காமன் கூத்து, காமன் சடங்கு என்ற சொல்லாடல்கள் இன்று வழக்கத்தில் உள்ளன. இன்று ஆய்வாளர்களில் ஒருசாரார் காமன் கூத்து என்று சொல்வதே பொருத்தமானது என்கின்றனர். இன்னொரு சாரார் காமன் சடங்கு என்று சொல்வதே பொருத்தமானது என்கின்றனர். காமன் கூத்து, காமன் சடங்கு என்ற சொல்லாடல்களின் பின்புலத்தை அறியும்போது அக்கலைக்குரிய சரியான தளத்தை நிர்ணயிக்க முடியும்.

சடங்கு என்ற பேச்சின்போது செய்பவர், பங்குபற்றுபவர், நம்பிக்கை என்ற மூன்று அம்சங்களும் அவதானிப்புக்குரியவை. சமயச் சடங்குகளின் செயல்முறைகளுக்கு அடிப்படை இதிகாச புராணக் கர்ண பரம்பரைக் கதைகள் என்பதை முன்னர் நோக்கினோம். மனித சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம், புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பவிருத்தி, பிறபண்பாட்டுத் தொடர்புகள் போன்ற இன்னோரன்ன காரணங்களால் ஒரு சமூகம் சடங்கில் கொண்டிருந்த நம்பிக்கைத் தன்மையை இழக்கிறது. இந்த நம்பிக்கைப் பிறழ்வின்போது சடங்கிலிருந்து நாடகம் மேற்கிளம்புகிறது. இது பொது நியதியாகும். இந்த இயங்கியல் நிகழ்வை எவரும் மறுக்க முடியாது. இதன்போது சடங்கினைச் செய்பவர், அதில் பங்குபற்றுபவர், அதன் மீதான நம்பிக்கை என்ற கருத்துருவங்கள் உடைந்து நடிகர்கள், 'பார்வையாளர்கள்', நாடகம் என்பன உருப்பெறுகின்றன. சமூக இயங்கியலே கலைகளின் இயங்கியலைத் தீர்மானிப்பதை இவ்விடத்தில் பொருத்திப் பார்க்க முடியும். இந்த வகையில் சடங்கு இயங்கியலின் அடிப்படையில் கலை வடிவமாக மாறுகிறது எனக்கூற முடியும். இதன்போது Ritual என்பது Performing ஆக மாற்றடைகிறது. சடங்கு ஆற்றுகைக் கலையாக, நாடகமாக மாறுகிறது.

இவ்வாறு சடங்கிலிருந்து நாடகம் மேற்கிளம்பும்போது ஓர் இடைமாறுகட்ட வடிவம் ஏற்படுகிறது. இந்த இடை மாறுகட்ட வடிவத்தை முழுமையாகச் சடங்காகவோ அல்லது முற்று முழுதாக நாடகமாகவோ கொள்ளமுடியாத நிலை ஏற்படுகிறது.

சடங்கு நாடகம் என்ற இரண்டினது தன்மைகளும் இந்த இடைமாறு கட்டவடிவத்தில் காணப்படும் . இந்த நிலையில்தான் அது கூத்து அல்லது நாடகம், சடங்கு என்ற இரு சொற்களாற் சுட்டப்படுகிறது.

காமன் தொடர்பான நிகழ்த்துகையும் இந்தப் பின்னணியிலேயே நோக்கப்படவேண்டியது. இது முற்று முழுதாக சடங்கோ அல்லது முற்று முழுதாக நாடகமோ அல்ல. இது ஒரு விளிம்பு நிலைக் கலை வடிவம். இந்த விளிம்புநிலைக் கலை வடிவத்தில் சடங்கின் தன்மைகளே அதிகம் காணப்படுகின்றன. இத்தகைய விளிம்பு நிலையிலேயே இது காமன் கூத்து, காமன் சடங்கு என்ற இரு பெயர்களாலும் சுட்டப்படுகிறது.

எனவே சடங்கிலிருந்து நாடகம் நோக்கிப் பயணிக்கின்ற ஒரு இடைமாறுகட்ட அல்லது விளிம்பு நிலைப்பட்ட கலை வடிவமாகக் காமன் கூத்து முதன்மை பெறுகிறது. ஆதிச் சமூகத்தில் தொன்மமாக, அதீத கற்பனை சார்ந்ததாக இருந்த ஒன்று வர்க்கச் சமூகத்தில் கலையாக மாறிவருவதை நாம் காமன் கூத்தினை அவதானிக்கும்போது புலனாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. நாடகம்சார் சமயக்கரணம்

சி. மௌனகுரு நாடக வளர்ச்சியில் 3 படி நிலைகளைக் குறிப்பிடுவார்

1. நாடகம் சார்ந்த சமயக் கரணங்கள்
2. சமயக் கரணங்கள் சார்ந்த நாடகங்கள்
3. சமயக் கரணங்கள் சாராத நாடகங்கள்

இவற்றில் நாடகம் சார்ந்த சமயச் சடங்குகளை அவர் நான்கு வகைப்படுத்துவார்.

(i) மதகுருவே தெய்வமாக அபிநயித்து ஆடுகின்ற சமயச் சடங்கு
(ii) மதகுரு இயக்க இன்னொருவர் தெய்வமாக அபிநயித்து ஆடுகிற சமயச் சடங்கு.
(iii) ஐதீகக் கதைகளை உள்ளடக்கிய சமயச் சடங்கு.
(iv) நாடக நிகழ்ச்சிகள் தனியாகப் பிரியத் தொடங்கிய சமயச் சடங்கு.

இவற்றில் அவர் பாண்டிருப்பில் உள்ள திரௌபதை அம்மன் கோயிற் சடங்கையும், மலையகத்தில் நடைபெறும் காமன்கூத்தையும் நான்காவது வகையினுள் அடக்குவார். திரௌபதை அம்மன் கோயிற் சடங்கினை இதற்குள் அடக்குவது பொருத்தமற்றது. அதனை ஐதீகக் கதைகளை உள்ளடக்கிய சமயச் சடங்கிற்குள் அடக்குவதே பொருத்தமானது. ஏனெனில் காமன் கூத்து மிகச் மிகச் சிறிய அளவில் மேடையேற்றப்பட்டுள்ளன. வீ. எச். வேலு காமன் கூத்தை ஒரு மேடை நாடகமாகக் கூட எழுதியுள்ளனர். கதை மரபு மாற்றத்துடன் இவை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் திரௌபதை அம்மன் கோயிற் சடங்கு கலை என்ற நிலைக்கு ஓரளவு வந்துவிட்டதா? என்பதும் கேள்விக்குரியது.

திரௌபதை அம்மன்சடங்கில் கொடியேற்றச் சடங்கு, சமயம் எடுத்தல், சுவாமி எழுந்தருளப் பண்ணும் சடங்கு, நாற்கால் வெட்டும் சடங்கு, கல்யாணக்கால் வெட்டும் சடங்கு, வனவாசம் போகும் சடங்கு தவநிலைச் சடங்கு, தீ மிதிப்புச் சடங்கு, பாற்பள்ளயச் சடங்கு முதலியன நிகழ்த்தப்படுகின்றன.

காமன் கூத்தில் காப்புக்கட்டுதல், கம்பம் ஊன்றுதல், விநாயகர் துதி, ரதி-காமன் திருமணம், பெண்கள் காமனுக்குத் தன் நேர்த்தியை நிறைவுசெய்தல், காமன் பொட்டலில் காமன்-ரதி ஆட்டம், காமன்-ரதி கல்யாண ஊர்வலம் வருதல், சிவனும் தவச்சாலையும், காமனைக் காணத் தூதன் வருதல், காமன் சிவனின் தவத்தை அழிக்க ஒப்புக் கொண்டமையை ரதிக்குக் கூறல், ரதி காணுதல், காமன் தூதனைச் சந்தித்துப் பெற்ற செய்தியைக்கூறுதல், ரதியின் மறுமொழி, ரதிதேவிக்கும் காமனுக்கும் தர்க்கம், காமன் வசந்தனை அழைத்தல், காமன் கோணேசர் பூசை செய்தல், தோழிகள் சொல்லுதல், மகாவிஷ்ணு புலம்பல், பரமன் விருத்தம், பரமன் காமனை எழுப்புதல் முதலியன நிகழ்த்திக்காட்டப்படுகின்றன. ஆனால் காமன்கூத்து நாடகமாகவும், சடங்காகவும் மேடையேற்றப்பட்டும் நிகழ்த்தப்பட்டும் வருகின்றது. திரௌபதை அம்மன் சடங்கு தனியே சடங்காக மட்டுமே நிகழ்த்தப்பட்டு வருகிறது. இதற்குப் பல சமூக பொருளாதார அரசியற் காரணங்கள் உள்ளன.

எனவே காமன்கூத்து நாடகம் சார்ந்த சமயக்காரணங்களால், நாடக நிகழ்ச்சிகள் தனியாகப் பிரியத் தொடங்கிய சமயச் சடங்காக விளங்குகின்றது. எனவே விளிம்பு நிலைக் கலையாக காமன்கூத்து விளங்குவதை இங்கு அவதானிக்க முடிகிறது. சி. மௌனகுரு காமன் கூத்துப்பற்றிக் குறிப்பிடும் போது "இங்கு நாடகமானது சமயச் சடங்குடன் பின்னிப்பிணையாமல் மெல்லப் பிரிவதனை அவதானிக்கலாம்." (சி. மௌனகுரு: 1993) என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

## 6. முடிவுரை

மலையகத்துக்கே உரிய தனித்துவமானகலை வடிவமாகிய காமன் கூத்து இன்று இலங்கையில் உள்ள தமிழர் கலை வடிவங்களால் விளிம்பு நிலைக் கலையாகவும், மலையகச் சிறுதெய்வங்களில் ஒன்றான காமன் தெய்வத்திற்கான பெருவழிகாட்டு முறையாகவும், சடங்கிலிருந்து கலை நோக்கிப் பயணிக்கும் சிறப்பு நிலை வடிவமாகவும் காணப்படுகிறது. இது காமன் கூத்தின் சிறப்பினையும் அதை நிகழ்த்தும் மலையகச் சமூகத்தின் பெருமையையும் காட்டிநிற்கிறது.


உசாத்துணைகள்

சிவத்தம்பி, கா., (2004) **பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்,**
கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி, கா., மௌனகுரு, சி., திலகநாதன், க., (1999) **அரங்கு ஓர் அறிமுகம், திருகோணமலை.**
அமரர் சி. பற்குணம் நினைவு மலர்க்குழு.


மௌனகுரு, சி., (1993) **ஈழத்து தமிழ் நாடக அரங்கு,**
யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

சோதிமலர் ரவீந்திரன் (2004) **காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும்,** சன்பிரின்றஸ் பதிப்பகம்

ஜோர்ஜ் தாம்சன் (2005) **மனிதசாரம், அறிவியல், கலை ஆகியவற்றின் தோற்றுவாய்கள்,**
கோயம்புத்தூர் விடியல் பதிப்பகம்.

Harrison, Jane Eller., (1951) Ancient Art and Ritual, Britain.


(காமன் கூத்தும் மலையகப் பாரம்பரியமும் என்ற நூலுக்கு இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய மதிப்புரை)
ஞானம் - 56 ஜனவரி 2005





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சி மண்ணில் கொத்மலைப் பிரதேசம்

குமாரப்பிள்ளை சந்திரக்குமார்- இறம்பொட

அழகே நீ பிறந்தது இவளிடம்தானா? என்று காண்போரை ஏங்கவைக்கும் அழகிய எழில் மிகு காட்சிகள், எங்கு நோக்கினும் உயர்மலைக் காடுகள் ஆங்காங்கே உருண்டோடிவரும் நீர்வீழ்ச்சிகள் சர்ப்பமாய் வளைந்துநெளிந்து செல்லும் சாலைகள் ஆங்காங்கே தென்படும் பாறைகள் இவையெல்லாம் ஒருங்கே பெற்று அதனகத்தே மங்களகரமாக விளங்க பசுமை மிகு பொன் விளையும் மண்ணிலமே மலையகம் எனில் மிகையாகாது.

பச்சைத் தங்கமே, பத்தரை மாற்றுத் தங்கமாய் மிளிரும் இம் மண்ணிலத்தின் வரலாறு மலையகத்தின் தமிழர் ஆய்வில் முதன்மைப் படுத்தப்படுகின்றது.

பற்றைக் காடுகளாகவும் பாழடைந்த பூமியாகவும் கிடந்த மலையகபூமியை பசுமைநிலமாக்கி பாதைகள் குடிமனைகள் நகரங்கள் கட்டிடங்கள் என்பன நிர்மாணித்து இயற்கையின் எழில் மிகு காட்சிகளுக்கு மெருகூட்டிய இம்மக்களது வாழ்க்கை வரலாறு காவியமாக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இதனை கருத்தில் கொண்டு மலையகம் பற்றிய ஆய்வுகள் பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மக்களது அரசியல் சமய சமூக கலை கலாச்சார பொருளாதார பண்பாட்டு பாரம்பரியங்களின் வெளிப்பாடுகள் இலக்கிய வடிவங்களாகவும் செவி வழிப்பாடல்களாகவும் பரம்பரைக் கதைகளாகவும் அவ்வப்போது வெளிப்படுத்தப்பட்டாலும் கூட அவை பூரணப்படுத்தப்படவில்லை என்பது பலரது ஆதங்கமாகும்.

இந்நிலையில் மத்திய மாகாணம் முழு மலையகத்தினதும் மையப்புள்ளியாக நின்று தனித்துவத்தை பல வழிகளிலும் வெளிப்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். இம்மாகாணத்தின் 03 மாவட்டங்களாக கண்டி, மாத்தளை, நுவரெலியா என்பனவற்றின் வரலாற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பல குரல்கள் ஒலித்தபோதும் ஆய்வாளர்கள் கண்டி மாத்தளை ஆகிய மாவட்டங்களின் ஆய்வுகளை நூல் வடிவில் தந்துள்ளனர். ஆயினும் நுவரெலி மாவட்ட ஆய்வும் முழுமையாக நோக்கப்படவில்லை என்பதும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

இதனை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் இம் மாவட்டத்தின் வரலாற்று ஆய்வு முழமையாக மேற்கொள்ளப்படல் வேண்டுமெனும் வேட்கையுடன் நான் வாழும் கொத்மலைப்பிரதேசம் பற்றிய தேடல்களை இங்கு தெளிவுபடுத்த துணிந்துள்ளேன்.

கொத்து கொத்தாக மலைகள் சூழ்ந்த பிரதேசமாக விளங்கும் இம்மண்ணானது ஏறத்தாழ 52340 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். அழகிய கணவாய்களைக் கொண்ட இப்பிரதேசம் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தே அதாவது இலங்கை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே ஒரு வகையான மலைஜாதியினர் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் அவர்கள் இயக்கர்- நாகர் என்று அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

அதனடிப்படையில் இயக்கர் குலத்தவனான இராவணன் ஓர் இந்து மதத்தைச் சேர்ந்தவனாகவும் அவனது உறவினரும் வழித்தோன்றல்களும் வாழ்ந்த பிரதேசமாக இம் மண்ணின் கலாச்சாரத் தொடர்பு ஆரம்பமாகின்றது.

ஆதிகாலந்தொட்டே இலங்கையில் ஆன்மீக ரீதியாக குறிப்பாக சைவசமயம் தழைத்தோங்கி வந்தமையை திருமூலரது சிவபூமி எனும் கூற்று பறைசாற்றுகின்றது. பூர்வீக குடிப்பிறப்புக்களான இயக்கர்- நாகர்- சிவபக்தர்கள் என்றும் பாடல் பெற்ற தலங்களான திருகேதீஸ்வரம் திருகோணேஸ்வரம் இவர்களது பிரதான வழிபாட்டு தலங்களாக மிளிர்ந்தன என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இதிகாச புராண வாயிலாக இலங்கையில் வாழ்ந்ததாகக் கருதப்படும் மாதுவட்டா விசுவகா்மா மயன் குபேரன் இராவணன் மண்டோதரி முதலியோர் சிவனை முழு முதற் கடவுளாக வழிபடும் இயல்பினராய் விளங்கியதாகவும் அதற்கு சான்றாக இலங்கை திருநாட்டின் நாலாப்புறங்களிலும் காவலரண்களாக புராதன ஈச்சரங்களான திருகேதீஸ்வரம் திருகோணேஸ்வரம் நகுலேஸ்வரம் முன்னேஸ்வரம் ஆகியவை விளங்குவதையும் கருத்தில் கொள்ளலாம்.

இத்தகைய ஆதாரக் குறிப்புக்களுடன் கொத்மலைப் பிரதேச ஆன்மீகசெயற்பாடுகளை ஒப்பு நோக்குமிடத்து இப்பகுதியில் காணப்படும் இடங்கள் சிலவற்றினதும் ஆலயங்களின் வரலாறுகளும் இராமாயணத் தொடர்புகளுக்கு கட்டியம் கூறுவதாய் காணப்படுவதை மறுப்பதற்கில்லை. இதனை கொத்மலை-உடபுளத்கம வட்டாந்தர ஞானோதய பிரிவேனாதிபதி பண்டித யடிகம்மன வாவிசர நாயக்க தேரோ தனது கட்டுரை ஒன்றின்மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

சிவபக்தனான இராவணன் தான் வாழுமிடமெங்கும் சிவாலயம் அமைத்து தரிசித்து வந்தான் என்பதற்கு சான்றாக இறம்பொட வெவண்டன்மலை உச்சியில் சிவாலயம் ஒன்றை அமைத்து தரிசித்து வந்தான் என்றும் அதனடிவாரத்தில் அடியார்கள் தங்கிச் செல்ல சிவாலயமடமென்றை அமைத்திருந்தான் எனவும் ஐதீகக்கதைகள் கூறுகின்றன. அதேபோல் இராவணாகொட எனுமிடமும் இராவணனது பெயரில் காணப்படுகிறது. ஞானசம்பந்தர் தன் திருவாய் மலர்ந்து இராவணனது மேலது நீறு என்றுபாடிய புகழுக்குரியவனான இலங்கை வேந்தன் இராவணன் பெண்ணாசை மிகக்கொண்டு சீதையை சிறைப்பிடித்து தனது புஸ்பக விமானத்தில் கொண்டேகி இலங்கையின் அசோக வனத்தில் சிறைவைத்தான். என்றும் சீதையைத்தேடி வந்த இராம தூதனான ஸ்ரீ பக்த ஹனுமான் கொத்மலை இறம்பொட வெவண்டன்மலை உச்சியில் இராவணனால் வணங்கி வழிபட்டு வந்த சிவாலயமண்ணில் தனது திருப்பாதங்களை ஊன்றி சீதாபிராட்டியை காணாது மீளமாட்டேன் என்று திடசங்கற்பம் பூண்டதாகவும் வரலாறு கூறுகின்றது.

சிவபெருமானின் இன்னுமொரு அம்சமான ஸ்ரீ ஆஞ்சநேயப்பெருமான் ஆஜானுபாகுவாக விளங்குகின்ற புண்ணிய பூமியே மேற்கூறிய திடசங்கற்பம் பூண்ட ஸ்ரீ பக்த ஹனுமான் ஆலயமாகும்.

இவ்வாலயத்தின் அடிவாரத்தில் ஆறுமுகனின் ஆலயம் அமைத்திருப்பதுவும் அதற்கணித்தாக ஆலயமடம் அமைந்ததாகவும் செவி வழிக்கதைகள் கூறப்படுகின்றன. அதாவது அக்காலகட்டத்தில் இலங்கை முழுதும் சைவம் பரவி இருந்தமைக்கான ஆதாரங்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதுடன் கதிர்காமகந்தனை தரிசிப்பதற்காக அடியார்கள் கால்நடையாக சென்றதாகவும் செல்லும் வழியில் இறம்பொட வெவண்டன்மலை உச்சியில் அமைத்திருந்து அருள் பாலித்த சிவபெருமானை தரிசித்துவிட்டு அன்றைய இரவை அங்கு காணப்பட்ட மடத்தில் கழித்துவிட்டு மறுநாள் காலை தங்களது பயணத்தை ஆரம்பித்ததாகவும் கூறப்படுகின்றது.

தாம் ஆரம்பித்த யாத்திரையை இடைநடுவில் நிறுத்தி விடாது இரவு பகல் பாராது கதிர்காமத்தை அடைந்து விட வேண்டுமென சில அடியார்கள் துணிந்ததாகவும் ஆனால் இறம்பொடயை கடந்து உயர்ந்து செல்லும் நுவரெலியா மலைத்தொடரினிடையே பல்வேறு கஷ்டங்கள் ஏற்படக்கூடுமென எச்சரிக்கை செய்யவே நாகதெய்வம் தோன்றி அடியார்களுக்கு காட்சி கொடுத்து பயணத்தை இடை நிறுத்தியதாகவும் தான் அவர்களை தீண்ட வந்த பாம்பல்ல காக்க வந்தகாவல் தெய்வம் என்பதற்கு அடையாளமாக சிவலிங்கப்பெருமானை தாங்கி நிற்கும் ஐந்து தலை நாகமாக காட்சி கொடுத்துகல்லாக சமைந்ததாகவும் கர்ணபரம்பரைக்கதை கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இராமாயண தொடர்புடையதான கொத்மலை நுவரெலியாமாவட்ட ஏனைய பிரதேசங்களான சீதாஎலிய, கொண்டகல, இராவணகொட. என்பவற்றிற்கிடையிலான இடப்பெயர்களுடன் ஒப்பிடுமிடத்து ஒவ்வொன்றிற்குமிடையிலான ஆன்மீக புராதன தொடர்புகள் வலுப்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் விஜயன் வருகையின் பின் குவேனியுடனான தொடர்பும், அதனால் ஏற்பட்ட வழித்தோன்றல்களான பௌத்த பரம்பரையும் தோன்றுவதற்கு வழி வகுத்தமையும் குறிப்பிடத்தக்கது. பௌத்த குருமார் சகிதம் புத்தபெருமான் முதன் முதல் இலங்கைக்கு வந்தபோது களனியில் இருந்து சமனல கந்த வரை பாதயாத்திரை மூலம் செல்ல வழி இருந்ததுடன் கொத்மலையை அண்டியதாகவும் அல்லது மலை நடுவே ஊடறுத்துச் சென்றால் வலப்பனை மூலம் மகியங்கனையை சென்றடையலாம் எனும் நம்பிக்கையுடன் பல்வேறு கஸ்டங்களையும் பொருட்படுத்தாமல் சென்றடைந்ததாகவும் பௌத்த மத சான்றுகள் கூறுகின்றன.

அதே போல் அனுராதபுர காலத்தில் மகிந்த தேரோ வருகை தந்து கொத்மலை வழியாக மகியங்கனையை சென்றடைந்ததாகவும் சாதக கதைகள் கூறுகின்றன. அதாவது களனி - கொத்மலை-மகியங்கனை எனும் திரிகோண தொடர்பு ஏற்பட்டதாக அறியப்படுவதில் இருந்தும் இப்பகுதியிலுள்ள பௌத்த விகாரைகளின் தோற்றம் பற்றிய விடயங்கள் புலப்படலாயிற்று.

இயற்கை காவலரண்கள் நிறைந்த பாதுகாப்பு பிரதேசமான கொத்மலை, அனுராதபுர காலம் முதலே அடைக்கலம் தரும் பிரதேசமாக விளங்கியது. ஆகையினால், தான் அன்றே துட்டகைமுனு அரசனுக்கு பாதுகாப்பு வழங்கியதாகவும் அம்மன்னன் தங்கி இருந்த பகுதி கொத்மலை மாஸ்வெவ - மாவல எனுமிடங்கள் என்றும் கூறப்படுகின்றது.

இம்மன்னனது வழித்தோன்றல்களில் வந்தவர்களுள் ஒருவர் தான் முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா என்றும் அவரது பரம்பரை வீடும் இப்பகுதியில் தான் இருப்பதுவும், துட்டகெமுனு நீராடிய பீலி என்ற பதம் இன்னும் வழக்கில் இருப்பதுவும் குறிப்பிடத்தக்கது. இலங்கை மகாவம்சம் நூலில் இவ்விடயங்கள் பதியப்பட்டுள்ளன.

இப்பிரதேச நிர்வாக அதிகாரங்கள் பண்டைய காலத்தில் 05 கோறளைகளாக பிரிக்கப்பட்டிருந்தன. அவையாவன, ரம்பொடை, உடபனே, பல்லேபென, மெதபனே, திஸ்பனே- ஆகியனவாகும். ஒவ்வொரு கோரளைக்கும் ஒரு நிர்வாக அதிகாரி வீதம் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த நிர்வாக அதிகாரிகளின் வழித்தோன்றல்களாகவே ஆராச்சி மாத்தயா எனும் கிராமசேவகர்கள் செயற்பட்டார்கள்.

இதனிடையே ஆங்கிலேயர் வருகையின் பின் ஆரம்பமான பெருந்தோட்டத்துறையானது இப்பிரதேசத்திலும் காலூன்றத் தொடங்கியது. கோப்பி, தேயிலை உற்பத்தி பெருகியது. கிராமப்புற மக்கள் கோப்பி செய்கையிலும் பெருந்தோட்ட மக்கள் தேயிலை உற்பத்தியிலும் ஈடுபட்டு வரலாயினர். இன்றுவரை இத்தகைய உற்பத்தி முறைகள் பேணப்பட்டு வருவதுடன் பெருந்தோட்ட மக்கள் விவசாயத் தொழில்களையும் இணைத்துக் கொண்டனர். கிராமிய மக்கள் மிளகு, கறுவா, ஏலம், போன்றவற்றுடன் நெல் உற்பத்தித்துறையிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் சுதேச மொழி கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு விகாரைகளில் பௌத்த கல்வி போதிக்கப்பட்டு வந்ததுடன், தோட்டப்பகுதிகளில் 5 ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகள் ஓர் சிறிய அறையில் போதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயே - கிழக்கிந்திய கம்பனிகளின் இலாபங்கருதிய உற்பத்தி முயற்சியில் இப்பெருந்தோட்ட மக்களது கல்வி, வாழ்க்கை. பொருளாதாரம் உட்பட அனைத்து அடிப்படை வசதிகளும் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் முடக்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். அதே வேளை கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டதுடன் அம்மதத்தை பின்பற்றுபவர்களுக்கு மிஷனரி பாடசாலைகளும் ஆங்காங்கே நிறுவப்பட்டன. இத்தகைய மிஷனரி பாடசாலை ஒன்று இறம்பொடை - வேவண்டன் தோட்டத்திற்கு செல்லும் வழியில் அமைக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடமே தற்போது கூட்டுறவு சங்க கடையாக செயற்படுகின்றது.

இதே வேளை, கொத்மலை பகுதியின் மிக பிரபலமான சிங்கள பாடசாலையான ஹேதுனுவெவ மத்திய மகா வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக (1946 முதல் 1949 வரை) எஸ். சுப்பிரமணியம் என்ற தமிழரே கடமையாற்றியுள்ளமையும் சிறப்பம்சமாகும். கொத்மலையில் காணப்படும் சில முக்கிய இடங்களின் பெயர்கள் இயற்கையோடு தொடர்புடையதாக காணப்படுகின்றன.

குறிப்பாக 'கொத்மலை' என்பது நாம் ஏலவே குறிப்பிட்டது போல கொத்து... கொத்தாக மலைகள் சூழ்ந்தமையால் வந்தது என்பது தமிழர்களின் கருத்தாக விளங்கும் அதே வேளை, சிங்களவர்கள் பென்னம்பெரிய கற்பாறைகளைக் கொண்ட மலைகளை 'கொத்பது கந்து' என்று அழைப்பதாகவும், இப்பகுதியில் தமிர்களும் - சிங்களவர்ககளும் இன ஐக்கியத்துடன் வாழ்வதற்கு சான்றாக அம்மக்களிடையே காணப்பட்ட நல்லுறவினடிப்படையில், 'கொத்' எனும் சிங்கள மொழி பதத்துடன் 'மலை' எனும் தமிழ்மொழியும் இணைந்துக் கொண்டமையால் 'கொத்மலை' எனும் பெயர் உருவாயிற்று என்றும் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். அதற்கு உதாரணமாக. 'உக்கல, 'தொரகல', 'மொனராகல', 'கருணைக்கல்', 'கொன்கல', 'யக்கினிகல', 'கையிப்புகல' - என்பன பெரும் கற்பாறை மலைகளைக் கூறலாம்.

இரம்பொடை என்பது "இராமரது படை" என்றும் இராமநாமத்தை உச்சரித்து வந்த ஸ்ரீ பக்த ஆஞ்சனேயன் தனது பாதத்தை ஊன்றிய இடமென்பதால் "ராம் போத்" என்றும் அதுவே மருவி "ரம்போடை" யாக வந்தது என்றும் கூறப்படுகின்றது. அதே வேளை சிங்கள மக்கள் "ரத்தரங்பொட" அதாவது "தங்கச் சுரங்கம்" இருந்ததாகவும் அதை நம்பித் தோண்டிய கற்பாறையின் எஞ்சிய பகுதியே, தற்போதும் இறம்பொடை நகரை அண்டியதாக காணப்படும் குகைப்போன்ற அமைப்பு என்றும், ஆகவே "ரத்தரங்பொட" என்பது தான் மருவி ரம்பொடையாக வந்தது என்றும் கூறுகின்றனர்.

"கொண்டகல" என்பது வெடிமலை (வெதமுல்ல) தோட்டத்திற்கும்-லபுக்கலை தோட்டத்திற்குமிடைப்பட்ட பிரதேசமாகும். இங்கு காணப்படும் கற்பாறையின் மேற்பரப்பில் தட்டையான நீரோடை ஒன்று காணப்படுகின்றது. சீதா பிராட்டியை சிறை வைத்த இராவணன், அத்தேவியை, இந்நீரோடைக்கு அழைத்து வந்து நீராட்டி மகிழ்விக்குமாறு தனது அரக்கர் குலத்திற்கு கட்டளை இட்டதாகவும் அவ்வண்ணமே அப்பணியை ஏற்று செயற்பட்ட அரக்கர் குலப்பெண்கள் மத்தியில் சினமுற்ற சீதாதேவி தனது ஏகபத்தினி விரதனான இராம பிராணைக் காணாது நீராடமாட்டேன் என தனது கொண்டையை (தலைமுடி) அவிழ்த்து விட்ட இடமென்பதால் "கொண்டை கலை" எனும் பெயர் உருவானதாகவும், அதுவே பின்னர் "கொண்டை கலை" எனும் பெயர் உருவானதாகவும் அதுவே பின்னர் "கொண்டகல" என மாறியதாகவும் கூறப்படுகின்றது. இந்த இடத்திலுள்ள இன்னுமொரு விசேடம் என்னவெனில், இம்மலைக்கு நேரெதிரே காணப்படும் "கருணைக்கல்" மலைத் தொடரை இன்றும் நோக்கும்போது அங்கு ஓர் பெண் தனது தலைமயிரை அவிழ்த்து விட்டு நீட்டி நிமிர்ந்து படுத்து இருப்பதைப் போன்ற காட்சியைக் காணலாம். இதுவும் சீதாப் பிராட்டியின் சத்தியம் தவறாத தன்மையையும், மனநிலையின் வெளிப்பாடும் பிரதிபலிக்கும் வகையில் காலந்தோறும் சாட்சியாக தென்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வேண்டுமெனும் நோக்கோடு இயற்கை தெய்வம் காட்டி இருப்பதைப்போல் தெரிகின்றது.

அதே வேளை இம்மலைத்தொடரில் (கொண்டகல) ஒரு மன்னனின் "மணிமுடி" வரைந்து அல்லது செதுக்கப்பட்டுள்ளது. (இன்றும் அதனைக் காணலாம்) இதற்கு சுமார் 500 யார் மைல் தொலைவில் வெடிமலை தோட்டத்தில் ஒரு சுரங்க பாதை இருந்தமைக்கான சான்றும் உள்ளது. இதன் வழியாகவே, ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியதன் பின், அவர்களிடமிருந்து தப்பி ஓடி வந்த "வீரகெப்பிட்டிப்பொல" கொத்மலையில் தஞ்சம் புகுந்ததாகவும், பின்னர் இக்குகை (சுரங்க பாதை) வாயிலாக வெலிமட-கெப்பிட்டிப்பொல என்ற இடத்தை அடைந்ததாகவும் மகாவம்ச நூலை ஆதாரம் காட்டி பௌத்த சான்றுகள் கூறுகின்றன. எனவே அம்மன்னனது நினைவாகவே அம்மலையில் "மணிமுடி" பொறிக்கப்பட்டதாகவும், ஆகவே, அவ்விடத்திற்கு "கொண்டகல" எனும் பெயர் வந்ததாகவும் பௌத்த ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆயினும் 1815 க்கு பின்னர் தான் இந்நிலைமைகள் எழுந்ததாக வரலாறு கூறினாலும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே புராண இதிகாசங்கள் தோற்றம் பெற்றிருந்தன என்பதிலிருந்து இக்கூற்று சிந்திக்க வேண்டியதாகின்றது.

"இராவணா கொட" - எனும் இடம் கூட "சேனரத் பரணவிதாரணவின் கருத்தின்படி சிங்கள மொழியில், "நெருப்பு" என்பதாகும். அதாவது "இராவனா கொட" - "கினி கொட" (தீச்சுவாலை) எனும் அர்த்தம் தருவதாக கூறுகின்றார். "கொத்துனுகொட" எனுமிடத்தில் ஆரம்பமான தீச்சுவாலை (ஸ்ரீ பக்த ஆஞ்சனேயன் தன் வாலில் நெருப்பை கட்டிக்கொண்டு சீதாபிராட்டியை தேடி அலைந்த வேளையில் ஏற்பட்ட தீச்சுவாலையாக இருக்கக் கூடும்) "ரதாகல்பொட" வரை பரந்து இருந்தது என்றும் அங்குள்ள நீர்வீழ்ச்சியை ஊடறுத்து சென்றதாகவும் குறிப்பிடுகின்றார். எனவே குறிஞ்சி நிலத்தை பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் வேளை, சகல வழிகளிலும் சரித்திர சான்றுகளைக் கொண்ட கொத்மலை பிரதேசத்தின் வரலாறும் உள்ளடக்கப்படல் மிக அவசியமாகும்.

வெறுமனே ஒரு பிரதேசத்தினது தொன்மைகளை வைத்துக் கொண்டு ஒரு மாவட்டத்தின் ஆய்வை வெளிப்படுத்த முடியாது எனினும் தொடர்ந்து ஏனைய பிரதேசங்கள் பற்றிய ஆய்வுகளும் மேற்கொள்வதற்கு வழித்துணையாக இக்கட்டுரை அமையக் கூடுமென நம்புகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சுவையறியாத் தமிழர்கள்

இரா. இராஜகோபால்
நாவலப்பிட்டி

உலக மொழிகளுள் இனிமையானது தமிழ். தமிழ்மொழி தொன்மை வாய்ந்தது. கன்னித்தமிழ் என்று கற்றுணர்ந்த பெரியார்கள் களிப்புடன் போற்றும் தமிழ்மொழி தமிழின் இனிமையை கூறவா வேண்டும்! தமிழ்மொழி சுவையுடைத்து என்பதும் அவ்வாறே.

ஆனால் இன்று தமிழர்களுள் பலர் தமிழுலகில் உழவும் தமிழரென்போரின் தமிழ்ச்சுவையறியா மக்கள் கூட்டமே அதிகம். தமிழரென்பதன் பொருள் தமிழை சிதைவுபடுத்தி கொச்சையாக வாயாற் பேசும் பலர் நிறைந்த கூட்டத்தார் என்று கருதவேண்டியுள்ளது. தமிழருள் தமிழ்ச்சுவையறிந்தார் மிக சிலரே.

இன்று தாய்மொழியின் சுவை அறியாது பெருமையறியாது வாழும் மக்களில் தலைசிறந்தவர் தமிழர் என்பதை எவரும் மறுக்க முடியாது. தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்றார் புரட்சிக் கவி பாரதி.

தமிழுக்கு அமுதென்று பேர் என்பது பாரதிதாசனது கவிதை. தமிழ்மொழியின் அழகு தமிழருக்கு தெரிவதில்லை. தமிழ் பேசுவதிலும் படிப்பதிலும் எழுதுவதிலும் தன்னையறியாமல் தமிழனுக்கு உண்டாகும் உள்ளுவப்பே தான் தமிழின் அழகுக்கு பிரமாணம். அந்த அழகை வெளித்தோற்றமாக தமிழருக்கு எடுத்துக்காட்டுவது சிரமம். பிறமொழிகளை கடன் வாங்கி வாங்கி தமிழ்மொழியை மறக்கவும் வெறுக்கவும் ஏற்படும். மொழிபிச்சையில்லாவிட்டால் வாழ்க்கையே சாத்தியமில்லை என்று முடிவுகட்டி விட்டது, போல் (2) கொள்கிறோம்.த ஆங்கிலத்தை பேசும் போதும் எழுதும்போதும் எனது உனது என்றெல்லாம் ஏது? விஷயம் தானே முக்கியம் காலத்தை ஏன் வீண்போக்க வேண்டும்? என்றெல்லாம் வாதிடுவார்கள். இதற்கு பதில் சொல்லி முடிவு கட்ட இயலாது. யுத்தி வாதத்தை விட உள்ளத்தின் உவப்பே பிரமாணம் தமிழ் மொழியில் ஒன்றை குறித்தவுடன் தமிழனுக்கு அது மனதோடு கலந்து மகிழ்ச்சி தருகிறது. ஏனைய இரவல்கள் தமிழனுக்கு அந்த மகிழ்ச்சியை உண்டாக்க மாட்டா.

தமிழனுக்கும் சமயத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கி. பி. 6ம் நூற்றாண்டு தொடக்கம் 9ம் நூற்றாண்டுவரை தமிழ்நாட்டில் சைவமுழக்கஞ் செய்தவர்கள் எமது நாயன்மார்கள். தமிழன் என்ற சொல்லை முதன் முதலில் பிரயோகித்தவர் நாவரசர் தமிழ் ஞானசம்பந்தர் என்று தமது நாமத்தை தமிழோடு புணர்த்தி அறிமுகஞ்செய்து வைத்தவர் ஞானசம்பந்தர். தமிழ் தமிழ் என்று தற்காத்து வந்தவர்கள் இவர்கள். தமிழின் பெயரால் ஆண்டவனை துதித்தும், வைதும் அழுதும் அரற்றியும் ஆடியும் பாடியும் நின்றவர்கள். கொஞ்சி தமிழ் பாடினார் சம்பந்தர். கெஞ்சு தமிழ் பாடினார் நாவரசர், மிஞ்சு தமிழ் பாடினார் சுந்தரர், உருகும் தமிழ் பாடினார் மாணிக்கவாசகர். அன்புத் தமிழ் அழகுத்தமிழ் இன்பத் தமிழ் அமுத்தத்தமிழ் உணர்ச்சித்தமிழ் பக்தித்தமிழ் மறுமலர்ச்சித்தமிழ், பிள்ளைத்தமிழ் என்றெல்லாம் புகழத்தக்கது திருமுறை தமிழாகும்.

மற்ற எந்த மொழியிலும் காணமுடியாத அளவில் தெய்வத்தை வணங்க உதவும் தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி திருவருட்பா திருப்புகழ் முதலிய பக்தி பாடல்கள் மிகுந்தது தமிழ்.

எந்த திசையிலுள்ள எந்த மொழி சொற்களையும் சொந்தமாக்கி கொள்வதற்கென்றே தன்னுடைய இலக்கண நூலில் 'திசை சொல்' என்ற பகுதியை இணைந்துள்ள மொழி தமிழ் மொழிதான். உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் அவைகளுக்குச் சொந்தமில்லாத பிறமொழிசொற்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கென்றே தன்னுடைய இலக்கண நூலில் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துள்ளது தமிழ் மொழிதான். எனவே தமிழ்மொழியானது எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் அழகுற அமையப் பெற்றது. சரித்திர ஆராய்ச்சிகளுக்கு எட்டாத காலத்திலிருந்து இன்றளவும் செழுமை குறையாமல் இருந்து வருகிறது. தமிழ் மொழி, இலக்கியம் இவை இடம் பெற்றிருப்பது மிக பொருத்தமாகும். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அழியாமல் குறையாமல் நிலைத்திருக்கும் தமிழ்மொழியே தமிழரின் இடையறாத தொடர்ச்சிக்கு பெரிதும் காணமாகும். கற்றோர் கவனத்தை கவர்ந்த மற்றோர் தனி சிறப்பும் இம்மொழிக்குண்டு. தமிழ்மொழி சமுதாயத்தின் சிறப்பு மொழியாக மதம், கல்வி போன்ற துறைகளுக்கு மட்டும் பயன்படவில்லை. மக்களின் அன்றாட வாழ்வோடு இரண்டற கலந்து ஜீவசக்தியுடன் விளங்கி வருகிறது.

தமிழ் பெருமக்களின் நாகரிகத்தில் இரு விஷேச இயல்புகள் உண்டு. சங்கம் நிறுவியது, அன்று உருவான இலக்கியங்கள் சங்க இலக்கியங்களென்றே கூறப்பட்டன. மற்றொரு தொல்காப்பியம் போன்ற விரிவான நுட்பமான இலக்கண நூல்கள் அக்காலத்திலேயே வழக்கிலிருந்தது. இவ்வாறு கலாசாரத்தின் தொடர்ச்சிக்கு மிக சக்தி வாய்ந்த சிறந்த சாதனங்களான இரண்டு அம்சங்களும் - அதாவது மொழி வளர்க்கும் சங்கங்களும் அந்த வளர்ச்சிக்கு முறையோடு அமைவதற்கான இலக்கணங்களும் - தொன்மையான தமிழ் சரித்திரத்தின் ஆரம்ப ஏடுகளிலேயே ஆழமாக பதிந்துவிட்டன.

ஆண்மீக உற்பொருளையே சிற்ப கலையிலும் மற்றும் அதை மருவிய கலைகளிலும் காண்கிறோம். சைவத்தை தழுவிய பல மஹா புருஷர்கள் எவ்வுயிர்க்கும் பொதுவான பரம்பொருளைப் பற்றி தங்கள் உணர் கவிதை வடிவிலே அளித்திருக்கிறார்கள். இதற்கு இணையாக தென்னிந்திய வெண்கலச் சிற்பங்களில் பெரிதும் காணப்படும் நடராஜர் சிற்பம் மனித குலத்தின் மாபெரும் கலைச்சின்னங்களில் ஒன்றாகவே அமைந்துவிட்டது. இது சிவபெருமானின் மற்றொரு வடிவமாகும். அந்த ஆடலரசன் உருவத்திலே உயிரும் உயிரின்மையும் ஒன்றே - ரூபமும் அரூபமும், ஒன்றே. அந்த ஆனந்த தாண்டவத்தில் உடலும் ஆவியும் இரண்டற கலந்து விட்டது என்கிறார் ஆனந்த குமாரசுவாமி.

ஆண்மீக அறிவுடைய நிலைக்கும் நன்னெறியில் அமையும் வாழ்க்கை அநுபவத்திற்குள்ள நெருங்கிய தொடர்பு, தமிழ் கலாசாரத்தின் அடிப்படை பண்பாடு என்பது பலரும் அறிந்த உண்மை. உலக சக்தியினையும் வாழ்க்கையின் உறுதியான தன்னம்பிக்கையையும் குரலிலே கண்டார் டாக்டர் ஆல்பர்ட் ஸ்வெட்ஜர் இலக்கியம், தத்துவம் இவற்றின் தனிசிறப்புடன் விளங்கும் இந்த புராதன நூல், எளிய நீதி நெறியின் வழியே இயங்கும் மனித இனத்தையே இலட்சியமாக சித்தரிக்கிறது என்று அவர் கூறுகிறார் தமிழர்கள்.

ஆங்கிலேயரிடத்தில் மாறி மாறி கொண்டதால் தமிழ் தன்னுடைய ஆட்சிபீடத்தை இழந்துவிட்டது. ஆங்கிலமே நாட்டின் இன்றியமையாத மொழியாகிறது. ஆங்கிலேய அரசாங்கம் தமிழுக்கு தீங்கு செய்யும் நோக்குடன் எதையும் செய்து விடவில்லை என்றாலும் ஆட்சிமொழி ஆங்கிலம் ஆகிவிட்டதால் அரசாங்க அலுவல்களும் ஆங்கிலம் படித்தவர்களே உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அதற்கேற்றவாறு கல்வித்திட்டமும் உருவாகியது. அதனால் ஆங்கிலமே பள்ளிக்கூடங்களில் முதலிடம் பெற்றது. மேலும் தமிழ் பாடங்களில் மாணவர்கள் வாங்கும் புள்ளிகள் தேர்வுகளல் மதிக்கப்படுவதில்லை. எனவே தமிழ் மற்றைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடங்களோடு ஒட்டாமல் தனித்திருக்க வேண்டியதாயிற்று. எந்த மொழிக்காரர்களாக இருந்தாலும் அவரவர்களுடைய தாய்மொழிதான் அவர்களது அறிவை பெருக்கிக் கொள்ள உதவும். தம்முடைய மொழியில் இல்லாத பிறமொழி அறிவை கற்றுக்கொள்ள உதவும். தாய்மொழியின் உதவியை கொண்டு பிறமொழியை கற்றுக் கொண்டவன் அந்த பிறமொழியில் நான் கண்ட நல்லறிவை நம் இனத்தாரும் எடுத்துச் சொல்லவும் தாய்மொழி தான் வேண்டும்.

இன்னும் கற்றோரால் மதிக்கப்படுகிற எல்லா தமிழ் இலக்கியங்களையும் ஆராய்ந்து பார்த்தால் அவற்றின் தெய்வபக்திக்கும் கொல்லா விரதத்துக்கும் பொய் சொல்லா நோன்புக்கும் கொடுக்கப்பட்டுள்ள சிறப்பு மற்ற எதற்கும் இல்லை, என்பது தெரியவரும். இந்த மூன்று கொள்கையுமே அடிப்படையாக கொண்டு இலக்கியங்களை வளர்த்துவிக்கத் தக்க ஆலயங்களை கட்டி அறங்களை வகுத்து பெருவாழ்வு வாழ்ந்த இனம் தமிழ் இனம் என்பது தான். அப்படிப்பட்ட இனத்தில் வந்த தமிழர்கள் அந்த இனப் பெருமையை மறந்து விடக்கூடாது என்பது தான் குறிகோள்.

"தமிழுக்கு இருவர் தவத்திற்குகொருவர்" என்பதற்கமைய தமிழை பேச வேண்டும். தமிழைப் பேச பேச தமிழின் சுவையின் அமுதும் தேனுமாகிறது. எனவே தமிழ்ச்சுவை, தமிழின்பம், தமிழ்ப்பேச்சு, தமிழாய்வு, தமிழாய்வு, தமிழ் திருமுறை எனும் துறைகளிலே தமிழ் மக்களாகிய நாம் முயன்றும் உழைத்தும் பேரின்பம் காணுவதற்குத் துணிய வேண்டும். மனமகிழ்ச்சியையும் நீடிய பெரும் புகழைத்தரும் செந்தமிழ் மொழியை அனுபவிக்க அனுப்பிக்க அதன் ஆழம் நீண்டு கொண்டே போகும் என்பது திண்ணம்.

இச்சிந்தனைகளை நமது உள்ளத்தின் நினைவாக இருத்தித் தமிழ்ப்பணி செய்வோரையும் சைவப்பணி புரைவோரையும் உபசரித்து உறுதுணை புரிந்து தமிழன்னையை துதித்து வழிபட்டு வாழ்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கவிஞர் கலாபூஷணம் பூண்டுலோயா தர்மு
## ஓர் அறிமுகம்

தி. இரா. கோபாலன்

கொத்மலை பிரதேசத்துக்கு ஒரு வளமான இலக்கிய மணமும், புரட்சிகரமான அரசியல் வாசனையும் உண்டு. இப்பிரதேசத்தின் ஒரே பாரம்பரிய நகரான பூண்டுலோயா உள்வாங்கிக் கொண்ட சிறந்த மனிதர்களின் வரிசைகளில், தாகூர் பாடசாலையை நிறுவிய கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை. கவிஞர் தர்மு, கவிஞர் எஸ். ஏ. எலியாசன், லபுக்கலை குறிஞ்சித் தென்னவன் என்று கவிஞர்ப்பட்டியலைப் போடலாம். இன்னும் பல இளம் கவிஞர்கள்!



கடந்த வருடம் அட்டன் உட்லன்ஸ் காலனியில் வாழ்ந்து அமரராகிய பூண்டுலோயா தர்மு என்ற திரு. எஸ். எம். தர்மலிங்கம் சீன் தோட்டத்தில் பிறந்தவர்.

தந்தை பெயர் சந்தனம், தாய் பெயர் செல்லம். பூண்டுலோயா பிரதேசத்தின் பூந்தோட்டம் போன்ற அமைப்பைக் கொண்ட அழகுமிகு, அற்புதமான சீனித்தோட்டத்தில் ஓர் கவிஞன் பிறக்காது போனால் தான் ஆச்சரியம்.

புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் தோமஸ் கிரேயின் பெயரைக் கொண்ட கிரே துரை ஐம்பதுகளில் இதனை ஒரு பூங்காவைப் போலவே வைத்திருந்தார். நல்ல பல கல்விமான்களை ஐம்பதுகளிலேயே உருவாக்கிய உன்னதமான சூழலமுதம்.

தர்மு அவர்கள் கல்விகற்றுத்தேறி பேர்ன்லன்ட்ஸ் தோட்ட அலுவலகத்தில் உத்தியோகம்.

தான் வாழ்ந்த லயத்துச்சூழல், மக்களின் அவல நிலை தோட்ட நிர்வாகியின் கெடுபிடிகள், இயற்கை வளம், வறுமை, கல்லாமை, அறியாமை போன்ற அம்சங்களாகக் கொண்ட கவிதைகள் மூலமாக இலக்கிய உலகுக்கு வந்தவர் - 1948 முதல் 'மலையகத்தின் உதயம்' என்ற கவிதையில் 'எப்போ தெளியுமுன் அறியாமைத் தூக்கம்' என்ற முதல் வரியின் இறுக்கமும், சட்டைத் துணியுமின்றி நாம் சறுகாய் ஆயிடினும், சட்டை சிறிதும் செய்யார் எம்மைச் சாகடித்து நிற்பார். என்ற வரிகளில் தோட்ட முதலாளியைச் சாடுகிறார்.

'தோட்டத் தீபாவளி' என்ற கவிதையில் பண்டிகை தினத்தில் தோட்டம் எவ்வாறு கலகலத்து மிளிரும் என்பதனை மிக அழகாக வர்ணிக்கின்றார். உடுக்கொலி, தப்போசை, சீன பட்டாசு, கோலாட்டம், கும்மியாட்டம், பொய்க்கால் குதிரை, கோமாளி ஆட்டம், மாரியம்மன் கோவில் முன்னால் இரவு முழுவதும் கூத்து. இந்தக் கவிதையின் முப்பத்தாறு வரிகளில் மலையகத்தின் பாரம்பரியக் கலைகளின் பட்டியலே இழைந்தோடுகிறது.

தான் எழுதிய கவிதைகளில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் முறையின் கீழ்நிலை பற்றிய ஆதங்கமே ஒரு பிரதான இடம் பெறுகிறது எனக் கூறுவார். குறிப்பாக மதுவிலக்கு, சிக்கன வாழ்வு, சுகாதாரம், புதிய சிந்தனை, கல்வியில் மேன்மை போன்ற அம்சங்களுக்கு முன்னுரிமை கொடுத்து கவிதைகளை எழுதியுள்ளார். 'விடிவை நோக்கி வா' என்ற கவிதைத் தொகுப்பு 2005ம் ஆண்டு சென்னை மணிமேகலை பிரசுரத்தின் மூலம். கவிதைகளாக வெளிவந்தது. இதற்கு முன்னரும்-ஐந்து ஆண்டுகளுக்கு முன் கவிதை நூல் கொழும்பில் பிரசுரமாகியது.

விடிவை நோக்கிவா' என்ற நூலின் முன்னுரையில் 1948 முதல் 1999 வரை தான் படைத்த கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், மலையகத்தின் அழகையும் அவலத்தையும் சேர்த்துப் பார்த்து அதனுடன் தமிழ், காதல், இன ஒற்றுமை என்ற அம்சங்களையும் தன் கவிதைகளின் கருப்பொருட்கள் எனக் கூறுகின்றார்.

இந்த நூலின் பின் அட்டையில் கலாநிதி க. அருணாசலம் அவர்களும் திரு சாரல் நாடன் அவர்களும் அவரைப் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுவது ஆரோக்கியமான அம்சமே.

1957ம் ஆண்டு அமரர் தர்மலிங்கம் பேர்னலன்ட்ஸ் தோட்ட அலுவலகக் காரியாலயத்தில் பணியாற்றும்போது தனது நண்பரான திரு. சதாசிவம் அப்போதைய படித்த இளைஞர்களான சீனித் தோட்டம் திரு. முருகையா, திரு. முத்தையா, டாக்டர் சிவலிங்கம் ஆகியோருடன் 'மலையகக் கலை இலக்கிய ஒன்றியம்' என்ற ஓர் அமைப்பை ஆரம்பித்து இப்பிரதேசத்துக்கு ஓர் அறிவுபூர்வமான அடிக்கல்லை நாட்டியவர்.

உடப்புசல்லாவ 'எனிக்' தோட்டத்துக்கு மாற்றலாகிச் சென்ற போதும் அவர் தனது கவிதை வாழ்வைத் தொடர்ந்தார்.

நாற்பது, ஐம்பதுகளில் கவிதை எழுதியவர்களுக்கு பாரதி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவி போன்றோரின் பாதிப்புக்கள் இருந்திருக்கும்.

ஓரளவு மரபுக் கவிதை வடிவிலான, சந்தம் பாடல்கள் போன்ற உயிர்ப்புக்கள் அங்கங்கே இழையோடுகின்றன - அழகியல் வடிவில் யாப்பிலக்கண மணம் வீசுகிறது.

தோட்ட நிர்வாகிகளின் மடியில் தவழ்வது போலத்தான் அலுவலக வாழ்வு அந்தச் சூழலுக்கிடையில் மக்கள் பற்றிய சிந்தனை கவிதைகளாகப் பிறப்பது வித்தியாசமான பணிதான்.

சேவையிலிருந்து இளைப்பாறிய பின்னர், நோய் வாய்ப்பட்ட நிலை - வீட்டில் முடங்கிக் கிடந்த கால கட்டத்தில் - அவரின் கவிதைகள் மேலெழுந்து சிறகொடித்துப்பறக்க ஆரம்பித்தன. இது பல கவிஞர் வாழ்வில் நிகழ்ந்தவை தான். நோயைத் துச்சமாக மதித்து அட்டனில் நடைபெறும் அத்தனை நிகழ்வுகளுக்கும் தன் மகள் மணிமேகலையின் துணையுடன் வருகை தந்து எழுத்தாளர்களுடன் இரண்டறக் கலந்து விடுவார். அவர் வாழ்வில் சந்தித்த கவிஞர்கள், அறிஞர்கள், நூலாசிரியர்கள் ஏராளம்.

சாகித்திய விருதுகளைப் பெற்று பெருமை சேர்த்த 'தர்மு' இலங்கை அரசின் 'கலாபூஷணம்' விருதை 2004ம் ஆண்டு பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விருது தனது அந்திய கால இலக்கிய சுவாசத்தின் இன்னமுது எனக் கூறலாம்.

கவிஞர்கள் பிறக்கின்றார்கள். இறக்கின்றார்கள். கவிதைகளுக்கு மரணமில்லை, தான் வாழ்ந்த சமூகம், தன்னால் உருவாகிய குடும்பம் - இரண்டு கரைகளுக்கும் பெருமை சேர்க்கும் ஜீவநதி, கவிஞன். அந்த நிரந்தர வரிசையில் 'தர்முவு' ம் வாழ்கிறார். கவிதை நதி வடிவில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைகளில் கூட வர்க்கமும் பேதமும்

ரா. நித்தியானந்தன்

இது
மார்கழி மாதம்,
மன்மத கூத்தில்
மகிழும் காலம்.

கட்டிய துணியும்,
ஒட்டிய வயிறும்,
கால் வயிற்றுக்கு
காத்து கிடந்து...
ஓடாய் உழைக்கும் - இந்த
எலும்பு கூடுகளுக்கு
கூத்துக்கு மட்டும்
குறைச்சலில்லை.

துரையும், சாணியும்
'சூட்டும்' 'ஜீன்சுமாய்'
கூத்தின் நாயகனாய்....
தரையை மெழுகி..
கோலமிட்டு..
அரியாசனங்களில் சீதா, ராமனாய்..
அழகாய் அமர.
'ஜூசும்' 'பிஸ்கட்டும்'
பரிவாய் கொடுத்து...
தவமாய் இருந்து
சங்கத் தலைவரை
மாலையிட்டு
பன்னீர் தெளித்து
பொட்டு வைத்து
பூவை வைத்து
என்று பற்பல...
மரியாதை பல செய்து...

க்ளாக்கர் ஐயா,
டிமேக்கர் குடும்பம்
என்று பலரை
முன்னே அமர்த்தி
பணிவிடை பலதையும்
பணிவாய் செய்ய

மேலே லயத்து கருப்பன் சாமி
பதமாய் எடுத்து
தப்பை அடிக்க....
கீழே லயத்து இறுக்கன்
மன்மத வேசம் பாங்காய் போட....
சீதை வேஷம் போட்ட மாடனும்..
சிவன் வேஷம் போட்ட காடனும்...

சீதாராமன்
சிங்காசனம் முன்னே
அயோத்தி அவையில்
அனுமன் கூட்டம் போல்
ஆட்டம் போடும்
கொட்டம் அடிக்கும்
எங்கள் மக்களின் - இந்த
ஈன நிலைதான்
என்று மாறுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவேண்டும் தைமகளே

கவிஞர் கே. குறிஞ்சிநாடன்

மலையொத்த தடம்புயத்தார் மலைமக்கள் உயர்வுக்காய்
வரவேண்டும் தைமகளே ! வஞ்சர்
வலைபட்டு தாழ்வுற்று வளங்குன்றிப் போகாமல்
வரவேண்டும் தைமகளே ! நெஞ்சம்
அலைவுற்றுத் துயர்மிஞ்சி அழியாமற் காத்திடவே
அமுதாக நீ வருவாய் ! இங்கு
குலை நடுங்க நாளெல்லாம் குறுக்கிடும் துன்பத்தைக்
குலைத்திட நீ வருவாய் !

எம்நாடு வளம்பெற்று ஏழைகள் நலம் காண
ஏந்திழை நீ வருவாய் ! நாளும்
தம்நலம் ஒன்றையே தவறாமல் போற்றுவார்
தன்னிலை போக்கிடுவாய் ! தளரும்
எம்நிலை மாற்றியே இல்லங்கள் செழித்திட
எழிலாக நீ வருவாய் ! தினமும்
வம்புகள் பேசியே வாட்டிடும் மனத்தினர்
வாழ்வினை மாற்றிடுவாய் !

தேசம் செழித்திட தீமைகள் தேய்ந்திட
தேன்மதி நீ வருவாய் ! நெஞ்சில்
பாசம் பெருகிட பகைமைகள் மாற்றிட
பாவையே நீ வருவாய் ! புதிய
வேசம் போட்டிங்கு வித்தைகள் செய்வாரை
வீழ்த்திட நீ வருவாய் ! இனிய
நேசம் விளைகின்ற நெஞ்சினர் பெருகிட
நிறைமதி நீ வருவாய் !

தனமுயர் குன்றென தரணியில் உயர்ந்திட
தனந்தர நீ வருவாய் ! முல்லை
மணம்பெற நாளெல்லாம் மதியொளி பெருக்கிட
தண்மதி நீ வருவாய் ! இங்கு
தினந்தொறும் இறையருள் எங்கும் ஒளிர்ந்திட
இளமதி நீ வருவாய் ! நாட்டில்
இனப்பகை இன்றி நாம் எழிலுடன் வாழ்ந்திட
இன்பமே நீ வருவாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூனைகள்**

மல்லிகை சி. குமார்

நாங்கள் இந்த வீட்டில்
குடிவந்த நாட்களிலிருந்து
வெள்ளை எலிகளாலும்
கருப்பு எலிகளாலும்
தொல்லை எத்தனை தொல்லை
எங்களின்
உரிமைகளை கடித்து
எங்களின் உழைப்பை
கொறித்து சுரண்டி...
தீராத எலித் தொல்லைகள்
எலிதைத் துரத்த முயன்ற
எங்களில் பலர்
எலிகள் கடித்தே
இறந்து போயினர்

உங்களின்
எலித் தொல்லைகளை
நீங்கி உங்கள்
துயரங்களை துடைக்க
இதோ நாங்கள் வருகின்றோம் - என
எங்கள் வீட்டிற்குள்
புகுந்தன
சில அந்நிய பூனைகள் இவைகளை தொடர்ந்து
உள்ளூர் கறுப்பு பூனைகள்
ஆகா...
இனி எலித்தொல்லை
தீர்ந்ததென்று - நாங்கள்
மாலைப்போட்டு
வரவேற்றோம்
வாழ்க! வாழ்க! என
கோஷமிட்டு குதூகலித்தோம்
கதிரையில் பூனைகளை
அமர வைத்தோம்
அவைகள்
திரும்பும் பக்கமெல்லாம்
நாங்களும் திரும்பி
ரணம் பட்டோம்
ஆனால் அவைகளோ...
தொல்லை தரும்
எலிகளை விட
எங்களையே
சுரண்டத் தொடங்கிவிட்டன
எத்தனை எத்தனை
கலர்களில் இந்த
பூனைகள்
நிற்கின்றன தெரியுமா?
ஆனால்...
பூனைகள் எங்கள் வீட்டில்
எந்த எலியையும்
பிடித்ததாக தெரியவில்லை
எங்களின்
எலித் தொல்லைகளை
நீக்கத் தெரியாத பூனைகள்
இப்போது எங்கள் வீட்டு
குறுக்கு சுவரில் இன்னும்
எதையோ எதிர்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நாளை இனி எப்போது?

அம்மா கனவு கண்டாள்
ஆசிரியனாய் எனை
பரீட்சையெழுதிவிட்டு
வந்தேன்
பல்லிகூடச் சொன்னதே
கிடைத்துவிடுமென்று

நாமெல்லாம்,
ஒரு ஒப்பனை செய்துகொண்டோம்
ஆசிரியனாய் அடிமனசில்!
இன்று
நாளை - இனி
எப்போது?
ஆர்ப்பாட்டங்கள்
போராட்டங்கள்,
சொன்னார்கள்- போராடித்தான்
பெறவேண்டுமென்று!

என்தோட்டத்து
பாடசாலையை
தொட்டு வணங்கிச் சென்றேன்
வரம்கிடைக்குமென்ற
வாஞ்சையோடு!

எங்கள்
நியமனக் குழந்தையின்
தொப்புல் கொடியை
தவறாக அறுத்து போட்டது
யாரிங்கே...?

தூரத்துப் பச்சையை
துணையாய்
எண்ணியது
துர்பாக்கியமா...?

எழுதிவிட்டு
புழுதி தட்டிக் கொண்டிருக்கிறோம்
மலைதேசத்தின்
அழுக்குகளை

தெரிந்திருந்தால்-அப்போதே
சுமந்திருக்க மாட்டோம்
வாழ்க்கைச் சுமையின் வடிவம்
புத்தகச் சுமையொன்று!

மலைத்தாயின் மைந்தர்களே
மரணித்ததுபோதும்
எங்கள் உரிமைகள்
நமது வெற்றிகளெல்லாம்
மலைக்குன்றின்
மகுடமாகட்டும்!
இனியாவது - உங்கள்
வாக்குறுதிகளுக்கு
வழி சொல்வீர்களா?

இல்லையெனில்
சொல்லி விடுங்கள்-எங்கள்
முகவரி நோக்கியே
முன்னேறி போகின்றோம்!

பல்லிச சொன்னதே
கிடைத்துவிடுமென்று
பார்த்துக் கொண்டிருக்கின்றோம்
அம்மாவின் ஆசை கனவுகளோடு...

சொல்லுங்கள்
தூக்கிச் சுமந்த புத்தகங்களுக்கு
சுகம் கிடைக்குமா?

வேண்டாம்
விட்டுவிடுங்கள் - மீண்டும்
பரீட்சை மண்டபத்திற்குள்
எமை பலிகடாவாக்காமல்!

**- புசல்லாவை கணபதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியின் படிகளில்

மாரிமுத்து சிவகுமார்

உணர்விழந்து உயர்விழந்து
உருக்குழைந்த பின்னே
கனவு கொண்டு காவிகட்டி
காலம் கடத்துவதென்ன?

உலகஞ்சுமக்க உயர்த்தும் கரங்கள்
உனக்கும் எனக்கும் உண்டு
உரிமையிழந்து உலகந்துறந்து
உறங்கி கிடப்பதென்ன?

வறுமைகட்டி பொறுமையிழந்து
வாழ்வைத்தேடும் மனங்கள்
கருமை கொண்டு அமைதிபூண்டு
கடமை வெறுப்பதென்ன?

விடியலுக்கு வடிவமுண்டு
விரக்தியில்லா மனங்கள் உண்டு
மலையகத்து மாணிக்கத்துள்
மாண்புகளும் வளர்ந்ததின்று

கொடியுமில்லை காட்சியுமில்லை
கெடுபிடியம் அதிரவில்லை
கடைசிவரை மலையகத்தை
காப்பதற்கு நாங்களுண்டு.

முடிந்திருந்த சுவடொடித்து
மூர்க்கமுற்ற பிணியொடித்து
ஏக்கந்தரும் ஏழ்மைதனை
ஆழ்கடலுள் அமிழ்த்திவிடு

உழைப்புண்டு உயர்வுமுண்டு
ஊனமில்லா மலையகத்துள்
எழிலுமுண்டு ஏற்றமுண்டு
எழுச்சிமிகு மலை சுவரில்

வாழ்வையின்று வென்றெடுத்து
வாலிபமும் குன்றிலின்று
சோகமினி தேக்கமில்லை
தோரணங்கள் தேசமிதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கே முழங்கிடு

**தி. சரன்யா**
தரம் 13 விஞ்ஞானம்
சென். ஜோசப் த. வி.
மஸ்கெலியா

தமிழ் எங்கள் உயிராகுமே - அந்த
தமிழினை இவ்வுலகம் சுற்றிவருவதால்
தமிழே வளர்க என சங்கே முழங்கிடு!

அ முதல் ஔ வரை - உயிரெழுத்து
அந்த உயிரெழுத்து இல்லையேல்
இந்த உலகமில்லை என சங்கே முழங்கிடு!

க் முதல் ன் வரை - மெய் எழுத்து
கலந்திடும் மெய்யெழுத்து இல்லையேல்
கடலையும் காணமுடியாது என சங்கே முழங்கிடு!

உயிரும் மெய்யும் - கலந்து
உணர்வுடன் எழுந்திடாமலிருக்குமானால்
உலகம் இருண்டிருக்கும் என சங்கே முழங்கிடு!

அவ்வையின் அருள்வாக்கிலும் - அந்த
அங்குசதாரியின் அருளை தமிழாள் பெற்றதால்
அமுதத்தமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

வள்ளுவனின் வளர்குறளம் - அந்த
வானகம் முட்ட மாறியதால்
வண்டமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

கம்பன் தந்த - கவி
கம்பராமாயணத்தை உருவாக்கிய
கம்பத்தமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

நாடு போற்ற நகர் - போற்ற
நாவலரை வளர்த்தது எங்கள்
நல்மொழி தமிழே என சங்கே முழங்கிடு!

விண்ணினை புகழ் எட்டும்படி - வளர்த்த
விபுலானந்தரை வாழ்த்தி வணங்கியதும்
விண்ணவர் கொஞ்சும் மழலைமொழி என சங்கே முழங்கிடு!

வண்டுகள் கொஞ்சிடும் மொழியாக - தன்
வண்ண உலகினை சுற்றிவரும்
வண்டமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

கவியரசு கண்ணதாசன்- தன்
கவி மொழியால் உருவாக்கிய கவிச்சோலையான
கன்னித்தமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

புலமைகளை வடிவமைத்து - தந்த
புலமைப் பித்தனின் வாழ்வோங்கச் செய்த
புகழ் தமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

புதுமைகளை படைத்து புதினங்களைத் - தந்த
புதுக்கவிதையின் தந்தை மேதாவை
புகழ்பெறச் செய்த தமிழ் வளர்க என சங்கே முழங்கிடு!

சங்கே நீ - என்றும்
சங்கத்தமிழை வாழ்த்திப்போற்றி
சங்கம் வளர்த்து தரணி எங்கும் தமிழ் வாழ்க! வாழ்க!
என நீ முழங்கிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத்து ராஜாக்கள்...

செந்துல் பத்தனையூர்
வீரையா திருச்செல்வம்

இன்றைய
இளைய தலைமுறையின்
ஏகோபித்த முடிவுகளாய்
மடமையின் கிரீடங்கள்

மதுவும் ... மாதுவும்
வேண்டப்படுபவர்கள்
மதிகெட்டு அழையும்
கொடியவர்கள்

காற்றே... புகா ஆடைகளும்
கடிவாள நகைகளும்
குரங்கு தலை வெட்டும்
குத்தித் தொங்கும்
காதணியும்
.........????
இலட்சணத்துக்குள்ளும்
அவலட்சண
அரங்கேற்றங்கள் ....!

சவரம் செய்துவிட்ட
வதனத்தில் பாதி
மயிர்கள் நிற்கும்
நாகரிகம் என்கின்ற
தோரணையில் - புது
நாடகம் காட்டும்
நாயகர்கள்.....!

இயக்கத் தெரியாத
செல்போனும், கையும்
மரியாதை மறந்து போன
நடையுடை பாவனையும்
தமிழை மறந்து பேசும்
மொழியின் பிரவாகமும்
தமிழினத்தை சற்று
சிந்திக்கத் தூண்டும்.....!

வருகின்ற வாகனத்தின்
வாசிக்கத் தெரியாத
வாசகங்கள் கண்டு
மாறி ஏறிய பாதங்களும்
மதிப்பாய் கேட்ட
டிக்கெட்டுக்கு...,
கண்டெக்டர் காத்திர
மொழிகள் ...,

மீண்டும்
வெக்கித்து போய் இறங்கிய
கால்கள்.....
கையில் எடுத்த காசிலும்
பன்மடங்கு உயர்ந்த
பாதணிகள் ...!

பால் மணம் மறக்காத
பருவம் ..., பாண்டியத்திய
காதல் திருமணம்
பார்ப்பவர் நெஞ்சை
பரவசிக்கச் செய்யும்,
இளசுகளின் மாற்றங்கள்
மலையகத்தில்......
நிலைக்கும் வரை
மாட்சி பெறும் பொழுதுக்கு
மண்டியிட வேண்டியது
மானுடர் தானோ ...!

செந்துல் பத்தனையூர்
வீரையா திருச்செல்வம்

வீரையா திருச்செல்வம்
வோல்ட்றீம் பிரிவு,
செந்துல் பத்தனை,
நாகசேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுப்பிடிங்கள்

வெ. கணேசலிங்கம்
நியூ வெளி. பங்களா. டிவிசன்
நோர்வூட்.

உணர்வுகள் அற்றுப்போன
ஊமைகளாய்
தேயிலை தேசத்தின்
வருமான உயிர்கள்
வருந்துவது - ஏன் ?

சில..........
வெற்றுப் பேச்சி
வீராப்புகளில்
உயர்தரம் படித்த
மலையக மணிகள்
மங்குவதும் - ஏன் ?

பட்டத்துக்காகவும்
பதவிக்காகவும்
படித்த புத்தி ஜீவிகளே!
எங்கள் உரிமைக் குரலினை
உயர்த்தி பிடிக்கவில்லை - ஏன் ?

ஏன் என்ற பிரச்சனையை
மறுக்கவும் முடியாது
மறைக்கவும் முடியாது
அத்தனையும் உண்மை
உண்மையின்
உணர்வுகள்
உலா வரட்டும்

புது வருடத்திலே
புதிய சிந்தனை பிறந்து
உரிமைகள் தெரிந்து
உட்பூசல்களை எறித்து
உரிமைகளை வென்றிடுவோம்

பட்டறிந்தவர்களே....!
கற்றறிந்தவர்களே - உங்களை
பாவிகளென்று
பறைசாற்றவில்லை
எதிர்கால சந்ததியின்
ஏக்கம் தீர்ந்திட
ஏற்றுப்பிடி உயர்த்துங்கள்
ஏற்ற தலைமைதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புழுதிப் படுக்கையில் ......

மு. சிவலிங்கம்

குரங்குமலை டிவிசன் மூனாம் நம்பர் வலயத்தை இப்போது ... "தலவர் லயம்" என்று கேட்டால்தான் பாதை காட்டுவார்கள். அந்த லயத்தில்தான் ஐந்து யூனியன் தலைவர்மார்களும் இருக்கின்றார்கள். அது "ரெட்டை சைட்" லயம். எந்த நேரமும் "ஜே.. ஜே" என்று சனக்கூட்டம் கலை கட்டிக் கிடக்கும். கொழும்பு கும்பனித் தெருவைப் போல ... தெமட்டக்கொடையைப் போல ... மாளிகாவத்தையைப் போல நெரிசல் மிக்க "ஏரியா" என்றும் அந்த லயத்தைச் சொல்லலாம் !

அந்த டிவிசனில் அந்த டபள் சைட் லயத்தில் மட்டும் நூற்றைம்பது "வோட்டு" இருக்கின்றன ! அரசியல்வாதிகளுக்கு அந்த லயம் ஒரு திராட்சைப் பழக் கொத்து ! தேர்தல் காலங்களில் "ஓட்டு கேக்குறவன்.." "ஓட்டு வாங்கிக் குடுக்கிறவன்" என்று "ஈ மொய்ச்சிப்போய் அந்த "டபள் சைட்" நாறிப்போய் கிடக்கும் ! அந்த டபள் சைட் லயத்து ஆட்களுக்கு ஒரு விஷேசக் குணம் உண்டு. அங்கே இடிவிழுந்தாலும் புது இடங்களுக்கு குடியேறிப் போகமாட்டார்கள்.

அந்த லயத்தை ஒட்டியே ஆயிரத்தெட்டு பொலித்தீன் கொட்டகைகள் கட்டி "டெம்பரெரி செட்" என்ற இங்கிலீஸ் நாமத்தில் குடியிருப்பார்கள். அந்த "டெம்பரெரி" செட்டின் கூரைகள் காற்றில் பறந்து போய் விடக்கூடாதென்பதற்காக பல லட்சக்கணக்கான பாராங்கற்களை கூரையின்மேலே பரப்பி இருப்பார்கள். கல்தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தக் குடிகளின் பெருமைகளை அந்த பொலித்தீன் கூரைகளோடு லயத்துத் தகரக் கூரைகளும் நியாயப்படுத்திக் கொண்டிருக்கும்!

"ஒரு வருசத்துக்கு முன்னுக்கு ஒரு நல்ல மவராசன் பெரிய தொரையாக அந்தத் தோட்டத்துக்கு வந்தாரு ... நாலாம் நம்பர் மலையிலே ஒரு ஏக்கர் காணி ஒதுக்கி வீடு கட்டிக்கச் சொன்னாரு ... ஒரு நாய்ப் பயலும் விரும்பலே ! லயத்துக்கும் புதுசா குடுக்கிற காணிக்கும் ஒரு கிலோ மீட்டர் தூரமாம் ! அந்தக் காணி இன்னும் "காடுமண்டி" கெடக்குது ! "என்று அந்த எண்பத்தேழு வயது ஆத்தா அங்கலாய்த்துப் போனாள். அந்த மூதாட்டி தொடர்ந்து பேசினாள். "இந்த கம்மனாட்டிக லயத்தவுட்டு பத்தடி தூரம் வெளியே போவமாட்டானுக .... அவன் பொண்டாட்டி .... இவனோட ... இவன் பொண்டாட்டி அவனோடன்னு ஒன்னா மண்ணா கெடக்குறத வுட்டுப்புட்டு ... வெளியே போவானுகளா ...? தூத்தேறி ! சொல்லவும் வெக்கமா இருக்கு .... நெனைக்கவும் வெக்கமா இருக்கு !" என்று அருவருப்பாக வெற்றிலையைக் குதுப்பி காறித்துப்பினாள். அவள் ஆதங்கத்திலும் உண்மை இருந்தது. பிரிட்டிஷ்காரன் கட்டிக் கொடுத்த முகாம் வாழ்க்கையை விட்டு விலகி, புதிய சூழலில் காணி, நிலம் என்று தனிமையாக வீடு கட்டி தோட்டம் துரவு என்ற பண்பாட்டில் அவர்கள் வாழ விரும்புவதில்லை. லயத்து வாழ்க்கையில் மறைந்துக்கிடக்கும் கலாசார சீரழிவுகளை அந்த ஆத்தா காறித்துப்பிய அருவருப்பிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

அந்தப் "புகழ்பெற்ற" மூனாம் நம்பர் லயம் உச்சி மலைத் தேரியில் இருக்கிறது. அந்த லயத்துக்குப் "போக வேண்டும்" என்று யாரும் சொல்லமாட்டார்கள் ... "ஏற வேண்டும்" என்றுதான் சொல்வார்கள்.

சிவனொலிபாதமலைக்கு ஏறும்போது ஊசிமலை படிக்கட்டுகள் இருப்பதுபோல இங்கேயும் அதே படிக்கட்டுகள் .... படிக்கட்டுக்களை ஏறி முடித்ததும் லயத்து முகப்பில் தஞ்சை பெரியக்கோவிலைப் போல .... மதுரை மீனாட்சியம்மன் கோபுரத்தைப்போல குப்பை மேடு உயர்ந்து நிற்கும் ! கூவம் நதியைப்போன்று இங்குமொரு கூவம் ஓடை .... லயத்திலிருந்து "ஊசிமலை" படிக்கட்டுகள் வரியாக வடிந்து கொண்டிருக்கும். மூக்கைப் பிடித்துக்கொண்டுதான் படியேற வேண்டும். அந்த ஓடையை ஓரமாக்கி விடுவதற்கு அங்கே எந்த நாதியும் கிடையாது.

குப்பைமேடு. வெள்ளைக்காரன் லயன் முகாம் கட்டிக்கொடுத்த காலத்திலிருந்து இன்றுவரை சிரஞ்சீவியாக மக்கி ... உரமாகிக் கிடக்கின்றது. குப்பைமேட்டில் தண்ணீர் பறங்கிக் கீரைக் கொடிகள் படர்ந்து கிடக்கின்றன. கொடிகளுக்கிடையே மறைந்தும் மறையாமலும் அழகழகான தண்ணீர் பறங்கிக் காய்கள் மஞ்சள் நிற பறங்கிப்பூக்களோடு அழகு காட்டிக் கொண்டிருக்கின்றன.... கொட்டைமுத்து மரம் குப்பை உரத்தைச் சாப்பிட்டு மதாளித்துச் செழிப்பாக வளர்ந்து ... கொத்து கொத்தாய் கொட்டை முத்துக்களோடு காட்சிதருகின்றது. பாவம் ! அங்கே ஒரு கொய்யாமரம் ... அந்த மரத்தை "தலைகாட்டவிடாமல்" சவு சவுக்காய் கொடிகள் படர்ந்து .... பந்தல் கட்டி .... அந்த மரத்தை மூடி ... மூடாக்கு போட்டு வைத்திருந்தன. யாரோ ... எப்போ ... ஒரு அரசியல்வாதி சொல்லியிருந்தானாம் ... "நாங்கள் மரம் ... நீங்கள் எங்களைச் சுற்றிப் படரவேண்டிய கொடிகள் !" என்று அந்தக் கொடிகளுக்குள்ள சக்தியை இந்த பரிதாபத்துக்குரிய கொய்யாமரத்தை வந்து பார்த்தால் அவன் மூக்கில் விரலை வைப்பான் ! இப்படி ... அந்தக் குப்பை மேட்டிலும் தென்னிந்தியத் தமிழர்களின் வாசம் ... ஒரு கலாசாரப் பதிவு ... ஒரு பாரம்பரிய குணாம்சம் அடையாளங் காட்டிக் கொண்டிருந்தன.

பென்சன் பெருமாயி கிழவி வழமைப்போல இன்றைக்கும் வாயைத் திறக்க ஆரம்பித்தாள்.

"பென்சன் வாங்கி பத்துவருமா உசுரோடு இருக்கா ! மருமவன் கிட்டேயும் மகன் ... பேரப்புள்ளைக கிட்டேயும் மொக்குப்பட்டு மோழுபட்டு இன்னும் சாகாம இருக்கா ! ஊத்தைப் பேச்சு பேசுறதுல்ல மன்னாதி மன்னி !" என்று ஊர் கிழவியைத் திட்டும்.

பெருமாய் கிழவி இன்றைக்கு வெகு ரோசமாக ஏசிக் கொண்டிருந்தாள்.

"நாசமாக போக ! குட்டிச் சுவரா போக ! கொள்ளையில போக ! எட்டு எடுக்க ! எழவு எடுக்க .. ! கருமாதி வைக்க ! கண்ணு அவுஞ்சி போக !" என்று ஓடர் போட்டுக்கொண்டிருந்தாள்.

"என்னா கெழவி ! இன்னக்கி யார ஏசுற ?" என்றாள் வாயாடி முத்தம்மா.

"பன்னிரெண்டு முட்டவச்சி பன்னிரெண்டும் பொரிச்சிச்சி ! லயத்துச் சக்காளத்திக கண்ணுவச்சாளுக ... ஒவ்வொரு நாளும் ரெண்டு மூனுன்னு அந்த நாசமத்த காக்கா தூக்கிக்கிட்டு போவுது ... நான் காக்காவ ஏசுறண்டீ !"

"அப்போ காக்காவத்தான் ஏசுறியா ?" முத்தம்மா வாயைக் கிளறினாள். "காக்காவையும் ஏசுவேன் ... என் கோழிக்குஞ்சுக மேல கண்ணு வச்ச சிறுக்கிகளையும் ஏசுவேன் !" என்றாள் கிழவி.

"காக்கா கொழிக்குஞ்ச தூக்கிட்டுப் போனா ... நீ காக்காக கிட்ட போறது தானே ? ஏன்டி ஊர்சனங்க கிட்டப் போறே ?"

"அடிப்போடி சக்களத்தி ! நீ போடி காக்கா கிட்ட !"

"அடி கெழவி நீ பொடி காக்காகிட்ட !"

சண்டை பாலஸ்தீனம் .. இஸ்ரேல் மோதல் ... ஈராக் அமெரிக்கப்படை மோதல் போலானது யுத்த நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது.

"ரெண்டு பேரும் காக்காகிட்ட போயி வேல இல்ல !... போங்கடி வூட்டுக்கு !" என்று எண்பத்தேழு வயசு ஆத்தா மத்தியஸ்தம் வகித்தாள் ... எரிக் சொல்ஹெய்ம் மாதிரி !

"கோழி போனா மயிராச்சி ! நீ வூட்டுக்குப் போ ... இன்னக்கி காம்பரா சங்கதிக்கு தொரப்பய ஒரு கை பாத்திட்டு வர்றேன்!" என்று பெருமாய் கிழவியின் மகன் பல்லு பெருமாள் சட்டையை மாட்டிக்கொண்டே தோட்டத்து ஆப்பீஸுக்கு ஓடினான்.

அந்த டிவிசனில் ஏழெட்டு பெருமாள் இருக்கிறார்கள். அடையாளத்துக்காக ஒவ்வொருவருக்கும் பட்டப்பெயர் உண்டு. இந்தப் பெருமாளுக்கு பற்கள் யாவும் உதடுகளை மீறி வெளியே சிரித்துக் கொண்டிருக்கும் ! அதற்காகத்தான் பல்லு பெருமாளு என்பார்கள்.

பெருமாளுக்கு வீடு போதாது. மனைவி ... நான்கு பிள்ளைகள் "கெழவன் ... கெழவி" இவனோடு எட்டு பேர் ... பத்துக்கு பன்னிரண்டு அடி காம்பராவில்தான் அடங்க வேண்டும். காம்பரா பிரச்சினை பேசி ... பேசி ... இன்றுவரை முடிவு கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த தோட்டத்திலிருக்கும் ஏழு கட்சிகளிலும் ஏழு ரவுண்டு மாறி மாறிவந்து ... இப்போது அவனும் அவன் மனைவியும் ஒரு புதுக்கட்சியைத் தோட்டத்துக்கு கொண்டு வந்து விட்டார்கள். அவன்தான் அந்தக் கட்சிக்கு தலைவர். அவனவன் மனைவிதான் மாதர் சங்கக் கமிட்டி ! எட்டாவது கட்சி வந்ததில் தோட்டத் துறைக்கு சந்தோசம் அதிகமாகியது !

பெருமாள் அடம்பிடிக்கும் ஒரு "குழப்பக்காரத் தொழிலாளி" அவனுக்கு மூனாம் நம்பர் லயத்திலேயேதான் வீடு வேண்டுமாம். அந்த டபள் சைட் லயத்தில் தொங்கவீட்டில் வசிக்கும் ராமாயி கிழவியின் அரைக் காம்பராவைக் கேட்டுக் கொண்டிருக்கிறான். கிழவியை அனுப்பிவிட்டால் அந்த வீட்டை அவனுடைய வீட்டோடு இணைத்துக்கொள்ள முடியும். "கிழவியை எங்கே அனுப்புவது !" என்று தோட்ட நிர்வாகம் கேட்கும்போது... வேறு கெழவன் அடுத்த சைட் அரைக் காம்புராவுல இருக்கான். அந்த கெழவனோட இந்தக் கெழவிய போட வேண்டியதுதானே ? வயசுபோன காலத்துல என்னா நடக்கப்போவுது ... ? ஒன்னுக்கு ஒன்னு தொணையா இருக்கும் !" என்பது பல்லு பெருமாளின் வாதம்.

இன்று ஆப்பீஸ் நாள்.

பெருமாள் ஜன்னலில் எட்டிப் பார்த்தாள். "சலாங்க தொர ..! காம்பரா விசயம் முடியலிங்க தொர !" "டிவிசன் மாறிப்போனா நல்ல காம்பரா தாறேன் .... விருப்பமா ?" துரை பதில் சொன்னார்.

"என்னா மயிருக்கு நான் டிவிசன் மாறனும் !" என்று மனதுக்குள் முணங்கிக் கொண்டு "முடியாது தொர ! பரம்பர பரம்பரையா ... மூனா நம்பர் லயத்துலத்தான் எங்க குடும்பம் இருக்கு ... இந்தக் காம்பராவ விட்டுப்புட்டு வேற எடத்துக்கு போக முடியாது ... ராமாயி கெழவி காம்புராவக் குடுத்தா எங்க காம்புராவோட சேத்துக்குவேன் !" என்றான் "அது முடியாது தானே ! ராமாயி கெழவி எங்க போவாள் ? அவன் இப்ப சாகமாட்டான் தானே ?" என்று பெண்பால் பதம் தெரியாமல் துரை "தமிழ்" பேசினார்.

"தொரை ! எனக்கு இன்னக்கி முடிவு குடுக்காட்டி கொழுந்து மடுவத்துல போயி சோறு ஆக்குவேன் !" என்று பெருமாள் சத்தமிட்டான்.

இவனது குடும்ப நிலைமையைத் தோட்ட நிர்வாகி விளங்கியிருந்தார். எட்டுபேர் அந்த டபள்சைட் லயக் காம்பராவில் குடியிருக்க முடியாது. அவர் பெரிய கிளாக்கரைக் கூப்பிட்டு யோசனை கேட்டார்.

தவறணை பள்ளத்தில் சமதரையான "புல்லுகானு" இருக்கிறது. தண்ணீர் வசதி உண்டு. மரக்கறி தோட்டம் போட்டுக் கொள்ளலாம் ... தனி இடம் ஒரு கால் ஏக்கர் நிலத்தை சொந்தமாக்கிக் கொள்ளலாம் ... வீடு கட்டுவதற்கு இருவது தகரம் ... மரங்கள் ... கட்டிடப் பொருட்கள் ... தோட்டக் கணக்கில் ஐந்து ஆட்கள் ... இந்த உதவிகளோடு அவன் தற்காலிக வீடு கட்டிக்கொண்டு .. .பிறகு நிரந்தரமான வீடு கட்டிக் கொள்ளலாம் ...

இந்த ஏற்பாட்டை மனதில் வைத்துக்கொண்டு பெருமாளிடம் கேட்டார் துரை. பெரிய கிளாக்கரும் விளக்கமாகச் சொன்னார். "இது ஒரு அதிஸ்டமான சான்ஸ் !" என்றார். பெருமாள் கேட்டபாடில்லை.

"தொர ! என்ன லயத்தவிட்டு வெரட்டப் பாக்குறீங்க ! எனக்கு விதியா ... ? புல்லுக்கானுல போயி ... தனியா வீடு கட்டிக்கிட்டு வாழுறதுக்கு ... ? நான் என் சாதி சனத்தோட லயத்துல தான் இருப்பேன் !" என்று அடித்துச் சொல்லிவிட்டான். "நீங்க சரியான மடையன் தானே ? அந்த எடத்துக்குப் போனா பணக்காரன் ஆக முடியுந்தானே?" என்றார் தோட்ட நிர்வாகி. எந்த அறிவுரைகளையும் காதில் போட்டுக் கொள்ளாத பெருமாள் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

பெருமாளின் பிடிவாதத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற மலைக் காவல்காரன் பண்டா மெதுவாக ஆப்பீஸ் ஜன்னலுக்குள் தலையை நீட்டினான். பண்டா, பெருமாள் வீட்டுக்கு மூன்றாவது வீட்டில் வசிப்பவன். தோட்டத்தில் "பாதித்தொகை" இருந்தாலும் "லயத்தில் தமிழர்களோடு சுத்தமாக வாழ முடியாது" என்ற நிலைப்பாடு கொண்டவன். "தெமழுந்தெக்க பிரிசுதுவென் இண்ட பே ..." என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு ... "அனே மாத்தயா ...! மகே காம்பராவ பெருமாள் ஐயாட்ட தீலா ... மம யன்னங் பில்லுக்கானு பெத்தக்கட்ட" என்றான்.

"பண்டா வோச்சரோட ஒன்னரக்காம்பரா வூட்டுக்குப் போக விருப்பமா ... ?" துரை கேட்டார்.

"ஓ ... ரெடி ...! இப்ப குடுத்தாலும் போக ரெடி !" என்றான் பெருமாள்.

பெரியக் கிளாக்கர் ஒப்பந்தக் கடிதத்தை டைப் செய்தார். பண்டாவும் பல்லு பெருமாளும் ஒவ்வொரு நினைப்பில் மகிழ்ச்சியோடு ஆப்பீஸை விட்டுக் கிளம்பினார்கள்.

ராசையா கிளாக்கர் கவலைப்பட்டார். "நம்மப் பயல்களைத் திருத்த முடியாது... நிமிர்த்தவும் முடியாது ... புல்லு வெட்டவும் கொழுந்து பிய்க்கவும் ... தண்ணி அடிக்கவும் தான் தெரியும் ... ! திங்கக் கூடத் தெரியாது !" அவரது இனத்துவ இருதயம் துடித்தது. "பண்டா கால் ஏக்கர் நிலத்தை ஒரு ஏக்கர் நிலமாக்கி ... தோட்டத்துக்குள்ளே "நாடு" உண்டாக்கி விடுவான் ... ! நம்ம மடையன்களுக்கு தலையிலே மண்ணுக்கூட கெடையாது !... பாலம் போட்டுக் குடுத்தா மரத்துண்டுகள எடுத்துக்குவானுங்க... பைப் லைன் போட்டுக் குடுத்தா .. வெட்டி வித்துப்புடுவானுங்க. கக்கூஸ் கதவையும் அப்படித்தான் கழட்டிப் புடுவானுங்க ... ஒரு விசயத்துல மட்டும் முன்னேற்றம் ... லயத்துக்கு லயம் இரண்டு மூன்று நடமாடும் பார் இருக்கும்... சந்துக்கு சந்து கசிப்புக் கடை இருக்கும் ... விடிந்து விட்டால் பொலீஸ் ஸ்டேசனுக்கும் புரொக்டர் ஆப்பீஸுக்கும் ஓடிக்கொண்டு இருப்பார்கள் ... கருமம் ...! கருமம் ... நான் "தானா புள்ளியா" பொறந்ததே கருமம் !"

"சுப்பிரண்டன் ஒரு "சீனாபுள்ளி !" அவன் "தானாபுள்ளி"யை ஏளமான பேசும்போது எனக்கு கால்சட்டையை மாட்டிக்கிட்டு ஆப்பீஸ் நாக்காலியிலே ஒட்காரவே வெட்கமா இருக்கு !" பாவம் ராசையா கிளாக்கர் ... இனரீதியாகவும் சமுதாய ரீதியாகவும் இதே குடும்பத்தில் உருவாகி மேலெழுந்த அவரால் இந்தக் கூட்டம் இப்படி சீரழிந்து கொண்டிருப்பதை தாங்கிக் கொள்ள முடியாமல் தவித்தார்.

மூன்று மாதங்களுக்குப் பின் ....

தவறணையில் தேயிலைக் கன்றுகளைப் பார்வையிடுவதற்கு பெரிய கிளாக்கர் ராசையாவோடு தோட்ட நிர்வாகி சென்றிருந்தார். தவறணை "புல்லுகான்" சமவெளியில் ஒரு அழகான மண்வீடு எழும்பியிருந்தது. ஒரு கிராமத்து வீடாகக் காட்சி தந்தது. வீட்டைச் சுற்றிய நிலத்தில் பீட்ரூட், கரட், லீக்ஸ், கோவா ... என்று மரக்கறிப் பயிர் பச்சை பசேல் என்று அறுவடைக்காகக் காத்திருந்தன. கொழும்பு மரக்கறி பக்கியில் நல்ல விலை கிடைத்தால் ஐம்பதாயிரம் ரூபாவுக்கு மேல் பணம் கிடைக்கும். "மிஸ்டர் ராசையா! ஐ யேம் ரியலீ ஜெலஸ் ஒன் பண்டா வோச்சர் !" என்று சிரித்தார்.

தூரத்தே பல்லு பெருமாளும் அவனது மனைவி பாப்பாத்தியும் ... மகன் ஒருவனும் பண்டாவின் மரக்கறித் தோட்டத்துக்கு சாணி தூக்கிக் கொண்டிருந்தார்கள். தலை, முகம், கழுத்து, உடல் முழுவதும் ஈரச்சாணியின் நீர் வடிய ... வடிய .. பெருமாள் தோட்டத் துரைக்கு சலாம் வைத்தான்.

"பண்டய்யா ... பகல் சாப்பாட்டுக்கு பாண் குடுத்து இருநூறு ரூபா சம்பளமும் குடுக்குறாருங்க ...!" என்று பெருமையாகக் கூறினான் ... பல்லு பெருமாள்.

"கூலி பகர்ஸ் ! யூ கான்ட் கெரக்ட் தீஸ் பகர்ஸ் ... மிஸ்டர் ராசையா !" என்றார் சுப்பிரண்டிடன்டன் ... அவர் "சீனாபுள்ளி" என்று ராசையா பாஷையில் இருந்து கொண்டு சொல்லவில்லை ! ராசையா கிளாக்கர்தான் தன்னை "தானா புள்ளி"யாக இன்னும் நினைத்துக்கொண்டு பல்லு பெருமாள் "பகரை"... அந்த சாணிக் கூடையோடு தூக்கிப் போட்டு மிதித்தால் என்ன என்று துரைக்குத் தெரியாமல் மனதுக்குள் கறுவிக்கொண்டார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தணியாத தாகம்

- பாலா சங்குப்பிள்ளை -

மேலே மலையிலிருந்து சோ வென தண்ணீர் அருவியாக கீழே கொட்டியது. அடர்ந்த மரங்கள் நிறைந்திருந்த அந்த இடத்தில் வீசிய குளிர் காற்று உடலை சிலிர்க்க வைத்தது. கையில் கவ்வாத்து கத்தியும், தலையில் தொப்பியுமாக அந்த பெரிய மரத்தில் சாய்ந்தவாறு தணிகாசலம் நிற்க தலை குனிந்தவாறு கற்பகம் பேசாதிருந்தாள்.

இங்க பாருங்க கற்பகம்... இங்கே தனியே நாங்க இரண்டு பேரும் நிற்கிறது சரியில்லை. என்னை எதற்காக இங்கே தேடி வந்தீங்க. நான் ஏதாவது உங்களுக்கு உதவி செய்யணுமா... சீக்கிரம் சொல்லுங்க, எனக்கு தலைக்க மேலே வேலை கிடக்குது...

கற்பகம் - எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தாள். தணிகாசலத்திற்கு எரிச்சல் வந்தது.

கற்பகம் நான் சொல்லுறது உங்களுக்கு விளங்கவில்லையா. கல்யாணமாகாத கன்னிப்பொண்ணு தனியா இங்கே என்னோட நிற்கிறதை யாராவது பார்த்தா விபரீதமாயிடும்... தயவு செஞ்சி வந்த விஷயத்தை சொல்லுங்க...

கற்பகம் முகம் சிவக்க மெதுவாக வாயை திறந்தாள்.

அன்னைக்கி ஆத்துல விழுந்த என்னை ஆபத்துன்னு தெரிஞ்சும் துணிச்சலோட தண்ணியில இறங்கி காப்பாத்தினீங்க. நானொரு பொண்ணுன்னு தெரிஞ்சும் ரொம்ப கண்ணியமா நடந்துக் கிட்டீங்க... அந்தப் பின்னால உங்களை சந்திக்க பலமுறை முயற்சி செய்தேன். ஆனா முடியலை...

தணிகாசலம் புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

ஓகோ செஞ்ச உதவிக்கு நன்றி சொல்லுறதுக்காக தேடிநீங்களா...

நன்றி சொல்லுறதுக்கு மட்டுமல்ல...

வேற எதுக்காக...

என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியும்தானே...

ஓ தெரியாமலா... இந்தத் தோட்டத் தலைமை குமாஸ்தாவா வேலை செஞ்ச செல்லையாவோட பேத்தி டவுன்ல பெரிய வியாபாரம் செய்யுற செல்வந்தர் புண்ணிய கோடியின் ஒரே செல்ல மகள். எந்த நேரமும் தன்னோட சாதியை மட்டுமே பெரியா நினைச்சிட்டு மற்றவங்களை நாயை விட கேவலமாக நினைக்கிறவரின் ஒரே மகள்...'

கற்பகம் கோபத்துடன் அவனைப் பார்த்தாள்.
'எங்கப்பா அப்புடி இருக்கலாம். ஆனா நான் அப்படிப்பட்டவள் இல்லை...'

'சரி... சரி... நீங்க அப்படிப்பட்டவரா இல்லாமல் இருக்கலாம்... அதுக்காக என்னை தேடி வரக் காரணம் என்ன...?

'வந்து... தண்ணியில விழுந்த என்னைத் தொட்டுத் தூக்கினீங்க. முதன் முதலாக ஒரு ஆடவனோட கை என்மேலே பட்டதும் நான் சிலிர்த்துப் போயிட்டேன்...'

'ஐயையோ... நான் எந்த தீய நோக்கத்துடனும் உங்களைத் தொடலை... ஆபத்தான நேரத்தில என்னால வேற என்னத்தான் செய்ய முடியும்...'

'உங்களை நான் தவறா சொல்லலை. உங்க கை என் உடம்பிலே பட்டதில இருந்து நான் என் நினைவை இழந்துட்டேன். என் மனம் உங்களையே நினைக்க ஆரம்பிச்சிரிச்சி...'

தணிகாசலம் அச்சத்துடன் அவளை நோக்கினான்.

'நீங்க சொல்லுறதை பார்த்தா என்னை நேசிக்கிறதா தெரியது...'

'ஆமா ... உண்மைதான்...'

'தயவு செஞ்சி உங்க மனதில இப்படி ஒரு எண்ணமிருந்தால் உடனடியா உங்களை நீங்க மாத்திக்கிறது தான் நல்லது. நான் தோட்டத்துல வேலை செய்யுற சாதாரண தொழிலாளி. சாதியில குறைந்தவன். பத்துக்கு மேலே படிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியில்லை.கோட்டையில பிறந்த நீங்க, குடிசையில வாழுற என் மேலே ஆசைப்படுறதுல எந்த பிரயோசனமும் இல்லை. அதோட என்னோட பாதை வேறு. இழிவு நிலையில இருக்கிற தோட்டத் தொழிலாளர்கள் உயர, அவங்க வாழ்வு மலர என்னைப் போன்ற இளைஞர்கள் பாடுபட்டுக்கிட்டிருக்கிறோம். இந்த பெரிய இடத்து காதலுக்கெல்லாம் எனக்கு நேரமில்லை. ஏற்கனவே எங்களோட பிரச்சினைகளுக்காக எங்களோட போராடிக்கிட்டிருக்க இந்த நிலையில் ஒங்க காதலுக்காகவும் போராடி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை... நீங்க போகலாம்...'
கற்பகம் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்க்க தீர்க்கமாக அவனைப் பார்த்தாள்.

'நான் அந்தஸ்த்திலையும் சாதியிலையும் உயர்ந்தவளாய் இருக்கலாம். ஆனா என் காதல் உண்மையானது. முதல்முதலா என் உள்ளத்தில் உருவாகி உறுதியாக இருக்கிற இந்த காதலை யாராலும் அழிக்க முடியாது. அதை மட்டும் மறந்திடாதீங்க...'

கற்பகம் சட்டென அந்த இடத்தை விட்டு வேகமாக நடக்க தணிகாசலம் உணர்ச்சியற்ற முகத்துடன் இடையில் விட்ட தன் வேலையை தொடர்ந்தான்.

தணிகாசலம் அதே தோட்டத்தில் பிறந்து பத்தாவது வரை படித்து அங்கேயே வேலை செய்யும் தொழிலாளி. அவனுக்கு தாய் தந்தை இல்லை. உடன் பிறப்புகளும் கிடையாது. எதிர்பாராத விதத்தில் தீயினால் எரிந்து நாசமான பக்கத்து லயத்தில் அநாதையாக நின்ற வள்ளியை தன் சகோதரியாக தத்தெடுத்துக் கொண்டான்.

பதின்மூன்று வயதாகிவிட்ட வள்ளி நன்றாகப் படித்தாள். அவளை எப்படியும் பல்கலைக்கழகம் அனுப்பிவிட வேண்டும் என்ற வைராக்கியத்துடன் தணிகாசலம் செயல்பட்டான். அதுமட்டுமல்ல அந்த தோட்டத்திலுள்ள இளைஞர்களை எல்லாம் ஒன்றுதிரட்டினான். அவர்களுடன் சேர்ந்து தங்களின் சமூகம் மேம்பாட்டடைவதற்கான திட்டங்களை தீட்டி அவற்றை செயற்படுத்தினான். சாதி மதபாகுபாடற்ற சமூகத்தை கட்டி எழுப்புவதொன்றையே குறிக்கோளாக கொண்டு செயற்பட்டான். அவர்களிடம் வாக்கு கேட்டுவரும் அரசியல்வாதிகள் அவர்கள் சொன்னபடி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மறுபடியும் அந்த தோட்டத்திற்குள் நுழைய முடியாது. நன்றாக படிக்கக் கூடிய தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளுக்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் பண உதவிகளை, தணிகாசலம் தவறாமல் செய்துவிடுவான். மொத்தத்தில் தணிகாசலம் அந்த தோட்டத்தில் தொழிலாளர்களின் தோழனாக அவர்களின் காவலனாக விளங்கினான்.

தணிகாசலம் செய்து கொண்டிருந்த வேலையை நிறுத்திவிட்டு புறப்படத் தயாரானான். அவன் மண்பாதையில் வேகமாக நடந்தான். அப்போது எதிரே அண்ணாமலை எதிர்ப்பட்டார்.

'என்ன தணிசாசலம் வேலை முடிஞ்சி புறப்பட்டுட்டியாக்கும்...? '

'ஆமாண்ணே... கொழும்பு போய் வந்திட்டிருக்கிங்க போல...'
'நான் மூன்று மணிக்கே வந்துட்டேன். மகன் மணிமாறன் லண்டனில் இருந்து பார்சல் அனுப்பி இருந்தான். அதை எடுக்க போனேன்.'

'உங்களை நினைச்சால் பெருமையா இருக்கு. ரொம்ப கஷ்டப்பட்டு உங்க இரண்டு மகன்மாரையும் படிக்க வச்சீங்க. இன்றைக்கு ஒருத்தன் டொக்டராகவும், இன்னொருத்தன் வெளிநாட்டில் நல்ல உத்தியோகத்திலயும் இருக்கான்...'

'உண்மைத்தான் தணிகாசலம் நான் தோட்டத்துல சலவைத் தொழிலாளியாக இருந்தேன் எல்லாரும் என் சாதியை சொல்லி அசிங்கமாக பேசினாங்க. ஆனால் நான் சிங்கமா நிமிர்ந்து நின்றேன். வைராக்கியத்தோட என் மகன்மாரை படிக்க வைச்சேன். இன்றைக்கு தலை நிமிர்ந்து நிற்கிறேன். இப்பவும் வசதியில்லாத பிள்ளைகளுக்கு படிக்க உதவி செய்றேன்.... அது போகட்டும்... உன்னிடம் முக்கியமான விஷயம் ஒன்று பேசணும்.'

'என்ன சொல்லுங்கண்ணே...'

'வேறொன்றுமில்லை... அந்த புண்ணிய கோடியின் மகள் கற்பகத்தைப் பார்த்தேன். அது இங்கே உன்கிட்ட வந்திச்சா...'

'ஆமா ... ஏன் யாரு சொன்னா...?'

'அவன் செங்கோடன் மகள் புஷ்பா டீச்சரிடம் கற்பகம் உன்னைப் பற்றி சொல்லி இருக்கு. கல்யாணம் என்று நடந்தால் அது உன்னோடத்தானாம். நான் இப்போ புஷ்பாவை கண்டுத்தான் வந்தேன். ஆமா நீ என்ன செய்யப்போறே?'

'புண்ணியகோடி ஒரு சாதி வெறிப்பிடிச்சவர் எங்களைப் போல தோட்டத் தொழிலாளிகளிடம் லட்சம் லட்சமாக ஏமாற்றி சம்பாதித்தவர். ஆனால் அவருக்கு எங்களோட பணம் மட்டும் தான் வேண்டும். நிழல் மட்டும் படக்கூடாது. அவரின் அந்தஸ்து என்கிற பட்டம் மேலே பறக்க எங்களோட பணம் என்கிற நூல் தேவை. நாங்கள் இப்போ சிந்திக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிட்டதால், அவரின் கொட்டம் கொஞ்சம் கொஞ்சமா அடங்கத் தொடங்கியிருக்கு. எங்களை புழுவா நினைக்கிற அந்த புள்ளப்பூச்சியோட, பொண்ணோட காதலை விட காலமெல்லாம் சேவை சேவையென்று தன்னுடைய தேவையை கூட கவனிக்காமல் நம்ம பிள்ளைகளுக்கு படிப்பு சொல்லிக்கொடுத்த சங்கீத டீச்சர் புஸ்பாவுக்கு வாழ்வு கொடுக்கலாம்...'

அண்ணாமலை ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார்.

'என்ன செங்கோடன் மகள் புஷ்பாவையா சொல்லுறே...'

'ஆமாண்ணே இது ஏற்கனவே நான் எடுத்த முடிவு. கற்பகம் பணக்காரப் பொண்ணு. அதுக்கு நான் இல்லாட்டியும் வசதியோட எவனாவது வருவான். ஆனா இன்பம் காண வேண்டிய இள வயதில தாலி கட்டியவனை இழந்துவிட்டு துன்பத்தோடு வேலி இல்லா மரம் மாதிரி பாதுகாப்பில்லாமல் இருக்கு... என்னோட இலட்சியமே இப்படியானதொரு பொண்ணுக்கு வாழ்வு குடுக்கனும். என்கிறது தான்... இந்த விஷயத்தில் நீங்கத்தான் எனக்கு உதவி செய்யனும்...'

'அடடா தணிகாசலம் இதென்ன இப்படி கேட்டுப்புட்டே... நீ புஸ்பாவுக்கு வாழ்வு கொடுக்கிறதென்று உன் வாயால சொன்ன போதே முடிவு செஞ்சிட்டேன். உனக்கு கட்டாயமாக உதவி செய்யணும் என்று. புஸ்பா உன் மேல் மதிப்பும் மரியாதையும் வச்சிருக்கு. நீங்க ரெண்டு பேருமே இந்த சமூக உயர்வுக்காக உங்க உயிரையே குடுக்கத் தயாராக இருக்கிறவங்க. நீங்க மண வாழ்வில இணைஞ்சா நிச்சயமா எல்லோருமே சந்தோஷப்படுவாங்க...'

'அண்ணே நம்ம பணியக்கணக்குல ரெண்டு பேருக்கு யூனிவர்சிட்டியில இடம் கிடைச்சிருக்கு. அவங்களுக்கு தேவையான உதவி செய்யிறது சம்பந்தமா தோட்ட 'லைப்ரரி' யில கூட்டம் ஒண்ணு இருக்கு இந்நேரம் எல்லாரும் வந்திருப்பாங்க. மற்ற விஷயத்தை அப்புறம் பேசிக்கலாம். நான் வாரேண்ணே...'

அண்ணாமலை பணிவுடன் அவரிடம் விடைப்பெற்றுச் செல்லும் தணிகாசலத்தை பெருமையுடன் பார்த்தார்.

தணிகாசலம் போல ஒவ்வொரு தோட்டத்திலும் ஒருவர் இருந்தால் நிச்சயமாக மலையகத்திற்கு விடிவு வெகு தூரத்திலில்லை. ஓட்டுக்கு வேஷம் போட்டு வெற்றி பெற்று உதவி கிடைத்த பின் வாக்களித்தவர்களையே மறந்து நாற்காலிக்காக நான்காக வளைந்து ஆட்டம் போடுபவர்களுக்காக தணிகாசலம் போன்ற பொது நலமுள்ள இளைஞர்கள் தோன்ற வேண்டும். இப்போது மலையக இளைஞர்களிடையே இத்தகைய விழிப்புணர்வு வேகமாக ஏற்பட்டு வருவதை அண்ணாமலை அவதானித்துக் கொண்டு தான் இருந்தார்.

இரண்டு வாரம் சென்றது. கற்பகத்தின் காதல் அவள் தந்தை புண்ணிகோடிக்கு தெரிய வந்தது. அவர் மகள் என்றும் பாராமல் அவளை தாறு மாறாக அடித்து அறையில் போட்டு பூட்டினார். அவர் தனது சாதியிலேயே சற்று வயது கூடிய ஆனால் பணக்கார இடத்தில் மாப்பிள்ளை பார்த்தார். அவருக்கு தனது மகள் கழுத்தில் எவன் தாலி கட்டுகிறான் என்பது முக்கியமல்ல. ஆனால் அவர் சாதிக்காரன் தான் அவளுக்கு மாப்பிள்ளையாக வரவேண்டும். ஆனால் கற்பகத்தின் காதல் விவகாரம் தெரிந்து விட்டதால் வந்த மாப்பிள்ளைகள் வந்த வாசல் வழியே செல்லத் தொடங்கினார்கள். தன் சொத்து முழுவதையும் கொடுக்க புண்ணியக்கோடி தயாராக இருந்தார். ஆனால் தான் சொத்தையாக இருந்தாலும் தனக்கு மனைவியாக வருபவள் சொக்கத் தங்கமாக இருக்க வேண்டும் என்பது தான் வருபவர்களின் எண்ணமாக இருந்தது.

கடைசியாக புண்ணியக்கோடி ஒரு புளியங்கொம்மாக பிடித்து விட்டார். மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை. கைநிறைய சம்பளம், தாய் தந்தை இல்லை, பேங்கில் இலட்சக்கணக்கில் பணம். சொந்தமாக ஒரு தேயிலைத் தோட்டம். விசாரித்துப் பார்த்ததில் அவர் இனத்தை சேர்ந்த பையன் தான் எனத் தெரிந்தது. உடனேயே முடிவு செய்துவிட்டார். கற்பகம் முதலில் முரண்டு பிடித்தாலும் மாப்பிள்ளை மிக கம்பீரமாக, அழகாக ஆண்மை நிறைந்தவனாக இருக்கவே ஓரளவு மனதை தேற்றிக் கொண்டாள். கிட்டியது கிடைக்கவில்லை என்றாலும் எட்டியதை கெட்டியாக பிடித்துக்கொள்வதென தீர்மானித்து விட்டாள்.

கற்பகத்தின் கல்யாணம் மிக விமரிசையாக நடந்து முடிந்தது. திருமணத்திற்கு அண்ணாமலையும் வந்திருந்தார். புண்ணியகோடி முதலில் அண்ணாமலையை காணவில்லை. ஆனால் தாலி கட்டி கெட்டிமேளம் முழங்கி முடிந்தவுடன் அண்ணாமலை மாப்பிள்ளையுடன் மிக நெருக்கமாக பேசிக்கொண்டிருப்பதைக் கண்ட புண்ணியகோடி கடுமையான கோபத்துடன் அவரிடம் ஓடினார்....?'

'அண்ணாமலை நீ எதுக்கு இங்கே வந்தே? உனக்கு யாரும் அழைப்பு அனுப்பவில்லையே... என் மாப்பிள்ளையோட சரி சமனா பேச உனக்கு என்ன அருகதையிருக்கு...?'

அண்ணாமலை புன்னகையுடன் அவரைப் பார்த்தார்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


`புண்ணியகோடி உனக்கு ஞாபகம் இருக்கா... உன் தங்கை சலவைக்காரனான என்னை நேசிச்ச ஒரே காரணத்திற்காக சாதி வெறி தலைக்கேறிய உன் அப்பன் காம்பறாவோட சேர்த்து எங்க குடும்பத்தையே தீ வைத்துக் கொளுத்திவிட்டு குப்பி விளக்கு சாய்ஞ்சி தீப்பிடிச்சிட்டது என்று தோட்டத்தை நம்பவச்சாரு. ஆனா எனக்கு தெரியும் என்ன நடந்தது என்று. ஏழை சொல் அம்பலம் ஏறாது என்று. உன் சாதி வெறிக்கு பாடம் கற்பிக்க வேணும் என்று தருணம் பார்த்திருந்தேன். உன் மனைவியை பிரசவத்திற்காக சேர்த்திருந்த அதே ஆஸ்பத்திரியில் தான் செங்கோடன் மனைவியையும் சேர்ந்திருந்தாங்க. இரண்டு பேருக்குமே பெண் குழந்தைத்தான் பிறந்தது. உனக்கு நல்லப்பாடம் புகட்ட வேணும் என்றுத்தான் செங்கோடன் மகள் கற்பத்தை உனக்கும் உன் மகளை செங்கோடனுக்கும் மாத்தி வச்சேன். இந்த விஷயம் யாருக்குமே தெரியாது.'

சவரத் தொழிலாளியோட மகள் கற்பகம் தான் இவ்வளவு நாளும் உன் மகளா வளர்ந்தா. உன் மகள் புஸ்பாத்தான் செங்கோடன் மகளா இருக்கா. அதுமட்டுமில்ல கற்பகத்தின் கழுத்தில தாலிக்கட்டி இருக்கானே இவன் வேறு யாருமில்ல, என் மகன் மணிமாறன். இதையும் நான் தான் செஞ்சேன். சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதி பாடினான். ஆனா நீங்க எல்லோரும் இன்னமும் இந்த சாதியைக் கட்டிப்பிடிச்சிக்கிட்டு எங்களை மாதிரி ஆட்களை எல்லாம் எட்டி உதைக்கிறிங்க. வடக்கு கிழக்கில கூட யுத்தத்திற்கு பின்பு சாதி வெறி அடங்கி ஒடுங்கிடுச்சி. நாங்களும் இப்போ இந்த பாழாய்போன சாதிக்காக யுத்தம் செஞ்சிக்கிட்டிருக்கோம். இப்பெல்லாம் கலப்புத் திருமணம் அதிகமாக தோட்டங்களில் நடந்துக்கிட்டு வருது. இதன் மூலமாக சாதிக்கு சமாதி கட்டப்படுது. உங்க சொந்த மகளை தணிகாசலம் மணம் செய்யப்போறான். உங்க மகளா நினைச்சி வளர்த்த கற்பகத்தையும் என் மகன் மணம்முடிச்சிட்டான். இனி என்ன செய்யப்போறிங்க. எங்கே போச்சி உங்க சாதி. இன்னமும் அதை தூக்கி புடிச்சிக்கிட்டிருந்தா நாதியற்று போய்விடுவிங்க.

இவ்வளவு நாளும் எங்க மனசுல ஒரு தாகம் இருந்திச்சி. தணியாத தாகம். அது இப்போது ஓரளவு தணிஞ்சிருக்கு. என் மனசு ரொம்ப ஆறுதலடைஞ்சி. தணிகாசலம் மாதிரியான இளைஞர்கள் இப்போ வேகமாக அதிகரிச்சி வாறாங்க. நாளைய மலையகம் வீறுகொண்டெழுந்து இந்த சாதி, இனம், பாகுபாடு எல்லாத்தையும் அழிச்சி புதிய யுகத்தை உண்டாக்கிறதுக்காக இளைஞர் கூட்டம் தயாராகி கிட்டிருக்கு. அவங்களோட தணியாத தாகமும், நிச்சயமாக தணியும் காலம் வெகுதூரத்தில் இல்லை.'

அண்ணாமலை படபடவென பேசி முடிக்க புண்ணியக்கோடி பேசமுடியாமல் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டார். அவர் தன்னை சுதாகரித்துக்கொண்டு எழ வெகுநேரமாகும். அது வரைக்கும் அவருக்காக யாரும் காத்திராமல் மாப்பிள்ளையையும், பெண்ணையும் வாழ்த்துவதற்காக வரிசையில் நின்றார்கள்.

(யாவும் கற்பனை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய மாகாண சாகித்திய விழா - 2005 - செயற்குழு

| தொடர் இல. | பெயர் | பதவி | உத்தியோகபூர்வ முகவரி |
|---|---|---|---|
| 1. | திருமதி ஷிராணி வீரகோன் | செயலாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 2. | திருமதி சேனானி பொரலெஸ்ல | பிரதிச் செயலாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 3. | திரு. எம். பத்மநாதன் | பிரத்தியேகச் செயலாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 4. | திருமதி சுபத்ரா ரட்நாயக்கா | பிரதிச் செயலாளர்-திட்டமிடல் | கைத்தொழில் அமைச்சு |
| 5. | திரு. டீ. எம். சேனாநாயக்க | கணக்காய்வாளர் | புடவைக் கைத்தொழில் திணைக்களம் |
| 6. | திரு. எஸ். எஸ். தேவசிகாமணி | இந்து கலாசார இணைப்பாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 7. | திரு. பி. சுரேஷ் | இணைப்புச் செலாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 8. | திரு. எஸ். நீதிராஜா | இணைப்பாளர் - தமிழ்க் கல்வி | கைத்தொழில் அமைச்சு |
| 9. | திரு. என். சரவணபவநாதன் | அந்தரங்க உதவியாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 10. | திரு. ஆர். மலர்வாசகம் | பொதுசன தொடர்பு அதிகாரி | கைத்தொழில் அமைச்சு |
| 11. | திரு. பீ. சுப்பிரமணியம் | அமைச்சரின் ஊடக பொறுப்பாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 12. | திரு. என். ஜீ. ஏ. கொந்தகொட | Administrative Officer | கைத்தொழில் அமைச்சு |
| 13. | திரு. எஸ். தஸநாயக்க | Financial Assistant | கைத்தொழில் அமைச்சு |
| 14. | திரு. எஸ். ஜயவீர | முகாமைத்துவ உதவியாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 15. | திரு. சிசில் லியனாரச்சி | பணிப்பாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 16. | திருமதி எம். கிருஷ்ணவேனி | இந்து கலாசார உத்தியோகத்தர் | கைத்தொழில் அமைச்சு |
| 17. | திரு. வீ. முரளீதரன் | Co-ordinating Assistant | கைத்தொழில் அமைச்சு |
| 18. | திருமதி ஏ. ஐ. பெரேரா | முகாமைத்துவ உதவியாளர் | கைத்தொழில் அமைச்சு |
| 19. | திருமதி எஸ். ஜெனட் | | கைத்தொழில் அமைச்சு |
| 20. | திருமதி கே. சோமசுந்தரம் | தட்டெழுத்தாளர் | கைத்தொழில் அமைச்சு-அமைச்சரின் அலுவலகம் |
| 21. | திரு. ஜூட் அந்தனி | | கைத்தொழில் அமைச்சு-அமைச்சரின் அலுவலகம் |
| 22. | திரு. எஸ். அருளேந்திரன் | பொருளாளர் | ப. மா. ச. பரிசுத்த திரித்துவக் கல்லூரி |
| 23. | டீ. சுதர்ஷன் | அதிபர் | நு/வ/கோடன் த. வி., உடபுஸல்லாவ |
| 24. | பீ. எஸ். சதீஸ் | மெ. வ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 25. | கெ. இராம்குமார் | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 26. | அ. மத்தியூ | உ. க. ப. | வ. க. ப. கொத்மலை |
| 27. | எம். செல்லையா | ச. ரீ. | இல. 12, கலுக்கலை, நுவரஎலியா |
| 28. | கே. தங்கவேலு | ஆசிரியர் | நு/சென். அந்தனிஸ் கல்லூரி, பிளக்பூல், நுவரஎலியா |
| 29. | திருமதி சாந்தமலர் டோசன் | உ. க. ப. (விஷட கல்வி) | வ. க. ப., அட்டன் |
| 30. | திரு. எஸ். பி. இராஜசேகரம் | உ. க. ப. (திட்டமிடல்) | வ. க. ப., அட்டன் |
| 31. | திரு. ஜே. ஓ. எல். றிஜ்வே | உ. க. ப. (சித்திரம்) | வ. க. ப., அட்டன் |
| 32. | திரு. சுப்ரமணியம் | | 50, நியூ பஸார் ரோட், நுவரஎலியா |
| 33. | திரு. எஸ். தியாகு | | கேலேகால, நுவரஎலியா |
| 34. | திரு. பீ. சுப்ரமணியம் | | கேலேகால, நுவரஎலியா |
| 35. | திரு. எஸ். சுப்ரமணியம் | உ. க. ப. | வ. க. ப., வலப்பனை |
| 36. | டீ. ஆர். செல்வராஜா | உ. க. ப. (ஆங்கிலம்) | வ. க. ப., வலப்பனை |
| 37. | திரு. ஸ்ரீ. மோகன்ராஜ் | அதிபர் | நு/பரிசுத்த திரித்துவக் கல்லூரி, நுவரஎலியா |
| 38. | திரு. க. இராஜன் | அதிபர் | நு/பீட்று தமிழ் வித்தியாலயம், நுவரஎலியா |
| 39. | திரு. இராமச்சந்திரன் | | ஹாவாஎலிய, நுவரஎலியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தொடர் இல. | பெயர் | பதவி | உத்தியோகபூர்வ முகவரி |
|---|---|---|---|
| 40. | திரு. ஏ. எம். ஹுசையின் | அதிபர் | நு/புனித சவேரியார் கல்லூரி, நுவரஎலியா |
| 41. | திரு. ஏ. பாலையா | ஆசிரியர் | அட்/என்ட்பீட் த. ம. வி., டிக்கோயா |
| 42. | திரு. சந்திரசேகரன் | வியாபாரம் | 23/1/4, தேவி ஜுவலர்ஸ், நுவரஎலியா |
| 43. | திரு. டீ. சிவநாதன் | வியாபாரம் | மதுரா பவுனிங், 90, குயின் எலிசபெத் ரோட், நுவரஎலியா |
| 44. | திரு. பெ. ரெங்கசாமி | உ. க. ப. | வ. க. கா. ஹட்டன் |
| 45. | திரு. எஸ். நடேசன் | உ. க. ப. | வ. க. கா. ஹட்டன் |
| 46. | திரு. ஜே. சிவநேசன் | உ. க. ப. | வ. க. கா. ஹட்டன் |
| 47. | திரு. எஸ். சற்குணராஜா | அதிபர் | நு/சென் அந்தனிஸ் கல்லூரி, நுவரஎலியா |
| 48. | திரு. ஏ. மகேஸ்வரன் | ஆசிரியர் | நு/கோட்டலொஜ் த. வி. கந்தபொல |
| 49. | திரு. இரா. மகேஸ்வரன் | சிரேஷ்ட துணை நூலகர் | பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை |
| 50. | திரு. இராமையா | அதிபர் | மெதடிஸ்ட் கல்லூரி, கந்தபொல |
| 51. | திரு. ஏ. வி. இராஜேந்திரன் | ஆசிரியர் | நு/சென் அந்தனிஸ் கல்லூரி, பிளக்பூல், நுவரஎலியா |
| 52. | திருமதி எஸ். வீ. கே. இராஜலிங்கம் | வ. க. ப. | வ. க. கா. ஹட்டன் |
| 53. | திருமதி ச. கணபதி | உ. க. ப. | வ. க. ப., நுவரெலியா |
| 54. | திரு. க. மகாலிங்கம் | உ. க. ப. | வ. க. ப., நுவரெலியா |
| 55. | திரு. எம். சிவபாலன் | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 56. | திரு. எஸ். இராஜரட்ணம் | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 57. | திரு. எஸ். அண்ணாசாமி | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 58. | திரு. எஸ். செல்வராஜா | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 59. | திரு. கே. மெய்யநாதன் | மே. க. ப. | வ. க. ப., ஹட்டன் |
| 60. | திரு. பெரியசாமி | உ. க. ப. | வ. க. ப., நுவரெலியா |
| 61. | திரு. மு. இரா. இரவீந்திரன் | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 62. | திரு. எஸ். இராமகிருஷ்ணன் | உ. க. ப. | வ. க. ப., கொத்மலை |
| 63. | திரு. மு. கணபதி | விரிவுரையாளர் | ஆசிரியர் கலாசாலை |
| 64. | திரு. சி. யோகேஸ்வரன் | அதிபர் | இராகலை த. ம. வித்தியாலயம் |
| 65. | திரு. சி. செல்வகுமார் | அதிபர் | நு/கோட்பெல் த. வி. |
| 66. | திரு. சே. வசந்தி | உ. க. ப. | வ. க. ப. நுவரெலியா |
| 67. | திரு. எம். விஸ்வநாதன் | அதிபர் | நு/நானுஓயா த. ம. வி. |
| 68. | திரு. சரவணப்பிரகாசம் | உ. க. ப. | வ. க. ப., ஹட்டன் |
| 69. | திரு. ந. ஜெயசிறிபவன் | உ. க. ப. (சங்கீதம்/நடனம்) | வ. க. ப., ஹட்டன் |
| 70. | திரு. த. ரமேஸ் | ஆசிரியர் | கோடன் த. வி. உடபுஸ்ஸல்லாவ |
| 71. | திரு. சா. இரகுநாதன் | ஆசிரியர் | நு/வ/கோடன் த. வி., உடபுஸ்ஸல்லாவ |
| 72. | திரு. மு. சுதர்ஷன் | அதிபர் | நு/வ/கோடன் த. வி., உடபுஸ்ஸல்லாவ |
| 73. | திரு. சுப்பிரமணியம் | உரிமையாளர் | அம்பால்ஸ், நுவரெலியா |
| 74. | திரு. அந்தனிஜீவா | எழுத்தாளர் | கண்டி |
| 75. | திரு. இரர. அ. இராமன் | எழுத்தாளர் | கண்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

யார் - யாருக்கு நன்றி சொல்வது ?
எமக்கு நாமே நன்றி கூறிக் கொள்வதா?
இது எங்கள் வீட்டு நிகழ்வு – எனினும்
இந்நிகழ்வு பூரணத்துவம் பெற, வெற்றிபெற
உழைத்த அனைவரையும் ஒருமுறை மீட்டுப் பார்ப்பது
மனதுக்கு இனிமை !
அந்த வகையில் .....
2005 ஆம் ஆண்டு சாகித்திய விழா சிறப்பு பெறவும்
வெற்றி பெறவும்.

சாகித்திய விழாவுக்கு தலைமை வகித்த மாண்பு மிகு அமைச்சர் எஸ். அருள்சாமி அவர்களுக்கும் பல வழிகளில் உதவி செயல்பட்ட விழா ஏற்பாடடாளர் கௌரவ மத்திய மாகாண சபை உறுப்பினர் திகாம்பரம் அவர்களுக்கும் விழாவில் பங்கேற்ற அதிதிகள், விசேட பிரமுகர்களுக்கும்

சகல வேலைகளையும் திட்டமிட்டுச் செயல்படுத்திய, அமைச்சின் செயலாளர் திருமதி ஷிராணி வீரக்கோன் அவர்களுக்கும்,

பல வேலைகளின் மத்தியிலும் சாகித்திய விழா வேலைகளை முன்னெடுத்த, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் திரு. எம். பத்மநாதன், கல்விப்பிரிவு இணைப்பாளர் திரு. எஸ். நீதிராஜா, சரவணபவநாதன், ஊடகப் பொறுப்பாளர் திரு. எஸ். சுப்பிரமணியம், திரு. மலர்வாசகம்.

அமைச்சின் அலுவலர்களான திருமதி எஸ். யோகமலர், திருமதி எஸ். அசோகா, திருமதி எஸ். சோமசுந்தரம், திருமதி எஸ். ஜெனட், செல்வி சானிகா, திருமதி எம். கிருஸ்ணவேணி, திரு. Dr. அந்தனி ஜுட், திரு. எஸ். முரளி ஆகியோருக்கும் அதுபோலவே அமைச்சின் உத்தியோகத்தர்களான உதவிச் செயலாளர், திருமதி சேனானி பொரலஸ்ஸ, திரு. A. லலந்த, திரு. N.G.A. கொந்தகொட, திருமதி சுபத்ரா ரட்ணாயக்க, திரு. பேர்ஸி பண்டார, திரு. P. K. விஜயசிறி, திரு. எஸ். ஜயவீர, திரு. சிசில் லியன்ன ஆராய்ச்சி, திரு. எஸ். தஸநாயக்க,, திரு. மு. எம். முத்து பண்டா, திரு. வணிகசூரிய, திரு. R. அத்துகோரல, திரு. எஸ். ரத்நாயக்க, திரு. D. M. சேனநாயக்க, திருமதி கமகே ஆகியோருக்கும்.

எமது அழைப்பினை ஏற்று வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த சென்னைப் பல்கலைக்கழக மொழியியல் துறைத் தலைவர் வ. அரசு அவர்களுக்கும்.

மலேசிய உலகத் (தமிழாராய்ச்சி நிறுவன துணைத்தலைவர் எஸ். 'குணநாதன் அவர்களுக்கும்) விழாவையும் மலரையும் திட்டமிட்டு வழிநடத்திய உதவி கல்விப் பணிப்பாளர், க. மெய்யநாதன் அவர்களுக்கும்.

எமது மலர்களுக்கு உப சரணைக்குழு, பொறுப்பாளர் குழு, வெளி அலங்காரக்குழு கலை நிகழ்ச்சி பொறுப்பாளர் குழு, ஊர்வல நிகழ்ச்சிகள் பொறுப்பாண்மைக்குழு வரவேற்புக்குழு

நுவரெலியா மாநகர சபை மேயர் உட்பட மாநகர சபை ஊழியர்களுக்கும்,

எமது அழைப்பை ஏற்று ஆசிச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றைத் தந்த பெரியவர்களுக்கும், விசேடமாக நுவரெலியா பிரதேசத்தில் உள்ள வர்த்தகப் பிரமுகர்களுக்கும்

விழாவின் வெற்றிக்கு அயராது உழைத்த கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலருக்கு ஆக்கங்கள் வழங்கிய அறிவலர்களுக்கும்,

பொருள் பொதிந்த அட்டைப் படத்தை வரைந்து தந்த ஆசிரியர் செ. கோபால் அவர்களுக்கும்

நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும்

விழாவில் கௌரவிப்பை பெற்ற அனைத்து துறை மேலாண்மையாளர்களுக்கும்,

விழாவுக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும்,

மேடை நிகழ்ச்சிகளிலும், ஊர்வலத்திலும், பங்கேற்ற மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அரசியல் தொழிற்சங்க பிரமுகர்கள், கல்வித்துறையாளர்கள், இலக்கியவாதிகள் ஆகியோருக்கும்

விழாவை வெளியுலகுக்கு படைத்தளித்த ஊடகத்துறையை சார்ந்தவர்களுக்கும்

ஒளி, ஒலி அமைப்பாளர்களுக்கும்

சகல பணிகளிலும் பங்கேற்ற அனைவருக்கும்,

சாகித்திய மலரையும் அழைப்பிதழ்களையும் அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும்

இறுதிவரை என்னோடு இணைந்து அயராது செயல்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக வாசிகசாலை பொறுப்பாளர் திரு. வ. மகேஸ்வரன், திரு. அந்தனி ஜீவா, திரு.வ. அ. இராமன் ஆகியோருக்கும்.

நன்றிகள் கூறினால் அது மிகையாகாது.

நன்றிகள்

அன்புடன்

**எஸ். எஸ். தேவசிகாமணி**
சாகித்திய விழா செயலாளர்,
இணைப்பாளர் - இந்து கலாசார அலுவல்கள்
மத்திய மாகாணம்,
பேராதெனிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில், விளையாட்டு, மகளிர் விவகார, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, இந்து கலாசார அலுவல்கள் மற்றும் கல்வி (தமிழ்) அமைச்சு – மத்திய மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org